நகரத்தாரின் பண்பாட்டுப் பதிவுகள்



முனைவர் நா. வள்ளி சொக்கலிங்கம்

கிருஷ்ணா பதிப்பகம்




2021-6-16 11:16


மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில்

நூற் குறிப்பு

நூலின் பெயர்	:	நகரத்தாரின் பண்பாட்டுப் பதிவுகள்
பொருள்	:	நாட்டுக்கோட்டை நகரத்தார் சமுதாயப் பெருமக்களின் பண்பாடும் தர்மங்களும்
நூலாசிரியர்	:	முனைவர் நா. வள்ளிசொக்கலிங்கம் கிருஷ்ணா பதிப்பகம் காரைக்குடி- 630 001 9443748241
நூல் உரிமை	:	நூலாசிரிருக்கே
மின்னூல் வெளியீடு	:	கோவிலூர் மடாலயம்
மின்னூல் வெளியீடு நாள்	:	ஜுன் 2025
மின்னூல் இணைய முகவரி	:	கோவிலூர் மடலாயம் நூலகம் (மின்னூலை இலவசமாகத் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்)
மின்னூல் அச்சுப் பிரதிகள் விலைக்குக் கிடைக்குமிடம்	:	பூச்சரம் அச்சகம், 8A, கல்லூரி சாலை, சுப்பிரமணியபுரம் 7ஆவது வீதி, காரைக்குடி 63003 அலைபேசி - 95854 22924, 98847 12091

பொருளடக்கம்

Koviloor Madalayam
Koviloor - 630 307
Madurai Road, Koviloor
Sivagangai Dist

உ
Sivamayam

☎ 04565 - 238783, 94433 35312
Email : slnaiyar@gmail.com

Sri La Sri
Narayana Gnana Desiga Swamigal
Madathipathy



கோவிலூர் ஆண்டவர்தம் குருவருளும், கோவிலூர் அருள்மிகு திருநெல்லையம்மன் உடனாய கொற்றவாளீசர் திருவருளும் கோவிலூர் சிவகாமி உடனாய ஆனந்த நடராசர் திருவருளும் அனைவருக்கும் உண்டாகட்டும்.

பண்பாடு என்பது வழி வழியாக தொடர்ந்து வரும் சமுதாய குணநலனாகும். நகரத்தார் சமுதாயம் என்பது தனது மரபாலும், கலைப் பண்பாலும், பண்பாட்டுச் செழுமையாலும் ஒப்பற்ற சமுதாயமாக உலக முதன்மை பெற்று வருகிறது. இம்மரபினர் கைக்கொள்ளும் நுணுக்கமான பண்பாட்டு விழுமியங்கள் அளவிடற்கரிய பெருமையும் சிறப்பும் உடையன. அவற்றை நுணுகி ஆராய்வோரால் மட்டுமே அவற்றின் பெருமைகளை அறிந்து கொள்ள இயலும். அவ்வகையில் நகரத்தார்தம் நுண்ணிய பண்பாட்டுச் சிறப்புகளைத் தொடர்ந்து பதிவு செய்து வருபவர் பேராசிரியை நா. வள்ளி சொக்கலிங்கம் அவர்கள்.

‘‘நகரத்தாரின் பண்பாட்டுப் பதிவுகள் ’’ என்ற தலைப்பில் அமைந்துள்ள இந்நூல் நகரத்தார்களின் பல பண்பாட்டுச் சிறப்புகளை வெளிப்படுத்துகிறது. காவிரிப் பூம்பட்டினம், தொண்டி, தூத்துக்குடி, நாகப்பட்டினம்,சென்னைப் பட்டினம், கல்கத்தா பட்டினம், மோல்மேன் பட்டினம் போன்ற பட்டினங்கள் நகரத்தாருடன் தொடர்புடைய பட்டினங்களாக விளங்கியுள்ளன. இப்பட்டினங்கள் வழி கடல் வணிகத்தையும், நில வணிகத்தையும் நகரத்தார்கள் பெருக்கி அவற்றின் வழி வந்த செழிப்பான பொருள் ஈட்டலின் வழியாக அறங்கள் பலவற்றைச் செய்துள்ளனர். தாங்கள் ஈட்டிய பணத்தில் ஒரு பகுதியைத் தானம் செய்யும் கொள்கை உடையவர்களாக நகரத்தார்கள் விளங்கி வருகின்றனர். நகரத்தார் இலங்கை, பர்மா, வியட்நாம், தாய்லாந்து, இந்தோனேஷியா, மொரிஷியஸ் போன்ற

நாடுகளுக்குச் சென்று வணிகத்தின் வழி பொருள் ஈட்டியும் தமது பண்பாட்டுச் செழுமைகளை அங்கு உணர்த்தியும், அறங்களை அந்தந்த நாடுகளில் செய்தும் முத்திரை பதித்துள்ளனர். இதற்கான தக்க சான்றுகளை இந்நூல் தருகின்றது.

கோயில், மடாலயம், சத்திரம் தண்ணீர்ப்பந்தல், குளம், சாலை முதல் எண்ணான்கு தருமங்கள் செய்யும் சீலர்கள் நகரத்தார் என்று பழம்பாடல் உரைக்கும் செய்தியைக் கட்டுரையாசிரியர் சிறந்த சான்றாகக் காட்டுகின்றார். நகரத்தார்களைக் கோயில் திருப்பணிகள் செய்ய வழி வகுத்தவர் நமது சீர் வளர் சீர் முத்திராமலிங்க ஞான தேசிகர் என்று இக்கட்டுரையாசிரியர் காட்டுவது உண்மையின் விளக்கமாகும்.

‘‘மஞ்சள் நீர் வாசக முறி’’ என்ற நடைமுறை நகரத்தார்தம் தேர்ந்த நடைமுறையாகும். சுவீகாரம் எடுக்கும் முறையை எழுத்து ஆதாரமாக ஆக்கிய முன்னோடிக் குலம் நகரத்தார் குலம் என்பதை இக்கட்டுரையாசிரியர் சுட்டியுள்ளார்.

இராமநாதபுர மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களுக்கு நகரத்தார்கள் உதவிய நிலையை இக்கட்டுரையாசிரியர் தெளிவாக வரலாற்று ஆதாரங்களுடன் காட்டியுள்ளார். அரண்மனைப் பொங்கலார் வீடு பற்றிய பதிவுகள் குறிக்கத்தக்கன. தமிழ் வளர்த்த சன்மார்க்க சபையின் வரலாற்றை இக்கட்டுரை ஆசிரியர் சிறப்புடன் வெளிப்படுத்தியுள்ளார். அஞ்சல் உறைகள், ஒப்பந்தக் கடிதங்கள் வழியாகவும் நகரத்தார் பண்பாடு வெளிப்படுவதை இக்கட்டுரையாசிரியர் காட்டியுள்ளார். அன்ன சத்திரங்கள், கோயில் திருப்பணிகள், திருமடப் பணிகள் போன்றன குறித்த பதிவுகள் வரலாற்று ஆவணங்களாக விளங்குகின்றன. வள் (ல்) ளு(லு)வப் பை, விளக்குச் சட்டி பற்றிய கட்டுரைகளும் சிறந்த பண்பாட்டுப் பதிவுகளாகும்.

திருமயத்தில் நாட்டுக் கோட்டைச் செட்டியார் கல்வெட்டுகள் என்ற கட்டுரை சிறந்த கல்வெட்டு ஆய்வுக்கட்டுரை. இக்கட்டுரையாசிரியரின் சிறப்பு என்னவெனில் இவர் சான்றுகளாகக் கல்வெட்டு ஆதாரங்களையும் காட்டுகிறார். இதன்வழி சிறந்த கல்வெட்டு ஆய்வாளர் இந்நூலாசிரியர் என்பது தெளிவு. கண்டவராயன்பட்டி கல்வெட்டுகள், வெளிமுத்தி கல்வெட்டு என்ற கட்டுரைகளும் இவ்வகைச் சிறப்பு பெற்றனவே ஆகும். ஆச்சிமாரும் அறப்பணிகளும் என்ற கட்டுரை நகரத்தார் பெண் இயல்புகளைக் காட்டும் கட்டுரையாகும்.

இவ்வாறு கடற்கரை பட்டினம் தொடங்கி நகரத்தார்தம்

அறப்பணிகளைச் சுட்டி, கல்வெட்டுகளைப் படியெடுத்து நூலில் கொண்டுவந்து, ஆச்சிமார்களின் அறப்பணியில் இக்கட்டுரைத் தொகுப்பு நிறைவைப் பெறுகின்றது. நகரத்தார் தம் பண்பாட்டுப் பதிவுக் கோவையாக இந்நூல் அமைகின்றது. கட்டுரைகளுக்கு இடை யிடையே சான்றுகளாக புகைப்படங்கள் இணைத்துள்ள பாங்கு இந்நூலின் பெருஞ்சிறப்பாகும்.

முழுக்க முழுக்க நகரத்தார் பண்பாடுகளை விளக்கும் இந்நூல் வெளிவருவதன் வாயிலாக நகரத்தார் பண்பாடுகளை இன்னும் பல நூற்றாண்டு காலங்கள் காப்பாற்ற இயலும்.

கட்டுரை எழுதிய கட்டுரையாசிரியர் சிறந்த வாசிப்பாளர், சிறந்த எழுத்தாளர், சிறந்த பண்புகளுக்கு இலக்கணமாக விளங்குபவர். ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், கல்வெட்டுத் துறை ஆற்றலும் மிக்கவர். இவர் இராமசாமி தமிழ்க் கல்லூரியின் முதல்வராக விளங்கியவர். தமிழ்ப் பண்பாடும் மரபும் காத்துவரும் சான்றாண்மையர். இவரின் எழுத்தில் விளைந்த நகரத்தார் பண்பாட்டுப் பதிவுகள் சிறந்த இலக்கிய இலக்கண கல்வெட்டுப் பதிவு நூல். நகரத்தார் குறித்த வரலாற்று, பண்பாட்டு ஆய்வுத்தொகுதியான இந்நூல் அனைத்து நகரத்தார்களுக்கும் பொக்கிஷம் போன்றது. மற்றவர்களும் இதன்வழி பல வரலாற்றைப் பண்பாட்டை அறிந்து கொள்ள முடியும். நூலாசிரியருக்கு எமது ஆசி. வாழ்த்து, நன்றி.

வேணும் ஸ்ரீ சற்குருநாதன் துணை

ஆய்வுரை



நகரத்தார் பண்பாட்டுப் பதிவுகள்' வாசித்து அதன் சீரிய திறன் வியந்து செயல் மறந்து வாழ்த்தாமல் இருக்கமுடியாது என்பது சரியாக இருக்கும்.

அடிப்படையில் இந்நூலாசிரியர் கல்வியாளராக இருந்தாலும் இராமசாமி தமிழ்க் கல்லூரியில் நீண்ட காலம் ஆளுமையுடன் பேராசிரியராக, முதல்வராகப் பணியாற்றியுள்ளார். நகரத்தார் வரலாற்று ஆய்வுத் தளத்திலும் நகரத்தார் வாழ்வியல் புலத்திலும் இடைவிடாது நாற்பது ஆண்டுகளாகப் பணியாற்றி வருபவர். இந்த எழுபது வயதிலும் கல்வெட்டு ஆய்வில் இன்றுவரை ஈடுபட்டு வருபவர். ஓலைச் சுவடிகளை வாசிக்கக் கூடிய விரல்லிட்டு எண்ணக்கூடியவர்களுள் ஒருவர்.

களப்பணியைச் செட்டிநாட்டு மண்ணிலிருந்து துவங்கி இலங்கை, சிங்கப்பூர், மலாக்கா, பினாங்கு வரை தொடர்ந்தவர். தமது முனைவர்பட்ட ஆய்வேடாக சமர்ப்பித்து நூலாகப் பதிப்பிக்கப் பட்ட இவரது, 'நகரத்தாரின் அறப் பணிகள்' பலருக்கும் கையேடாகவும் அடிக்குறிப்புகள் எடுந்துக் காட்டுக்களாகவும் பயன்பட்டு வருகிற சிறந்த நூலாகும்.

கட்டுரைத் தொகுப்பின் உள்ளடக்கமாக பட்டியலிடப்பட்ட கட்டுரைகளை குடமுழுக்கு மலர்களிலும், ஆவணம் ஆண்டு சிறப்பிதழ்களிலும், தொல்லியல்துறை கருத்தரங்குகளிலும்,, பல்கலைக் கழக கருத்தரங்குகளிலும் வாசித்தளிக்கப்பட்ட மதிப்புறு தரவுகளைக் கொண்ட கட்டுரைத் தொகுப்பாகும்.

நகரத்தார்கள் 'கொண்டுவிற்கப் போனது, 1) நில மார்க்கமாக மற்றும் 2) கடல் வழியாக என்பது வரலாறு. காவிரிப் பூம்பட்டினக் காலத்திலிருந்தே கடல் வணிகத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்ததை முதல் இரண்டு கட்டுரைகளில் கோடிட்டுக் காட்டி விடுகிறார். அதிலும் கல்கத்தாவிலிருந்து துவங்குவதும் சாலப் பொருத்தமானதே. ஏனென்றால் நகரத்தார்களது வாணிபப் பெருக்கம், செல்வச் செழிப்பு, அறப்பணிகளுக்கான அர்ப்பணிப்பு மாளிகைகள் கட்டுமானத் துவக்கம் எல்லாவற்றுக்கும் அதுதான் ஊற்றுக்கண். இத்தனைக்கும் கிழக்குக்

கடற்கரை யோரமாக, பாய் மரக்கப்பல்களில் பயணித்து கல்கத்தா சென்று அங்கிருந்து பர்மா சென்றார்கள்.

கல்கத்தாவில் இயங்கிய நகரத்தார்களது 125 கடைகள் மூலம் பர்மாவுடனான தொடர்பும் மேலை நாடுகளுக்கான அரிசி ஏற்றுமதியும் வேகமெடுத்தன. குறிப்பாக கி.பி 1867 ஆம் ஆண்டு சூயஸ்கால்வாய் திறந்த பிறகு ஆப்பிரிக்காவைச் சுற்றிவராமல் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றமையால், லாபம் 'கூரையைப் பொத்துக்கொண்டு' வந்தது. இதை யொட்டி எழுந்த கப்பல் சார்ந்த இரு சொல்லடவுகள் 'அரிக்கன் பழனியப்பா அலறுதடா உன் தந்தி' என்பதும் 'செட்டிக் கப்பலுக்குச் செந்துரான் துணை' என்பதுவுமாகும்.

பெரிய கப்பல்கள் மூலம் நெல், அரிசி அனுப்பச் செலுத்திய கட்டணத்தில் ஐந்து சதவிகிதம், கப்பல் கம்பெனிகள் திருப்பித்தந்த தொகையைக் கொண்டு தருமத்திற்கென எடுத்து வைத்து இந்தியாவில் பல இடங்களில் கோயில் திருப்பணி செய்தார்கள். அவற்றுள் குறிப்பிடத்தக்க பெரியபணி காசி விசுவநாதருக்குக் கட்டளைகள் ஏற்படுத்திப்,பூசை புனஸ்காரங்கள், கடந்த இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருவதைக் காட்சிப் படுத்துகிறார். 1942 இல் 'வெள்ளையனே வெளியேறு' போராட்ட ஊரடங்கின் போதும், காசிச் சத்திரத்திலிருந்து 'சம்போ' என்று அழைக்கப்படும் பூசைப் பொருட்கள் தடையின்றி அனுப்பப்பட்டது சரித்திரக் குறிப்பாகும். காசிச் சத்திரம் பற்றித் தெரியாத வடநாட்டவர்களே இல்லை என்பது மெய்யே, புதிய மாடிக்கட்டடம் எழுத்து கொண்டிருக்கிறது.

அடுத்துவரும் கட்டுரைகளில் மூன்று தரவுகள் நம்மைக் கவர்கின்றன.

1) நகரத்தார் நாகநாட்டிலிருத்து வந்ததற்கான ஆதாரமாக, 'அது இலங்கைக்கு அருகிலிருந்த தீவு, கடல் கோளால் அழிந்ததுபற்றி, மணி மேகலைக் காப்பியத்திலிருந்து,

"நாக நன்னாட்டு நானூறு யோசனை

வியன் பாதாளத்து வீழ்ந்து கேடெய்த" என்ற வரிகளால் விளக்குவதும்

2) மலேயா சுல்தான், தஞ்சை சரபோஜி, புதுக்கோட்டைத் தொண்டைமான், இராமநாதபுர சேதுபதி ஆகியோருக்குப் பொருளாதார உதவி செய்கிற அளவிற்கு இவர்கள் முன்னேறியது எப்படி என்றும் சுட்டிக்காட்டுசிறார். சில நீதிமன்ற வழக்குகளிலும் சாதகமாகச் சாட்சி சொல்லி உதவியிருக்கின்றனர்.

சைவம், முருகக் கடவுள், மடங்கள், சத்திரங்கள், கோயில் திருப்பணிகள் அல்லாது மதச்சார்பின்றி சில கட்டுரைகளில் 'விளக்கு சட்டி', 'வள்ளுவப்பை', 'அஞ்சல் தலை', 'பிள்ளை கூட்டுதல்', 'அண்டிமென்' பத்திரக் குறிப்பு போன்றவை நகரத்தார்களுக்கே உரிய புழங்கு பொருட்கள் வழக்காறுகள் ஆகும்.

பிள்ளை இல்லாதவர் தந்து எடுக்கின்ற சடங்கினை 'பிள்ளை கூட்டுவது' என்று நகரத்தார் குறிப்பிடுவதைச் சுட்டிக்காட்டி மஞ்சத் தண்ணீர் கொடுத்தல், பழைய அரைஞான் கயிறு அறுத்து புதிது அணிவிப்பது, என்னென்ன உரிமைகள் உடைமைகளை பிள்ளை வருகிறவன் பெறுவான் என்பதை முறி எழுதி ஒப்பந்தத்தில் தருவது எண்ற நுணுக்கமான செய்திகளையும் சடங்குகளையும் விவரிக்கிறார் (வைண இலக்கியங்களில் சீரங்கநாதரும் மஞ்சள்நீர் தந்து தத்து எடுத்தது பற்றி ஒரு குறிப்பு வருகிறது. நகரத்தார் கொப்பிகொட்ட எடுத்துவைக்கும். விளக்குச் சட்டியை முதுமக்கள் தாழியுடன் ஒப்பிடுவது புதிய கோண ஆய்வாக அமைகிறது. அஞ்சல் உறைகளையும் வரலாற்றுச் சான்றாகப் பார்ப்பதுடன் அதிலும் சொல் வழக்காக "ஜரூர் ஜரூர்" என்பது அவசர தபால் (எக்ஸ்பிரஸ்) என்பதாகச் சுட்டுவது சுவைமிகு ஆவணம்.

'நகரத்தார் சிற்ப மரபு' மற்றும் 'தமிழக நுண்கலைகளுக்கு நகரத்தார் பங்கு' என்ற கட்டுரைகள், பேராசிரியர் முனைவர் வ.தேனப்பன மற்றும் தொல்லியல் அறிஞர் மா.சந்திர மூர்த்திக்கு அடுத்து மேற்படித் தலைப்புகளைத் திறம்பட ஆய்வு செய்திருப்பது இந்நூலாசிரியர் முனைவர் வள்ளி சொக்கலிங்கம்தான். விஜயநகரப் பேரரசு காலத் தூண்களின் மேல் நீட்டிநிற்கும் மொட்டுப் போன்ற போதிகை, நகரத்தார் சிற்பக் கலையில் புஷ்ப போதிகைகளாக நன்கு வளர்ச்சி யடைந்த வாழைப் பூக்களாகும் என்று கூர் நோக்குடன் விவரித்திருப்பது பாராட்டுதற்குரியது.

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கம்பத்தடி மண்டபத்தை நகரத்தார்கள் பிரித்து சிற்ப வேலைப்பாடு மிக்க எட்டுத் தூண்கள் தாங்கி நிற்கும் கருங்கல் மண்டபம் அமைத்ததோடு, உலகப் புகழ் பெற்ற மீனாட்சி அம்மன் திருமணக் கோலச் சிற்பத்தையும் வடித்திருக்கிறார்கள் என்றும் சுட்டிக் காட்டுகிறார். சிற்பக் கூறுகளைப் பற்றிய ரசனை இருந்தால் மட்டுமே எழுத இயலும்.

மேற்கூறிய கோயிற்கலைத் திருப்பணிகளின் பின்னொட்டாக, சிற்ப மரபின் நுணுக்கத்தோடு கட்டப்பட்ட செட்டிநாட்டு வீடுகள் பற்றிய

ஒப்பீடு கண்டுணர வேண்டியவைகளாகும். முகப்பு, ஹால்வீடு, வளவு, பட்டாலை (பெட்டகசாலை), வளவில் இரட்டை வீடுகள், கலியாணக் கொட்டகை, பந்திக்கட்டு, இரண்டாங்கட்டு அறைகள், மேல்வீடு, மச்சு, அடுப்படி, குச்சுவீடு என வீடுகளின் அங்கங்களின் பட்டியலைத் தந்திருப்பது வெறும் பகட்டுப் பேச்சல்ல! வீடுகள் மிகப்பெரியவைகளாக, குடும்பத்தார் அனைவரும் கூடி வாழ்வதற்கு ஏற்றதாக திருமணம் போன்ற விசேடங்களை, வீட்டிலேயே நடத்துவதற்கு ஏதுவாகக் கட்டப்பட்டன என்பது உண்மையே!

அய்யா, கொத்தனார், மரத்தச்சர் கல்தச்சர் எனத் தரையில் பரப்பிய மணல் கட்டத்தைச் சுற்றி அமர்ந்து திட்டமிட்டு நூல் அறிஞர் போல் திசை நோக்கி முளைக்குச்சி அடித்து, தும்பு கட்டி, திசைத் தெய்வங்களை கட்டிய வீடுகள் திறப்பாக விடப்படும் 'முற்றம்' பஞ் சபூதங்கள் பிரவேசிக்கும் இடமாக இருப்பதால் அந்தப் பரப்பிலும் அதைச் சுற்றியுள்ள சுத்துப்பத்திகளும் வளவு வீட்டிற்குள் அமைந்த சாமிவீடு போன்றவை சடங்குகள், நிகழ்விடங்களாகும். முற்றம் என்பது வாழ்வுவட்டச் சடங்குகள் நடக்கும் தலைமை இடம். நல்லது கெட்டது இரண்டும் நடக்குமிடம். இறந்தவர் உடலைக் கிடத்தி இறுதிக் காரியங்கள் நடக்கும் களமாகும். களிமண் உருண்டையில் நட்ட நான்கு குச்சிகள் மீது குடிவண்ணார் கட்டும் துணியே விதானம்; அதன் கீழே சிவபதவி அடைந்தவரின் இறுதி யாத்திரைக்கான ஆயத்தச் சடங்குகள் நடக்கும்.

முகப்பு மாளிகையின் முகம், வெளித் திண்ணையும், பட்டாலையும் (பெட்டகசாலை) அதை ஒட்டிய சுத்துப்பத்தியும் முகப்பாகும். வளவு 'பங்காளிகள் வளைத்துக் கொண்ட (உரிமையான) பகுதியாகும், கல்விச்சாலைபோல் பெட்டகச் சாலை, பெட்டக அறையாகும். வளவு இரட்டை வீடுகள் சங்க இலக்கியங்களுள் வருகின்ற உள்வீடுகள் ரூ வேறு வைக்கும்போது மணமான 'புள்ளி' அந்தஸ்து பெற்றவனுக்கான அறை(கள்) ஆகும். கல்யாணக் கொட்டகை என்பது திருமணம் நடைபெறும் இடம். வளவிலும் திருமணம் நடைபெறும். பெண் வீட்டில்தான் மணம் நடப்பது மரபு. 'பந்திக் கட்டு' என்ற போஜனஹால் நகரத்தார் விருந்தோம்பலைப் பிரதிபலிக்கும் நீள் செவ்வக உணவுக்கூடம். 'இரண்டாங்கட்டு' கட்டுக்கட்டாகக் கட்டப்பட்டதில் இரண்டாவதாகக் கட்டப்பட்ட பகுதி பெண்களின் ஆளுமைக்குரிய பகுதி. அடுப்படி ரயிலடி மாதிரி அடுப்புகள் நிற்கும் இடம். நான்கைந்து அடுப்புகளில் ஒன்று மாமியாருக்கானது தனிச்சமையல் செய்ய. ஹெட்கர் தர்ஸ்டன் குறிப்பிடுவது போல் விதவைத் தாயானாலும்

தனி அடுப்புத்தான். பிற மருமகள்களுக்கானது. மச்சுவீடு மாடியில் சாமான்களை அடைந்துவைக்குமிடம். ‘குச்சு வீடு’ என்பது வீட்டிற்குள் ஓர் ஒதுக்குப் புறமான இடம். வீட்டிற்கு விலக்கான பெண்களுக்கான பிரத்யேக இடம். அறப்பணிகளுக்குள் ‘நீர்நிலை அறங்கள்’ என்ற ஒன்றையும் வகைமைப்படுத்தியுள்ளார் ஆசிரியர். ஊருணிகள் (ஊர் + உண் + நீர்) மக்களுக்கானது என்பதால், அமைத்ததோடு விட்டுவிடாமல் அருகில் கோயில் கட்டியமை அதன் புனிதத்தையும் உறுதிசெய்வதற்கே என்பது புதிய கருத்தாகும். நகரத்தார் அமைத்த ஊருணிகள் அவர்தம் கட்டடக்கலைக்குச் சான்றாதாரம் என்பது ஏற்கப்பட வேண்டியதே. எண்கோண சதுர, செவ்வதமாகவும் நான்கு மூலைகளில் காவல் உருவங்கள் என்பதெல்லாம் போக அவற்றின் நெடுக்கு வாட்டு படித்துறை நல்ல கைவேலைக் கலையாகும். நகராண்மைக் கழகத் தலைவராக இருந்த செட்டியார், சிதம்பரம் நகர் முழுதும் தமது பணத்தையும் சேர்த்து குடிநீர் குழாய்கள் அமைத்த கதையை இக்கால அரசியல்வாதிகளின் காதில் போட்டால் நன்றாக இருக்கும். தனிப்பட்ட முறை பல செட்டியார்கள், செட்டிநாட்டில் ஆங்காங்கே குழாய்கள் அமைத்து குடிநீருக்கான கட்டமைப்புகள் ஏற்படுத்தியதைக் கல்வெட்டு ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டியுள்ளார். சில குழாய்களை சில பெரிய ஆச்சிகள் ‘பீலி’ என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். பீலி மயிற்பீலி என்றால் மயிலிறகு. அதன் வெண்மையான தண்டு குழாய் மாதிரிதானே உள்ளது?!

அறப்பணிகள் செய்வதிலும் ஆச்சிமார்கள் செட்டியார்களுக்கு சளைத்தவர்கள் அல்லர் என்பதை விவரிக்கும் ‘ஆச்சிமார்களும் அறப்பணிகளும்’ என்ற கட்டுரை, தாலாட்டின் மூலம் தமது குழந்தைகளுக்கு / பேரப் பிள்ளைகளுக்கு நகரத்தார் செய்த அறப்பணிகளை, வீர சிவாஜியின் தாய் சிவாஜிக்கு, வீரக்கதைகளை, தர்மத்தை இளமையிலேயே ஊட்டிய விதத்துடன் ஒப்பிட்டிருப்பது நல்ல படிப்பினையாக அமையும். இந்தத் தலைப்பில் இதுபற்றி வேறு யாரும் தனியாக எழுதியதாகத் தெரியவில்லை. ஆசிரியர் தந்திருக்கின்ற சான்றுகள், கல்வெட்டுக்கள் கொண்டு ஆச்சிமார் அறப்பணிகள் என்றே ஒரு தனிநூல் எழுதலாம். ஆச்சி சமையல் என்று தனித்தனி வந்துள்ளதே தவிர இது போன்ற அறிவுபூர்வமான ஆய்வு நோக்கில் எழுதப்படுவதெல்லாம் அரிது அரிது.

சைவ சமய வழிபாடு அடிநாதமாக நூல் முழுக்க இழையோடினாலும் செட்டியப்பனின் மைந்தன் செட்டி முருகன் குறித்தும் அவன் கை வேல் பற்றியும், நான்கு கட்டுரைகளில் கோடிட்டுக் காட்டுகிறார். பல புதிய

செய்திகள் அவை 1) தண்டாயுதபாணியும் நகரத்தாரும் 2) வேலை வணங்குவதே வேலை 3) எந்நாளும் காக்கும் வேல் வழிபாடு மற்றும் 4) சேந்தினி பழனியப்பய்யா பாடிய செவ்வேள் என்பனவாகும்.

தண்டாயுதபாணி என்றால் கோல் +ஆயுதம்+ கை என்கிறார் ஆசிரியர். தண்டம் என்ற கோல் ஏந்திய சாமி இந்த முருகன். தாங்கள் போகுமிட மெல்லாம் வழிபாடு செய்ய கோவில் வேண்டும். செட்டி முருகன் விக்கிரகம் வேண்டும். சிலைக்கு முறைப்படி பூசை செய்யவேண்டும் என்ன செய்வது பிராமணப் பூசாரிகள், சிவாச்சாரியார்கள் கடல் தாண்டி (அக்காலத்தில்) செல்வதில்லை. கருவறை தெய்வச் சிலைகளுக்கு ஆகம விதிப்படி பூசைகள் செய்யப்பட வேண்டும். எனவே இவர்களது 400 ஆண்டுகால பழனி நடைப்பயணத்தில், பழனித் தலத்தில் பண்டாராங்கள் பூசை செய்வதைக்கண்டு, தங்களது வெளிநாட்டுக்கடை கிட்டங்களின் மாடியில் வேலை நிறுத்திப் பண்டாரங்கள் மூலம் பூசை செய்து வந்தனர்.

முருகனுக்கு 22 வடிவங்கள் என ஆகமத்தில் கூறப்பட்டிருந்தாலும் வேல்வேலாயுதனையும், தண்டாயுதனையும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வழிபட்டமைக்கு இரண்டு காரணங்களை முன்வைக்கிறார் ஆசிரியர். அவை முறையே

1. பழனி பாதயாத்திரையில் முன் சென்றபடி வழிநடத்துவது வேல்தான்

2. வணிகர்கள் பெண்டிரை கடல் கடந்து அழைத்துச் செல்வதில்லை. குடும்பமில்லாது, கடை வைத்த அயல்நாடுகளில் சபலமில்லாது இருக்க துறவுக் கோலத்து தண்டாயுதபாணியை வழிபட்டனர்.

3. ஈட்டிய பொருளில், லாபத்தில் ஒருபங்கை தர்மத்திற்கெனவும், தண்டாயுதபாணிக்குக் கோயில் எடுத்து வழிபடவும் ஒதுக்கினர்.

தண்டாயுதபாணியா? தெண்டாயுதபாணியா? என்ற சொல் விளையாட்டில் தண்டம்+ஆயுதம்+பாணி கோல்+கருவி+கை கோலைப் போர்க் கருவியாகக் கொண்ட கையை உடையவன் என்று விவரிக்கிறார்.

இந்தக் கட்டுரைகளில் பழனி அறப் பட்டயங்கள், பழனி நடைப்பயணம், காவடிகள், அன்னதான மடம் பற்றிய குறிப்புக்கள் விரவிக் கிடக்கின்றன. கோவிலூர் மடாலயம், அன்னதான மடங்கள், பசு மடங்கள், உப்பு மடம் ஊறுகாய் மடம். சாது மடம், திருமந்திர மடம், திருவாசக மடம், அறுபத்து மூவர் மடம் என எதையும் விட்டு விடாமல் ஆவணப்படுத்தியுள்ளார்.

வாய்ச்சண்டை தெரியும், கைச் சண்டை தெரியும். எழுத்துச் சண்டை தெரியுமா? மற்றவர்கள் கருத்தை மறுக்கும் போது கருப்பு வெள்ளை (**Black & white**) புத்தகமாக அச்சிட்டு சுவடி யிட்டதை ‘கண்டன இலக்கியங்கள்‘ என்ற தலைப்பில் விவரிக்கிறார். 1910ஆம் ஆண்டு ‘ஞான சாகரம்’ இதழில் மறைமலை அடிகள் நகரத்தார் அதிகம் பொருட் செலவில் கோயில் திருப்பணிகள் செய்வதைக் குறித்துக் கடுமையான விமர்சனம் செய்ததற்குப் பதிலடியாக அரு. பழ. சின்ன லெட்சுமணன் செட்டியாரவர்கள் குமாரன் பழனியப்ப செட்டியார் கட்டுரை எழுதியதைக் குறிப்பிடுகிறார்.

‘அண்டிமெண்டு உண்டியல் ஆவணங்கள்’ என்ற கட்டுரையில் அண்டிமெண்டு என்று தமிழ் படுத்தப்பட்டு உள்ளது, ‘ஆன் டிமாண்டு’ என்ற ஆங்கிலச் சொற்கள். வட்டிக்கடைகளில் பெறப்படும் பணம் எப்பொழுது எந்த ஊரில் / எப்படி தர வேண்டும் என்ற ‘உண்டியல்’ (ஹுண்டி) முறையை, நகரத்தார்களது ஆவணங்கள் மூலம் விளக்குகிறார். நகரத்தார் வாங்கியலில் முன்னோடிகள் எனபதை விளக்கும் கட்டுரையாகும் இது.

இந்நூலிலுள்ள தரவுகள், களப்பணி, சான்றாதார நூல்கள், ஆய்வுக் குறிப்புகள் முதலியன கொண்டு இரண்டு முனைவர் பட்டத்திற்கான கோப்புகளைத் தயாரித்து விடலாம். வெட்டி ஒட்டி (**Cuting and pasting**), நோகாமல் நூலாக்கம் செய்வோரிடையே மிக முயன்று சேகரித்து, ஒப்பு நோக்கி எழுதிய ஆவணங்களின் தொகுப்புநூல் இது.

இது நகரத்தார்களுக்காக மட்டும் எழுதப் பட்டதல்ல, எல்லா மாணவர்களும், ஆய்வாளர்களும் நூலறிஞர்களும் படித்து அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும்.

ஆசிரியர் தந்துள்ள பின்னிணைப்பு, துணைநூற்பட்டியலிலுள்ள, நூல் அத்தனையும் ஓரிடத்தில் சேகரித்து வைத்தால் ‘நகரத்தாரியல் நூலகம்’ உருவாக்கிவிடலாம்.

‘நபார்டு’ கண்ணப்பன்,

மேனாள் துணைப் பொது மேலாளர்(ஓய்வு),

அருங்காட்சியகவியலார் சுற்றுலாத்துறை ஆர்வலர்.

அணிந்துரை



தமிழ்ச் செம்மல்
முனைவர் சே.குமரப்பன்,
துணை முதல்வர் (ப.நி),
சேவு. அண. கல்லூரி,
தேவகோட்டை.

முதல்வர் (ப.நி)
நாச்சியப்ப சுவாமிகள்
கலைக் கல்லூரி, கோவிலூர்

கல்வி ஆலோசகர்,
றிஸிளி (ப.நி)
கோவிலூர் மடாலயம்,
கோவிலூர்

டாக்டர் நா. வள்ளி அவர்கள் 'நகரத்தாரின் பண்பாட்டுப் பதிவுகள்' என்ற நூலில் நகரத்தார் பற்றிய பல தகவல்களை பல்வேறு கோணங்களில் ஆய்வு நோக்கோடு எழுதியுள்ளார். இதனை நகரத்தார்களின் ஒரு முக்கியமான ஆவணமாக வைத்துக் கொள்ளலாம். அவர் எழுதிய பல கட்டுரைகளின் தொகுப்பாக இந்த நூல் அமைந்துள்ளது எனக் கருதுகிறேன். நூலின் தொடக்கமே மிக நன்றாக உள்ளது. இந்த நூலில் 33 தலைப்புகளில் கட்டுரைகளை வழங்கி உள்ளார். முதல் தலைப்பாக கல்கத்தாவும் காவிரிப்பூம்பட்டினமும் இடம்பெற்றுள்ளது. நகரத்தார்களுக்கு மிக முக்கியமான இடம் கல்கத்தாவும் காவிரிப்பூம்பட்டினமும் ஆகும். கல்கத்தா நகர விடுதியின் படங்கள் சிலவற்றை வெளியிட்டுள்ளார். கல்கத்தாவும் காவிரிப்பூம்பட்டினமும் கடற்கரை நகரங்கள். பெரும்பாலும் நகரத்தார்கள் கடற்கரை நகரங்களிலேயே இருந்து வணிகத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர். அப்பொழுது அந்த நகரங்களில் எல்லாம் நகர விடுதிகளை ஏற்படுத்தியுள்ளனர் என்று கூறியுள்ளார் முக்கியமாக நாகூர், சென்னை, கல்கத்தா, கொழும்பு பினாங்கு ஆகிய ஐந்து துறைமுகங்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் முக்கிய வணிகத் தலங்களாக விளங்கினஎன்று கூறியுள்ளார்.

பர்மா, கல்கத்தாவில் வணிகம் செய்து அதில் கிடைத்த

பணத்தைக் கொண்டு காசி மற்றும் காசியைச் சுற்றி பல இடங்களில் நகர சத்திரம் கட்டியது, காசி விசுவநாதர் கோவிலில் நகரத்தாருக்கு கிடைத்த பெருமை, காசி விசுவநாதர் கோவிலுக்கு நகரத்தார் செய்துவரும் சேவைகள், காசி விசாலாட்சி கோவில் கட்டி குடமுழுக்கு நடத்தியது ஆகியவற்றை பதிவு செய்துள்ளார். கடல் கடந்து சென்று நகரத்தார்கள் சைவத்தையும் தமிழகக் கோயில் கலைகளையும் வளர்த்துள்ளனர். அதன் வரலாற்றுத் தடங்கள் இன்றைக்கும் அந்நாடுகளில் உள்ளன என எழுதியுள்ளார்.

18 19 ஆம் நூற்றாண்டில் மலேசியா சுல்தான், தஞ்சை சரபோஜி மன்னர், புதுக்கோட்டை அரசர், ராமநாதபுரம் சேதுபதி ஆகியோருக்கு பொருளதவி செய்த சமூகம் நகரத்தார் சமூகம். சிறுபான்மையினரான நகரத்தார்கள் அரசர்களுக்கு உதவியது எப்படி சாத்தியமாயிற்று என்பதை விளக்கி உள்ளார். கடல் வாழ்க்கை என்பது நகரத்தார்களுக்கு பழக்கமான ஒன்று. நாகநாடு, காஞ் சிபுரம், காவிரிப்பூம்பட்டினம் போன்ற நகரங்களில் தொடங்கி பின்னர் பர்மா, வியட்நாம், தாய்லாந்து இந்தோனேஷியா, இலங்கை, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் சென்று தொழிலில் ஈடுபட்டு திரைகடல் ஒடியும் திரவியம் தேடியதால் தான் இது சாத்தியமாயிற்று என்று கூறுகிறார்.

இலங்கை, மலேசியா, போன்ற நாடுகளில் தேயிலை, ரப்பர் ஆகியவற்றை அறிமுகம் செய்து, விவசாயிகளுக்கு கடன்கொடுத்து நகரத்தார்கள் அந்த நாடுகளை வளப்படுத்தியுள்ளனர். அந்த நாடுகளில் தெருக்களுக்கு நகரத்தாரின் பெயர்கள் இடப்பட்டுள்ளன என்று கூறியுள்ளார். சான்றாக ரங்கூனில் நகரத்தார் கடைகள் இருந்த வீதி 'நகரத்தார் ரோடு' என்றும், கொழும்பில் 'செட்டியார் தெரு' என்றும் பெயரிடப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டி உள்ளார்.

பாடல் பெற்ற தலங்களான மதுரை, திருப்பரங்குன்றம், திருவண்ணாமலை, திருப்பத்தூர், திருமுதுகுன்றம், சீர்காழி, பல்லவனேஸ்வரம் போன்ற தலங்களில் நகரத்தார்கள் திருப்பணி செய்துள்ளதைக் கூறியுள்ளார். மேலும் இராமேஸ்வரம், காளையார்கோயில் போன்ற இடங்களிலும் நகரத்தார்கள் திருப்பணி செய்துள்ளது மற்றும் நந்தவனங்கள் பசுமடங்கள் வேதபாடசாலைகள், ஆகம பாடசாலைகளோடு திருவாசக மடம், திருமந்திர மடம், திருப்புகழ் மடம், ஏகாதசி மடம், கார்த்திகை மடம், சனி மடம், சாதுக்கள் மடம், ஞானியார் மடம், இராக்கால மடம், குங்கிலிய மடம், பன்னீர் மடம், கஞ்சி மடம், உப்பு மடம், ஊறுகாய் மடம் என பல்வேறு மடங்களை கட்டியது நகரத்தார்ககளின் சிறந்த பணி என்று கூறியுள்ளார்.

நகரத்தார்கள் இலவச மருத்துவமனைகள், சுகாதார நிலையங்கள், சுமைதாங்கி கற்கள், பாலங்கள், பூங்காக்கள், கைகாட்டிகள், தெரு விளக்குகள், தந்திச் சாலைகள், அஞ்சல் நிலையங்கள் அமைத்தும் தேவையான வசதிகளை பொதுமக்களுக்கு செய்து கொடுத்துள்ளனர் என்று கூறியுள்ளார்.

1909 ஆம் ஆண்டிலிருந்து 1935 ஆம் ஆண்டு வரை சுதந்திரம் அடையும் முன் பல்வேறு நகரங்களில் பல்வேறு கல்விச் சாலைகளை ஏற்படுத்தியவர் நகரத்தார் என்று, நகரத்தார் தொடங்கிய நிலையங்களை பட்டியலிட்டு வழங்கியுள்ளார். இந்தியாவிலே முதன்முதலாக தனி மனிதனால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகம் அண்ணாமலை பல்கலைக்கழகம் என்றும் அதன் சிறப்புகளை கூறியுள்ளார். மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, சுந்ததானந்த பாரதியார் போன்ற தமிழ் புலவர்களை ஆதரித்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர்கள் நகரத்தார்கள். சுதந்திரம் அடைவதற்கு முன்பும் சுதந்திரம் அடைந்த பின்பும் பல்வேறு இதழ்களை நடத்தியவர்கள் நகரத்தார்கள். மருத்துவமனைகளையும், போக்குவரத்துச்சாலை வசதிகளையும், குடிநீர் வசதிகளையும் செய்து கொடுத்தவர்கள் நகரத்தார்கள். காரைக்குடியில் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் மின்சார விநியோகம் செய்தவர்கள் காரைக்குடியைச் சேர்ந்த மெ.சே.மெ. மெய்யப்ப செட்டியார் ஆவார். காரைக்குடி கிருஷ்ணன் செட்டியார் செய்த அறப்பணியைப் பாராட்டி 1877 ஆம் ஆண்டு விக்டோரியா மகாராணி வழங்கிய பாராட்டு பத்திரத்தினை பதிவு செய்துள்ளார்.

இலங்கை, இந்தோனேஷியா, மலாயா போன்ற நாடுகளில் தேயிலைத் தோட்டங்களையும், ரப்பர்த் தோட்டங்களையும் உண்டாக்கி பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் நகரத்தார்கள் என்றும், பர்மாவில் அதிகமான முதலீடு செய்து அந்த நாட்டின் செழிப்பிற்கு நகரத்தார்களே காரணம் என்றும், நகரத்தார்கள் பர்மாவில் செய்த பல்வேறு தொழில்கள் பற்றியும், ஏற்றம் இறக்கம் பற்றியும் விளக்கி கூறியுள்ளார்.

நகரத்தார்கள் வாழ்ந்த வெளிநாடுகளில் வசித்த ஊர்களின் பெயர்களைக் கொண்டு பட்டப் பெயர்கள் பல உள்ளன. மாந்தளை அருணாச்சலம் செட்டியார், ஈப்போ நாராயணன் செட்டியார், தாப்பா நாச்சியப்ப செட்டியார், மாதம்பையார் வீடு, லண்டன் வீடு, கொழும்பு சேது செட்டியார் வீடு, பாசின் பழனியப்ப செட்டியார் வீடு, காலி வீடு, அரிக்கன் பழனியப்ப செட்டியார் வீடு என்ற பெயர்கள் மூலம்

நகரத்தார்கள் சென்ற வெளிநாடுகளை அறியலாம் எனக் கூறியுள்ளார். நகரத்தார் கொண்டுவிற்ற நாடுகளில் உள்ள சிறப்பான பொருட்களை செட்டிநாட்டிற்குக் கொண்டு வந்து பெண்களுக்குச் சீதனமாகக் கொடுத்துள்ளனர். கொண்டு வந்த பொருட்களுக்கு அந்த ஊரின் பெயர் சேர்த்து வழங்கப்படுகிறது. உதாரணமாக கொழும்பு ஏத்தல், மாந்தலை கரண்டி, பர்மா பாய், பர்மா தடுக்கு, ஜப்பான் டைல்ஸ், ஜெர்மன் கடிகாரம், பெல்ஜியம் வைரம், பெல்ஜியம் கண்ணாடி, அரிக்கேன் விளக்கு போன்றவை குறிப்பிடத் தக்கவைகளாகும் என்று கூறி அவற்றின் படங்களையும் வெளியிட்டுள்ளார்.

"மஞ்சள் நீர் வாசக முறி" என்ற ஒரு புதிய சொற்றொடரை அறிமுகப்படுத்தி விளக்கியுள்ளார். நகரத்தார்கள் பிள்ளை கூட்டுதலோடு தொடர்புடையது இச் சொற்றொடர். தத்து எடுத்தல் அல்லது பிள்ளை கூட்டுதல் என்பது பற்றிய விளக்கங்களையும், பிள்ளை கூட்டிக்கொள்ளும்பொழுது எழுதிக் கொண்ட முறி பற்றியும் அதனை 'மஞ்சள் நீர் வாசக முறி' என ஓலைச் சுவடிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். பிள்ளை கூட்டுவதற்கு எழுதப்பட்ட முறி ஒன்றினையும் பதிவு செய்து, பிள்ளைகூட்டியவருக்குப் பிள்ளை பிறந்து விட்டால் எவ்வாறு பங்கு வைப்பது என்று கூறப்பட்டுள்ளதையும் பதிவு செய்துள்ளார்.

தேவகோட்டை ஜமீன்தார் குடும்பத்திற்கும் இராமநாதபுரம் ராஜா குடும்பத்திற்கும் உள்ள தொடர்புகள், சேதுபதியுடன் நகரத்தார்கள் இணைந்து செய்த திருப்பணிகள், நான்காவது தமிழ்ச் சங்கம் நகரத்தார்களுக்கும் புதுக்கோட்டை தொண்டைமானுக்கும் உள்ள தொடர்புகள் பற்றி விளக்கிக் கூறியுள்ளார்.

பழனி பாதயாத்திரை தொடர்பாக எழுதப்பட்ட அறப்பட்டயங்கள் மற்றும் பழனிப் பாதையாத்திரைக்கும் 'அரண்மனை பொங்கல்' குடும்பத்தாருக்கும் உள்ள தொடர்புகள் ஆகியவற்றை கூறியுள்ளார்.

நகரத்தாரர்களின் கட்டிடக்கலை, சிற்பக்கலை, பல்வேறு நகர கோயில்களில் உள்ள சிற்பங்களின் சிறப்புகள், பல்வேறு கோவில்களில் நகரத்தார் செய்த திருப்பணிகளில் உள்ள சிற்பக் கலை, ஓவியக்கலை ஆகியவற்றையும் கூறியுள்ளார். தமிழிசையையும், இசையையும் வளர்க்க நகரத்தார்கள் உதவியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். நகரத்தார்கள் சைவர்களாக இருந்த போதும் வைணவ கோயில்களை கட்டினார்கள் என்றும் நகரத்தார்கள் கட்டிய வைணவ கோவில்கள் பற்றிய பட்டியலையும் மற்றும் காசி அதை சுற்றியுள்ள

நகரச்சத்திரங்களை கல்வெட்டுகளையும் பதிவிட்டுள்ளார்.

அண்டிமெண்ட் (ஷீஸீ ஞ்மீனீணீஸீபீ) உண்டியல் ஆவணங்கள் 1887 1894 1919 ஆகிய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட ஐந்து வங்கிகளின் ஆவணங்களை பதிவு செய்துள்ளார். அவை ‘அண்டிமெண்ட் உண்டியல்’ என்று வழங்கப்பட்டது. அதை உருவாக்கியவர்கள் நகரத்தார்கள் என்றும், அதை எவ்வாறு செயல்படுத்தினர் என்பதையும், உண்டியல் மாதிரியையும் வெளியிட்டுள்ளார்.

நகரத்தார்கள் அக்காலத்தில் கடிதப் போக்குவரத்தை மேற்கொண்டுள்ளனர். 1908, 1910, 1911 இல் ஆங்கிலேய அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட அஞ்சல் உறைகள் கிடைத்ததாகவும், அது பற்றிய தகவல்களைப் பதிவு செய்துள்ளார். அதில் ஒன்று காரைக்குடியிலிருக்கும் முரு.லெ.கி.சொ. சொக்கலிங்கம் செட்டியார் என்பவருக்கு 1908 டிசம்பர் 28 ஆம் தேதி அனுப்பப்பட்ட கடிதம். அனுப்பிய கடிதத்தையும் பதிவு செய்துள்ளார். இந்த கடித உறைகளில் இருக்கும் விலாசங்களைக் கொண்டு அவர்களது நான்கு தலைமுறைகளை அறியலாம் என்றும், அக்காலத்திலே ‘ஸ்பீட் போஸ்ட்’ இருந்துள்ளது அதனை அஞ்சல் உரையின் மேல் ‘ஜரூர் ஜரூர்’ என்று எழுதப்பட்டிருப்பதையும் குறிப்பிட்டுள்ளார். பர்சனல் கடிதங்களைக் குறிப்பிட உறையின் இடது மூலையில் தனது என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையின் தோற்றம் வளர்ச்சிப் பணிகள் குறித்துச் சிறப்பாகத் தகவல்களை வெளியிட்டுள்ளார். பழனி பாதயாத்திரை தொடர்பாக ஓலைச்சுவடியில் உள்ள தர்ம சாசன அறப்பட்டயங்கள் குறித்தும், அறப்பட்டயங்களில் உள்ள தகவல் குறித்தும் பல்வேறு தகவல்களை பதிவு செய்துள்ளார்.

திருமணத்தின் போது எழுதுகின்ற இசைகுடிமானம் பற்றியும், இசைகுடிமானத்தில் நாம் எழுதுகின்ற வாசகங்கள் பற்றியும், மிக விரிவாக விளக்கிக் கூறியுள்ளார். இது நகரத்தார் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான ஒன்றாகும். மேலும் ‘வள்ளுவப் பை’ பற்றியும் அதனுடைய தோற்றம் பயன்பாடு குறித்து கூறியுள்ளார்.

100, 150 ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாடுகளுக்குச் சென்ற நகரத்தார்கள் தண்டாயுதபாணிக்குக் கோவில் எழுப்பி வழிபட்டதோடு, தங்கள் பணத்தில் நூல்கள் வெளியிட்டுத் தமிழாலும் வணங்கி உள்ளனர் என்று கூறி, அவற்றில் மலேசியா சிங்கப்பூர் நாடுகளில்

வெளியிடப்பட்ட நூல்களின் பட்டியலை கூறியுள்ளார். மேலும் வேல் வழிபாடு பற்றியும், நகரத்தார்கள் பால்குடங்கள் காவடி எடுத்துச் சென்று நடத்திய வழிபாடுகள் பற்றியும் எழுதி உள்ளார்.

‘கண்டன இலக்கியங்கள்’ என்ற தலைப்பில் சில தகவல்களைக் கொடுத்துள்ளார். இதனைப் படிக்கும்போது வியப்பாக உள்ளது. ஒரு நாணயத்திற்கு இன்னொரு பக்கம் எப்படியோ அப்படியே ஒரு கருத்துக்கு மாற்று கருத்து உண்டு என்பதும், அது திருஞானசம்பந்தர் காலத்திலும் மாணிக்கவாசகர் காலத்திலும் இருந்தது என்றும், பெரும்பாலும் கிறித்தவர்களும் சைவர்களும் கண்டன நூல்களை இயற்றியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்தை சேர்ந்த சிதம்பர சுவாமிகள் சைவ சித்தாந்த விற்பன்னர் என்றும், இவர் மறுப்பு நூல் எழுவதில் வல்லவர் என்றும், அவர் எழுதிய மறுப்பு நூல்கள் சிலவற்றை குறிப்பிட்டுள்ளார். இந்த கண்டன இலக்கிய வரிசையில் நகரத்தார் தொடர்பான கண்டன இலக்கியங்களும் உள்ளன. 18 19 ஆம் நூற்றாண்டுகளில் கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று தொழில் செய்து பெரும்பொருள் ஈட்டி அறப்பணிகளைச் செய்துள்ளனர். ஆலயங்களைக் கட்டித் திருப்பணிகள் செய்தும் சைவத்தையும் தமிழையும் திராவிட சிற்பக் கலைகளையும் வளர்த்தனர். கோயில் திருப்பணிகளைப் பாராட்டிய சமயத்தில் சிலர் அது குறித்து கருத்து வேறுபாடுகளை தெரிவித்து இருக்கிறார்கள். அவ்வாறு வெளியிடப்பட்ட ‘கண்டன நூல்கள்’ சிலவற்றையும் இதற்கு ஆதரவாகவும் எதிராகவும் எழுந்த கருத்துக்களையும் கூறியுள்ளார்.

கண்டவராயன்பட்டி கல்வெட்டுக்கள் என்ற தலைப்பில் பல்வேறு கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார். இந்து சமய பாதுகாவலர்களாக நகரத்தார்கள் விளங்கியதாக காஞ்சி பெரியவர் சந்திரசேகர் சுவாமிகள் கூறியுள்ளார். மேலும் ஒரு நாட்டுக்குக் ‘கோட்டைக் காப்பு வீரர்கள்’ இருப்பது போல, இந்து மதம் எனும் கோட்டைக்கு தனவணிக நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் கோட்டைக்காப்பு வீரர்களாக இருந்து வருகின்றனர் என்று பாராட்டியதாகப் பதிவு செய்துள்ளார். சுமார் 400 ஆண்டுகளாகப் பழநிக்குப் பாதயாத்திரை செல்லும் பக்தர்கள் குன்றக்குடியை அடுத்து கண்டவராயன்பட்டியில் தங்கிச் செல்வது வழக்கமாக உள்ளது என்றும், இந்த ஊரில், இவ்வூரை சேர்ந்த தெ.சி.நா குடும்பத்தார் தண்டாயுதபாணிக்கு கோயில் எழுப்பி திருப்பத்தூர் பொன்னமராவதி சாலையில் உள்ள இக் கோவிலுக்கு 1932இல் குடமுழுக்கு நடத்தி உள்ளதாகக் கூறியுள்ளார். மேலும் இக்கோவிலில் நடந்த பல்வேறு வரலாற்று நிகழ்வுகளைப் பட்டியலிட்டுள்ளார். தெ.சி.நா

குடும்பத்தைச் சேர்ந்த நாச்சியப்ப சுவாமிகள் சன்னியாசம் பெற்றுக் கோவிலில் இருந்து ஆன்மீகப் பணிகள் செய்ததையும், இவ்வூரைச் சேர்ந்த நகரத்தார்களும் தெ.சி.நா குடும்பத்தாரும் இணைந்து சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பே ஊருக்கு தேவையான ஊரணி, குளம், பாலம், சாலை ஆகியவற்றை அமைத்து தன்னிறைவுத் திட்டத்தை நாட்டார் உதவியோடு செயல்படுத்தி இருக்கின்றனர் என்று பதிவு செய்துள்ளார். மேலும் கண்டவராயன்பட்டிக்கு ஐந்து கிலோ மீட்டர் தூரத்திற்குத் தன் சொந்தச் செலவில் சாலை அமைத்து 600 புளியமரங்களை நட்டு மக்கள் உபயோகத்திற்கு தெ.சி.நா சொக்கலிங்கம் செட்டியார் வழங்கி உள்ளார் என்றும், அசோக மன்னர் ராணிமங்கம்மாள் போன்றோரின் பணிகளை இவை நினைவு ஊட்டுவதாகக் கூறியுள்ளார்.

'ஆச்சிமார்களும் அறப்பணிகளும்' என்ற தலைப்பில் ஆச்சிமார்கள் தாலாட்டில் நகரத்தார் செய்த திருப்பணிகள் கூறப்படுகின்றன என்றும், சிவாஜிக்கு வீரக்கதைகள் சொல்லி இளமையிலேயே அவரது தாய் வீர உணர்வை ஊட்டியது போல நகரத்தார் பெண்மணிகளும் அவர்கள் குடும்பம், மற்றவர்கள் செய்த அறப்பணிகளைச் சொல்லி அற உணர்வுகளை ஊட்டி உள்ளனர் என்று சில பாடல்களைச் சுட்டி காட்டிக் கூறியுள்ளார். நகரத்தார் பெண்மணிகள் பலர் ஆலயத் திருப்பணிகள் பலவற்றைச் செய்துள்ளனர் என்று ஆச்சிமார்கள் செய்த திருப்பணிகளையும் பட்டியலிட்டுள்ளார். அரிமளத்தில் 1870இல் பிறந்தவர் தெய்வானை ஆச்சி அடிகள். இவர் வடலூரில் மடத்தைத் தோற்றுவித்துள்ளார் என்றும், குன்றக்குடியில் ஆச்சிகள் நிறுவிய மடங்கள் ஊரணிகள் பற்றியும் கூறி அதன் கல்வெட்டுகளையும் பதிவு செய்துள்ளார். மேலும் நீதிபதியாக, நகரசபை உறுப்பினராக, நகரசபைத் தலைவராக, வைஸ் சேர்மனாக இருந்த நகரத்தார் ஆச்சிமார்களைப் பற்றிப் பெயர்களுடன் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு நூல்கள் மூலமும், ஆச்சிமார்களின் தாலாட்டு மூலமும், பல்வேறு அறிஞர்களின் கட்டுரைகள் மூலமும், மேலும் கவிதைகள் மூலமும், உரையாடல் மூலமும் அரிதின் முயன்று, குருவி தானியம் சேர்ப்பதைப் போலப் பல்வேறு தகவல்களைத் திரட்டி மிகச் சிறப்பாகத் தொகுத்து இந்நூலை வழங்கியுள்ளார். இந்த நூலை எழுதுவதற்கும் சில கட்டுரைகள் எழுதுவதற்கும் உதவிய கருவி நூல் பட்டியலையும் வெளியிட்டுள்ளார். நகரத்தார் பற்றிய செய்திகளை ஆய்வு நோக்கோடு பகுத்தாய்ந்து வெளியிட்டு அதற்கு ஆதாரமாகப் பல படங்களையும் ஆவணங்களையும் பதிவு செய்துள்ளார். இது போற்றுதற்குரியது. இந்த நூலை உருவாக்கியதில் அவருடைய கடுமையான உழைப்பு தெரிகிறது. இந்நூல் சிறந்த தமிழ் அறிஞரான முனைவர் நா, வள்ளி

அவர்களின் மணிமகுடத்தில் மேலும் ஒரு மாணிக்கக் கல்லாகும். நகரத்தார் பற்றிய பல்வேறு தகவல்களைக் கொண்டுள்ள இந்த நூல் ஒவ்வொரு நகரத்தார் வீடுகளிலும் இருக்க வேண்டிய நூலாகும். சிறப்பாக இந்த நூலை வெளியிட்ட முனைவர்.நா. வள்ளி அவர்களுக்குப் பாராட்டுக்கள். இது போன்று இன்னும் பல நூல்களை அவர் எழுதி வெளியிட வாழ்த்துகிறேன்.

செய்திகள் அதிக அளவில் இருந்ததால் அணிந்துரை சற்று நீளமாக எழுத நேர்ந்தது. சிறப்புமிக்க தகவல்களைத் தொகுத்து நூலாக்கம் செய்துள்ள கிருஷ்ணா பதிப்பகத்தாருக்கு வாழ்த்துக்கள்.

’நகரத்தாரின் பண்பாட்டுப் பதிவுகள்‘ என்ற தலைப்பில் நகரத்தார் பற்றிய அரிய பல தகவல்களை உள்ளடக்கிய இந்த நூலைக் கோவிலூர் மடாலயம் சுவாமிஜி அவர்கள் வெளியிடுவது சிறப்பிலும் சிறப்பு.

அன்புடன்

15.5.2025 சே.குமரப்பன்

பாஸ்டன், அமெரிக்கா

வாழ்த்துரை



அழகப்பா பல்கலைக்கழகம் 1985 ஆம் வருடம் மே மாதம் 9ஆம் நாள் தொடங்கப் பெற்று, உடற்பயிற்சிக்கல்லூரியில் பல்கலைக்கழக அலுவலகம் இயங்கி வந்தது. அழகப்பா பல்கலைக்கழகத்தில் இளநிலை உதவியாளராக நான் 26/12/1985 அன்று பணியில் சேர்ந்தேன். உடற்பயிற்சிக் கல்லூரியின் நூலகர் கி. சொக்கலிங்கம் ஐயா அவர்களும், அம்மா வள்ளி சொக்கலிங்கம் அவர்களும் என்னிடம் மிகுந்து அன்புகாட்டி ஆதரித்து வந்தார்கள்.

ஐயா சொக்கலிங்கம் அவர்கள் ஒரு நூலகர் என்றால், அம்மா வள்ளி அவர்கள் ஒரு நடமாடும் நூலகம் ஆவார். தமிழ் இலக்கண இலக்கியங்கள், கல்வெட்டுகள், திருக் கோயில்கள், நகரத்தார் திருப்பணிகள் மற்றும் தருமங்கள் தொடர்பன எந்தவொரு ஐயப்பாட்டிற்கும் உடனடியாகச் சான்றுகளுடன் விளக்கம் கொடுத்து உதவுவார்கள்.

பின்னாளில் எனது முனைவர் பட்ட ஆய்விற்கு ஆய்வுநெறியாளராக இருந்து என்னைக் கல்வியில் மேம்படச் செய்தார்கள். இன்று என்னுடைய பெயருக்கு முன்னால், "காசிஸ்ரீ, முனைவர்" என்ற இரண்டு பட்டங்களைப் போட்டுக் கொள்கிறேன். இதில் முனைவர் பட்டம் அம்மா அவர்கள் எனக்கு வழங்கிய கல்வியறிவால் எனக்குக் கிடைத்தது.

நகரத்தார் பலரும் கல்விச் சாலைகளை அமைத்துக் கல்வி கற்பித்தும், தொழிற்சாலைகள் அமைத்து வாழ்வாதாரங்களை வழங்கியும், கோயில்களில் திருப்பணிகள் செய்து திருவிழாக்களை நடத்தி ஆன்மீகத்தை வளர்த்தும், அன்னதான தருமங்கள் பல செய்தும், மக்களுக்கு நல்லன எல்லாம் செய்து வருகின்றனர்.

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை

நாடி இனிய சொலின்.

என்கிறார் ஐயன் திருவள்ளுவர். அல்லவை தேய்ந்து அறம்

பெருக வேண்டி, இனிய சொற்களை மட்டுமே சொல்வதையும், நல்லனவற்றை மட்டுமே செய்வதிலும் நகரத்தார் பெருமக்கள் சிறந்து விளங்கி வருகின்றனர். இத்தகைய பண்பாட்டுச் சிறப்புடைய நகரத்தார் பெருமக்கள் செய்துள்ள அறங்கள் எண்ணிலடங்கா. அவை அனைத்தையும் அம்மா வள்ளிசொக்கலிங்கம் அவர்கள் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள். இன்றைய தலைமுறையினர் இந்தப் பண்பாட்டைப் பேணி மென்மேலும் வளர்க்க வேண்டும். அதற்கு ஏதுவாக நகரத்தார்களின் பண்பாடுகள் அனைத்தையும் ஆவணப்படுத்தி நூலாக்கம் செய்யப் பெரிதும் முயன்றார்கள். இருப்பினும் நூலின் அளவு கருதி சிலவற்றை மட்டும் தொகுத்து 33 தலைப்புகளில் இந்நூலில் வழங்கியுள்ளார்கள்.

எத்தனையோ தருமங்கள் நடைபெற்றிருந்தாலும், கல்லிலும் செம்பிலும் வெட்டிய தருமங்கள் போன்று அம்மா வள்ளிசொக்கலிங்கம் அவர்களின் இந்த நூலும் ஆண்டாண்டு காலத்திற்கும் நிலைத்திருந்து நகரத்தார் பெருமக்களின் பண்பாட்டைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும், நகரத்தார் குல மக்களைப் பண்பாட்டில் உயர்திப் பிடித்திருக்கும்.

பணிவன்புடன்,

காசிஸ்ரீ முனைவர் நா.ரா. கி. காளைராசன்

(மேனாள் துணைப்பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம்)

28கி, குருநாதர்கோயில் தெரு, கோட்டையூர் 630106

என்னுரை



நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கிடையே தொன்றுதொட்டு இருந்துவரும் பழைய கலாச்சாரப் பண்பாடுகள் பழைய தமிழ்ப் பண்பாடுகளாக இருப்பதனாலே அவை மறைந்து போவதற்கு முன்பே, தக்க ஆராய்ச்சிக்காரர்கள் அப்பண்பாடுகளை எல்லாம் ஆராய்ந்து புத்தகமாக எழுதிப் பாதுகாக்க வேண்டும் என்பதே எனது தாழ்மையான வேண்டுகோள்" என்று சிறந்த தமிழறிஞரும் வரலாற்றறிஞருமான மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அவரது எழுத்துக்கள், என் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது.

மகாகவி முனைவர் அர. சிங்காரவடிவேலன் அவர்களின் வழிகாட்டுதலில், "நகரத்தாரின் அறப்பணிகள்" என்ற தலைப்பில் முனைவர்பட்ட ஆய்வை நான் மேற்கொண்டபோது நகரத்தார் தொடர்பான பல்வேறு செய்திகளையும் சேகரித்து வத்தேன்.

நகரத்தார்கள் தொடர்பான கல்வெட்டுச் செய்திகள், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அவர்கள் மேற்கொண்ட வணிகத்தொடர்பான செய்திகள், இசை, சிற்பம், கட்டிடம், ஓவியம், இலக்கியம் போன்ற நுண்கலைகள் வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றிய அரும்பணிகள், ஈராயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்துவரும் அவர்களது பழக்க வழக்கங்கள், பண்பாட்டுச் செய்திகள், அவர்களது கோயில் திருப்பணிகள், சமுதாயத்திற்கும் தமிழுக்கும் அவர்கள் ஆற்றியுள்ள அரும்பணிகள் ஆகியவற்றையெல்லாம் படிக்கும் போதும், பார்க்கும் போதும் வியப்பாகவும், பெருமிதமாகவும் இருக்கும்.

அச்செய்திகளையெல்லாம் அவ்வப்போது தஞ்சை தமிழகத் தொல்லியல் கழக வெளியீடான 'ஆவணம்' இதழ்களிலும், பிற இதழ்களிலும், குடமுழுக்கு விழா மலர்களிலும், கருத்தரங்குகளிலும்

கட்டுரைகளாக எழுதி வந்தேன்.

சுமார் ஒரு லட்சம் மக்கள் தொகையே கொண்ட நகரத்தார்கள் உலக வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய வரலாறு தமிழக வரலாற்றின், இந்திய வரலாற்றின், உலக வரலாற்றின் ஒரு பகுதி என்பதே உண்மை.

மேலும் இன்றைய இளைய சமுதாயத்தினர் தங்கள் முன்னோர்கள் தொடர்பான செய்திகளைத் தெரிந்து கொள்வது அவர்களுக்கு உந்துதலாகவும், ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதாகவும் இருக்கும்.

அதனால் என் சிற்றறிவுக்கு எட்டிய வகையில், நான் எழுதிய கட்டுரைகள் சிலவற்றைத் தொகுத்து "நகரத்தாரின் பண்பாட்டுப் பதிவுகள்" என்ற தலைப்பில் நூலாக வெளியிட முனைந்தேன்.

இந்நூலுக்கு ஆசியுரை வேண்டி கோவிலூர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ நாராயண ஞானதேசிக சுவாமிகள் அவர்களை அணுகியபோது, சுவாமிஜி அவர்கள் மிகவும் மகிழ்ந்து உடனே ஆசியுரை வழங்கியதோடு, மின்னூலாக வெளியிடுவதற்குத் தகுந்த ஆலோசனைகள் கூறி ஆசீர்வதித்தார்கள். கோவிலூர் மடாலயம் மூலமாக மின்னூலாக வெளியிடுவதற்கும் அனுமதி அளித்தார்கள். சுவாமிஜி அவர்களே நூலை வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது, நூலை வெளியிடவும் இசைவு அளித்தார்கள். சுவாமிஜி அவர்களுக்கு என் பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஆய்வுரை வழங்கிய நகரத்தாரியல் ஆய்வாளரும், எனக்கு அவ்வப்போது நல்ல ஆலோசனைகள் வழங்கி ஊக்கப்படுத்துபவருமான திரு. நபார்ட் ஷி. கண்ணப்பன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகரத்தார்கள் தொடர்பாக பல நூல்களை எழுதியுள்ளவரும், முகநூலிலும் புலனக்குழுவிலும் உடனுக்குடன் நகரத்தார் பற்றிய செய்திகளைப் பதிவுசெய்து வருகின்றவருமான பேராசிரியர் முனைவர் சே. குமரப்பன் அவர்கள் அணிந்துரை நல்கியுள்ளார்கள். அவர்களுக்கு என் நன்றி என்றும் உரியது.

எனது நெறிகாட்டுதலில் முனைவர்பட்ட ஆய்வு மேற்கொண்டவரும், விஞ்ஞான நோக்கில் ஆன்மீகச் செய்திகளை எழுதிவரும் ஆன்மீக

எழுத்தாளரும், சுவடியியல் வல்லுநருமான காசிஸ்ரீ,முனைவர் கி. காளைராசன் அவர்கள் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கி யிருக்கிறார்கள். அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி.

இந்நூலைக் கணிணியில் தட்டச்சு செய்து உதவிய திருமதி யாழினி முத்துவிற்கு அன்பு கலந்த நன்றி.

கிருஷ்ணா பதிப்பகத்தின் மூலம் இந்நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அன்புடன்
வள்ளி சொக்கலிங்கம்

காணிக்கை



திரு கி. சொக்கலிங்கம்,
(மேனாள் நூலகர், அழகப்பா பல்கலைக்கழக
உடற்பயிற்சிக் கல்லூரி)
7, (கோவிலூரார் வீதி), லெட்சுமணன் செட்டியார் வீதி,
காரைக்குடி 630001

தொல்லியல் மற்றும் நகரத்தாரியல் தொடர்பாக எழுதுவதற்கு மிகுந்த ஊக்கமளித்து, உற்ற துணையாக இருந்த என் கணவர் காரைக்குடி – பிள்ளையார்பட்டி கோயில் திரு கி. சொக்கலிங்கம் அவர்களுக்கு இந்த நூலைக் காணிக்கை ஆக்கி வணங்குகிறேன்.

நூலாசிரியர்
முனைவர் வள்ளி சொக்கலிங்கம்

1. கல்கத்தாவும் காவிரிப்பூம்பட்டினமும்


நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கிடையே தொன்றுதொட்டு இருந்துவரும் பழைய கலாச்சாரப் பண்பாடுகள் பழைய தமிழ்ப் பண்பாடுகளாக இருப்பதனாலே அவை மறைந்து போவதற்கு முன்பே, தக்க ஆராய்ச்சிக்காரர்கள் அப்பண்பாடுகளை எல்லாம் ஆராய்ந்து புத்தகமாக எழுதிப் பாதுகாக்க வேண்டும் என்பதே எனது தாழ்மையான வேண்டுகோள்" என்று சிறந்த தமிழறிஞரும்





கல்கத்தாவும் காவிரிப்பூம்பட்டினமும் கடற்கரை நகரங்கள். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வணிகர்களாகிய நகரத்தார்கள் பாண்டிய நாட்டுக்குப் புலம்பெயர்ந்த போதும் தங்களது இயல்பான கடல்கடந்து பொருளீட்டும் மரபை விட்டுவிடவில்லை. தமிழகத்தில் எந்தெந்தக் கடற்கரை நகரங்களிலிருந்து புறப்படுகிறார்களோ அங்கெல்லாம் தாங்கள் தங்குவதற்கு வசதியாக நகரவிடுதிகள் கட்டிக்கொள்வது அவர்களது வழக்கம். அதுபோலவே 1800 ஆம் ஆண்டளவில் கடல்மார்க்கமாகக் கல்கத்தா சென்ற நகரத்தார்கள் முதலில் அங்கு நகர விடுதி அமைத்துக் கொண்டு வணிகத்தில் ஈடுபட்டனர். கல்கத்தா

நகர விடுதியில் உள்ள பின்வரும் கல்வெட்டு அதை விளக்குகிறது.



"உ நீலமாமிடற்றால வாயினான்

பாலதாயினார்ஞாலமாள்வரே மங்களம்

நாட்டுக்கோட்டைத் தனவைசிய நகரத்தார்கள் தொழில் முறை முதன் முதலில் செய்ய முயன்ற துரமுக ஊர்கள் ஐந்து. அதாவது நாகூர், சென்னை கல்கற்றா, காலி, பினாங்குமேயாகும். இவடத்திற்கு, நம்மிட பிள்ளைகள் வந்து சக்திவேல் ஸ்தாபித்து தொழில் ஆரம்பித்து நடந்து வருகிறதும் நாளதுவரையில் ளஉய (120) வருஷம் ஆகிறது. நாட்டுக்கோட்டை நகரத்தார் பெரியவீடு 1921".

கல்கத்தாவில் மட்டும் நகரத்தார்களுக்கு சுமார் 125 கடைகள் இருந்ததாக அறிகிறோம். கி.பி.1867 ஆம் ஆண்டு சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டது. இதன் மூலம் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு வரும் கப்பல்கள் ஆப்பிரிக்காவைச் சுற்றி வராமல் சூயஸ் கால்வாய் வழியாக

[3]பட்டணம் = பெருநகரம்.
பட்டினம் = கடற்கரை நகரம்.

வந்து சென்றன. அதனால் நகரத்தார்கள் அதிகம் பயனடைந்தனர்.

கல்கத்தாவிலிருந்து பர்மாவிற்கு (மியான்மர்) நகரத்தார்கள் சென்ற போது பர்மாவில் மண்வளமும் நீர்வளமும் வற்றாத ஜீவநதியாகிய ஐராவதி ஆறும் இருந்தும்கூட உழைப்பவர்களுக்குப் பொருளுதவி செய்பவர்கள் இல்லாத காரணத்தால் பர்மிய நிலங்கள் காடுமேடாகக் கரடுமுரடாகக் கிடந்தன.

இந்நிலையில் கல்கத்தாவிலிருந்து பர்மா சென்ற நகரத்தார்கள் தங்கள் முயற்சியால் அங்குள்ள மக்களுக்குப் பொருளுதவி செய்து அந்நிலங்களைப் பொன்விளையும் பூமியாக்கினர். பிறகு பர்மாவிலிருந்து அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டு உலகச் சந்தையில் முதலிடம் பெற்றது. நகரத்தார்களது சரக்குகளை ஏற்றிக்கொண்டு, கப்பல்கள் பர்மாவிலிருந்தும் கல்கத்தாவிலிருந்தும் வருவதும் போவதுமாக இருந்தன.

நகரத்தார்களது கடல்வணிகத்தால் லாபம் ஈட்டிய கப்பல் கம்பெனிகள் ஆண்டு இறுதியில் ஏற்றுமதி செய்த பொருட்களுக்குக் கப்பல் கட்டணத்திற்காகச் செலுத்திய தொகையில் நூற்றுக்கு ஐந்து சதவீதம் எனத் திருப்பிக் கொடுத்தன. இவ்வாறு கிடைத்த தொகையைப் பொதுநிதியாக வைத்திருந்து தருமத்திற்குச் செலவிடுவதென கல்கத்தாவில் வணிகம் செய்த நகரத்தார்கள் முடிவெடுத்தனர். அவ்வகையில் அக்காலத்திலேயே ஆண்டுதோறும் 25 ஆயிரம் ரூபாய் வரை வருவாய் வந்து கொண்டிருந்தது என்று அறிகிறோம். அந்தப் பொருளைக் கொண்டும், கல்கத்தா நகரத்தார்கள் தங்களது வருவாயில் தருமத்திற்கென எடுத்து வைத்திருந்த பொருள்களைக் கொண்டும் வடநாட்டிலும், தென்னாட்டிலும் பல கோயிற்பணிகளைச் செய்தனர்.

கல்கத்தா நகரத்தார்களுக்கு 1812 முதல் இந்துக்களின் புனிதத் தலமான காசியோடு தொடர்பு ஏற்பட்டது. காசி விசுவேசுவரருக்குக் கட்டளைகள் பல ஏற்படுத்தினர். 1863இல் கங்கைக் கரைக்கு அருகில் அன்னதான மடமும் நந்தவனமும் பசுமடமும் அமைத்து, காசி விசுவேசுவரர் வழிபாட்டிற்குப் பால், மலர்கள் முதலியவற்றை அனுப்பி வைத்தனர். காசி அன்னதான மடம் தற்போது காசி நாட்டுக்கோட்டைச் சத்திரம் எனப்படுகிறது. காசியில் ‘நாட்கோட் சத்திரம்’ என்றால் தெரியாத வடநாட்டவர்களே இல்லை எனலாம். காசி விசுவநாதருக்கு நகரத்தார் கட்டளையாகத் திருவனந்தலும், உச்சிக்காலமும், அர்த்தசாமப்

பூசையும் எக்காரணத்தாலும் ஒருவேளை கூடத் தடைப்படாமல் நடந்துவர ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

1942இல் நடந்த "வெள்ளையனே வெளியேறு" இயக்கப் போராட்டத்தின்போது காசியில் கலகங்கள் ஏற்பட்டு ஊரடங்குச் சட்டம் போடப்பட்டது. அப்போதும் அரசாங்கத்திடம் விதிவிலக்குப் பெற்று பூசைக்குரிய பொருட்களை உரிய நேரத்தில் காசி நாட்டுக்கோட்டைச் சத்திரத்திலிருந்து அனுப்பியிருக்கிறார்கள்.

ஒரு சமயம் காசி விசுவநாதரை வணங்க வந்த மைசூர் மகாராஜா அர்த்தசாமப் பூஜைக் கட்டளையைத் தாம் ஏற்று நடத்த விரும்பி, நகரத்தார்களிடம் கேட்டபோது, அத்தொண்டை விட்டுவிட மனம் வராமல் நகரத்தார்கள் அன்போடு மறுத்துவிட்டனர்.

காசி விசுவநாதர் கோயில் மகந்து (பூசாரி) பங்காளிகளுக்குள் கோயில் நிர்வாகம் பற்றி சச்சரவு உண்டாகி அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் வழக்கு நடந்தது. அப்போது நகரத்தார்களின் இறைப்பற்றையும், தொண்டையும் கண்ட அலகாபாத் உயர்நீதி மன்றம் காசி விசுவநாதர் கோயில் நிர்வாகத்தை ஏற்றுநடத்தும் பொறுப்பை நகரத்தார்களிடம் ஒப்புவித்துத் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இச்சம்பவம் நகரத்தார்களின் ஆன்மீகப்பணிக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம் எனலாம்.

கல்கத்தாவில் பெருஞ்செல்வராய் இருந்த மோதிலால் ஷெல்லி என்பவர், அவருடைய சொந்த சிவன் கோயிலை நகரத்தார்களிடம் ஒப்புவித்துத் தொடர்ந்து நடத்திவரச் செய்திருக்கிறார் என்ற செய்தியை "நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு" என்ற நூலில் வயிநாகரம் அ.இராமநாதன் செட்டியாரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

1893இல் கல்கத்தா நகரத்தார்கள் அன்றைய மதிப்பில் ஒரு லட்சம் ரூபாய் செலவில் காசி விசாலாட்சி கோயிலைக் கல்திருப்பணியாக்கிக் குடமுழுக்கு செய்திருக்கிறார்கள். காசிச் சத்திரத்தை ஒட்டி நகரேசுவர் ஆலயத்தைப் புதிதாக எடுத்தனர்.

இராணி அகல்யாபாய்க்குப் பிறகு சுமார் 250 ஆண்டுகள் கழித்து அண்மையில் காசிவிசுவநாதருக்கு நடந்த குடமுழுக்கை நாம் அறிவோம். அதுபோல காசி விசாலாட்சிக்கும் நகரேசுவரருக்கும் குடமுழுக்குகள் அண்மையில் நடத்தி இருக்கிறார்கள்.

காசியில் மட்டுமல்லாமல் கயா, அயோத்தி, பிரயாகை, நாசிக் பஞ்சவடி ஆகிய தீர்த்த விசேடமுடைய தலங்களிலும் நகரத்தார்கள் சத்திரங்கள் ஏற்படுத்தி இறைத்தொண்டு செய்தனர். இன்றளவும் செய்து வருகின்றனர். இவை அனைத்தும் காசி நகரச் சத்திரத்தின்கீழ் சிறப்பாக இயங்கி வருகின்றன. மேலும் வடநாட்டிலுள்ள அரித்துவார், தாரகேசுவரம், திரியம்பகம், கோதாவரி ஆகிய தலங்களிலும் நகரத்தார்களது ஆன்மீகப் பணிகளைக் காணலாம்.

காவேரிப் பூம்பட்டினத்தையும் கல்கத்தாவையும் தங்கள் வணிகத்தால் இணைத்த நகரத்தார் சமூகம் மேன்மேலும் தொழில் துறைகளில் ஈடுபட்டு முன்னேறி, புள்ளிகள் பெருகி வாழ்வாங்கு வாழ கல்கத்தா சிங்கார முருகேசரின் அருள் என்றென்றும் கிடைக்கட்டும்.

"காசி நகரத்துக் கடவுளரைப் பேச வைத்தால்

காவிரிப்பூம் பட்டினத்தார் கலை உணர்ச்சி தெரியவரும்"

என்ற கண்ணதாசனின் வரிகள் முற்றிலும் உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

2. செழுமைக்கு வழிகோலிய பட்டினங்கள்

"""நகரத்தார்" என்பது ஒரு வகுப்பினரின் அடையாளம் மட்டுமல்ல, உலகு போற்றும் தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம்; உலகு வாழ அறம் வளர்ப்பவர்கள் நகரத்தார்கள்" ஸ்ரீ இது நகரத்தார்களைப் பற்றிய குன்றக்குடி அடிகளாரின் மதிப்பீடு.

மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் குறிப்பிடுவதுபோல, நகரத்தார் வரலாறு குறிப்பிட்ட ஓரெல்லைக்கோ, குறிப்பிட்ட ஓர் இனத்திற்கோ உட்பட்டதன்று. நகரத்தார்கள் இருந்த இடம் சென்ற இடம் எல்லாம் வரலாற்றுத்தடங்கள் உண்டு. மன்னர்கள் காலத்திற்குப் பிறகு சைவ சமயம் கடல்கடந்து பரவியதற்கும், கோயிற்கலைகள் அங்கெல்லாம் நிலைத்திருப்பதற்கும் நகரத்தார்தம் பொதுத்தொண்டு மனமே காரணம். நகரத்தார்கள் காசி முதல் குமரி வரை ஆற்றியிருக்கும் பணிகள் அளப்பரியவை. அவர்களின் சமயப்பணிகள் சமுதாயப்பணிகள், கல்விப்பணிகள், தமிழ்மொழிக்குச் செய்த பணிகள், தமிழக, இந்திய, உலக வரலாற்றில் நிலைத்த இடம் பெறுபவை.

18, 19 ஆம் நூற்றாண்டுகளில் மலேயா சுலதான், தஞ்சை சரபோஜி மன்னர், புதுக்கோட்டை அரசர், இராமநாதபுரம் சேதுபதி ஆகியோருக்குப் பொருளுதவி செய்த சமூகம் நகரத்தார் சமூகம்.

சிறுபான்மைச் சமூகத்தினராகிய நகரத்தார்களுக்கு இது எப்படி சாத்தியமாயிற்று?

'கடல்வாழ்க்கை' என்பது நகரத்தார்களுக்குப் பழக்கமானதொன்று. ஆதியில் நாகநாட்டில் வாழ்ந்தார்கள். அது இலங்கைக்கு அருகிலுள்ள ஒரு தீவு. அதன் ஒரு பகுதி கடல்கோளால் அழிந்தது.

"நாக நன்னாட்டு நானூறு யோசனை
வியன் பாதாளத்து வீழ்ந்து கேடெய்த"

என்று மணிமேகலைக் காப்பியம் ஆழிப்பேரலையால் நாகநாடு அழிந்ததைப் பதிவு செய்கிறது. அதற்கு மனந்தளராது நகரத்தார்கள் காஞ்சிபுரம் வந்தார்கள். அது கடற்கரைப் பட்டினம். அங்கு சில காலம் வாழ்ந்த நகரத்தார்கள் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் காவி ரிப்பூம்பட்டினம் வந்தார்கள். அதுவும் கடற்கரைப் பட்டினம் என்பதை நினைவு கொள்ளுதல் வேண்டும்.

கடல் வணிகத்தைக் குலத்தொழிலாகக் கொண்டவர்கள் ஆதலால் திரைகடலோடித் திரவியம் தேட கடற்கரைப் பட்டினத்தில் வசிப்பதே அவர்களுக்கு வசதியாக இருந்திருக்கிறது. பட்டினத்தார் வரலாறு நம் அனைவருக்கும் தெரிந்த ஒன்று தானே!

கி.பி. 2 ஆம் நூற்றாண்டளவில் காவிரிப்பூம்பட்டினத்தில் சிங்கக் கொடியும் சீரகப்பூ மாலையும் பெற்றுச் சிறப்போடு வாழ்ந்தார்கள். பிறகு சுமார் 1000 ஆண்டுகளுக்குப் பிறகு சோழ அரசனுக்கும்(பூவந்தி சோழன்) அவர்களுக்கும் எற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகவோ அல்லது நற்குடிகள் தமது நாட்டிற்கு வேண்டுமென்று பாண்டிய மன்னன் (குலசேகர பாண்டியன்) அழைத்த காரணத்தாலோ, நகரத்தார்கள் வெள்ளாற்றங்கரையின் தெற்கே பாண்டிய நாட்டில் பரவலாகக் குடியேறினார்கள். பிறகு பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டபோது இப்போதுள்ள செட்டிநாட்டுப் பகுதியைத் தாயகமாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

கடல்வாழ்க்கை என்பது நகரத்தார்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த ஒன்று. அதனால் பாண்டிய நாட்டில் உப்புவணிகம் போன்ற உள்நாட்டு வணிகம் செய்தவர்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் கடற்பாதுகாப்பும் அந்நியச் செலாவணி முறையும் எளிதாக இருந்ததால், தங்கள் குலமரபுப்படி கடல்கடந்து வணிகம் செய்யத் தொடங்கினார்கள்.

தொண்டி, தூத்துக்குடி, நாகப்பட்டினம், சென்னைப் பட்டினம் வழியாகப் பாய்மரக்கப்பல் மூலமாக இலங்கை, பர்மா, வியட்நாம், தாய்லாந்து, இந்தோனேஷியா, மொரீஷியஸ் போன்ற நாடுகளுக்குச் சென்று தொழிலில் ஈடுபட்டனர். முதலில் உப்பு, பஞ்சு, நவதானியங்கள், அரிசி, துணிகள் என்று கொண்டுவிற்றவர்கள் பிறகு கொடுக்கல் வாங்கல் எனப்படும் வட்டித்தொழிலில் ஈடுபட்டனர்.

சுமார் 250 ஆண்டுகளுக்கு முன் பர்மா, இலங்கை, மலேயா, ஆகிய கிழக்காசிய நாடுகளோடு நகரத்தார்கள் வணிகத்தொடர்பு கொண்டிருந்த காலம், அவர்களது வாழ்க்கையில் ஒரு பொற்காலம் எனலாம்.

இந்தியாவில் குறிப்பிடத்தக்கதொரு வணிகச் சமூகமாக விளங்கினார்கள். தமிழகத்திலிருந்து கிழக்குக் கடற்கரையோரமாகவே

பாய்மரக் கப்பல்களில் பயணித்து கல்கத்தா சென்று அங்கிருந்து பர்மாவிற்குச் சென்றார்கள். பர்மாவில் 'மோல்மேன்' என்ற கடற்கரைப் பட்டினத்தில்தான் முதன்முதலில் போயிறங்கினர். தங்கள் மூலதனத்தால் பர்மாவை வளப்படுத்தித் தாங்களும் பெரும்பொருள் ஈட்டினர். பர்மாவில் செந்நெல் விளையும் நிலங்கள், எண்ணெய்க் கிணறுகள் ஆகியவை நகரத்தார்களுக்குச் சொந்தமாக இருந்திருக்கின்றன.

பர்மாவின் தலைநகரான இரங்கூனில் நகரத்தார் கடைகள் இருந்த வீதிக்கு 'நகரத்தார் ரோடு' என்று பெயர். 'பர்மா டாப்பு நொண்டிச்சிந்து' என்ற நூலில் "நகரத்தார் ரோடு பாரு, ரொம்ப ஜோரு" என்று நகரத்தார் ரோட்டைப் பற்றிய குறிப்பு உள்ளது.இலங்கையின் தலைநகரான கொழும்பில் 'செட்டியார் தெரு' என்றே ஒரு தெரு உண்டு. இலங்கையில் நகரத்தார்களுக்குச் சொந்தமாக தேயிலைத் தோட்டங்கள் இருந்தன. அதேபோல மலேயாவில் நகரத்தார்களுக்குச் சொந்தமாக இரப்பர்த் தோட்டங்களும் இருந்தன. மலேயாவில் முதன்முதலில் இரப்பர் பயிரிட்டவர் நச்சாந்துப் பட்டியைச் சேர்ந்த பெ.ராம.குடும்பத்தினர் ஆவர். இச்செய்தி மலேயா செய்தித்தாளில் வெளிவந்துள்ளது.

இவ்வாறு பிற நாடுகளுக்குச் சென்று பொருளீட்டி அந்தந்த நாடுகளையும் வளப்படுத்தித் தாங்களும் பெரும்பொருள் ஈட்டினர். ஈட்டியதில் ஒரு பகுதியைத் தர்மம் செய்வதற்கென எடுத்து வைத்தனர். நகரத்தார்களின் ஐந்தொகைக் பேரேட்டில் 'தர்மக்கணக்கு' என்றே ஒரு பகுதி இருக்கும். அப்படி எடுத்து வைத்த பணத்தில், இன்று நாம் நினைத்துக் கூடப்பார்க்கமுடியாத அளவில், கோயிற்பணிகளும் அதையொட்டி நந்தவனங்கள், பசுமடங்கள், வேத ஆகம தேவாரப் பாடசாலைகள், ஊருணிகள், சத்திரங்கள், மடங்கள், விடுதிகள் அமைத்தும், பிறகு காலமாறுதலுக்கு ஏற்ப கல்விப்பணிகள் போன்ற சமுதாயப் பணிகள் செய்தும் வரலாற்றில் நிலைத்த இடம் பெற்றிருக்கிறார்கள்.

தாயகத்தில் தாங்கள் வசித்த ஊர்களில், பெரிய பெரிய மாடமாளிகைகளைக் கட்டிக்கொண்டனர். "திருவாடானைக்கு அருகிலுள்ள தொண்டித் துறைமுகத்திற்கும் பர்மாவுக்கும் இடையே 1930 வரை பாய்மரக் கப்பல்கள் போய்வந்து கொண்டிருந்தன. அரண்மனை போன்ற செட்டிநாட்டு வீடுகள் கட்ட பர்மா தேக்குகள் ஒவ்வொரு

வீட்டிற்கும் தனித்தனியே கப்பலில் வந்திறங்கின'' என்று அறிஞர் சோமலெ 'இராமநாதபுரம் மாவட்டம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பருவக்காற்று வீசுவதற்கு ஏற்ப, பர்மாவிலிருந்து தாங்கள் அனுப்பும் தேக்கு மரங்களில் விலாசமடித்து ஊணாங்கொடியால் சுற்றி ஐராவதி ஆற்றிலிருந்து படகு மூலம் இரங்கூன் போன்ற பர்மிய துறைமுகங்களுக்குக் கொண்டு வந்து, கடலில் பாய்மரக் கப்பல்களில் சங்கிலியால் பிணைத்துவிடுவர், அவைகள் 'தொண்டி' துறைமுகத்துக்கு வந்தபோது யானைகள் மூலம் கரைக்கு இழுத்து இரட்டை மாட்டு வண்டிகளில் ஏற்றி செட்டிநாட்டு ஊர்களுக்குக் கொண்டு வந்தனர். கொண்டு வந்த தேக்கு மரங்களை, கோயில்கள் திருப்பணி செய்வதற்கும் அரண்மனை போன்ற வீடுகள் கட்டுவதற்கும் பயன்படுத்திக் கொண்டனர்.

" சேராத செல்வத்தைச்

சேர்த்தாலும் நல்லவழிச்

செலவாக்கும் எங்கள் இனமே


திருமகளைக் கலைமகளைக்

கேட்டேனும் உண்மைநிலை

தெரிந்துகொள் தமிழர் நிலமே''

என்று கண்ணதாசனோடு சேர்ந்து நாமும் பெருமைப்படுவோம்.

3. சைவ சமய வரலாற்றைக் கட்டமைத்தலில் நகரத்தாரின் பங்கும் பணியும்





சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்ட நகரத்தார்கள் தமிழகத்தில் சுமார் ஓர் இலட்சம் மக்கட்தொகையைக் கொண்ட சிறுபான்மைச் சமூகத்தினராவர். சைவ சமய வரலாற்றில் இவர்களுக்குக் கணிசமான பங்குண்டு. 'சிவ மதத்திலேயே இருக்கிறது' என்ற கொள்கையைத் தீவிரமாகக் கடப்பிடித்த நகரத்தார்கள் ஒன்பது சிவன் கோயில்களை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். "கோயில் சார்ந்த குடிகள்" என்று நகரத்தார்களைப் பாராட்டுவார் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

18, 19 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கை, பர்மா (மியான்மர்), மலேயா, வங்காளம், தாய்லாந்து, வியட்நாம், இந்தோனேஷியா, மொரிஷியஸ் முதலிய தெற்காசிய கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்று பஞ்சு, அரிசி, மிளகு, துணி முதலிய வணிகத்தொழிலில் ஈடுபட்ட நகரத்தார்கள், பிறகு 'கொடுக்கல் வாங்கல்' எனப்படும் வட்டித் தொழிலில் ஈடுபட்டனர். தாங்கள் தொழில் நிமித்தம் சென்ற நாடுகளையும் வளப்படுத்தித் தாங்களும் பெரும்பொருள் ஈட்டினர்.

போக்குவரத்து வசதிகள் அவ்வளவாக இல்லாத அக்காலத்தில் நகரத்தார்கள் தங்கள் உறவினர்களிடம் வாய்க்கரிசி வாங்கிக் கொண்டு அதாவது தாங்கள் உயிரோடு இருக்கும்போதே இறந்தவர்களுக்குச் செய்கின்ற சடங்குகளைச் செய்துகொண்டு உயிரைப் பணயம் வைத்துப் பாய்மரக் கப்பல்களில் துணிவோடு பயணம் செய்து திரைகடலோடித் திரவியம் தேடினர். ‘செட்டிக் கப்பலுக்குச் செந்தூரான் துணை’ என்ற நம்பிக்கையோடு பயணம் செய்தனர். இடுப்பு வேட்டியில் சிறு முருகன் சிலையை மடித்து வைத்துக் கொண்டு போகும் இடமெல்லாம் கொண்டு சென்றிருக்கின்றனர்.

“காற்றினிலே பாய்போட்டுக்

கடவுளையே துணை வைத்துக்

கடலோடி மலைநாடும் பிறநாடும்

சென்றார்கள் கப்பல் வாராத போதே”

என்ற கண்ணதாசன் வரிகளும் இதை நினைவுபடுத்தும்.



இவ்வாறு அயல்நாடுகளில் தொழில் புரிந்து பெரும்பொருள் ஈட்டிய நகரத்தார்கள் ஈட்டியதில் ஒரு பகுதியை ‘மகமைப் பணம்’

என எடுத்து வைத்து தர்மம் செய்தனர். நகரத்தார்களது ஐந்தொகைப் பேரேட்டில் 'தருமக் கணக்கு' என்றே ஒரு பகுதி இருக்கும். அந்தப் பணத்தையும் வட்டித் தொழிலால் வளர்த்து உள்நாட்டிலும் தாங்கள் தொழில் புரிந்த வெளிநாடுகளிலும் காலத்திற்கேற்ப பலவிதமான அறப்பணிகளைச் செய்தார்கள். குறிப்பாகச் சமயத் திருப்பணிகளை விரும்பி மேற்கொண்டனர்.

முடிமன்னர் ஆட்சிக்குப்பிறகு ஐரோப்பியர் ஆட்சியில் இந்து சமயத்தின் தூண்களாக விளங்குகின்ற ஆலயங்கள் பாழடைந்து பேணுவாரின்றி இருந்தன. கி.பி.18, 19 ஆம் நூற்றாண்டுகளில் கிறித்தவ, முகம்மதிய சமயங்கள் ஏற்றம் கண்டதாலும், இந்திய மன்னர்கள் ஆற்றல் இழந்து அயல் சமயத்தின் படைத்துணையை நாடி ஓடியதாலும் நாட்டில் குழப்பமான சூழ்நிலை நிலவியது. இக்காரணங்களால் தமிழகத்தில் பெருமை வாய்ந்த பழங்கோயில்கள் போர் அணிகள் நிறுத்தப்பட்டிருந்த பாடிவீடுகளாகவும் கொத்தளங்களாகவும் பயன்படுத்தப்பட்டன.

சிதம்பரம் கோயிலில் சாஹுஜி என்ற மராத்தியன் பகைவருக்கு அஞ்சித் தன் படையுடன் அடைக்கலம் புகுந்தான். பிரெஞ்சுக்காரரும், ஆங்கிலக் கிழக்கிந்தியக்கம்பெனியாரும், ஐதரலியும் மாறிமாறி இக்கோயிலைத் தம் கொத்தளங்களாகப் பயன்படுத்தி வந்தனர். இக்கோயில் தொடர்ந்து முப்பத்தைந்து ஆண்டுகளாக இராணுவத்தினர் வசம் இருந்தது. பீரங்கித் தாக்குதல்களால் இக்கோயிலின் சுற்றாலைகளும், சிற்றாலயங்களும் இடியுண்டு அழிந்தன. ஒருமுறை நடராஜர் சிவகாமசுந்தரி திருவுருவச் சிலைகளை அந்நியருக்குப் பயந்து எடுத்துச் சென்று திருவாரூர்க் கோயிலில் சபாபதி மண்டபத்தில் வைத்திருந்து சிதம்பரம் கோயில் ராணுவத்திடமிருந்து விடுதலையான பிறகு மீண்டும் அங்கே கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள்.1

'சிதம்பரம் கோயிலைப் போலவே திருவண்ணாமலைக் கோயிலிலும் படைவீடுகள் அமைக்கப்பட்டிருந்தன. பல கொலைகள் அக்கோயிலுக்குள் நடைபெற்றன. ஒருமுறை ஆர்க்காட்டு நவாபு ராஜாசாயுபு விட்டுவிட்டுப் போன பட்டாளம் ஒன்று அண்ணாமலையார் கோயிலினுள் தங்கியிருந்தது. தியாகதுர்க்கம் கின்னேதாரன் கிருஷ்ணராவு என்ற மராத்தியன் ஒருநாள் திடீரென்று தன் படைவீரருடன் கோயிலுக்குள் புகுந்து எழுநூற்று ஐம்பது சிப்பாய்களைப் படுகொலை செய்து கோயில் சுற்றாலைகளை இரத்தத்தால் மெழுகினான் என்ற

நெஞ்சம் பதை பதைக்க வைக்கும் செய்தியை அறிகிறோம்.'2

இவ்வாறு அநேக பாடல்பெற்ற தலங்கள் காலத்தின் கோலத்தால் சீரழிந்து வருவாயின்றைப் பூசை முதலியன நடைபெறாமல் இருந்தன. பூசனை தவறினால் வரும் தீங்கினை

"கண்ணுதற் பெருமான் மேய கோயிலில் காலந்தோறும்
நண்ணுதற் பூசையாதி விதிப்படி நடத்தல் வேண்டும்
பண்ணுதல் தவறுமாயின் பார்த்திபன் தனக்கும் பாரில்
அண்ணுபல் லுயிர்க்கும் தீமை அணுகுதல் சரதமாமே"

என்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை கூறுவார்.3 சிவத்தலங்களைத் திருப்பணி செய்து பூசைகள் முட்டுப்பாடின்றி நடைபெற வேண்டும் என்று நினைத்த நகரத்தார்கள் வசதி வாய்ப்புகள் இருந்த காரணத்தாலும் இயல்பாகவே ஆழ்ந்த சைவப்பற்று உடையவர்களாக இருந்ததாலும் பல தலங்களைக் குறிப்பாகப் பாடல்பெற்ற தலங்களைத் தேடித்தேடிச் சென்று திருப்பணிகள் செய்தனர். தொழில்துறை காரணமாகச் சென்ற நாடுகளிலும் ஆலயங்களை நிறுவி அங்கெல்லாம் சைவத்தையும் தமிழையும் திராவிட சிற்பக்கலை மரபையும் நிலைநாட்டினர்.

தாங்கள் திருப்பணி செய்த கோயில்களில் வழிபாடுகள் சிறப்புற நடைபெறுவதற்காகவும் கோயிலுக்கு வழிபடவரும் அடியார்களின் நலன் கருதியும் வழிவகைகள் செய்தனர். கோயில்களையொட்டி நந்தவனங்கள், சத்திரங்கள், நகரவிடுதிகள், ஊருணிகள், தேவார, திருவாசக, திருப்புகழ்ப் பாடசாலைகள், வேதபாட சாலைகள், ஆகம பாடசாலைகள், பசுமடங்கள், அன்னதான மடங்கள், அறுபத்துமூவர் மடங்கள் என்ற பல்வகை அமைப்புக்களை ஏற்படுத்தினர். மடங்களைப் பொறுத்தவரையில், மேலே கூறிய மடங்களோடு திருவாசக மடம், திருமந்திர மடம், திருப்புகழ் மடம், ஏகாதசி மடம், கார்த்திகை மடம், சனி மடம், சாதுக்கள் மடம், ஞானியார் மடம், இராக்கால மடம், விபூதி மடம், குங்கிலிய மடம், பன்னீர் மடம், கஞ்சி மடம், ஊறுகாய் மடம், சமயதீட்சைக்கான மடங்கள், வேதாந்த மடங்கள் போன்ற பல்வகை மடங்களையும் ஏற்படுத்தினர். கோயில்களில் வெளவால்கள் வந்து அடையாதபடி ஈச்சங் குருத்துகளைக் கொண்டு வந்து கட்டுவதற்காக

வலையர் இனத்தாருக்கு 'வௌவாலடி மானியம்' என்ற பெயரில் நிலங்களைத் தானமாக் கொடுத்துள்ளனர்'.4

திருப்பெருந்துறையுறைச் சிவனுக்கு நிவேதனமாகப் படைக்கப்படும் புழுங்கலரிசி வெண்சோற்றைப் பிரசாதமாகப் பெற்றுச் செல்லும் அடியவர்களுக்கு உதவியாக ‘உப்புமடம்’ ‘ஊறுகாய் மடம்’ என்ற இரண்டு மடங்கள் திருப்பெருந்துறையில் தேவகோட்டை நகரத்தாரால் ஏற்படுத்தப்பட்டன. இம்மடங்களைக் குறித்து தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் ‘கண்டதும் கேட்டதும்’ என்ற தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்’5.

பாடல் பெற்ற தலங்களைத் தேடித்தேடித் திருப்பணி செய்தமைக்குச் சான்றாகத் திருக்கொள்ளம்புதூர் திருப்பணியைக் கூறலாம். புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள நச்சாந்துப்பட்டியைச் சேர்ந்த பெ.ராம.ராமன் செட்டியார் என்பவர் கோயில் திருப்பணி செய்ய நினைத்துத் திருத்தலங்களைத் தேர்வு செய்து கொண்டிருந்தார். (இவரது குடும்பத்தினர்தான் மலேயாவில் முதன்முதலாக இரப்பர் பயிரிட்டவர்கள்)6.புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த பேரையூர் நாகநாதசுவாமி கோயிலைத் திருப்பணி செய்யப் புதுக்கோட்டை மன்னர் இசைவு வழங்கியிருந்த போதிலும் அது பாடல் பெற்ற தலமாக இல்லையே என்று தயங்கிப் பிறகு ஞானசம்பந்தர் ‘கொட்டமே கமழும்’ என்று தொடங்கும் பதிகம் பாடி ஓடம் போக்கிய தலமான ‘திருக்கொள்ளம்புதூர்’ என்ற சோழநாட்டுத் திருத்தலம் திருப்பணி செய்ய வேண்டிய நிலையில் இருப்பதை அறிந்து அவ்வாலயத் திருப்பணியை மேற்கொண்டார். அவ்வாறு திருப்பணி செய்யும்போது தஞ்சை மாவட்டத்தில் கருங்கற்கள் கிடைப்பது அரிதாக இருந்ததால் பட்டிமலைக்குப்பம், திருவண்ணாமலை, வடமதுரை, குளத்தூர், திருமெய்யம் ஆகிய ஊர்களிலிருந்து கற்கள் சென்றன. பெரிய பெரிய கற்கள் ஏற்றிச் செல்லப்படுவதால் கொரடாச்சேரியிலுள்ள வெட்டாற்றுப் பாலம் (திருக்கொள்ளம்புதூருக்கு அருகிலுள்ளது) சேதமடையும் எனப் பொதுப்பணித் துறையினர் தடை செய்தனர். அப்போது ராமன் செட்டியார், அவ்வாறு சேதம் ஏற்பட்டால் அப்பாலத்தைச் சரிசெய்ய ஏற்படும் செலவைத் தாங்களே ஏற்றுக்கொள்ளுவதாகப் பொதுப்பணித் துறையினருடன் உடன்படிக்கை செய்துகொண்டு கருங்கற்களை வரவழைத்துத் திருப்பணிகளைச் செய்து முடித்தார்.7

சில சமயங்களில் பொதுமக்கள் தங்கள் ஊர்களிலுள்ள புராதனக் கோயில்களைத் திருப்பணி செய்யுமாறு வேண்டிக்கொண்டபோது நகரத்தார்கள் திருப்பணி செய்து கொடுத்திருக்கிறார்கள். சென்னைக்கு அருகே திருவள்ளூருக்கு மேற்கே சுமார் ஆறு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது திருவெண்பாக்கம் என்ற தலம். சுந்தரமூர்த்தி நாயனார் திருவெண்பாக்கத்தை அடைந்து சிவபெருமானை வணங்கித் ‘திருக்கோயில் உள்ளீரே’ என்று விண்ணப்பஞ் செய்ய, சிவபெருமான் அவருக்கு ஊன்றுகோல் கொடுத்து ‘உளோம் போகீர்’ என்று சொல்லி அனுப்பிய தலம் அது. இத்தலத்திலுள்ள கோயில், கள்ளி முளைத்துப் பாழடைந்து வழிபாடு நடைபெறாமல் இருந்தது. இக்கோயிலைத் திருப்பணி செய்யவேண்டும் என்று 1916இல் ஊர்மக்கள் வேண்டுகோள் விடுக்க, நகரத்தார்கள் திருப்பணி செய்து கொடுத்திருக்கிறார்கள்8.

உறையூரில் உள்ள திருமூக்கீசுவரம் என்ற பாடல்பெற்ற தலத்தைத் திருப்பணி செய்ய முயன்ற உறையூர்வாசிகள் பணம் போதாமையால் தேவகோட்டை வந்து நகரத்தார்களை வேண்டிக்கொள்ள தேவகோட்டை நகரத்தார்கள் திருப்பணியை முடித்துக் கொடுத்திருக்கிறார்கள். 1901 இல் பாடப்பட்ட ‘தன வணிகர் குல சிரேஷ்டர்களாகிய நகரத்தார் பேரில் நவரத்தினம்’ என்ற நூல்,

“சீர்பெருகு ஒற்றியூர் கச்சி கழுகாசலம்
தில்லை சீர்காழி வைய்யித்
தீசர் உறுகோவில் திருவதிகை அருணாசலம்
திகழ்கும்பகோணம் மதுரை
பார்பெருகு வெங்காடு செங்காடு மாயூரம்
பரங்கிரி கன்னியாவும் முன்னாள்
பாண்டிசோழன் ஆதி மன்னரால் கட்டிட்ட
பகரரிய திவ்ய தேசம்
ஏர்பெறு மடம் தடம் சோலைகள் முதலான

யாவையும் நவமாக்கியவர்கள்” நகரத்தார்கள் என்கிறது. ஒவ்வொரு கோவிலுக்கும் பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு

சுமார் இருநூறு பாடல்பெற்ற தலங்களைக் கல்திருப்பணிகளாகச் செய்திருக்கிறார்கள் அவர்கள்.

மடங்கள்: சைவம் தழைக்கப் பாடுபட்ட செயற்கரிய செயல்கள் செய்த அறுபத்து மூன்று நாயன்மார்கள் மீதும், குறிப்பாக சைவசமயக் குரவர்கள் நால்வர்மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்ட நகரத்தார்கள் அவர்களைத் தங்கள் குருவாக ஏற்றுக்கொண்டனர். அவர்களைப்போற்றி வழிபடுமுகமாகவும், அவர்களால் பாடப்பட்ட திருமுறைகளை வளர்க்குமுகமாகவும் அறுபத்து மூவர் மடங்களையும், குருபூஜை மடங்களையும் ஆங்காங்கு நிறுவினர். அம்மடங்களில் நாயன்மார் திருமேனிகளை எழுந்தருளுவித்தனர். நாயன்மார்கள் பிறந்த நட்சத்திரத்தன்று, அபிடேக ஆராதனைகள் செய்து வணங்கினர். மேலும் நாயன்மார் புராணம் சைவத்திருமுறைகள் ஆகியவற்றைப் படித்தும் படிப்பித்தும் வந்தனர். பின்பு, "பரமனடியாரானார்கள் எல்லாம் எய்தி உண்க"வென இரண்டு பொழுதும் பறை நிகழ்த்திச் சொல்லால் சாற்றிச் சோறிட்ட' அப்பரடிகள் போல பொதுநோக்காகச் சிவனடியார் எல்லோருக்கும் அன்னமிட்டனர்.

சுமார் இருபது தலங்களில் குருபூஜை மடங்களும், மதுரை, காரைக்குடி, ஆத்தங்குடி, காளையார் கோயில் ஆகிய ஊர்களில் அறுபத்து மூவர் மடங்களும் நிறுவியுள்ளனர். காரைக்குடியில் உள்ள அறுபத்துமூவர் மடத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சொக்கலிங்க அய்யா என்ற பெரும்புலவர் சைவ சித்தாந்தப்பாடம் கற்பித்து வந்தார். சிதம்பரத்தில் சைவசித்தாந்தப் பாடசாலை ஒன்றையும் ஏற்படுத்தினார்.

திருப்பெருந்துறை, காரைக்குடி, பலவான்குடி ஆகிய ஊர்களில் திருவாசக மடங்களை நகரத்தார்கள் நிறுவினர். திருப்பெருந்துறை திருவாசக மடத்தில் ஏழை எளிய மாணவர்களுக்கு தேவார, திருவாசகங்களை இசையுடன் பயிற்றுவித்தனர். பலவான்குடியில் 'சிவநேசன்' என்ற பெயரில் அச்சு இயந்திரசாலை ஒன்றை ஏற்படுத்தி 'சிவநேசன்' என்ற இதழை வெளியிட்டனர். அந்த இதழ் சைவசமயம் தொடர்பான செய்திகளைத் தாங்கி வந்தது. திருமந்திரத்தின் பெயரால் 'திருமந்திர மடம்' ஒன்றைக் காளையார்கோயிலில் ஏற்படுத்தி, திருமூலர் நாளன்று சிறப்பு வழிபாடுகள் செய்யவும், திருமந்திரப் பாராயணம் செய்யவும் வழிவகைகள் செய்தனர்.

காசி போன்ற வட இந்தியத் தலங்களிலும், கிழக்காசிய நாடுகளிலும் நகரத்தாரின் சைவ சமயப்பணி குறிப்பிடத்தக்கது.

நகரத்தார்களைப் பற்றி ஆராய்ந்துள்ள டாக்டர் பிலிப் சீகல்மேன் என்ற அமெரிக்க அறிஞர், “பொதுவாகத் தென்னிந்தியாவிலும் சிறப்பாகச் சோழநாட்டிலும் இன்றுநாம் காணும் சிறந்த கோ யில்களை வாழவைப்பவர்கள் நகரத்தார்களே. காவிரி பாயும் வளமான பகுதிகளில் நிலங்கள் வாங்கி இக்கோயில்களுக்குச் செல்வம் சேர்த்திருக்கிறார்கள். கோயில் நிலங்களைப் பாதுகாப்பதிலும், கோயில் நிதிகளை பலமடங்காகப் பெருக்குவதிலும் நகரத்தார்களுக்கு இருக்கும் திறமை ஈடு இணை இல்லாதது. ஊதுபத்தியானது தன்னைப் பொசுக்கிக்கொண்டு பிறருக்கு மணம் கொடுப்பதுபோல நகரத்தார்கள் எத்துணையோ இடையூறுகளைத் தாங்கியும் இன்னல்களைச் சமாளித்தும் தொல்லைகளைப் பொறுத்துக் கொண்டும், தாக்குதல்களுக்கு ஈடுகொடுத்தும் கோயில் திருப்பணிகளை முடித்திருக்கிறார்கள். அவற்றை உள்ளபடி சொன்னாலும் கற்பனை போலவே தோன்றும்9. என்று கூறுவது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

அடிக்குறிப்புகள்

1. கே.கே.பிள்ளை; ‘தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்’ – தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம். சென்னை 1981 பக்கம் 450 – 451
2. மேலது
3. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை – ‘தனியூர்ப் புராணம்’ – உ.வே.சா பதிப்பு. பாடல் எண் 13, பக்கம் 23.
4. நா.வள்ளி, ‘நகரத்தாரின் அறப்பணிகள்’ – கிருஷ்ணா பதிப்பகம்.
5. மேலது
6. பெ.ராம. குடும்பத்திற்குச் சொந்தமான பேரையூர் அம்பாள் குளம் ஸ்ரீ பொய்யாத விநாயகர் மஹா கும்பாபிஷேக மலர் 31.01.1975
7. எல்.சோமு, சித நடராசன் ‘பெ.ராம.குடும்பத் திருப்பணிகள்’ ‘கல் திருப்பணியின் கவின்மிகு வரலாறு’ – கட்டுரை
8. திருவெண்பாக்கவாலய ஜீரணோத்தாரணம் – திருவள்ளூர்வாசிகளால் வெளியிடப்பட்டது. 1916
9. சோமலெ, ‘அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப்பணிகள்,சோமு நூலக வெள்யீடு – 1979 பக்கம் 16.

4. நகரத்தாரின் அறப்பணிகள்

“வண்மையே குலதர்மமெனக் கொண்டவர்கள்” என்று மகாகவி பாரதியால் பாராட்டப்பெற்ற நகரத்தார்கள் பல கோடி மக்கள் வாழும் பாரதநாட்டில் சிறுபான்மைச் சமூகத்தினராவர். இருப்பினும் அவர்கள் தாங்கள் செய்த அறப் பணிகளால் உலகமே அறிந்தவர்களாக விளங்குகின்றார்கள்.

சிவகங்கை மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலுமாக முன்பு 96 ஊர்களிலும் தற்போது 74 ஊர்களிலும் வசிக்கும் நகரத்தார்கள் ‘சிவ மதத்திலேயே இருக்கிறது என்ற கொள்கையைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பவர்கள். சிவன் கோயிலை அடிப்படையாகக் கொணடு ஒன்பது கோயில் பிரிவினராக வாழ்ந்து வருகிறார்கள்.

18,19 ஆம் நூற்றாண்டுகளில் முதலில் உப்பு, பஞ்சு, துணிமணிகள், அரிசி ஏற்றுமதி முதலிய வணிகங்களைச் செய்தனர். பிறகு கொடுக்கல் வாங்கல் தொழிலிலும் ஈடுபட்டனர். கி.பி.1801 ஆம் ஆண்டு வாக்கில் சென்னை, கல்கத்தா போன்ற நகரங்களுக்குச் சென்று தொழில் புரிந்தனர்.

வட இந்திய நாடுகளில் மட்டுமல்லாமல், கீழ்த்திசை நாடுகளிலும் நகரத்தார்கள் வணிகத் தொடர்பு கொண்டனர். 18,19 ஆம் நூற்றாண்டுகளில் கீழ்த்திசை நாடுகள் பல ஆங்கிலேயரின் ஆட்சிக்குக் கீழ் இருந்தமையாலும், அந்நியச் செலாவணி முறை எளிதாக இருந்தமையாலும், இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் சீனா முதலிய நாடுகளுடன் நகரத்தார்கள் வணிகத் தொடர்பு கொண்டு அந்தந்த நாடுகளையும் வளப்படுத்தித் தாங்களும் பெரும் பொருள் ஈட்டினர். ஈட்டியதில் ஒரு பகுதியை மகமைப் பணமென எடுத்துவைத்து, அதைக் கொண்டு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அறப்பணிகள் ஆற்றினர். செல்வம் ஈட்டி, சிக்கனமாக வாழ்ந்து அறப்பணிகள் ஆற்றுவதை வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.

நகரத்தார்களும் அறப்பணிகளும் :

சமயத் தொடர்பானவைகளுக்கோ அல்லது சமூக நலங்கருதியோ பணமோ தாவர சொத்தோ சங்கம சொத்தோ கொடுப்பதை இந்தியாவில் பண்டைக் காலமுதல் சிறந்ததோர் அறமாகக் கருதி வந்திருக்கிறார்கள். சமுதாயத்திற்கு தேவையான தொண்டுகளைச் செய்தல் அந்நாளில்

புண்ணியம் பயப்பவை என்று கருதப்பட்டன.

'சகல தேவாலயம் மடாலயம் திருப்பணிகள்
சத்திரம் தண்ணீர் குளஞ் சாலை முதல்
எண்ணான்கு தருமும் இயற்றும் சீலர்'

என்று 'நகரத்தாரென்னுந் தனவைசியர் பஞ்சரத்னம்' என்ற நூல் கூறுகிறபடி நகரத்தார்கள் காலத்திற்குத் தேவையான அறப்பணிகளைச் செய்து ஈதல், இசைபட வாழ்தல் என்ற கொள்கையோடு வாழ்ந்தார்கள். நகரத்தார்கள் செய்த சமயப்பணிகள், சமுதாயப்பணிகள், கல்விப்பணிகள், மொழிப்பணிகள் ஆகியவை வரலாற்றில் நிலைத்த இடம் பெறுபவை.



கோயிற் பணிகள் :

ஆழ்ந்த தெய்வ நம்பிக்கை யுடையவர்கள் நகரத்தார்கள், போக்குவரத்து வசதிகள் அதிகமில்லாத அக்காலத்தில் தொழில்முறையின் பொருட்டு பாய்மரக் கப்பல்களில் அயல்நாடுகளுக்குச் சென்றார்கள். தங்கள் பெண்டு பிள்ளைகளைப் பிரியும்போது திரும்ப வருவோமோ மாட்டோமோ என்ற நினைவில் உலக நிலையாமையை உணர்ந்து இங்கிருந்து புறப்படும்போதே உறவினரிடம் வாய்க்கரிசி வாங்கிக்

கொண்டு சென்றார்கள். தாங்கள் அயல்நாடுகளுக்குச் சென்று பொருளீட்டுகிறபோது அங்கு தங்களையும், தாங்கள் ஊரில் இல்லாதபோது தங்கள் குடும்பத்தையும் தெய்வம்தான் காத்தது என்று உறுதியாக நம்பினார்கள். அதனால் அந்த நம்பிக்கையின் முதற்கட்டமாக உள்நாட்டிலும் அயல் நாட்டிலும் கோயில் திருப்பணிகள் செய்தனர்.

மேலும் சமுதாய மையங்களாக விளங்கிய ஆலயங்கள் அந்நியர் ஆட்சியில் பேணுவாரின்றிக் கிடந்தன. பாடல் பெற்ற தலங்கள் பல சிதலமடைந்தும், பூசை முதலியன சரிவர நடைபெறாமலும் இருந்தன. கோயில்களில் பூசை முதலிய வழிபாடுகள் தடைப்பட்டால் ஏற்படும் கேட்டை,

"முன்னவனார் கோயிற்பூசைகள் முட்டிடின்

மன்னர்களுக்குத் தீங்குள வாரி வளங் குன்றும்

கன்னங் களவு மிகுந்திடும் காசினிக்கு

என்னருள் நந்தி எடுத்துரைத்தானே"

என்று திருமந்திரம் கூறுகிறது. எனவே நகரத்தார்கள் கோயில்களில் முறையான வழிபாடு நடைபெறவும், நாடு வளம் பெறவும் கோயில் திருப்பணிகளை விரும்பி மேற்கொண்டனர். "ஒரு நாட்டுக்குக் கோட்டைக்காப்பு வீரர்கள் இருப்பதுபோல இந்து சமயம் என்னும் கோட்டைக்கு நகரத்தார்கள் கோட்டைக் காப்பு விரர்களாக இருந்து வருகிறார்கள்" என்று காஞ்சிப் பெரியவர் சந்திரசேகர சுவாமிகள் நகரத்தார்களைப் பாராட்டுவார்.

நகரத்தார்களைக் கோயில் திருப்பணிகளில் ஈடுபடுத்தியவர் கோவிலூர் மடத்தின் முதல் மடாதிபதியாக விளங்கிய 'கோவிலூர் ஆண்டவர்' என்னும் முத்துராமலிங்க ஞானதேசிகராவார்.

"மடமுண்டோ சிவாலயங்கள் மிகுதியுண்டோ

வாசிட்டம் படிப்பதுண்டோ மனத்துள் ஞானத்

திடமுண்டோ நால்வர் தமிழ் படிப்பா ருண்டோ

திவ்வியமாம் உதாரமுதற் குணங்களுண்டோ

விடமுண்டோன் அடியார் குழாம் மிகுதியுண்டோ

மெய்யறம் சத்திரம் விரைப்பூங்காவுமுண்டோ

வடகைலைக்கு இறைவனெனும் முத்துராம

வள்ளல் திருக்கழனிநகர் வாராமுன்னம்"

என்ற சேந்தணி பழனியப்பய்யாவின் பாடல், நகரத்தார்களின் திருப்பணிக்கு கோவிலூர் ஆண்டவர் ஊன்றுகோலாக விளங்கியதை எடுத்துக் கூறுகிறது. அவரைத் தொடர்ந்து கோவிலூர் மடத்தைச் சேர்ந்த மெய்யப்பய்யா, குட்டைய அய்யா, கோவிலூரின் ஐந்தாவது பட்டமான வீரப்ப சுவாமிகள் என்னும் திருக்களர் ஆண்டவர் போன்றோர் நகரத்தார்களைக் கோயில் திருப்பணிகளில் ஈடுபடுத்தினர்.

சுமார் 200 பாடல் பெற்ற தலங்களில் திருப்பணிகள் செய்துள்ள நகரத்தார்கள் தாங்கள் குடியேறிய ஊர்களில் சிவன்கோவில்கள் இல்லாவிட்டால் புதிதுற அமைத்துள்ளனர்.

"யாதொரு தெய்வங் கண்டீர் ஆங்கு அத் தெய்வமாகி

மாதொரு பாகனார் தாம் வருகுவர்"

என்றபடி, சிவனடியார்களாகிய நகரத்தார்கள் சமயக்காழ்ப்பு இல்லாமல் வைணவக் கோயில்களிலும், தாங்கள் வசிக்கும் பகுதியில் அய்யனார் கோயில் போன்ற கிராம தேவதைகளின் கோயில்களிலும் திருப்பணிகள் செய்துள்ளனர்.

காசி முதல் இராமமேச்வரம் வரை நகரத்தார்களின் கோயிற்பணிகள் காணப்படுகின்றன. காசியம்பதியில் தேவார ஓசை இன்றும் கேட்கப்படுவதற்கு நகரத்தார்களே காரணம். கல்கத்தா, காசி, கயை, அயோத்தி, நாசிக் பஞ்சவடி போன்றவை நகரத்தார்கள் திருப்பணி செய்த வட நாட்டுத்தலங்களுள் குறிப்பிடத்தக்கவையாகும்.

நகரத்தார்கள், தாங்கள் தொழில்புரியச் சென்ற அயல்நாடுகளிலும் கோயில்களைக் கட்டினர். அக்கோயில்கள் பெரும்பான்மையும் முருகன் கோயில்களே. இலங்கை, பர்மா, வங்காளதேசம், மலேசியா,சிங்கப்பூர், தாய்லாந்து வியட்நாம், இந்தோனேசியா, மொரீஷியஸ், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற உலக நாடுகள் பலவற்றிலும் நகரத்தார்களின் கோயில் பணிகளைக் காணலாம். சைவ சமயம் கடல்கடந்து

பரவியதற்கும் கோயிற்கலைகள் அங்கெல்லாம் நிலைத்திருப்பதற்கும் நகரத்தார்கள் உறுதுணையாக விளங்கினர்.

தொன்னூற்றாறூர் நகரத்தார்களில் தேவகோட்டை நகரத்தார்கள் அதிகமாகக் கோயில் திருப்பணிகள் செய்துள்ளனர். ஒன்பது கோயில் நகரத்தார்கள் என்று பார்க்கும்போது இலுப்பைக்குடி நகரத்தார்கள் முன்னணியில் நிற்கிறார்கள். நகரத்தார்கள் அனைவருமே ஏதேனும் ஒரு வகையில் கோயிற் பணிகளில் தொடர்புடையவர்களாக இருப்பதால் அனைவரையும் குறிப்பிட்டுச் சொல்வது என்பது இயலாததொன்றாகும். அதனால் ஒரு சிலதிருப்பணிச் செல்வர்களை மட்டும் இங்கு காணலாம்.

அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தார் பாண்டிநாட்டிலுள்ள பாடல் பெற்ற தலங்கள் பதினான்கிலும் திருப்பணி செய்ய விரும்பி மதுரை, திருப்பரங்குன்றம், திருவாப்பனூர்,திருப்புத்தூர், திருமுதுகுன்றம், சீர்காழி, பல்லவனீச்சுவரம் போன்ற தலங்களைத் திருப்பணி செய்தனர். 1878இல் வயிநாகரம் நாகப்பய்யா அவர்கள் மதுரைத் திருப்பணியை 25 இலட்ச ரூபாய் செலவில் செய்திருக்கிறார்கள். நகரத்தார்களால் மிகப் பெரிய அளவில் செய்யப்பட்ட முதல் திருப்பணி இதுவேயாகும்.

கானாடுகாத்தான் சா.ராம. குடும்பத்தினர், சிதம்பரத்தில் 30 இலட்ச ரூபாய் செலவில் திருப்பணி செய்தனர். மேலும் திருவேட்களம், திருவானைக்கா, கருவூர், திருச்சித்ரகூடம் முதலிய தலங்களிலும் பெரும்பணி செய்தனர்.

இராமேசுவரம், காளையார் கோயில் போன்ற தலங்களில் தேவகோட்டை ஜமீன்தார் குடும்பத்தாரின் திருப்பணிகளைக் காணலாம். தேவகோட்டை சத்திரத்து வீட்டார் எனப்படும் ராம. அரு. அரு. குடும்பத்தார் பனிரெண்டுக்கும் மேற்பட்ட தலங்களில் திருப்பணி செய்துள்ளனர். காஞ்சிபுரம் ஏகாம்பரரேசுவர் கோயில் திருப்பணி செய்த தேவகோட்டை ராம.மெ.அ. குடும்பத்தார், மாயூரம் திருப்பணியில் ஈடுபட்ட அழ.வீர.பெ. வீர.குடும்பத்தார், திருக்காளத்தியில் திருப்பணி செய்த மெ. அரு. குடும்பத்தார் போன்றோரும், திருவண்ணாமலைத் திருப்பணியில் பெரும் பங்குகொண்ட கோட்டையூர் அ.க.ராம. அரு.குடும்பத்தார், திருப்பாதிரிப்புலியூரில் திருப்பணி செய்த கடியாபட்டி தீ. சொ. தீ. நா. குடும்பத்தார் ஆ.தெக்கூர் கருமுத்து குடும்பத்தார், திருக் கொள்ளம்புதூர் திருப்பணியை மேற்கொண்ட நச்சாந்துபட்டி பெ.ராம.ராம. குடும்பத்தார் போன்ற பலர் கோயிற்பணி செய்தவர்களுள்

குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இன்றைய நிலையிலும் குடமுழுக்குச் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

சமயஞ் சார்ந்த சமுதாயப்பணிகள் :

கோயில் திருப்பணிகளோடு அக்கோயில்களை ஒட்டி ஊருணிகள், நந்தவனங்கள், பசுமடங்கள், அன்னதான மடங்கள், திருவாசக மடங்கள், அறுபத்து மூவர் மடங்கள் போன்ற பல்வேறு வகை மடங்கள், சத்திரங்கள், நகர விடுதிகள், வேத, ஆகம, பாட சாலைகள் ஆகியவற்றையும் நகரத்தார்கள் ஏற்படுத்தினர்.

எந்த அறப்பணியை நகரத்தார் செய்தார்களோ அந்த அறப்பணியின் பெயரால் திருப்பணி செய்த குடும்பத்தார் அழைக்கப்படுவதைக் காணலாம்.

பசுமடத்தார் விடு, தண்ணீர் பந்தலார் வீடு, சத்திரத்தார் வீடு, கோயில் செட்டியார் வீடு, மடத்துச் செட்டியார் வீடு, பெருமாள் கோயிலார் வீடு, தோப்புக்கார வீடு, கார்த்திகை மடத்தார் வீடு, பாடசாலையார் வீடு, பள்ளிக் கூடத்தார் வீடு என்று அழைக்கப்படுகின்ற குடும்பங்கள் செட்டிநாட்டில் மிகப் பல.



நகரத்தாரின் கல்விப்பணிகள் :

கோயிற்பணிகளில் சிறந்து விளங்கிய நகரத்தார்கள்

காலத்திற்கேற்றவாறு பிற அறப்பணிகளையும் மேற்கொண்டனர் அவற்றுள் தலையாயது கல்விப் பணியாகும்.

“இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனியநீர்த் தண்சுனைகள் இயற்றல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்க ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்”

என்று கல்வித்தருமத்தின் மேன்மையை எடுத்துச் சொல்கிறார் மகாகவி. முதலில் கோயில்களையொட்டி வேத, ஆகம, தேவாரப் பாடசாலைகள் நிறுவி சமயஞ் சார்ந்த கல்விப் பணி புரிந்தனர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தமிழகத்திற்கு வந்த கிறித்துவப் பாதிரிமார்கள் கிறித்துவ சமயக்கல்வியை மக்களிடையே பரப்பி வந்தார்கள். அதனால் அநேகர் கிறித்துவர்களாக மாறினர். அதைக்கண்ட நகரத்தார்கள் சமயக்கல்வியை குறிப்பாக சைவசமயக் கல்வியை பரப்புவது அவசியம் என்று நினைத்து, சமயக் கல்வியைப் புகட்டும் பாடசாலைகளை நிறுவினர். இப்பாட சாலையில் பயின்ற சிறார்கள் வேதாந்த சித்தாந்தங்களை அறிந்தனர். தேவார திருவாசகங்களை இன்னிசையோடு பாடிப்பழகினர்.தாங்கள் கற்றவற்றை கோயில்களில் பாராயணம் பண்ணியும் வந்தனர்.

பாடசாலைகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு உண்டி, உடை, உறையுள் ஆகிய வசதிகளை நகரத்தார்கள் செய்து கொடுத்தனர். கோவிலூர், திருக்களர்,காளையார் கோயில் போன்ற சுமார் 50 தலங்களில் வேதபாட சாலைகளையும், மதுரை, திருக்களர், தில்லை, திருப்பெருந்துறை, காளையார் கோயில் போன்ற சுமார் 12 தலங்களில் தேவாரப்பாடசாலைகளையும் நிறுவினர்.

பிறகு, காலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப சாதிசமய வேறுபாடு

இல்லாமல் அனைவருக்கும் கற்பிக்கும் கல்வியே தேவை என்று அறிந்து மேனாட்டார் கல்விமுறையைப் பின்பற்றிக் கல்வி நிலையங்களைத் தோற்றுவிக்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

மேலைச் சிவபுரியில் 1909 இல்தொடங்கப்பட்ட 'கணேசர் செந்தமிழ்க் கலாசாலையும்', 1912இல் கோனாபட்டில் நிறுவப்பட்ட கற்பக விநாயகர்' கலாசாலையும், 1913இல் காரைக்குடியில் நிறுவப்பட்ட ஆங்கிலக்கல்வியோடு கூடிய, ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வித்தியாசாலையும், 1915ல் சிதம்பரத்தில் நிறுவப்பட்ட இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப்பள்ளியும், 1917இல் காரைக்குடியில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ மீனாட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளியும் அதே ஆண்டில் கடியாபட்டியில் நிறுவப்பட்ட "பூமிசுவரர் இலவச உயர்நிலைப் பள்ளியும்" 'சித்தி விநாயகர் கலாசாலையும்' 1926இல் நேமத்தான் பட்டியில் நிறுவபட்ட திருநாவுக்கரசர் வித்தியாசாலையும்", 1930இல் ஆவினிப்பட்டியில் தோன்றிய விவேகானந்தர் கல்விக் கழகமும், வேந்தன்பட்டி, திருவள்ளுவர் செந்தமிழ்க் கலாசாலையும், 1932இல்ஆரம்பிக்கப்பட்ட புதுவயல் 'சரசுவதி வித்தியா சாலையும்', 1935இல் கொப்பனாபட்டியில் ஏற்படுத்தப்பட்ட பெண்களுக்கான 'கலைமகள் கலாசாலையும்' நகரத்தார்களால் ஆரம்ப காலத்தில் நிறுவிய பள்ளிகளுள் குறிப்பிடத்தக்கவையாகும்.

செட்டிநாட்டுப் பகுதிகளில் உள்ள பெரும்பான்மையான பள்ளிகள் நகரத்தார் உருவாக்கியவையே, காரைக்குடி செக்காலைப் பகுதியைச் சேர்ந்த காந்தி மெய்யப்பர் 1927இல் காந்தியடிகள் தீண்டாமை ஒழிப்பு இயக்கம் தொடங்கிய காலத்திலேயே "இராமநாதன் கலாசாலை" என்ற பெயரில் ஒரு பாட சாலையையும் காரைக்குடிக் கழனிவாசல் பகுதியில் "காந்தி பாடசாலை" என ஒரு பாடசாலையையும் ஆதி திராவிடக் குழந்தைகளின் கல்விக்காக ஏற்படுத்தினர். காந்தி மெய்யப்பரைப் போலவே காந்தியோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த பிச்சப்பா சுப்பிரமணியம் அமராவதிபுதூரில் 'காந்தி சமதர்ம பாடசாலை' என்று ஒரு பள்ளியைத் தொடங்கி நடத்தி வந்துள்ளார்.

சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும், நகரத்தார்கள் பாலர்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேனிலைப்பள்ளிகள், கலைக் கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகள், பொறியியற் கல்லூரிகள் மருத்துவ, விவசாயக் கல்லூரிகள்,

உடற்பயிற்சிக் கல்லூரிகள், தமிழ்க் கல்லூரிகள், தமிழிசைப் பள்ளி, தமிழிசைக் கல்லூரி பல்கலைக் கழகங்கள் என அனைத்து வகையான கல்வி நிலையங்களையும் ஏற்படுத்தினர்.

கல்விப்பணி புரிந்த நகரத்தார்களுள் அண்ணாமலை அரசர், வள்ளல் அழகப்பர், கலைத்தந்தை கருமுத்து தியாகராசனார் ஆகியோர் குறிப்பிடத்தக்க முன்னோடிகள் ஆவர்.

இந்தியாவிலேயே முதன்முதலாகத் தனிமனிதர் ஒருவரின் பெருமுயற்சியாலும். கொடையாலும் உருவாக்கப்பட்டது அண்ணாமலைப் பல்கலைக்கழகம். இப்பல்கலைக் கழகத்தின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்த அண்ணாமலை செட்டியாருக்கு அன்றைய ஆங்கில அரசாங்கம் 1929இல் செட்டி நாட்டு அரசர் என்ற பரம்பரைப் பட்டத்தைக் கொடுத்துச் சிறப்பித்தது.

காரைக்குடியைக் கல்விக்குடியாக மாற்றியவர் வள்ளல்அழகப்பர். மூன்று வயதுக் குழந்தையொன்று தொடக்கக்கல்வி முதல் தான் விரும்பும் மேற்படிப்பு வரை படித்து வெளிவரும் வண்ணம் அவர் உருவாக்கிய அறிவாலயங்கள் திகழ்கின்றன. மதுரையில் பல கல்வி நிலையங்களைத் தோற்றுவித்து, அங்கு ஒரு பல்கலைக்கழகம் உருவாவதற்குக் காரணமாக விளங்கியவர் கருமுத்து தியாகராசர் ஆவார்.

சுருங்கக் கூறின் இந்தியாவிலேயே கல்விக்காக அதிகம் வாரிவழங்கிய சமூகம் நகரத்தார் சமூகம் எனலாம்.

நகரத்தாரின் மொழிப்பணிகள்:

கல்விப் பணிக்கு அடுத்தபடியாக நகரத்தார்கள் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டு குறிப்பிடத்தக்கது. மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை, இந்து மதாபிமானசங்கம், கம்பன் கழகம் போன்ற அமைப்புகள் மூலம் இலக்கியச் சொற்பொழிவுகள், நூல்கள் வெளியிடுதல் ஆகிய பணிகளைச் செய்தார்கள் கம்பன் கழகம் மேடைத் தமிழைப் பல கோணங்களில் வளர்த்தது.

தமிழ்ப் புரவலர்களாகிய நகரத்தார்கள், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாரதியார், பாரதிதாசன், கவிமணி,சுந்தானந்த பாரதியார், போன்ற பல தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் போற்றியும்,

அவர்களுக்கு உற்றுழி உதவியும், அவர்கள் படைப்புகள் வெளிவரப் பொருளுதவிகள் செய்தும் இலக்கியத் துறையை வளப்படுத்தினர். நகரத்தார்களில் புலவர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், மேடைப் பேச்சாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், திறனாய்வாளர்கள் எனப் பலர் உள்ளனர். பயண இலக்கியத் துறைக்கும் குழந்தை இலக்கியத் துறைக்கும் முன்னோடியாக விளங்கியவர்கள் முறையே ஏ.கே. செட்டியார். சோமலெ போன்றோரும் அழ. வள்ளியப்பா போன்றோரும் ஆவர்.

அண்ணாமலை அரசரின் தலைமையின் கீழ்த் தமிழிசைக்கு நகரத்தார்கள் செய்த தொண்டு மகத்தானது. ஏவி.எம். மெய்யப்பச் செட்டியார, கவிஞர் கண்ணதாசன் போன்றோர் திரைப்படத்துறை மூலம் சிறந்த தமிழ்ப்பணியாற்றிச் சாதனைகள் படைத்தனர்.

நகரத்தார்களின் இதழியல் பணி சிறப்பானது; "ஊழியன்", 'குமரன்', 'தனவணிகன்' 'செட்டிநாடு" போன்ற நகரத்தார் இதழ்கள் போட்டி போட்டுக் கொண்டு தேசிய உணர்வையும், சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களையும் மக்களிடையே பரப்பின. இன்று தமிழ் உலகில் தலை சிறந்த எழுத்தாளர்களாகக் கருதப்படும் எழுத்தாளர்கள் பலரும் நகரத்தார்கள் நடத்திய இதழ்களில் எழுதிப் பழகியவர்களே. நகரத்தார்கள் பதிப்பகத்துறையிலும் சிறந்து விளங்குகின்றனர். தமிழகத்திலுள்ள பதிப்பகங்களுள் பெரும்பான்மையானவை நகரத்தார் பதிப்பகங்களே.

நகரத்தாரின் பிறதுறைப் பணிகள் :

உள்ளப் பிணி அகல சமயப்பணி மூலம் வழிகண்ட நகரத்தார்கள் உடற்பிணி அகல, பல இலவச மருத்துவ மனைகளையும் சுகாதார நிலையங்களையும் ஏற்படுத்தி வழி கண்டனர். பெண்களுக்கான மகப்பேறு மருத்துவ மனைகளையும் தாய் சேய் நல விடுதிகளையும் ஏற்படுத்தினர். அந்த வகையில் கானாடுகாத்தானில் அண்ணாமலை அரசர் 1916இல் நிறுவிய 'லேடி பெண்ட்லண்டு' மருத்துவமனைதான் பெண்களுக்கான மருத்துவ மனைகளுள் முதலாவதாகும்.

நகரத்தார் வசித்த மறவர் சீமைப் பகுதியில் வளமான ஆறுகள் இல்லை. மழையும் குறைவு. ஆகையால் முன்பு மன்னர்களும் மற்றவர்களும் செய்தததுபோல எப்போதாவது பெய்யும் மழைநீரைத்

தேக்கி வைத்துக் குடிக்கவும், குளிக்கவும், உழவுத்தொழிலுக்கும், பிற தேவைகளுக்கும் பயன்படும் வண்ணம் ஊருணிகள், குளங்கள். சேங்கைகள், கண்மாய்கள் ஏற்படுத்தி மக்களுக்கு நீர் வசதி செய்து கொடுத்தனர்.




போக்குவரத்து வசதிகள் அதிகமில்லாத அக்காலத்தில் நடந்து செல்வோரின் வசதிக்காக சாலைகள் அமைத்தும், தண்ணீர் பந்தல்கள்

ஏற்படுத்தியும், சுமைதாங்கிக் கற்கள் நிறுவியும் இன்னும் பாலங்கள் பூங்காக்கள், மைல்கற்கள் கைகாட்டிகள், தெருவிளக்குகள், மின்சாரச் சங்குகள், தந்திச் சாலைகள், அஞ்சல் நிலையங்கள்

அமைத்தும் தங்கள் பகுதி மக்களுக்குத் தேவயான வசதிகளைச் செய்து கொடுத்தனர். கிராமப் பகுதிகளுக்கு மின்சார வசதிகள் வராத காலத்தில் நகரத்தார்கள் செட்டி நாட்டின் பல பகுதிகளில் பெரிதும் முயன்று பெரும் பொருட் செலவு செய்து அரசாங்க அனுமதியுடன் மின்சாரக் கழகங்கள் (**Corporation**) அமைத்துத் தங்கள் பகுதிக்கு மின்வசதி கிடைக்கச் செய்தனர்.





சிவமயம்

ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரராள் எலக்டிரிக் பவர்
கார்பொரேஷன் லிமிடெட், காரைக்குடி.

நோட்டீஸ்.

1937-ம் வருஷத்திய இந்தியன் எலக்டிரிசிடி ரூல்ஸ். ரூல் நிர். 5

1937-ம் வருஷத்திய இந்தியன் எலக்டிரிசிடி ரூல்ஸ் 51-வது வகுப் எல்லா கன்ஸ்யூமர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வரப்படுகிற அதன்படி, கன்ஸ்யூமர்ஸ் இடங்களில் நியூட்ரல் வயர் மூலமாக ப்யூ ஒற்றை ஸ்விட்ச்சோ, போட்டிருக்கக்கூடாது.

கன்ஸ்யூமர்கள், வீட்டிலுள்ள வயரிங்கை சரிபார்த்து, கீழ்க்கண்ட திருத்தி அமைக்க வேண்டியது.

1. நியூட்ரல் வயரில் ப்யூஸ் போடப்பட்டிருந்தால், அ எடுத்துவிட்டு ப்யூஸாகாத ஒரு லிங்க் போட வேண்டு
2. நியூட்ரல் வயரில் ஒற்றை சுவிட்ச் போடப்பட்டிருந்த அதை எடுத்துவிட்டு வயரை நேராகக் கொண்டு போ பட வேண்டும்.
3. இரட்டை சுவிட்ச் போட்டிருந்தால் அதை அப்படியே விடலாம்.
4. வயரிங்கை சரிபார்த்து நியூட்ரல் வயரில் கொண்டுவர டிருக்கும் ப்யூஸ், ஒற்றை சுவிட்ச் இவைகளை, கர வயரில் மாற்றி அமைக்க வேண்டும்.

மேற்படி விஷயங்களுக்கு, மேல்கொண்டு விபரங்கள் தெரியவே மானால், கார்பொரேஷன் என்ஜினீயரைக் கேட்டால் சொல்லுவார்.

மேற்படி ரூல் 51-வது வகுப்பை கவர்ன்மெண்டார், தற்காலிக 23-12-42 வரை அமுலுக்குக் கொண்டுவர வேண்டாமென்று ஆர்டர் திருக்கிறார்கள். கன்ஸ்யூமர்கள் எல்லோரும் மேற்படி ரூல்ஸ்படி அவ இடங்களில் உள்ள வயரிங்கை கூடிய சீக்கிரம் சரிபார்த்துக்கொ வேண்டியது. இல்லாவிட்டால், கறண்டு சப்ளை செய்வதை நிறுத்துவ காரணமாகும்.

இன்று வங்கிகள் செய்துவரும் பல பணிகளை நீண்டகாலமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் செய்துவந்த நகரத்தார்கள் வங்கித் துறையின் முன்னோடிகள் ஆவர். உண்டியல் முறையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் இவர்களே.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நகரத்தார்களுக்கும் பர்மாவுக்கும் இடையே இருந்த தொடர்பு அடியோடு துண்டிக்கப்பட்டது. நகரத்தார்களின் பொருளாதாரமும் சிக்கலாகியது. எனினும் அந்நிலைக்கு மனம் தளராமல் உள் நாட்டிலேயே நூற்பாலை, நெசவாலை, சர்க்கரை ஆலை, காகிதச் தொழிற்சாலை, மிதி வண்டித் தொழிற் சாலை, உரத்தொழிற்சாலை, மருந்தகங்கள் ஆகியவைகளை நடத்தி வெற்றி கண்டனர். தோல் பதனிடும் தொழில் வளர்த்து உலக அளவில் தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் பெயரையும் புகழையும் அந்நிய நாட்டுச் செலாவணியையும் தேடி தந்தவர்கள் இவர்கள். இவ்வாறு பல தொழில் துறைகளில் ஈடுபட்டு பொருளீட்டும் நகரத்தார்கள் தனியாகவோ, அல்லது அறப்பணிக்கழகங்கள் மூலமாகவோ, சமூதாயத்திற்குத் தேவையான பணிகளைச் செய்து வருகிறார்கள்.

“தன வணிகம் குலத்தொழிலாம் தருமங்கள் குலமரபாம்“ என்று டாக்டர் அர. சிங்கார வடிவேலன் அவர்கள் கூறுவது போல நகரத்தார் குலத்திலுதித்த ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் என அனைவருமே அறப்பணிகளில் ஈடுபாடுடையவர்களாக விளங்குகின்றனர். உலகிலேயே அறப் பணிகளுக்காக அதிகம் வாரி வழங்கிய சமூகம் நகரத்தார் சமூகம். அறப்பணிகள் செய்ய முற்படும்போது அவர்கள் தங்கள் தேவைகளைக் குறைத்துக்கொண்டு, திட்டமிட்டு அறப்பணிகளைச் செம்மையாக செய்து முடிக்கும் இயல்புடையவர்கள்.

5. மஞ்சள் நீர் வாசகமுறி

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு" (குறள் 60)

இல்லறத்தைச் சிறக்கச் செய்யும் மக்கட்பேறு வாய்க்கப் பெறாதவர்கள் இன்னொருவர் பெற்ற பிள்ளையை எடுத்து வளர்ப்பது என்பது சமுதாயத்தில் தொன்று தொட்டுக் காணப்படுகின்ற வழக்கம்தான். தேவகி பெற்ற கண்ணனை, யசோதை தன் மகனாகச் சிறப்புடன் வளர்ப்பதைக் கண்ட ஆய்ச்சியர்கள் "தத்துக் கொண்டாள் கொலோ தானே பெற்றாள் கொலோ?" என்று வியப்பதாகப் பெரியாழ்வார் பாடியுள்ளார்.


பிள்ளையை எடுத்து வளர்த்தலைத் 'தத்து எடுத்தல்' என்பர். அப்பிள்ளைக்குத் தத்துப் பிள்ளை அல்லது தத்துப் புத்திரன் என்று பெயர். இவ்வழக்கம் நாட்டுக்கோட்டை நகரத்தார்களிடையே அதிகமாகக் காணப்படுகின்றது. அவர்கள் இதைச் 'சுவீகாரம் செய்தல்' அல்லது 'பிள்ளை கூட்டுதல்' என்று குறிப்பிடுகின்றனர். பிள்ளை கூட்டும் சடங்கைத் தங்கள் குலமுறைப்படியும் சட்டப்படியும் செய்கின்றனர்.

பெரும்பாலும் திருமணப் பருவத்திலுள்ள ஆண்பிள்ளையைத்தான் தங்கள் வாரிசாகக் கூட்டுகின்றனர். பெண்பிள்ளையைச் சுவீகாரம் செய்யும் வழக்கம் இல்லை. ஒருவருக்குப் பெண் குழந்தைகள் இருந்தாலும் தங்கள் குடும்பப் பெயர் விளங்க வேண்டும் என்பதற்காக ஆண் பிள்ளையைச் சுவீகாரம் செய்து கொள்ளுகின்றனர். பிள்ளை கூட்டிக் கொள்ளும்போது தங்கள் குடும்பப் பெயரை அவனுக்கு இட்டுச் சட்டப்படி பதிவு செய்கின்றனர்.

நகரத்தார்களிடையே ஒன்பது கோயில் பிரிவுகள் காணப்படுகின்றன. ஒரு கோயில் பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்கள் பிரிவைச் சேர்ந்த குடும்பத்திலிருந்துதான் பிள்ளையைக் கூட்டிக் கொள்கின்றனர். சுவீகாரம் செய்து கொள்ளும் போது பிள்ளையைப் பெற்றவர்கள் தாங்கள் பெற்ற பிள்ளைக்கு 'மஞ்சள் நீர்' கொடுத்துக் குடிக்கச் செய்து, பிள்ளையைக் கூட்டிக் கொள்ளும் பெற்றோரிடம் ஒப்படைப்பது முக்கியச் சடங்காக நடைபெறுகிறது.

காரைக்குடியில் ஒரு குடும்பத்தாரிடம் ஓலைச் சுவடி ஒன்று

உள்ளது. அந்த ஓலைச் சுவடி ஒரு நகரத்தார் குடும்பத்தார் சுவீகாரம் செய்து கொண்ட செய்தியைக் குறிப்பிடுகிறது. கி.பி.1854 இல் நடந்த நிகழ்ச்சி. நகரத்தார் வசிக்கும் ஊர்களுள் ஒன்றான வேகுப்பட்டியில் பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சேர்ந்த ஒரு குடும்பத்திலிருந்து கிருட்டிணன் என்பவரை காரைக்குடி பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சேர்ந்த ஒரு குடும்பத்தார் தங்கள் வாரிசாகக் கூட்டிக் கொண்டுள்ளனர். அதைக் குறித்து இரு குடும்பத்தாரும் ஓர் உடன்படிக்கை முறி(ஒப்பந்தம்) எழுதிக் கொண்டுள்ளனர். பிள்ளை கூட்டிக் கொள்பவருக்குப் பிற்காலத்தில் குழந்தைகள் பிறந்தால் குடும்பச் சொத்துக்களை எவ்வாறு பிரித்துக் கொள்வது, வளர வந்த பிள்ளைக்குத் தாய்மாமன் சடங்குகள் யார் செய்வது போன்ற செய்திகள் தீர ஆலோசித்துத் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. ஓலைச் சுவடி இதை ‘மஞ்சள் நீர் வாசக முறி‘ என்று குறிப்பிடுகிறது. இறுதியில் இரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் கையெழுத்திட்டுத் தங்கள் ஒப்புதலைத் தெரி வித்துள்ளனர். ஓலைச்சுவடியில் காணப்படும் வாசகங்களாவது :



“ஆனந்த வருஷம் கார்த்திகை மீ. 23உ கல்வாச நாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான ராஜநாராயணபுரத்தில் பிள்ளையார்பட்டி திருவேட்பூருடையான் முருகன் செட்டி லெட்சுமணனுக்கு இவ்வூர் யின்னபடி மேற்படிபுரம் உடையான் நல்லகருப்பன் செட்டி கருப்பாத்தான் மகன் கிஷ்ட்னனை மஞ்சள் நீர் பெத்த புத்திரனாக பிள்ளைவிட்ட படியினாலே லெட்சுமணன் சீட்டு கொட்டி தேவதானம் கோயில் குளம் சகலமும் கல்லும் புல்லும் பூமியும் சந்திராதித்தர் உள்ள வரைக்கும் பரம்பரையாக கிருட்டினன் ஆண்டு அனுபவித்துக் கொள்ளவும். இனிமேல் லெட்சுமணனுக்குப் பிள்ளை பிறந்தால் கிருஷ்டினனுக்கு ஒரு பங்கும் பிறக்கிற பிள்ளைகளுக்கு ஒரு பங்குமாக ஆண்டு அனுபவித்துக் கொள்ளவும் பிள்ளைகளுக்கு கல்யாணம் புதுமை சீதனம் பொதுவில் செய்கிறது. லெட்சுமி சீதனம்

பூசனம் சகலமும் பொதுவில் வாங்கிக் கொள்ளுகிறது. கிருஷ்ணனுக்கு மாமச்சடங்கு சாத்தன் செட்டி பெரிய கருப்பன் உள்ளிட்டார் செய்கிறது. முருகன்செட்டி ராமநாதன் உள்ளீட்டாரும் நல்லகருப்பன்செட்டி கருப்பாத்தான் மகன் உள்ளிட்டாரும் சாத்தப்பசெட்டி பெரியகருப்பன் உள்ளிட்டாரும் சின்னான் செட்டி சேக்கப்பன் உள்ளிட்டாரும் சம்மதித்து சொல்ல இந்த வாசகமுறி யெழுதினேன்.

இவ்வூரில் யின்னபடி யின்னபுரம் உடையான் வெங்கிடாசலம் செட்டி சிதம்பரம் கையெழுத்து

முருகன் செட்டி லெட்சுமணன்

முருகன் செட்டி ராமநாதன் உள்ளிட்டார்

மேற்படி ராமநாதன்

நல்ல கருப்பன் செட்டி கருப்பாத்தான்

மேற்படி அண்ணாமலை உள்ளிட்டார்

சின்னான் செட்டி சேக்கப்பன் உள்ளிட்டார்

சாத்தன் செட்டி பெரியகருப்பன் உள்ளிட்டார்”.

பிள்ளை வந்த முரு.லெ.கிருஷ்ணன் செட்டியார் அவர்கள், சிவகங்கை சமஸ்தானத்திலிருந்து வன்னியஞ் சூரைக்குடிக் கோயிலை ஒப்பந்தமாகப் பெற்றுத் திருப்பணிகள் செய்தார்.

வன்னியஞ் சூரைமாநகர் கோயிலில் தனது தந்தையின் நினைவாக அவரது சிலாவுருவத்தையும் தாயார் லெட்சுமி ஆச்சி நினைவாக அவர்களது சிலா உருவத்தையும் வைத்துள்ளார். கோயில் திருப்பணிகள் எல்லாவற்றையும் செவ்வனே முடித்து கும்பாபிஷேகம் நடத்தியுள்ளார்.


இக்கோயிலுக்கு அருகில் உள்ள கண்மாய்க்குக் கிருஷ்ணன் செட்டியார் கண்மாய் என்ற பெயர் இன்றும் உள்ளது.

இவர் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களை அழைத்து வந்து சூரைமாநகர்ப் புராணத்தைப் பாடுமாறு வேண்டிக் கொண்டார். இவரது வேண்டுகோளை ஏற்று மகாவித்வான் அவர்கள் சூரைமாநகர்ப் புராணம் பாடினார். ஒரு பாடலுக்கு ஒரு பணம் வீதம்





காறக்குடி
முரு. லெட்சுமணன்
செட்டியார் பாரி
லெட்சுமி ஆச்சி
மீனாட்சி துணை



உ காறகுடி
முருகப்ப செட்டி
யார் மகன்
லெட்சுமணன்
செட்டியாற்


பிள்ளையவர்களுக்கு வழங்கிக் கௌரவித்தார் கிருஷ்ணன் செட்டியார்.

இவர் சிறந்த அறப்பணிகளைச் செய்துள்ளமையைப் பாராட்டி பிரிட்டிஷார் ஆட்சி காலத்தில் விக்டோரியா மகாராணியார் 1877 ஆம் ஆண்டு ஒரு பாராட்டுப் பத்திரம் வழங்கியுள்ளார்.

இவரது கொடைத்தன்மையைப் பாராட்டி,

“வேவுப்பட்டி கிருஷ்ணனுக்கு

வாழ்வு வந்தது பாருங்கடி”



Certificate Presented to Muna Runa Krishnan Chettiar

of Karaikudi.

in the name of

THE EMPRESS OF INDIA.

January. 1st 1877.

On demand of His Excellency the Viceroy and Governor-General this Certificate is presented in the name of the Most Gracious Majesty Victoria, Empress of India, to Muna Runa Krishnan Chettiar of Karaikudi, son of Lechumanan Chettiar in recognition of the part he has taken in connection with Public charity in the District of Madura.

(Sd) Buckingham of Kandes

January 1st 1877.

என்ற நாட்டுப்புறப் பாடல் ஒன்றும் வழக்கில் இருந்துள்ளது.

6.நகரத்தாரும் கடல் வணிகமும்

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் எனப்படும் நகரத்தார்கள் சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த 75 ஊர்களைப் (முன்பு 96 ஊர்கள்) பூர்வீகமாகக் கொண்டவர்கள். அவர்களுடைய கல்வெட்டுகள் 12ஆம் நூற்றாண்டிலிருந்து இப்பகுதிகளில் பரவலாகக் காணப்படுகின்றன. சுமார் ஒருலட்சம் மக்கள் தொகையே கொண்ட சிறுபான்மைச் சமூகத்தினரான இவர்கள் 18,19 ஆம் நூற்றாண்டுகளில் கடல் வணிகத்தில் சிறந்திருந்தனர். இந்தியாவில் ஒரு வலுவான வணிகச் சமூகமாக விளங்கினர்.

ஐந்நூற்றுவரும் நகரத்தாரும் :


சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பு அஞ்சுவண்ணத்தார், மணிக்கிராமத்தார், நானாதேசி திசையாயிரத்து ஐந்நூற்றுவர் போன்ற வணிகக் குழுக்கள் தமிழகத்தில் சிறந்திருந்தன. அவர்களுள், பல்வேறு திசைகளிலும் உள்ள பல்வேறு நாடுகளுக்கும் சென்றுவந்த ஐந்நூற்றுவர் (நானாதேசி திசையாயிரத்து ஐந்நூற்றுவர்) வழிவந்தவர்களாகவோ அல்லது அவர்களுள் ஒரு பிரிவினராகவோ நகரத்தார்கள் இருக்கவேண்டும். அதற்கான சான்றுகளும் உள்ளன.

இளையாற்றங்குடி, நேமங்கோயில், இலுப்பைக்குடிக் கோயில், மாத்தூர்க்கோயில், வயிரவன்கோயில், வேலங்குடிக்கோயில், பிள்ளையார்பட்டிக் கோயில், இரணிக்கோயில் என்ற ஒன்பது ஊர்களில் உள்ள சிவன் கோயில்களின் அடிப்படையில் நகரத்தார்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேல்குறிப்பிட்ட கோயில்களுள் பிள்ளையார்பட்டிக் குடைவரைக் கோயிலில் உள்ள பிள்ளையார் பெயர் தேசிகப் பிள்ளையார்.1 மேலும் இக்குடைவரைக் கோயிலில் உள்ள தூண்களில் வெட்டப்பட்டுள்ள 12 ஆம் நூற்றாண்டுப் பாண்டியர்காலக் கல்வெட்டு ஒன்று, கானநாட்டு காரிக்குடி ஐந்நூற்றுவப் பெருந்தெருவில் உள்ள நகரத்தார்கள் பிள்ளையார்பட்டியைச் சுற்றியுள்ள (பிள்ளையார்பட்டியின் பழைய பெயர் மருதங்குடி) மருதங்குடி முதலான ஊர்களை விலைக்கு வாங்கி இராஜநாராயணபுரம் என்று பெயரிட்டுக் குடியேறியதைக் குறிக்கிறது. குடியேறிய அவர்களுக்குச் சில வரிகளை வசூலித்துக் கொள்ளும் உரிமையைப் பாண்டியமன்னன் வழங்கிய செய்தியை அக்குடைவரையில் உள்ள மற்றொரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது.2

மாத்தூர்க்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் “ஐந்நூற்றீசுவரர்” என்பதாகும். சூரைக்குடிக் கோயிலைப் பற்றிக் குறிப்பிடுகையில் “கேரளசிங்க வளநாட்டில் சூரைக்குடியான தேசிக நாராயணபுரம்” என்றே இன்றளவும் குறிப்பிடுகின்றனர். இச்செய்திகள் எல்லாம் நகரத்தார்களுக்கும் ஐந்நூற்றுவருக்கும் உள்ள தொடர்பை விளக்குகின்றன.

ஆங்கிலேயர்கள் ஆட்சியில் நகரத்தார்களின் வணிகநிலை

18,19ஆம் நூற்றாண்டுகளில் நகரத்தார்கள் பாண்டிய நாட்டில் தங்களுடைய கிராமங்களிலிருந்து புறப்பட்டு சென்னை, தூத்துக்குடி, நாகப்பட்டினம், புதுச்சேரி ஆகிய துறைமுக ஊர்களில் நகர விடுதிகள் அமைத்துத் தங்கியிருந்து, அங்கிருந்து கடற்கரை ஓரமாகவே



No. 2

Rangoon. 30 4 1920

Messrs. Hoosain Kassam Dada Dr.

To. M.T.A. ALAGAPPA CHETTY

For 700 Bags B. Rice each weighing 160 lbs. nett.
1493.33 baskets 75 lbs. each baskets
@ Rs 525 per % baskets Rs. 7839 15 9

TOTAL Rs. 7839 15 9

E. & O. E.


Received Payment

பாய்கட்டிக் கப்பல்களில் இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர், வியட்நாம், தாய்லாந்து, இந்தோனேஷியா ஆகிய கிழக்காசிய

நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். பெரும்பாலும் நாகப்பட்டினத்திலிருந்தே சென்றிருக்கிறார்கள். கல்கத்தாவுக்கும் கடல்மார்க்கமாகவே சென்றுள்ளனர். அங்கிருந்து பாய்மரக் கப்பல் மூலமாகப் பர்மாவுக்குச் சென்றுள்ளனர்.3

1800 ஆம் ஆண்டளவில் வணிகத்தின் பொருட்டு வடநாடு சென்ற நகரத்தார்கள் முதலில் கல்கத்தாவில் நகரவிடுதி அமைத்துத் தங்கி யிருந்தனர். அந்த விடுதியிலுள்ள ஒரு தமிழ்க்கல்வெட்டு நகரத்தார்களின் வணிகம் பற்றிய செய்தியைத் தெரிவிக்கிறது.

கல்கத்தாவிலிருந்து அரிசி, நவதானியங்கள், மிளகு, துணிவகைகள் முதலியவற்றைக் கடல்வழியாக இலங்கை போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். கப்பல் கம்பெனிகள் ஆண்டு இறுதியில் ஏற்றுமதி செய்த பொருட்களுக்குக் கப்பல் கட்டணத்திற்காகச் செலுத்திய தொகையில்


No 248 Rangoon. 21 – 5 — 1920

Messrs. P. L. Mehta Dr.

To. M.T.A. ALAGAPPA CHETTY

For 500 Bags Black gram each weighing 224 lbs. nett.

1555-40 lbs baskets 72 lbs. each baskets

@ Rs 450 per % baskets Rs. 6999 15 6

TOTAL Rs. 6999 15 6

E. & O. E.

Received Payment 6999-15-6

நூற்றுக்கு ஐந்து சதவீதம் எனத் திருப்பிக் கொடுத்தன. இவ்வாறு கிடைத்த தொகையைப் பொதுநிதியாக வைத்திருந்து தருமத்திற்குச் செலவிடுவதென கல்கத்தாவில் வணிகம் செய்த நகரத்தார்கள் முடிவெடுத்தனர். அவ்வகையில் அக்காலத்திலேயே ஆண்டுதோறும் 25 ஆயிரம் ரூபாய் வரை வருவாய் வந்து கொண்டிருந்தது என்றால் நகரத்தார்கள் ஏற்றுமதி செய்த பொருள்களின் மதிப்பீட்டை நம்மால் ஒருவாறு ஊகிக்க முடிகிறது. 1860 ஆம் ஆண்டளவில் நகரத்தார்கள். பம்பாய் சென்றும் வணிகத்தில் ஈடுபட்டனர்.

கொண்டு விற்றல்

‘கொடுக்கல் வாங்கல்’ எனப்படும் வட்டித் தொழிலில் பிற்காலத்தில் ஈடுபட்டாலும் முதலில் அரிசி மிளகு போன்ற நவதானியங்கள்



பஞ்சு, துணிவகைகள் ஆகியவற்றைக் கொண்டு கொள்முதல் செய்து விற்பதாகிய வணிகத்திலே ஈடுபட்டனர். இதைக் குறிப்பிடும் “கொண்டுவிற்கப்போதல்” என்ற சொல் நகரத்தார்களிடையே இன்றும் வழக்கிலிருக்கிறது. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் கீழ்த்திசை நாடுகள் பல ஆங்கிலேயர்கள் ஆட்சியின்கீழ் இருந்ததாலும், கடற்பாதுகாப்பு, அந்நியச் செலாவணி, கட்டண வசூலிப்பு முறை, ஆகியவை எளிதாக இருந்ததாலும் துணிச்சலுடன் பலவகை இன்னல்களையும் பொருட்படுத்தாது அயல்நாடுகளுக்குச் சென்று வணிகத்தொழிலில் ஈடுபட்டு அந்தந்த நாடுகளை வளப்படுத்தித் தாங்களும் வளமாக வாழ்ந்தனர்.

இலங்கை, இந்தோசீனா, மலேயா போன்ற நாடுகளில் தேயிலைத் தோட்டங்களையும் இரப்பர்த் தோட்டங்களையும் உண்டாக்கி அந்தந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியிருக்கிறார்கள். மலேயாவில் முதன்முதலில் இரப்பர் பயிரிட்ட இந்தியர் நச்சாந்துப் பட்டியைச் சேர்ந்த பெ.ராம. குடும்பத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.5

பர்மா

பர்மாவின் செழிப்பிற்கு நகரத்தார்களே காரணம். மண்வளமும் நீர்வளமும் ஏராளமாக இருந்தும் உழைப்பவர்களும் உழைப்பவர்களுக்குப் பொருளுதவி செய்பவர்களும் இல்லாத காரணத்தால், பர்மிய நிலங்கள் காடுமேடாகக் கிடந்தன. கல்கத்தாவில் வணிகம் செய்துகொண்டிருந்த நகரத்தார்கள் பாய்மரக் கப்பல்கள்மூலம் பர்மாவிற்குச் சென்று தங்கள் முயற்சியால் அந்நிலங்களைப் பொன்விளையும் பூமியாக்கினர். பர்மா அரிசி உலகச் சந்தையில் முதலிடம் பெற்றது.

கி.பி. 1867 ஆம் ஆண்டு சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டது. இதன்மூலம் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு வரும் கப்பல்கள் ஆப்பிரிக்காவைச் சுற்றிவராமல் சூயஸ் கால்வாய் வழியாக வந்து சென்றன. அதனால் நகரத்தார்கள் அதிகம் பயனடைந்தனர். பர்மாவில் விளைந்த அரிசியை உலகச் சந்தைக்கு எளிதில் எடுத்துச் சென்று விற்க முடிந்தது.

1850 ஆம் ஆண்டுமுதல், இரண்டாம் உலகப்போர் ஆசியாவுக்குப் பரவிய 1941 ஆம் ஆண்டுவரை நகரத்தார்கள் வேறு எந்த நாட்டையும் விட

பர்மாவில்தான் கூடுதலாக முதலீடு செய்தனர். பர்மியத் துறைமுகமான 'மோல்மேன்' என்ற ஊர்தான் நகரத்தார்கள் முதன்முதலில் குடியேறித் தொழில்செய்த ஊராகும். ஆங்கிலேயர் பர்மாவைக் கைப்பற்றுவதற்கு முன்னரே நகரத்தார்கள் இவ்வூருக்குச் சென்றனர். நாளடைவில் பர்மாவில் சின்னஞ்சிறு ஊர்களிலும் பரவி, தங்களது கொடுக்கல் வாங்கல் தொழிலை அந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு உகந்த வகையில் செய்து வந்தனர். பெரும்பான்மையான நிலங்கள் நகரத்தார்களின் உதவியால் வேளாண்மைக்குக் கொண்டுவரப்பெற்றன. பர்மாவில் நகரத்தார் பலருக்கு வீடுகள், எண்ணெய்க் கேணிகள், மரஆலைகள், வயல்கள் போன்றவை உரிமையாக இருந்தன. இரங்கூனில் நகரத்தார் கடைகள் இருந்த வீதிக்கு 'நகரத்தார் ரோடு' என்று பெயர் இருந்திருக்கிறது.

"பர்மா டாப்பு நொண்டிச்சிந்து" என்ற நூல் 1908இல் பதிப்பிக்கப் பெற்றது. ஆசிரியர் மதுரை ஜில்லா கண்டனூரை சேர்ந்த பாலையூர் விநாயகர் கடாக்ஷ வித்துவான் சீ.இராமசாமி ஐயங்கார் ஆவார்.அதில் ரெங்கூன் அலங்கார சிந்தின் ஆறாவது கண்ணியில்,

"நகரத்தார் கடை வீதி பாரு
என்ன ஜோதி மகா நீதியொடு
வியாபாரம் செய்கின்ற கியாதி
நவில நான் முடியாது"

என்ற வரிகளும், "நகரத்தார் ரோடு பாரு என்ன ஜோரு" என்ற வரிகளும் பர்மாவில் நகரத்தார்கள் செய்த வணிகச் சிறப்பை விவரிக்கின்றன.

பர்மா தேக்கு உலகப்புகழ் பெற்றது. பர்மாவிலிருந்து செட்டிநாட்டிலுள்ள நகரத்தார்களின் ஒவ்வொரு வீட்டிற்கும், ஒவ்வொரு கப்பலில் வெளிநாட்டுப் பொருள்களும், தேக்கு மரங்களும் திருவாடானைக்கு அருகில் உள்ள தொண்டியில் வந்து இறங்கின.6 பெரிய தேக்கு மரங்களைப் படகுகளில் ஏற்றி ஐராவதி ஆற்றின் மூலம் இரங்கூன் துறைமுகத்திற்குக் கொண்டுவந்து, தேக்கு மரங்களை உறுதியான கொடிகள், கயிறுகள் அல்லது சங்கிலிகளால் கட்டிக் கப்பலோடு பிணைத்து, நீரில் மிதக்கவிட்டு விடுவார்கள். கப்பல்கள்

தொண்டிக்கு வந்தவுடன் யானைகளின் உதவியுடன் கரைக்குக் கொண்டுவந்து அங்கிருந்து மாட்டு வண்டிகள் மூலம் தேவகோட்டை வழியாக அவரவர் ஊர்களுக்கு எடுத்துச் செல்வர். இவ்வாறு வந்த தேக்கு மரங்களைக் கொண்டு கட்டப்பட்டவைதான் நகரத்தார்களது அரண்மனை போன்ற வீடுகள்.

அக்காலத்திலேயே பர்மாவில் மட்டும் சுமார் 200 கோடி ரூபாய்க்கு மேலும், மலாய் நாட்டிலும், பிறநாடுகளிலும் 100 கோடிக்கு மேலும் நகரத்தார் தொழில் நடத்தினர் என்று வள்ளல் அழகப்பர் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.7

இரண்டாவது உலக போருக்குப் பிறகு நகரத்தார்கள் பர்மாவை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எவ்விதமான இழப்பீட்டுத் தொகையும் பெறாமல் சொத்துக்களை விற்று முதலாக்கி இந்தியாவிற்கு கொண்டு வரவும் முடியாமல் பர்மாவில் பல்லாயிரம் ஏக்கர் நிலங்களை விட்டுவிட்டு ஒருகட்டத்தில் நடந்தே தாயகம் திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டது. நகரத்தார்களின் வணிகம் அதிக அளவில் பர்மாவிலேயே இருந்ததால் அவர்களது பொருளாதாரத்தில் பெரிய சரிவு ஏற்பட்டது. இன்றும் நகரத்தாரின் சொத்துக்கள் பர்மாவில் ஏராளமாக உள்ளன. பர்மாவிலிருந்து திரும்பிய நகரத்தார்கள் அந்நிலைக்கு மனந்தளராமல் உள்ளூர்களில் தொழில் செய்து (நூற்பாலைகள், மருந்தகங்கள், காகிதத் தொழில்கள், வங்கிகள்,பதிப்பகங்கள் மூலமாக நூல்கள் வெளியிடுதல் போன்றவை) ஃபீனிக்ஸ் பறவை போல மீண்டு வந்தனர்.

இலங்கை

இலங்கையின் தலைநகரான கொழும்பில் நகரத்தார் வணிகம் செய்யும் வீதிக்கு 'செட்டியார் தெரு' என்றே பெயர். சுமார் 300 ஆண்டுகளுக்கு மேலாக அரிசி விற்பனை, நகை வியாபாரம், கொடுக்கல் வாங்கல் ஆகியவை இப்பகுதிகளில் சிறந்து விளங்கியதால் இலங்கையின் பொருளாதாரத்திற்கு செட்டியார் தெருவே அச்சாணியாக இருந்து வந்திருக்கிறது. 1914 ஆம் ஆண்டு முதல் உலகப்போர் தொடங்கும்வரை நகரத்தார்கள் யாழ்ப்பாணத்தில் தொழில் செய்துள்ளனர். இரங்கூன், ஹரிக்கேன், நாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்குப் பல கப்பல்களில் அரிசி வரவழைத்து வியாபாரம் செய்துள்ளனர்.8

வங்காள தேசம்

இங்குள்ள ஹரிக்கேன் நகரம் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் அரிசி வியாபாரத்திலும் கொடுக்கல் வாங்கல் தொழிலிலும் புகழ் பெற்றது. தஞ்சாவூர் அரிசி, பர்மிய அரிசி ஆகியவை இங்கு வரவழைக்கப்பெற்று இங்கிருந்து பற்றாக்குறைப் பகுதிகளான மேற்குவங்காளம், வங்காளதேசம் மற்றும் வட இந்தியப்பகுதிகளுக்கும் இலங்கைக்கும் தனிக்கப்பல்களில் அனுப்பப்பட்டன. இந்த வியாபாரத்தில் நகரத்தார் கடைகள் முப்பதுக்கும்மேல் ஈடுபட்டன. எல்லாக் கடைகளும் தேவைப்பட்டபோது தனிக்கப்பல்களை வாடகைக்கு எடுத்துக்கொண்டன. சில கடைகளுக்குச் சொந்தக் கப்பல்களே இருந்தன.9

நேமத்தான்பட்டியைச் சேர்ந்த பழநியப்ப செட்டியார் என்பவருக்கு ஹரிக்கேனில் அரிசி வியாபாரம் மிகச் செழிப்பாக இருந்தது. அதனால் அவரை “அரிக்கன் பழநியப்ப செட்டியார்” என்றே ஊரார் அழைத்தனர். தொழில் தொடர்பாக அவருக்கு அடிக்கடி தந்தி வந்து கொண்டே இருந்ததால் “அரிக்கன் பழநியப்பா அலறுதடா உன் தந்தி” என்று மக்கள் கூறியதாகவும் அறிகிறோம். (பழனியப்பர் வாழ்க்கை வரலாறு ரா.பி. சேதுப்பிள்ளை திருநாவுக்கரசு வித்தியாசாலை வெளியீடு, நேமத்தான்பட்டி1944)

மலேசியா

மலேசியா பணம்கொழிக்கும் நாடாக இருப்பதற்கு அடிப்படை அந்நாட்டிலுள்ள ரப்பர் என்னும் மூலதனமே ஆகும். நகரத்தார்கள் அங்கு தாங்களே ரப்பர் பயிரிட்டதோடல்லாமல் ரப்பர் தோட்டங்களில் பயிர்செய்பவர்களுக்கு, கடனாகப் பொருளுதவியும் செய்தனர். மலேசிய சுல்தான்களுக்குக் கடன்கொடுத்து உதவிய சமூகம் நகரத்தார் சமூகமாகும்.10

இந்தோசீனா

இந்நாடு பிரெஞ்சு ஆட்சியில் சில நூற்றாண்டுகள் இருந்தது. இந்நாட்டின் தலைநகரம் செய்கோன். நகரத்தார்களுக்கும் செய்கோனுக்கும் வணிகத் தொடர்புகள் அதிகம்.11

இந்தோனேஷியா

இந்நாட்டோடு பவளம், முத்து, முதலிய வணிகங்களில் நகரத்தார்கள் ஈடுபட்டிருந்தனர். இப்பொருள்களைக் குறிக்கும் பவளம், முத்து என்ற தமிழ்ச்சொற்களே இன்றளவும் அந்நாட்டில் வழங்கி வருகின்றன என்கிறார் அறிஞர் சோமலெ. இந்தோனேஷியத் தீவுகளில் முக்கியமான சுமத்திரா தீவின் தலைநகரமான மைடாண்டில்லியிலும் அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் நகரத்தார்கள் தொழில் செய்தனர்.12

மொரிஷியஸ்

19ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இந்தத் தீவின் தலைநகரமான போர்ட் லூயி என்னும் தீவில் நகரத்தார் வணிகம் செய்தனர்.13

18, 19ஆம் நூற்றாண்டுகளில் கீழ்த்திசை நாடுகளுக்கு வணிகத்தின் பொருட்டுச் சென்று பெரும்பொருள் ஈட்டிய நகரத்தார்கள், தமிழகத்திலும், வட இந்தியாவிலும், தாங்கள் சென்ற அயல்நாடுகளிலும் கோயில் திருப்பணிகளையும் மற்றும் பலவிதமான அறப்பணிகளையும் செய்தனர். அயல்நாடுகளில், முருகனுக்கும் மற்ற கடவுளர்க்கும் கோயில்கள் எழுப்பிய நகரத்தார்கள் சைவத்தையும், தமிழையும், திராவிடச் சிற்பக்கலை மரபையும் கணிசமாக வளர்த்தனர். செட்டிநாட்டில் ஒவ்வொரு நகரத்தார் வீட்டுக்கும் ஒவ்வொரு பட்டப்பெயர் உண்டு.

அவ்வீட்டில் உள்ளோர் செய்த அறப்பணிகள் காரணமாகவோ அல்லது அவர்கள் தொழில் செய்யச் சென்ற நாடுகள், ஊர்களின் அடிப்படையிலோ அல்லது அவர்களின் பண்புகள் அடிப்படையிலோ அப்பட்டப்பெயர்கள் அமைந்திருக்கும். அந்த வகையில் கீழே குறிக்கப்பட்டுள்ள சில பெயர்கள் நகரத்தார்களுக்கு அயல்நாட்டோடு உள்ள தொடர்பை விளக்குவதாக உள்ளதைக் காணலாம்.

(இலங்கை) மாந்தளை அருணாச்சலம் செட்டியார்

(மலேசியா) ஈப்போ நாராயணன் செட்டியார்

(மலேசியா) தாப்பா நாச்சியப்ப செட்டியார்

(இலங்கை) மாதம்பையார் வீடு

கானப்பூரார் வீடு

லண்டன் வீடு.

(இலங்கை) கொழும்பு சொக்கலிங்கம் செட்டியார்

(பர்மா) பாசின் பழனியப்பச் செட்டியார்

(வங்காளதேசம்) அரிக்கன் பழனியப்பச் செட்டியார்

(மலேசியா) கிட்டா நாராயணன் செட்டியார்

(இலங்கை) காலி வீடு






நன்றி கோவிலூர் அருங்காட்சியகம்

அதுமட்டுமல்ல எந்தெந்த நாடுகளுக்கு சென்றார்களோ அந்தந்த நாடுகளில் உள்ள சிறப்பான பொருள்களைச் செட்டிநாட்டிற்குக் கொண்டுவந்து தங்கள் பெண்களுக்குச் சீதனமாகக் கொடுக்கும் வழக்கம் இருந்தது. அப்பொருட்களைப் பயன்படுத்தும் போது எந்தெந்த நாட்டில் இருந்து எந்தெந்த ஊரிலிருந்து அப்பொருட்கள் வந்தனவோ, அந்தந்த நாட்டின் ஊரின் பெயரையும் சேர்த்தே அப்பொருளின் பெயரைக் குறிப்பிடும் முறை இன்றளவும் காணப்படுகிறது. சான்றாகக் "கம்போஜா மரவை", "மோல்மேன் தட்டு", "அரிக்கன் லைட்டு", "கொழும்புக் கேத்தல்", "மாந்தளைக் கரண்டி", "பர்மாப் பாய்",

“பர்மாத்தடுக்கு”, “செய்கோன் மரவை”,“ஜப்பான் டைல்ஸ்”, “லண்டன் ஓடு” போன்றன.

வங்கிகள் செய்து வரும் பணிகள் பலவற்றை நீண்ட காலமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் செய்து வந்த நகரத்தார்கள் வங்கித் துறையின் முன்னோடிகளாகவும் விளங்கினர். மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பணத்தை எளிதாக அனுப்ப, பெற்றுக்கொள்ள உதவும் வரைவோலை (ஞிணிவிகிழிஞி ஞிஸிகிதிஜி) எனப்படும் உண்டியல் முறையை அறிமுகப்படுத்தியவர்கள் நகரத்தார்கள். எனவே நகரத்தார்களின் கடல் வணிக வரலாறு தமிழக, இந்திய, உலக வணிக வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அடிக்குறிப்புகள்

1.பிள்ளையார்பட்டி குடைவரைக் கோயிலில் திருவீங்கைக் குடி மகாதேவர் கருவறைத் திருவாயிலுக்கு இடதுபக்கச் சுவரில் உள்ளது. திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியனின் பதினொன்றாவதின் எதிராமாண்டுக் கல்வெட்டு. (கி.பி.1220) சா.கணேசன், பிள்ளையார்பட்டி தல வரலாறு, பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் நகரத்தார் அறநிலை வெளியிடு 1983, பக்கம் 267.

2.சா.கணேசன் 1983, பிள்ளையார்பட்டி தல வரலாறு பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் நகரத்தார் அறநிலை வெளியிடு. பக்கம் 3637 - திருவீங்கைக்குடி மகாதேவர் கருவறை வாயிலுக்கு வடக்குச் சுவரில் உள்ள கல்வெட்டு; காலம் 1284; எம் மண்டலமும் கொண்டு அருளிய ஸ்ரீ குலசேகர பாண்டியன் கல்வெட்டு.

3.கட்டுரையாசிரியர், நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த பெரியவர்கள் சொல்ல கேட்டு எழுதியது.

4.ஸ்ரீ நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் நூற்றாண்டு விழா மலர் (1863 1963) பேராசிரியர் சோமலெ.

5.பெ.ராம குடும்பத்திற்கு சொந்தமான பேரையூர் அம்மாள்குளம், ஸ்ரீ பொய்யாத விநாயகர் மகா கும்பாபிஷேக மலர் 3111975 மலேசியாவில் ’மலேஸியா மொத்தேகா’ நாளிதழ்களில் இச்செய்தி வெளியாகி உள்ளது.

6.பர்மாவில் இருந்து தேக்கு மரங்களைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்து கடை வைத்திருந்த கண்டனூரைச் சேர்ந்த 96 வயதினரான சொக்குச் செட்டியார் கூறியது.

7.சோமலெ, 1979, அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்கள் ஆலயப்பணிகள், சோமு நூலகம்.

8.மேலது

9.மேலது

10.மேலது

11.மேலது

12.மேலது

13.மேலது.

14.பெ.ராம. குடும்பத் திருப்பணிகள் 1779 ல் நிகழ்ந்த திருக்குட நன்னீராட்டு விழா நினைவு மலர்

7. சேதுபதிகளும் நகரத்தாக்களும்





சேதுநாட்டின் எல்லை, வடக்கே வெள்ளாறு வரை பரவியிருந்தது. சேதுநாட்டின் வட பகுதியில் உள்ளது செட்டிநாடு. நகரத்தார் என்ற நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் எனப்படும் வணிகப் பெருமக்கள் வாழ்விடம் அது. கி. பி. 18,19, ஆம் நூற்றாண்டுகளில் கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்று பல தொழில் துறைகளிலும் குறிப்பாக கொடுக்கல் வாங்கல் எனப்படும் வட்டித்தொழிலிலும் ஈடுபட்ட நகரத்தார்கள் பெரும்பொருள் ஈட்டினர். ஈட்டியதில் ஒரு பகுதியை மகமைப்பணம் என எடுத்துவைத்து காலத்திற்கேற்ற பலவித அறப்பணிகளைச் செய்தார்கள். அவர்கள் சீரும் சிறப்புமாக இருந்த அக்காலக் கட்டத்தில் இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களுக்கும் நகரத்தார்களுக்குமிடையே நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது.

தேவகோட்டை ஜமின்தாரும் சேதுபதியும் :

“சேதுபதிகள் ஆற்காட்டு நவாப்பிற்கும் பிறகு ஆங்கிலேயருக்கும் அடங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது அவர்களுக்கு கப்பம் கட்டுவதற்காகவும், அரச குடும்பத்தினருக்கு இடையில் நிகழ்நத உரிமை வழக்குகளில் செலவழிப்பதற்காகவும் அரசு கருவூலம் காலியான நிலையில் தேவகோட்டை நகரத்தார்களிடம் சேதுபதிகள் கடனுதவி பெற்றனர். அதற்கு ஈடாக தேவகோட்டையையும் அதைச் சுற்றியுள்ள வளமான இரவுசேரி மாகான கிராமங்களையும் இருபது ஆண்டுகள், ஐம்பது ஆண்டுகள் என குத்தகையாக விட்டுக்கொடுத்தனர், இவ்வாறு பல கிராமங்களைக் கட்டியாளும் வாய்ப்பினைப் பெற்ற நாட்டுக்கோட்டை வணிகருக்கு ‘ஜமீன்தார்’ என்ற கவுரவத்தை ஆங்கிலேய அரசு அளித்தது” என்று திரு மீ. மனோகரன் அவர்கள் ‘கிழவன் சேதுபதி’ என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். திரு மீ. மனோகரன் குறிப்பிடுவது தேவகோட்டை ஏ.எல்.ஏ.ஆர் குடும்பம்பத்தினரையே ஆகும். அவரது வழியினர் இன்றளவும் ஜமீன்தார் குடும்பத்தினர் என்றே அழைக்கப்படுகின்றனர். சேதுபதிகளுடன் இக்குடும்பத்தார் தொடர்பு கொண்டது சுமார் 1870ஆம் ஆண்டளவில் ஆகும்.

இக்குடும்பத்தைச் சேர்ந்த இராமசாமிச் செட்டியார் இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதியின் (கிபி 1868-1903) நெருங்கிய நண்பராக இருந்தார். இராமநாதபுரம் ஜமீன் நீதிமன்ற நிர்வாகத்தில் இருந்தபோது (**court of wards**) பாஸ்கரசேதுபதிக்குத் தேவையான பொழுது எல்லாம். எந்தவித எழுத்துபூர்வமான ஆதாரமுமில்லாமல் ரூபாய் 3 1/2 இலட்சம் வரை1894 இல் கடன் கொடுத்திருக்கிறார். தேவகோட்டை ஏ.எல்.ஏ.ஆர். குடும்பத்தாருக்கு சென்னையில் கடை இருந்தது. பாஸ்கர சேதுபதி சென்னையில் படித்தபோது தேவைப்படும்போது ஆளனுப்பி மேற்படியார் கடையில் பொருளுதவி பெற்றிருக்கிறார்.

பாஸ்கர சேதுபதி மேஜரானபோது அவருடைய உறவினர் ஒருவர் (பாஸ்கர சேதுபதியின் பிறந்த இடத்துப் பெரியப்பா) ‘பாஸ்கர சேதுபதி பெரிய செலவாளி, பலரிடம் கடன் வாங்கியிருக்கிறார். தேவகோட்டை இராமசாமிச் செட்டியாரிடமும் கடன் வாங்கியிருக்கிறார். எனவே அவரிடம் ராஜியத்தை ஒப்படைக்கக்கூடாது’ என்று தடை உத்தரவு கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தொடர்ந்தார். அந்த

வழக்கில் இராமசாமிச் செட்டியார் சாட்சியாக விசாரிக்கப்பட்ட பொழுது, “ராஜாவை உபசரிப்பது எங்கள் கடமை. அவரை என்றும் உபசரித்து வருவோம் நாங்கள் அவருக்குக் கடன் எதுவும் கொடுக்கவில்லை”.என்று கூறியதோடு அதற்கு ஆதாரமாக தம்முடைய ‘இராமசாமி அன்கோ’ நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களையும் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தினார்.அதில் பாஸ்கர சேதுபதியிடம் கொடுத்த தொகைகள் மன்னரது பெயரில் பற்று எழுதப்படவில்லை.”இராம தனது பற்று” என்று மன்னருக்கு வழங்கப்பட்ட கடன் யாரும் புரிந்து கொள்ளமுடியாத படி இருந்தது, செட்டியாரின் சாட்சியத்தின் பேரில் அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

சாட்சிக் கூண்டிலிருந்த இராமசாமிச் செட்டியார் இறங்கி வந்ததும் மன்னர் பாஸ்கர சேதுபதி அவரைக் கட்டித் தழுவி “அப்பா! காலத்தால் செய்த இந்த நன்றியை என்றும் மறக்கமாட்டேன்” என்று மகிழ்ச்சி பொங்கக் கூறியதுடன் பின்னர் 1 இலட்ச ரூபாய் பெற்றுக்கொண்டு இராமசாமிச் செட்டியாரை தேவகோட்டை பகுதிகளுக்கு (22 1/2 கிராமம்) ஜமீன்தாராக ஆக்கிவைத்து சன்னது வழங்கினார்.

பாஸ்கரரின் நாட்குறிப்பு:

பாஸ்கர சேதுபதி மன்னரது 1893ஆம் வருடத்திய நாட்குறிப்பேடு கிடைத்துள்ளது(சென்னையில் உள்ள தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் இந்த நாட்குறிப்புப் பாதுகாக்கப்பட்டு வருகிறது) அந்த நாட்குறிப்புக்களில் தான் சந்தித்தவர்களைப் பற்றியும், தன்னோடு தொடர்புடையவர்களைப் பற்றியும் இன்னும் பல செய்திகளையும் பதிவாக்கியுள்ளார் பாஸ்கரர். உள்ளத்தை நெகிழச் செய்யும் நிகழ்ச்சிகள் பல அதில் பதிவாகியுள்ளன.1893 ஜூன் 2 ஆம் தேதிய நாட்குறிப்பில் ஏ.எல்.ஏ.ஆர். அவர்களைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

“ஏ.எல்.ஏ.ஆர். இராமசாமி செட்டியார் எனக்கும் சமஸ்தானத்துக்கும் செய்திருக்கும் உதவிகளுக்கு அளவில்லை.அவ்வளவு பெரிய காரியங்களைச் சாதித்து எங்களுக்கு உறுதுணையாக இருந்திருக்கிறார். இந்த உலகத்தில் இவரைப்போன்ற இவருக்குச் சமமான வேறு நண்பர் யாரும் இல்லை” என ஆங்கிலத்தில் வரைந்துள்ளார்.**(AL.AR Ramasamy chettiyar, great and invaluable services, he has rendered to me and to the samasthanam. I have no other friend like him in this world)**

பாஸ்கரரின் திருமணம் :

13.5.1888 இல் மன்னர் பாஸ்கர சேதுபதிக்கு இரு திருமணங்கள் நடந்தன. அந்த இரு நிகழ்வுகளும் இராமசாமிச் செட்டியாரின் முன்னிலையிலேயே நடந்தன. மன்னரின் வாழ்க்கைத்துணைவியாக வந்தவர் களரி கிராமம் துரைச் சிங்கத் தேவர் (சேதுராஜா தேவர்) மகள் மங்கேளசுவரி நாச்சியார் ஆவார் இந்தத் திருமணம் நடைப்பெற்ற சில நிமிடங்களில் மன்னருக்கும் மன்னரது தூரத்து உறவினரான தூவல் கிராமம் கண்ணுச்சாமித் தேவரின் மகள் சிவபாக்கியத்திற்கும் திருமணம் நடந்தது. மணப்பெண்கள் இருவரும் மன்னரது நெருங்கிய உறவினராக இருந்ததால் உறவை மதித்து ஒரே நாளில் இரு திருமணங்களுக்கும் மன்னர் இசைவு அளித்துள்ளார்.

நட்பின் பெருமை

மன்னர் பாஸ்கரருக்கும் இராமசாமிச் செட்டியாருக்குகிடையே இருந்த ஆழமான நட்பை எடுத்துக் காட்டும் ஒரு சுவையான நிகழ்வு. ஒரு முறை இராமநாதபுரம் அரண்மனையில் பாஸ்கர சேதுபதியுடன் இராமசாமிச் செட்டியார் விருந்துண்டார். விருந்திற்குப்பின் மன்னரின் உதவியாளர் தாம்பூலத் தட்டை இராமசாமிச் செட்டியாரிடம் கொடுத்தார்.அப்போது அதில் வெற்றிலை பாக்கு மட்டும் இருந்தது. சுண்ணாம்பு இல்லை, அதை வெளிக்காட்டாமல் சுண்ணாம்பு இல்லாமலேயே வெற்றிலையைப் பாக்குடன் மடித்து வாயில் வைத்து மென்றவாறு இராமசாமிச் செட்டியாரவர்கள் மன்னருடன் உரையாடிக்கொன்டிருந்தார். பேச்சு சுவாரசியத்தில் முதலில் அதைக் கவனிக்காத பாஸ்கர சேதுபதி பின்னீடு(பிறகு) அதைக் கவனித்து தாம்பாளத்தில் சுண்ணாம்பு வைக்கவில்லையே என்று சொன்னவாறு தமது அடைப்பைக்காரனை மிகுந்த கோபத்துடன் கூப்பிட்டார். மன்னரது கோபத்தை புரிந்து கொண்ட செட்டியார் “நாங்கள் தாம்பூலத்திற்கு சுண்ணாம்பு பயன்படுத்துவதில்லை” என்று தெரிவித்தார். மன்னரும் தன் உதவியாளர்கள் குறிப்பிறிந்து நடந்து கொண்டு இருப்பதாக நினைத்துக்கொண்டார்.ஆனால் உண்மை வேறாக இருந்தது. அந்தச் சிறுகுறையின் காரணமாக அரண்மனைச் சிப்பந்தி அரசரின் கோபத்திற்கு ஆளாகக் கூடாதே என்ற நோக்கத்தோடு செட்டியார் அவ்விதம் கூறிவிட்டார். என்றாலும் மன்னர்முன் சொன்ன அவரது வாக்கு பொய்யாகிவிடக் கூடாது என்பதற்காக, இராமசாமிசெட்டியார் அவர்கள்

அன்று முதல் தாம்பூலத்திற்கு சுண்ணாம்பைப் பயன்படுத்துவதில்லை. மேலும், மன்னர் முன்பு "நாங்கள்" என்று பன்மையாகக் கூறிய காரணத்தினால் அவரது புதல்வர்களும் அவர்களுக்குப்பின் அன்னாரது பேரன்களும் இன்று வரை தாம்பூலத்திற்குச் சுண்ணாம்பைப் பயன்படுத்துவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்ச்சி நமக்கு திருநீலகண்டநாயனார் வரலாற்றை நினைவு படுத்துகிறது. திருநீலகண்டர் பரத்தையர் பால் சார்ந்துஇருந்து தம் இல்லம் வந்தபோது அவரது மனைவியார் கோபம் கொள்ள, அவரை அணைத்து சமாதானம் செய்ய முயன்றார். அப்போது அவர் மனைவி "எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்" என்று இறைவன் மீது ஆணையிட்டுச் சொன்னார். திருநீலகண்டத்தின் பால் பற்றுக் கொண்ட திருநீலகண்ட நாயனார்" எம்மை" என்று அந்த அம்மமையார் பன்மையாகச் சொன்னதால் "மாதர் தம்மை மனத்தினாலும் தீண்டேன்" என்று ஆயுள் பரியந்தம் வாழ்ந்து வந்தார் என்பது பெரியபுராணம் குறிப்பிடும் செய்தி. அதேபோல் " நாங்கள்" என்று இராமசாமி செட்டியார் பன்மையில் கூறியதால் அது முதல் அவரது பரம்பரையினர் இன்றளவும் தமது முன்னோரது வாக்கினை மெய்மைப்படுத்த சுண்ணாம்பு சேர்க்காமல் தாம்பூலம் தரித்து வருவது அருமை.

செட்டி செட்டியார் :

நகரத்தார்கள் முன்பு "செட்டி" என்று தான் அழைக்கப்பட்டனர். தேவகோட்டை ஏ.எல்.ஏ.ஆர் இராமசாமிச்செட்டியார் இராமநாதபுரம், சிவகங்கை மன்னகர்களுடன் நெருங்கிப் பழகி ஜமீன்தாராக ஆன காலமுதல் "செட்டி" என்பதோடு 'ஆர்' விகுதி சேர்க்கப்பெற்று "செட்டியார்" என்று மரியதையுடன் அழைக்கப்பட்டனர். அது முதல் அனைத்து நகரத்தார்களும் 'செட்டியார்கள்' என்று அழைக்கப்பெற்றனர்.

பாஸ்கர விலாசம்:

ஜமீன்தார் குடும்பத்தில் நடந்த ஒரு திருமணத்திற்கு தேவகோட்டைக்கு மன்னர் பாஸ்கர சேதுபதி வருவதாக இருந்தது. தேவகோட்டையில் மன்னர் தங்குவதற்காக ஜமீன்தார் குடும்பத்தினர் ஒரு பங்களாவை நிர்மானித்தனர். அந்த பங்களாவிற்குப் "பாஸ்கர விலாசம்" என்ற பெயர் சூட்டப்பட்டு, இன்றும் அந்தப் பெயரிலேயே

அந்த மாளிகை அழைக்கப்பெறுகிறது.

திருக்கோயில் திருப்பணிகளில் சேதுபதிகளும் நகரத்தார்களும் :

இராமநாதபுரம் சேதுபதிகளுடனும் சிவகங்கை மன்னர்களுடனும் இணைந்து தேவகோட்டை ஜமின்தார் குடும்பத்தினர் பல கோயில் திருப்பணிகளைச் செய்துள்ளனர். அவற்றுள் உப்பூர், ஆவுடையார் கோவில், காளையார்கோவில், இராமேசுவரம் கோவில் திருப்பணிகள் சிறப்பானவை. இது தவிர ஜமீன்தார் குடும்பத்தினர் வைகல், கொடுமுடி ஆகிய தலங்களிலும் திருப்பணிகள் செய்துள்ளனர். மருது பாண்டியருக்கும் ஆங்கிலேயருக்கும் நடந்த சண்டையில் பாழ்பட்டுக்கிடந்த காளையார்கோவிலை மீண்டும் மக்கள் வசிக்கும் பகுதியாக உருவாக்கியவர்கள் ஜமீன்தார் குடும்பத்தினர்.

இராமேசுவரம்

சேதுபதிகள் இராமேசுவரம் கோயிலின் பெரும்பகுதிக் கட்டுமானத்தை அமைத்தவர்கள். பல நூற்றாண்டுகளாகப் பொன்னையும் பொருளயும் இக்கோயிலுக்கு வாரி வழங்கியவர்கள், அன்றாட பூஜை முதல் ஆண்டு திருவிழாக்கள் வரையிலான செலவுகளுக்கு உடலாக(ஆதாரமாக) எழுதிய கிராமங்களை சர்வமான்யமாக வழங்கி உள்ளனர். இராமநாத சுவாமியையே நினைத்து வாழ்ந்து வந்தவர்கள். தாங்கள் மட்டும் இராமேசுவரம் இறைவனை வழிபடுவதோடு அமையாது இராமநாதரை வழிபட வரும் பக்தர்களுக்கு உணவு, உறையுள், ஆகிய வசதிகளையும் பாதுகாப்புக்களையும் செய்து வருபவர்கள்: ‘’’சேதுகாவலர்கள்’’ என வரலாறு போற்ற விளங்கினார்கள்.

இடையில், இராமேசுவரம் கோயிலின் நிர்வாகம் 1880ஆம் ஆண்டளவில் பண்டாரத்தினரின் கையில் இருந்தது.சேதுபதிகள் குடும்பத்தில் ஆண்வாரிசுகள் உரிய வயது அடையாதவர்களாக இருந்த காரணத்தினால் அங்கு மன்னரது மனைவிகளே சமஸ்தானத்தை பரிபாலனம் செய்து வந்தனர். இக்காரணத்தால் சேதுபதிகளுக்கு கோயில் நிர்வாகத்தில் நேரடியான கண்காணிப்பில் குறைவு ஏற்பட்டது. இச்செய்தியை 20.5.1893 அன்று பாஸ்கர சேதுபதி ஆதங்கத்துடன் எழுதிய நாட்குறிப்புத் தெரிவிக்கிறது. “ஜில்லா ஜட்ஜ் டமர்கே துரையிடமிருந்து அதிகாலையில் ஒரு தகவல் வந்தது. திருஞான பண்டார சந்நிதி அவர்கள் லீவு எடுத்திருப்பதால் அவர்களுக்குப்

பதிலாக இராமேசுவரம் தேவஸ்தான மேனேஜராக என்னை தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருப்பதாகச் செய்தி வந்தது. இது எனக்கும் இராமநாதபுரம் சமஸ்தானத்தின் கௌரவத்தில் அக்கறை உள்ள அனைவருக்கும் இந்த ஏற்பாடு மகிழ்ச்சியைத் தருகிறது. இராமேசுவரம் கோயிலும் இராமநாதபுரம் சமஸ்தானமும் இணைந்தும் பிணைந்தும் உள்ளன. கடந்த 150 ஆண்டுகளாக என் முன்னோர்கள் பெயரளவில் மட்டும் சேதுபதிகளாக இருந்திருக்கின்றனர். உண்மையான சேது காவலர்களாக இல்லாதது அவர்களுடைய துரதிருஷ்டமே. இராமநாதசுவாமி கிருபையால் 150 ஆண்டுகளுக்கு முன் இருந்தது போல சேதுபதிகள் இந்த தேவஸ்தானத்தின் பரம்பரை டிரஸ்டிகளாக ஆகும் பெருமை எனது வாழ்நாளில் கிட்ட இறைவன் அருள் பாலிக்கட்டும் “

மன்னர் பாஸ்கர சேதுபதி விரும்பிய வண்ணம் அவர் காலத்திலேயே இராமேசுவரம் திருக்கோயில் சேதுபதிகள் நிர்வாகத்தின் கீழ் வந்தது. பண்டாரத்திடமிருந்து கோயிலை மீட்டதில் முக்கியப் பங்கு வகித்தவர் ஏ.எல்.ஏஆர் இராமசாமிச் செட்டியாரின் மகனார் அருணாசலம் செட்டியார் ஆவார். இராமேசுவரம் கோயிலுக்கென்று ஒரு ‘ஸ்கீம்’(திருப்பணித் திட்டம்) ஏற்படுத்தவும் இவரே காரணமாக இருந்தார். (தேவஸ்தான நிர்வாகத்திற்கு ஒரு ‘ஸ்கீம்’ ஏற்பட வேண்டுமென்று ஸர் பி. எஸ். சிவசாமி ஐயர் இராமநாதபுரம் சப்கோர்ட் ஓ.எஸ். 323/1920 நம்பரில் ஸ்கீம் சூட் போட்டு 1913ல் டிகிரி ஆயிற்று) அதன் தொடர்பாக சேதுபதிகளுடன் இணைந்து இராமேசுவரம் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் பரம்பரை டிரஸ்டி உரிமையை நீதிமன்றம் ஜமீன்தார் குடும்பத்திற்கும் வழங்கியது.

இராமேசுவரம் கோயிலில் சுவாமி, அம்பாள் முதற் பிரகாரம், இரண்டாம் பிரகாரத்தின் ஒரு பகுதி கீழ ராஜகோபுரத்தின் மேற்பகுதி ஆகியவற்றை தேவகோட்டை ஜமீன்தார் குடும்பத்தினர் திருப்பணி செய்தனர். கோயில் திருப்பணிக்கு வேண்டிய கற்கள் அம்பாசமுத்திரத்திலிருந்து கொண்டு வரப்பட்டன. புகைவண்டி வசதி இல்லாத அக்காலத்தில் மண்டபம் மரைக்காயர் துணையாக இருந்து “இராமநாதர்” “பர்வதவர்த்தினி “ என்ற பெயருடைய தோணிகள் மூலம் கற்களைக் கொண்டு வந்து இராமேசுவரத்திற்கு சேர்த்து உதவினார். மத நல்லினத்திற்கு இந்நிகழ்ச்சி சிறந்ததொரு எடுத்துக்காட்டாக உள்ளது.

ஜமீன்தார் குடும்பத்தாரோடு ஏனைய நகரத்தார்களும் இக்கோயில் திருப்பணியில் பங்கு கொண்டனர்.சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பே நகரத்தரார்கள் ரூபாய் ஐந்து இலட்சம் வழங்க, ஜமீன்தார் குரும்பத்தினர் ரூபாய் இருபது லட்சம் செலவு செய்து ஆக 25/ இலட்ச ரூபாய் செலவில் அந்த திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டன. (இந்து அறநிலையத் துறையின் முன்னாள் ஆணையர் உத்தண்டராமபிள்ளை எழுதியுள்ள, "ஸ்ரீ இராமேசுவரம் தனுஷ்கோடி வரலாறு " என்ற நூலில் 35/36 ஆம் பக்கங்களில் இராமேசுவரம் கோயிலுக்கு நகரத்தார் செய்த திருப்பணி விவரம் குறிக்கப்பட்டுள்ளது).

நகரத்தார்கள் தனுஷ்கோடியிலும் இராமேசுவரத்திலும் யாத்ரிகர்களின் பயன்பாட்டிற்கு பல சத்திரங்களை நிர்மானித்தனர். தீர்த்தயாத்திரை மேற்கொண்ட பாஸ்கர சேதுபதி தனுஷ்கோடி நகரத்தார் சந்திரத்தில் தங்கி இருந்ததாக அவரது (20.8.1893) நாட்குறிப்பில் பதிவு செய்து இருக்கிறார். (20.08.1893 நாட்குறிப்பு ரூ "தனுஷ்கோடியில் உள்ள செட்டி சத்திரத்துக்குப் போய்ச் சேர்ந்தோம்") தனுஷ்கோடிக்கு தீர்த்தமாட வருகிறவர்கள் நலம் கருதி தேவகோட்டை வீர.ராம.வீர.லெ. குடும்பத்தார் சுமார் 225 ஆண்டுகளுக்கு முன்பு தனுஷ்கோடியில் ஒரு சத்திரத்தை தோற்றுவித்தனர்.

இராமேஸ்வரத்திலுள்ள கண்டனூர் சி.ராம.சொ. குடும்பத்தாரால் கட்டப்பட்ட 'சதாவிருத்தி சத்திரம்' இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

இராமேசுவரம் செல்லும் பயணிகளின் நலம் கருதி காரைக்குடியில் கீழைச் சத்திரம் மேலைச் சத்திரம் ஆகிய இரு சத்திரங்கள் காரைக்குடி நகரத்தாரால் தோற்றுவிக்கப்பட்டன.


இரமேசுவரத்திலுள்ள கீழத்தெரு நந்தவனம், கோயில் தெற்கு நந்தவனம், கோயில் வடக்கு நந்தவனம் ஆகிய நந்தவனங்களையும் துவாதசி மடம் பேன்றவன்றையும் ஏற்படுத்தியவர்கள் நகரத்தார்கள். மேலும் நகரத்தார்கள் பலர் இராமேசுவரத்தில் தேவஸ்தான திட்டத்திற்கு உட்பட்டு காட்டேஜ்கள் கட்ட நன்கொடை நல்கி உள்ளனர்.

காஞ்சிகாமகோடி சங்கரமடம் :

இராமேசுவரத்திலுள்ள இந்த மடத்தில் நித்தியப்படி பூசை படித்தரச் செலவிற்காக நகரத்தார்கள் நன்கொடை வழங்க அறக்கட்டளை ஏற்படுத்தி ஒன்பது கோயில் நகரத்தார்களுக்கு ஒன்பது பிரதிநிதிகளும், சங்கரமடத்திற்கு ஒரு பிரதிநிதியுமாக மொத்தம் பத்துப்பேர் கொண்ட குழு அமைக்கப்பெற்றுக் செயலாற்றி வருகிறது.

உப்பூர் :

இராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த உப்பூர் வெயிலுகந்த விநாயகர் கோயில், தேவகோட்டை ஜமீன்தார் குடும்பத்தாரால் திருப்பணி செய்யப்பட்டது. அக்குடும்பத்தினரின் உருவச் சிலைகளும் பாஸ்கர சேதுபதியின் உருவச் சிலையும் அக்கோயிலிலுள்ள தூண்களில் செதுக்கப்பட்டுள்ளன. அங்கு ஒரு அன்னசத்திரத்தையும் ஜமீன்தார் குடும்பத்தினர் கட்டியுள்ளனர்.





நன்றி சேதுராமன் குமரப்பன்

ஜமீன்தார் சோம. நாராயணன் செட்டியார் அவர்கள் தம்முடைய அறுபதாம் ஆண்டு நிறைவின் போது, நகரத்தார் வழக்கப்படி சாந்தி

செய்து கொள்ளாமல் அதற்குப் பதிலாக திருமதி இந்திராணி நாச்சியாரின் அனுமதியுடன் உப்பூர் விநாயகருக்கு பெருஞ்சாந்தி விழா எடுத்துத் தானும் மகிழ்ந்து “யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றபடி பக்தர்களையும் மகிழ்வித்துள்ளார்கள்.

நான்காவது தமிழ்ச்சங்கம்:

வள்ளல் பாண்டித்துரை தேவர் 1901.இல் மதுரையில் நான்காவது தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்தார். அவருக்கு பாஸ்கர சேதுபதி பல்லாற்றானும் உதவினார். நகரத்தார் பெருமக்கள் பலரும் இச்சங்கத்திற்குப் பொருளுதவி செய்துள்ளனர்

1919இல் சேலம் பகாலு நாயிடு அவர்கள் தாம் எழுதிய “ தக்ஷிண இந்திய சரித்திரம்” என்ற நூலில் பொருளுதவி செய்த நகரத்தார்களின் பெயர்களையும்,அவர்கள் கொடுத்த தொகைகளைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்கள்.

சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்ட நகரத்தார்கள், சைவமும் தமிழும் தழைக்கத் தொண்டு செய்த சேதுபதிகளுக்குத் தோள் கொடுத்து சேதுபதிகளோடு வரலாற்றில் நிலைத்த இடம் பெற்றுள்ளார்கள்.

இக்கட்டுரை எழுத உதவியர்களும், உதவிய நூல்களும் :

1.தேவகோட்டை ஜமீன்தார் சோம. நாரயணன் செட்டியார் அவர்கள் நேர்காணல் போது அளித்த தகவல்கள்.

2.கண்டனூர் சொக்குச் செட்டியாரவர்கள் (இராமேசுவரம் சதாவிருததி சத்திரத்தின் அறங்காவலர்) நேர்காணலின் போது அளித்த தகவல்கள்.

நூல்கள்:

1.மன்னர் பாஸ்கர சேதுபதி: டாக்டர் எஸ். எம். கமால்,இராமநாதபுரம்

2. நகரத்தார்குரல்: நவம்பர் 1992 (தேவகோட்டை ஜமீன்தார் ஏ.எல்.ஏ.ஆர் இராமசாமிச் செட்டியார் பற்றிய சிறப்பு மலர்.

3. இராமேசுவரம் கும்பாபிடேக மலர்(5.12.1975) (பதிப்பாசிரியர் சோமலே)

4. ‘ தக்ஷிண இந்திய சரித்திரம்‘ சேலம் பகாலு நாயுடு (1919)

8. நகரத்தார்களும் புதுக்கோட்டைத் தொண்டைமான் மன்னர்களும்

“புதுக்கோட்டைத் தொண்டைமான் அரசு” தோன்றிய காலகட்டத்தில் (17 ஆம் நூற்றாண்டு) நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் எனப்படும் நகரத்தார்கள், பாண்டிய நாட்டு வட எல்லையான வெள்ளாற்றுக்குத் தெற்கே வாழ்ந்தனர். வெள்ளாற்றுக்குத் தெற்கே அவர்கள் வசிக்கின்ற பகுதிக்குச் “செட்டிநாடு” என்று பெயர்.செட்டிநாட்டு எல்லை சொல்ல வந்த நகரத்தார் மரபைச் சேர்ந்த வரகவியான பாடுவார் முத்தப்பச் செட்டியார்,

“வெள்ளாறது வடக்காம் மேற்குப் பிரான்மலையாம்
தெள்ளார் புனல்வையை தெற்காகும் ஒள்ளியசீர்
எட்டிக்கடல் கிழக்காம் இஃதன்றோ நாட்டரண்சேர்
செட்டிநாட்டு எல்லையெனச் செப்பு”. என்று பாடுகிறார்.

வெள்ளாற்றுக்குத் தெற்கே நகரத்தார்கள் வசிக்கும் ஊர்கள் இன்று புதுக்கோட்டை மாவட்டத்திலும் சிவகங்கை மாவட்டத்திலுமாக உள்ளன. இப்பகுதியில் பல்வேறு ஊர்களில் வசித்த நகரத்தார்கள் பிறகு 96 ஊர் என வரையறைப்படுத்திக் கொண்டனர். தற்போது 74 ஊர்களில் மட்டுமே வசிக்கிறார்கள்.

அரிமளம், இராங்கியம், இராயவரம், கடியாபட்டி கீழச்சிவல்பட்டி, குழிபிறை, கொப்பனாபட்டி, கோனாபட்டு, தேனிபட்டி, நச்சாந்துபட்டி, நெற்குப்பை, பனையப்பட்டி, பூலாங்குறிச்சி, பொன் புதுப்பட்டி, பொன்னமராபதி, மகிபாலன்பட்டி, மிதிலைப் பட்டி, மேலைச்சிவல்புரி, வலையபட்டி, விராமதி விரையாச்சிலை, வி.லெட்சுமிபுரம், வேகுபட்டி, வேந்தன்பட்டி ஆகிய ஊர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவை. மற்றவை சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவை.

நகரத்தார்கள் 18,19 ஆம் நூற்றாண்டுகளில், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பர்மா, இலங்கை, மலேயா, சிங்கப்பூர், இந்தோசீனா போன்ற

கீழ்த்திசை நாடுகளிலும், உள்நாட்டில் பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களிலும் வணிகத்தொழிலிலும் வட்டித்தொழிலிலும் ஈடுபட்டுப் பெரும்பொருள் ஈட்டினர்.

தாங்கள் வசித்த பகுதிகளில் அரண்மனை போன்ற பெரிய பெரிய மாடமாளிகைகளைக் கட்டிக்கொண்டனர், அக்காலக்கட்டத்தில் புதுக்கோட்டை மன்னர்களும், இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களும் நகரத்தார்களுக்கு ஆதரவாக இருந்தனர்.

புதுக்கோட்டை மன்னர்ளுக்கும் நகரத்தார்களுக்கும் இடையே நல்லுறவு இருந்தது. புதுக்கோட்டைச் சீமையில் நகரத்தார்களது கல்வெட்டுக்கள் பல கிடைக்கின்றன.

பழனி அறப்பட்டயங்கள் :

டாக்டர் வ.சுப.மாணிக்கனார் பதிப்பித்த ‘நகரத்தார் பழனி அறப்பட்டயங்கள்’ என்னும் நூலில் கடந்த 400 ஆண்டுகளாகப் பழனித்தலத்திற்கும் நகரத்தார்களுக்கும் இடையே உள்ள தொடர்பு கூறப்படுகின்றது. (அதைக் குறித்த ஒலைச்சுவடிகளை, நெற்குப்பை கு.பழ.சு.பழ. சுப்பிரமணியன் செட்டியார் வீட்டில் கட்டுரையாசிரியர் பார்த்திருக்கிறார்.) அப்பட்டயங்களில் பாண்டியர், சோழர், மதுரை நாயக்கர், சிவகங்கைச் சீமை மருதுபாண்டியர்கள், புதுக்கோட்டைத் தொண்டைமான்கள் முதலியோரைப் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. பழனி முருகன்மீது நகரத்தார்களுக்குள்ள ஈடுபாடு, அவர்கள் பாதயாத்திரையாக பழனித்தலத்துக்குச் சென்ற வரலாறு, முருகன் அருளால் அவர்கள் செய்த அற்புதச் செயல்கள், அதைக் கண்டு வியந்த அரசர்கள் அவர்களுக்குச் செய்த சிறப்புக்கள் ஆகியவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

அப்பட்டயங்களுள் ஏழாவதாக இடம் பெறுவது பழனி அன்னதான மடத்தைப் பற்றிய சாசனம்.பட்டயத்தின் காலம் கி.பி 1805 (சாலிவாகனம்1727 கலி 4906). நகரத்தார்களின் ஒன்பது கோயில் பிரிவுகளுள் ஒன்றான ‘பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்தவரும், மேலைச்சிவப்பட்டி ஊரினருமான முத்தப்பன் என்பவருக்கு

பழனியாண்டவருடைய அருள்வந்த செய்தியும், புதுக்கோட்டைத் தொண்டைமான் அரசர் (விஜயரகுநாத தொண்டைமானாக இருக்கலாம்) முத்தப்பன் வீட்டிற்குவந்து நினைத்த காரியத்தைக் கேட்டு மகிழ்ந்து சால்வை முதலியன கொடுத்த செய்தியும், முத்தப்பன் கேட்டுக்கொண்டபடி கோவில் வீட்டுக்கு தாமிரவேல் செய்து கொடுத்த செய்தியும் இப்பட்டயத்தில் சொல்லப்பட்டுள்ளது.

மேலும் நேமங்கோவிலைச் சேர்ந்த பழனியப்பன் பழனிக்கோவிலுக்குக் காவடி எடுத்துவரும்போது தொண்டைமான் கொடுத்த வேலாயுதத்தையும் வைத்துப் பூசை செய்துவரும்படி தொண்டைமான் அரசர் சொல்லிய செய்தியும், அதனைச் சொல்வதற்காக நேமங்கோவில் பழனியப்பனை அரண்மனைக்கு அழைத்துவந்து மரியாதை செய்த செய்தியும் முக்கியச் செய்தியாக இப்பட்டயத்தில் இடம்பெற்றுள்ளன.

இராமச்சந்திர தொண்டைமானும் திவான் சேஷையாவும் :

இராமச்சந்திர தொண்டைமான் காலமும் (18391886) திவான் சேஷையா காலமும் (18781894) நகரத்தார்களுக்கும் புதுக்கோட்டை மன்னர்களுக்கும் நெருங்கிய உறவு மலர்ந்த காலம் எனலாம்.

கடியாபட்டியைச் சேர்ந்த தீ.நா. நாச்சியப்ப செட்டியார் (1841 1921) 1907ல் பலலட்சம் ரூபாய் செலவில் பாடல்பெற்ற தலமான திருப்பாதிரிப்புலியூர் கோவிலை பெரும் பொருட்செலவில் திருப்பணி செய்தவர். காலத்திற்கேற்ற பலதிருப்பணிகளைச் செய்தவர் கடியாபட்டியைச் சேர்ந்த கானப்பேட்டையிலுள்ளது, ‘பூமிசுவரசுவாமி திருக்கோவில்’, புதுக்கோட்டை இராமச்சந்திர மகாராஜாவிற்கு முன்னாளில் கண்தெரியாதிருந்தமை பற்றிப் பிராமணர்களுக்குத் தர்மசாசனமாய்க் கொடுக்கப்பட்ட பூமியுடன் சேர்ந்தது அக்கோவில். தீ.நா.நாச்சியப்ப செட்டியாரின் சகோதரர் மகன் முத்துராமையா என்பவர், அரசர் அனுமதியுடன் இக்கோயிலை ஒப்புக்கொண்டு, நகரத்தாரின் உதவியுடன் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்துள்ளார். (இராமச்சந்திரபுரம் தீ.நா. நாச்சியப்ப செட்டியார் “ ஆசிரியர்

தி.மு.நாராயண சாமி பிள்ளை வி.கி.,ஙி.லி, விலி.சி1925 பக்கம் 62)

நாச்சியப்ப செட்டியார் பல தர்ம காரியங்களை தாமே முன்வந்து செய்துள்ளார். புதுக்கோட்டையிலிருந்து திருமயம் போகும் இராஜபாட்டையிலுள்ள கீழ்த்தேமுத்துப்பட்டியில், ஜயலட்சுமி விலாஸ் என்னும் “தீர்த்தான் செட்டியார் சத்திரம்“ என்ற பெயரில் ஒரு சத்திரம்கட்டி வழிப்போக்கர்களுக்கும், சாதுக்களுக்கும் உணவு, நீர்மோர் ஆகியன கிடைக்க ஏற்பாடுசெய்தார். வண்டிமாடுகள், குதிரைகள் போன்ற கால்நடைகளுக்கு அனுகூலமாக நீர்த்தொட்டி போன்ற பலவசதிகள் செய்தார்.

புதுக்கோட்டை, மஞ்சக்குப்பம், புதுப்பாளையம், திருப்பாதிரிப்புலியூர் முதலிய நகரங்களில் நீர்க்குழாயும், நீர்த்தொட்டியும் ஆங்காங்கு கட்டுவித்தார். புதுக்கோட்டை மன்னர், சென்னை கவர்னர் ஆகியோரே அக்குழாய்களை முதன்முதலில் திறந்து வைத்தார்கள்.பிறகு அவற்றிற்கு வேண்டிய மூலதனம் வைத்து, அதனையும் மேற்படி குழாய்த் தொட்டி வகைகளையும் புதுக்கோட்டை அரசாங்கத்தாரிடமே ஒப்படைத்திருக்கிறார்.

இராமச்சந்திர தொண்டைமான் ஆட்சியில் கடியாபட்டியில் புதிதாக இருபகுதிகள் தோன்றின. மன்னருக்கு மரியாதை செய்யும் எண்ணத்துடன் அந்த இருபகுதிகளுக்கும் மன்னரின் பெயரையே ‘இராமச்சந்திரபுரம்‘, ‘விஸ்வநாதபுரம்‘ எனப் பெயரிட்டு அழைத்தனர். இன்றளவும் அஞ்சலகம், அரசினர் அலுவலகம் எல்லாவற்றிலும் ‘இராமச்சந்திரபுரம் என்ற பெயர்தான் காணப்படுகிறது.

தீ. நா. நாச்சியப்ப செட்டியாரின் மகனார் ‘தர்மபூஷணம்‘ என்று சிறப்பிக்கப்பட்ட தீ.நா. முத்தையா செட்டியார் தம் வாழ்நாளில் 32 இலட்சம் ரூபாய் (இன்று பலகோடி) அறப்பணிகளுக்காகச் செல்லிட்டிருக்கிறார். தமிழ் ஆர்வலரான அவர் 1924இல் “திருவருட்பாவை” பிழையற்ற நல்ல பதிப்பாகப் பதிப்பித்து (அந்நாளில் 30 ரூபாய் அடக்கமுள்ள நூல்) 2000 பிரதிகளை அன்பளிப்பாகக் கொடுத்து, திருவருட்பாவைப் பரப்பியவர். திருமயத்தில் சத்தியமூர்த்தி உயர்நிலைப்பள்ளியை நிறுவியவர்.

புதுக்கோட்டை அரசர் மார்த்தாண்ட வைரவத் தொண்டைமான், தர்மபூஷணம் முத்தையா செட்டியாரவர்களை, ஏதேனும் வழக்குத் தொடர்பானவற்றில் நீதிமன்றத்திற்கு வரவேண்டிய சூழல் ஏற்பட்டால் அவர், நீதிமன்றங்களுக்கு நேரில் வரவேண்டிய அவசியமில்லை என அறிவித்து இவரைச் சிறப்பித்ததோடு, 1913 இல் அவரைத் தம் மேலவை உறுப்பினராகவும் அமர்த்திக் கொண்டார்.

நம்நாடு விடுதலையடைவதற்கு முன்புவரை புதுக்கோட்டை, தனிமன்னராட்சிப் பகுதியாக விளங்கியது. நகரத்தார்கள் வசித்த பல ஊர்கள் புதுக்கோட்டை மன்னராட்சிப் பகுதியில் இருந்தன. பல வரிச் சலுகைகள் வழங்கப்பட்டதாலும், புதுக்கோட்டை தலைநகராக அமைந்ததாலும் நகரத்தார்கள் பலர் புதுக்கோட்டையில் தொழில் தொடங்கினர். இதழ்கள் நடத்தினர். நீண்ட காலமாக இங்குள்ள அரசினர் கலைக்கல்லூரி, மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆகியவை இப்பகுதி நகரத்தார்களுக்கு உயர்கல்வி வாய்ப்பை நல்கின. புதுக்கோட்டையை ஒட்டிய செட்டிநாட்டுப் பகுதியைச் சேர்ந்த நகரத்தார்கள் பலர் புதுக்கோட்டையில் வீடுகள் கட்டிக்கொண்டு குடியேறினர்.

இராயவரம் வெ•மு.குடும்பத்தார் :

இராயவரத்தில் மிகுந்த செல்வாக்கான குடும்பம்; பஞ்சு, பருத்தி வணிகம் செய்தவர்கள். இக்குடும்பத்தாருக்கு ‘செய்கோனில்’ கடை இருந்தது. இராயவரம் சிவன்கோயில் திருப்பணிசெய்தவர்கள். இராயவரத்திலுள்ள பன்னிரெண்டு ஊருணிகளில் பத்து ஊருணியை வெட்டிய குடும்பத்தார். இராயவத்தில் புதுமனையை 108 மனைகளாகச் சதுரித்து நகரத்தார்களை அப்பகுதிகளில் குடியேற்றியவர்கள். திவான் சேஷையா காலத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட புதுக்கோட்டை வீதிகளைப் போலவே, இராயவரத்திலும் வீதிகள் இருக்கும்.

அரிமளம் காட்டிற்கு புதுக்கோட்டை மன்னர் வேட்டைக்கு வரும்போது வெ.முவினர் வீட்டில் தங்குவது வழக்கம், புதுக்கோட்டை ராஜ வீதியில் தெற்குவீதி முனையில் பெரிய இடம் வீடுகட்டிக் கொள்வதற்காக வெ.மு.குடும்பத்தாருக்கும் மன்னர் கொடுத்தார்.

அவர்களும் அங்கு வீடுகட்டிக் கொண்டு, அரசர் வரும்போது பார்த்து உரையாடி மகிழ்வர்.

வெ.மு.குடும்பத்தார் வீட்டுத் திருமணத்தின் போது, மாப்பிள்ளைக்கும் பெண்ணிற்கும் அலங்காரம் செய்ய அரண்மனையிலிருந்து ஆள்வருவார்களாம். அதுபோல அரண்மனை வாத்தியக்குழுவும் (ஙிணீஸிபீ) வரும். திருமணத்தின்போது மாப்பிள்ளை குதிரையேறி நகர்வலம் வருதல் நகரத்தார் மரபு. அதற்கு அரண்மனைக் குதிரையை அரச குடும்பத்தினர் அனுப்பிவைப்பார்கள்.

இராமச்சந்திர தொண்டைமான் காலத்தில் நாட்டில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டதாலும், அரசாங்கச் செலவு அதிகமாக இருந்ததாலும் பொருளாதாரச் சரிவு ஏற்பட்டது. அதுசமயம் வெ.மு. குடும்பத்தார் அரசகுடும்பத்துக்கு உதவியிருக்கிறார்கள். அரசருக்கும் வெ.மு. குடும்பத்தாருக்குமிடையே கொடுக்கல் வாங்கல் இருந்திருக்கிறது. இராமச்சந்திர தொண்டைமான் 7.2.1870 முதல் 14.10.1873 முடிய ஆறுதவணைகளில் மொத்தம் 1,48,439 ருபாய் 50 காசுகள் வெண்ணிலைக் கடனாக (ஈடு காட்டாது வாங்கும் கடனாக). வெ.முத்துக்கருப்பஞ்செட்டியாரிடம் பணம் வாங்கியிருக்கிறார். அதற்குக் கடன் பத்திரம் எழுதிக்கொடுத்து மன்னர் கையெழுத்திட்டிருக்கிறார். (இத்தகவல்களையெல்லாம் அக்குடும்பத்துப் பெரியவர், கட்டுரையாசிரியரிடம் நேர்காணலின்போது கூறியதாகும்)

வெ.மு.குடும்பத்தாருக்கும் அரச குடும்பத்தாருக்கும் இடையே இருந்த உறவுமுறையைப் பாராட்டி, இருவரும் பங்காளிகள் என்று சொல்லி திவான் சேஷையா கடனைத் தள்ளுபடி செய்யச் சொன்னார். அதற்காகச் சில மரியாதைகளை புதுக்கோட்டை அரசு, வெ.மு குடும்பத்தாருக்குக் கொடுத்திருக்கிறது.


நச்சாந்துபட்டி பெ.ராம முடும்பத்தார் :

நச்சாந்துபட்டி பெ.ராம. குடும்பத்தாருக்கும், புதுக்கோட்டை அரசர்க்குமிடையே நல்ல தொடர்பு இருந்தது. பெ.ராம. குடும்பத்தார் பாடல்பெற்ற தலமான “திருக்கொள்ளம் புதூர்” கோவில் திருப்பணியை

மேற்கொள்வதற்கு முன்பு, புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த பேரையூர் தலத்தைத் திருப்பணி செய்யுமாறு அரசரே கேட்டுக்கொண்டதாக பெ.ராம குடும்பத் திருப்பணிகள் ‘ என்ற நூலின்மூலம் அறிகிறோம்.

இவ்வாறாக, புக்கோட்டைமன்னர்களுக்கும் மன்னர்பின்னோரான நகரத்தார்களுக்குமிடையே நல்ல நட்பும், இணக்கமும் இருந்ததை இக்கட்டுரை வாயிலாக அறிகிறோம்.

9.பழனிப் பாதயாத்திரையும் அரண்மனைப் பொங்கலாரும்



முருகன் அருளைப் பெற வேண்டி அவனைக் காண விரும்பி அவன் கோவில் கொண்டிருக்கும் தலங்களுக்குக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க, யாத்திரைப் பிரியனான அவனை நோக்கிப் பாதயாத்திரை மேற்கொண்டால் வேண்டிய வேண்டியாங்கு பெறலாம் என்கிறார் நக்கீரர்.

'செலவுநீ நயந்தனையாயின் இன்னே

பெறுதிநீ முன்னிய வினையே" (திருமுருகாற்றுப்படை)

என்பது அவர்தம் வாக்கு.

நகரத்தார்களும் முருகன் அருளைப் பெறவேண்டி ஆண்டு தோறும் தைமாதம் பழனித் தலத்திற்கும், சித்திரை மாதம் வைத்தீசுவரன் கோவிலுக்கும், பிறகு அறுபடை வீடுகளுக்கும் பாதயாத்திரையாகச் சென்று முருகனை வழிபட்டு வருகின்றனர். பழனிப் பாதயாத்திரையை வழிநடத்திச் செல்பவர்கள் முருகனின் அருளைப் பரிபூரணமாகப் பெற்ற மூன்று நகரத்தார் குருமார்கள் ஆவர். மூவருள் ஒருவரான 'அரண்மனைப் பொங்கல் ஐயா வீட்டார்' என்று அழைக்கப்படும் குடும்பத்தினர் காரைக்குடியைச் சேர்ந்தவர்கள். ஆயக்குடி ஜமீன் அரண்மனையிலிருந்து பொங்கல் பானை அனுப்பி வந்த காரணத்தால்

அரண்மனைப் பொங்கல் ஐயா வீடு' என்ற பெயர் இவர்கள் குடும்பத்திற்கு ஏற்பட்டது. இவர்கள் வயிரவன் கோவில் பெரிய வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

இவர்களின் முன்னோரான வயிரவன் கோவில் வேலப்ப செட்டி வயிரவ ஐயாவிற்கு முருகன் நேரில் பிரசன்னமாகி இருக்கிறார். இச்செய்தியைப் பழனிப் பாதயாத்திரை தொடர்பான ஓலை ஆவணங்கள் மூலம் அறிகிறோம்.

400 ஆண்டுகள் பழமையான, நகரத்தார் பழனிப் பாதயாத்திரை தொடர்பான (பழனி தெய்வநாயக பண்டாரத்துக் குடும்பத்தாரிடமும். நெற்குப்பை நேமங் கோவில் குப்பாப்பிச்சன் செட்டி குமரப்பையா வழிவந்தோரிடமும் உள்ள) ஓலை ஆவணங்களில் சாலிவாகன சகாப்தம் 1710, கலியாண்டு 4889, பிலவங்க வருஷம் சித்திரை மாதம் 15ஆம் தேதி பூசநட்சத்திரத்தன்று அதாவது கி.பி. 1788இல் எழுதப்பட்ட ஓலை ஆவணங்களில் மூன்று குருமார்களைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. பழனி தெய்வ நாயகப் பண்டாரத்து மனையில் முன்பிருந்த ஆறுகால் கூரைக் கூடத்தைக் கல் திருப்பணியாக்கி, அதாவது ஆறுகால் சவுக்கையாக்கிப் பிறகு இடம் போதாமையால் சவுக்கையைச் சுற்றி 78 கால் மண்டபமும், வளமையான தெற்கு வாசலும் கட்டியிருக்கிறார்கள். இந்த மண்டபம் கட்டும் பொறுப்பை வைரவன் கோவில் வேலப்ப செட்டி வயிரவனிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அதைப் பற்றிக் கூறும் போதுதான் அரண்மனைப் பொங்கலாரின் முன்னோருக்கு முருகன் பிரசன்னமான செய்தியும் கட்டிடம் கட்ட முருகன் உதவிய செய்தியும் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

“வைரவன் கோவில் வேலப்ப செட்டி வயிரவனுக்கு கல் திருப்பணி அன்னதான மடத்தில் நகரத்தார்கள் கூடி, பார்க்கும்படி வைரவனைச் சொன்னதில் வைரவனும் மடத்துக்கு வானம் தோண்டி வானக்கல்லு நாளைய தினம் இறக்க வேணுமென்று நாளு வச்சதில் சுவாமி வயிரவனிடம் பிரசன்னமாய் வந்து வானத்துக்கு மொங்கான் போட்டது போறாது என்று சுவாமி சொன்னபடியால் வயிரவனும் நாளைய தினம் கல் இறக்க வேண்டியிருப்பதால் எப்படி சாமி முடியும் என்று கேட்டான். பூமி மட்டத்துக்கு மணலைக் கொட்டி பனிரெண்டு

தண்ணிக்குடமும், மொங்கான் மரத்தையும் வைத்திரு. நாள் பார்த்த நாளில் கல் இறக்கென்று உத்தரவு செய்தார். அதுபோல, சாமான்களும் தயாரித்து வைத்து வைரவனும் இருந்தான். மறுநாள் காலையில் வானங்களைப் பார்க்க ரெண்டு முழம் இறங்கியிருந்தது. அந்த அதிசயங்களையும் நகரத்தார்கள் பார்த்தார்கள். திருப்பணி வேலையில் ரெம்ப சிரத்தையெடுத்துக் கொண்ட படியினாலேயும், பிறாமண போசனம், அகுதி பரதேசிகளுக்கு வடித்துப் போட்டுக் கொண்டு வருகிறபடியினாலேயும் நகரப்பொதுவில் இருபத்தியோரு பொன் வருசம் ஒண்ணுக்குக் குடுக்கிறது. பானக்கமும், சுருட்டும் வைரவன் கரைத்து வைக்கிறது.

இப்படிப் பிரயாசைக்காக இந்த மடவாலயத்தில் நடக்கும் மரியாதைகள் நகரத்தார்கள் அனைவோர்களும் சம்மதித்து முதலாவது ஈசானிய சிவாச்சாரியாருக்கும் ரெண்டாவது திருப்புனல் வாசல் முதன்மை சேனாபதி குருக்கள் சாமிக்கும் மூணாவது மடத்து தெய்வநாயகப் பண்டாரத்து அய்யாவுக்கும் எங்களில் (நகரத்தார்கள்) முதன்மை நேமமான இளநலமுடையான் குமரப்பனுக்கும் இரண்டாவது இரணிக் கோயில் பெ.குட்டயனுக்கும் மூணாவது வயிரவன் கோயில் வேலப்ப செட்டி வைரவனுக்கும் நாலாவது நகரத்தார்களுக்கும் காளாஞ்சி முதலானதும் குடுத்து வருகிறது என்று பேசியிருக்கிறது.”

மேலே குறிப்பிடப்பட்ட வரிகள் மூலம் அரண்மனைப் பொங்கலாரின் முன்னோருக்கு முருகன் நேரில் பிரசன்னமான செய்தியை அறிகிறோம்.

இக்குடும்பத்தினர் ஆண்டு தோறும் ஸ்ரீ பழனியாண்டவர் தைப்பூச விழாவிற்குப் பழனியாண்டவரைத் தரிசனம் செய்ய விருது, வாத்தியம் காவடிகளுடனும் மற்றும் சாதுக்கள் ஆன்மீக அன்பர்களுடனும் காரைக்குடியிலிருந்து பாதயாத்திரையாகப் பிரயாணமாகி, தங்குமிடங்கள் தோறும் குன்றக்குடி அன்னதான மடத்து வேலை வைத்து நடைபெறும் அபிஷேகம் மற்றும் ஆராதனை களுக்கு வேண்டியது அளித்தும் தினமும் மகேசுவர பூசை நடத்தியும், காவடி எடுப்போர், சாதுக்கள், பாதயாத்திரை அன்பர்கள் மற்றும் பலருக்கும் அன்னம் அளித்தும் பழனிக்கு அனைவரையும் வழிநடத்திச் சென்று ஸ்ரீ பழனியாண்டவரைத் தரிசனம் செய்து, காவடிகள் செலுத்தி

அபிஷேகங்கள் நடத்தி முடித்துத் திரும்பி வருகிறார்கள்.

வருடாவருடம் பழனிக்குப் பாதயாத்திரை புறப்படும் அன்று மதியம் அரண்மனைப் பொங்கலாரின் முன்னோரான ‘வெள்ளைக் குமரப்பய்யா’ சமாதிக்குச் சென்று உத்தரவு பெற்று. மகேசுவர பூசையை அவர்கள் இல்லத்தில் ஆரம்பித்துப் பழனி செல்லும் வழியில் தங்குமிடங்களான மருதிப்பட்டி சமுத்திராபட்டி, வேலாம்பட்டி, செம்மடைப்பட்டி, சத்திரப்பட்டி மற்றும் திரும்புகையில் குன்றக்குடி ஆகிய இடங்களில் மகேசுவர பூசை நடத்தி அன்னதானமும் செய்து வருகிறார்கள். தொடர்ந்து இத்தருமங்கள் அவர்கள் குடும்பத்தினரால் நடத்தப்பட்டு வருகின்றன.

காரைக்குடியில் பெருமாள் கோவில் வடக்கில் அமைந்துள்ள வெள்ளைக் குமரப்பய்யபா சமாதிதயில் ஒவ்வொரு பௌர்ணமியன்றும் அபிஷேக ஆராதனைகள் செய்தும், ஒவ்வொரு வருடமும் கார்த்திகை முதல் சோமவாரத்தன்று பழனி ஆண்டவருக்குச் சிறப்பாகப் பூசைகள் நடத்தி அன்னதானம் செய்தும் வருகிறார்கள். தைப் பூசத்திற்குக் காவடி கட்டுவதற்குப் பதினோரு நாட்கள் முன்பு அரண்மனைப் பொங்கல் இல்லத்தில் கூட்டு வழிபாடு நடைபெறுகிறது.

அழகு முருகன், செட்டி முருகன் என்று நாம் கொண்டாடும் பழநி முருகன் பிரசன்னமாகி அருள்வாக்கு அளித்தது காரைக்குடி அரண்மனைப் பொங்கல் வீட்டாரின் முன்னோரான வைரவன் ஐயாவிற்கு என்பது நகரத்தார்களுக்குப் பெருமையளிக்கும் செய்தியாகும். முருகன் அருளுக்கு பாத்திரமானவர்கள் நகரத்தார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

‘யாம் இரப்பவை

பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்

அருளும் அன்பும் அறனும் மூன்றும்

உருள்இணர்க் கடம்பின் ஒலி தாரோயே’

பரிபாடல்

10. நகரத்தார் சிற்பமரபு (அல்லது) செட்டிநாட்டுச் சிற்பப்பாணி

சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்ட நகரத்தார்கள் கோவிலோடு தங்களைப் பின்னிப் பிணைத்துக் கொண்டவர்கள். 'இந்து மதத்திற்குக் கோட்டைக் காப்பு வீரர் போன்றவர்கள் என்று காஞ்சிப் பெரியவரால் பாராட்டப்பெற்ற நகரத்தார்களால்தான் இன்று உலகமெங்கும் இந்து சமயத்தின் பெருமை விளங்குகின்றது என்பதில் ஐயமில்லை.

இந்து சமயத்தின் ஒருகூறுதான் இறைவன் உறைகின்ற ஆலயங்கள். தமிழக வரலாற்றில் ஆலயங்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. கோயில்கள் சமுதாய நிலையங்களாகவும் கலைவளர்க்கும் கலைக்கூடங்களாகவும் விளங்குகின்றன. தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் அனைவருமே கோ யில்களைக் கட்டிக் காத்தனர். மன்னர் ஆட்சி முடிந்த பிறகு கடந்த 200 ஆண்டுகளாக மன்னர் பின்னோரான நகரத்தார்கள், பழைய கோயில்களைப் புதுக்கியும், செங்கள் செம்புரான்கல் திருப்பணியாக இருந்தால் கல்திருப்பணி ஆக்கியும், முகமண்டபம் போன்றவை அமைத்து விரிவுபடுத்தியும், மண்டபத் தூண்களிலும் கருவறைச் சுவர்களிலும் அழகிய சிற்பங்களைச் செதுக்கியும் வந்துள்ளனர். மேலும் தங்கள் இல்லங்களையே கட்டிடச் சிற்பக்கலைக் களஞ்சியங்களாக வடித்தும், தமிழகத்தில் தொன்றுதொட்டு வந்த கட்டிடக்கலையும் சிற்பக்கலையும் அழிந்து போகாமல் காத்தனர் என்பது வரலாற்று அடிப்படையில் நினைவுகூரத் தக்கதாகும்.

தமிழகத்தை ஆண்ட ஒவ்வொரு அரச மரபினர் காலத்திலும் ஒவ்வொரு சிற்பமரபு இருந்தது. பல்லவர் சிற்பமரபு, பாண்டியர் சிற்பமரபு, சோழர், விசயநகர மற்றும் சேதுபதி காலச் சிற்பமரபு என்று காணப்படுவதைப்போல நகரத்தார்களுக்கென்றும் ஒரு சிற்பமரபு உண்டு. தமிழக வரலாற்றில் மன்னர்களுக்குப்பிறகு நகரத்தார் இனத்திற்குத்தான் பார்த்தவுடனேயே "செட்டிநாட்டுச் சிற்பப்பாணி" என்று இனங்கண்டு கொள்ளும் வண்ணம் ஒரு தனியான சிற்பமரபு

காணப்படுகிறது. இவர்கள் காலச் சிற்பங்களைக் கட்டிடச் சிற்பங்கள், கற்சிற்பங்கள், செப்புப் படிமங்கள், சுடுமண் சிற்பங்கள், மரச்சிற்பங்கள், வாகனங்கள் என்று பலவாறாகப் பகுத்துக் காணலாம்.

கட்டிடக்கலையும் சிற்பக்கலையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. நகரத்தார்கள் அயல்நாடுகளுக்குச் சென்று பொருளீட்டி, தாங்கள் சென்ற நாடுகளையும் வளப்படுத்தி நம் நாட்டையும் பல்துறையிலும் முன்னேறச் செய்தனர். கோவிலூர் ஆண்டவர், வீரப்ப சுவாமிகள் போன்றோரின் தூண்டுதல்களால் ஏராளமான பாடல்பெற்ற தலங்களைப் புதுக்கினர். மண்டபங்கள் கட்டினர். புதிய சன்னிதிகள் ஏற்படுத்தினர். குடநீராட்டுவிழாச் செய்தனர். தங்கள் நகரக் கோயில்கள் ஒன்பதையும் திருப்பணி செய்து விரிவுபடுத்தினர்.

தமிழகத்தில் மட்டுமல்லாமல் காசி முதலாக பல வடநாட்டுக் கோயில்களும் இவர்களால் திருப்பணி செய்யப்பட்டன. பர்மா, மலேயா, சிலோன் போன்ற அயல்நாடுகளிலும் இன்று இங்கிலாந்து அமெரிக்கா போன்ற நாடுகளிலும் சிவனுக்கும், குகனுக்கும், திருமாலுக்கும் கோயில்கள் எடுத்து, திராவிடச் சிற்பமரபை உலகெங்கும் பரவச் செய்துள்ளனர்.

கட்டிடச் சிற்பங்கள்:

கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், திருச்சுற்று, மண்டபத் தூண்களில் காணப்படும் சிற்பங்கள், கருவறையின் புறச்சுவர்களிலுள்ள அதிட்டானம், தேவகோட்டம், கும்பபஞ்சரம், சுவரிலுள்ள அரைத்தூண்கள், பிரஸ்தரப் பகுதியிலுள்ள கொடுங்கைகள், கூடுகள் ஆகியவற்றின் அமைப்புகள், அவற்றில் வடிக்கப்பட்டுள்ள புடைப்புச் சிற்பங்கள் ஆகியவை நகரத்தார்கள் கட்டிய கோயில்கள் அனைத்திலும் ஒரே மாதிரியாகக் காணப்படுகின்றன. பழைய கட்டிட முறையில் பெரும்பாலும் கருவறைத் திருச்சுற்று மூடப்படாமல்திறந்த வெளியாக இருக்கும். நகரத்தார் பாணியில் திருச்சுற்று மூடப்பட்டிருக்கும். அதேசமயம் காற்றும் வெளிச்சமும் வரத்தக்கவகையில் திருச்சுற்றின் கூரைப்பகுதி கற்களின் இடையே இடைவெளி விட்டு சாளர அமைப்புடன்

கட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். இத்தகைய கட்டுமான முறையை இலுப்பைக்குடி மாத்தூர் ஆகிய கோயில்களைப்பற்றி எழுதிய மா.சந்திரமூர்த்தி 'நகரத்தார் கலை' என்றே குறிப்பிடுகிறார். இராமேசுவரத்தில் உள்ள உலகப்புகழ் பெற்ற பிரகாரத்தைப்போல, திருவாடானைக் கோயிலில் சொக்கட்டான் மண்டபத்தை அமைத்தவர்கள் தேவகோட்டை நகரத்தார்கள்.

தூண் சிற்பங்கள்:

மண்டபங்களிலும் திருச்சுற்றுக்களிலும் உள்ள பெரிய பெரிய தூண்களைச் சிங்கங்களும், யாளிகளும் சுமந்துகொண்டிருப்பதுபோலக் காணப்படும். அத்தூண்களைச் சார்ந்து பல சிறிய வேலைப்பாடுமிக்க தூண்கள் அமைக்கப்பட்டிருக்கும். சிமெண்ட் பூச்சுக்கள் இல்லாத அந்தக்காலத்தில், சிறிதும் இடைவெளி தெரியாவண்ணம் கற்களை ஒன்றோடு ஒன்று பொருத்தியிருக்கும் பாங்கு வியப்பூட்டும் காட்சியாகும். தூண்களில் சைவ வைணவத் தொடர்புடைய சிற்பங்களும், பூவேலைப்பாடுகளும் செதுக்கப்பட்டிருக்கும். நேமங்கோயில், பிள்ளையார்பட்டி, மாத்தூர், இலுப்பைக்குடி, கோவிலூர், வைரவன்கோயில், கோவிலூர் ஆகியவற்றிலுள்ள தூண்சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் சுவாமி சந்நிதி இரண்டாம் பிரகாரத்திலுள்ள நாயக்கர்கால கம்பத்தடி மண்டபத்தை நகரத்தார்கள் பிரித்து, சிற்ப வேலைப்பாடு மிக்க எட்டுத் தூண்கள் தாங்கி நிற்கும் கருங்கல் மண்டபமாக அமைத்தனர். இத்தூண்களில் ஒன்றில் உள்ள மீனாட்சி அம்மன் திருமணக்கோலச் சிற்பம் உலகப்புகழ் பெற்றது.

விசயநகர நாயக்க மன்னர்கள் காலத்தில் தூண்களின் மேலுள்ள போதிகை அமைப்பு தாமரை மொட்டுப்போலக் காணப்படும். இவ்வமைப்பு நகரத்தார் காலத்தில் நன்கு வளர்ச்சியடைந்து வாழைப்பூ வடிவுள்ள புஷ்ப போதிகையாகக் காணப்படுகிறது.

கருவறையின் வெளிச்சுவர்களில் உள்ள கூடுகளின் அமைப்பும் கோவிலின் காலத்தைக் கணிக்க உதவுபவை. இக்கூடுகள் தற்காலத்தில்

மிக எளிமையாக இருக்க, நகரத்தார் பாணிக்கூடுகள் யாளிமுகக் கூடுகளாக அமைந்து கூட்டிற்குள் மிகச்சிறிய அளவில் நுணுக்கமான வேலைப்பாடமைந்த சிற்பங்கள் காணப்படுகின்றன.

பாண்டிநாட்டுச் சிற்பிகள் தாங்கள் ஒரு வேலையைத் தொடங்குமுன்பு, ஆவுடையார் கோயில் கொடுங்கை நீங்கலாக, மற்று எந்தச் சிற்பவேலையும் தங்களால் செய்ய இயலும் என்று எழுதிக் கொடுப்பார்களாம். ஆனால் நகரத்தார்களால் வளர்க்கப்பட்ட சிற்பிகள் வடித்த கோயில் கொடுங்கைகள் அனைத்துமே ஆவுடையார் கோயில் கொடுங்கைகளுக்கு இணையாக சிற்பநுணுக்கத்துடன் காணப்படுகின்றன. மாத்தூர் கோயிலின் கொடுங்கைகளைக் கண்டு வியந்த மா.சந்திரமூர்த்தி அவர்கள், ‘கொடுங்கைகளின் இடையிடையே உட்புறங்களில், மரத்தை ஊடுருவிச் செல்லும் கம்பிகளை ஒத்தும் முருக்குக் கம்பிகளை ஒத்தும் விளங்குகின்ற கல்வேலைப்பாடுகள் பார்ப்போரை வியப்பில் ஆழ்த்துவன” என்கிறார்.

கோயில் மண்டபத்தின் விதானப் பகுதியில் 12 ராசிகளைப் பொறிக்கும் வழக்கம் பழைய சிற்பமுறையானாலும் நேமங்கோயில் விதானத்தில் காணப்படும் இராசிச் சக்கரத்தின் அமைப்பு வினோதமானது. நாம் ஏதாவதொரு திசையின் கோணத்தில் நின்று பார்த்தால் ஒரு ராசியைத் தூணின் போதிகை மறைத்திருக்கும்படியாக அமைத்திருக்கிறார்கள் நேமங்கோயில் சிற்பிகள்.

இவர்கள் காலத்தில் கருவறைத் தேவகோட்டத்தில் உள்ள தெய்வங்களும் வழிபாட்டுக்கு உரியனவாக அமைக்கப்பட்டன. தேவகோட்டம் அமைந்த அதிட்டானப் பகுதியில் உள்ள குமுதப்படை விருத்த குமுதமாக, பூ, மணி ஆகிய வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டது. தெற்கில் தட்சிணாமூர்த்தி உள்ள தேவகோட்டத்திற்குத் தனிக்கவனம் செலுத்தப்பட்டது. தட்சிணாமூர்த்திக்குத் தனி மண்டபம் எடுத்தனர். இம்மண்டபம் வேலைப்பாட்டுடன் கூடியது. இத்தகைய சிற்ப வேலைப்பாடு நிறைந்த மண்டபங்களை மாத்தூர், இலுப்பைக்குடி, தேவகோட்டை நகரச் சிவன்கோயில் ஆகியவற்றில் காணலாம்.

காரைக்குடி நகரச் சிவன்கோயிலில் தெற்கில் கருவறைத் தேவகோட்டம் ஒன்றில் சரபேச மூர்த்தியின் செப்புத் திருமேனி வழிபாட்டில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற சரபேச மூர்த்தியின் செப்புத் திருமேனி ஒன்று (சோழர் காலத்தது) திருப்புவனம் கோயிலில் உள்ளது.

ஒவ்வொருவர் படைப்பிலும் அவ்வக்காலத்துச் சூழல் வெளிப்படும் என்பதற்கேற்ப நகரத்தார்கள் தங்கள் காலச் சூழ்நிலையைப் பிரதிபலிக்கும்



முகமாக, திருச்சுற்று விதானங்களிலும், மண்டப விதானங்களிலும் புடைப்புச் சிற்பங்களாகவும், கருவறை விமானம் கோபுரம் ஆகியவற்றில் சுதைச் சிற்பங்களாகவும், இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பிரதிபலிக்கும் வகையில் காந்தியடிகள், பண்டித நேரு, நேதாஜி, சுதந்திரதேவி போன்றோரின் சிற்பத்தை வடித்துள்ளனர்.

பிற்காலப் பாண்டியர்களின் காலத்தைக் கோபுரக்கலையின் காலம் எனலாம். அவர்களைத் தொடர்ந்து விஜயநகர நாயக்க மன்னர்களும் சேதுபதிகளும் வானளாவிய கோபுரங்களை எழுப்பினர். நகரத்தார்களும் கோபுரக்கலையில் சிறந்து விளங்கினர்.

கோபுரங்கள் :

மதுரை மீனாட்சி அம்மன் வடக்குக் கோபுரம் அமராவதி வயிநாகரம் நாகசுப்பையா அவர்களால் துணிவுடன் கட்டி முடிக்கப்பட்டது. நாற்புறமும் கடலால் சூழ்ந்துள்ள இராமேசுவரத் தீவில் கடல்வழியாகக் கற்களைக் கொண்டுசென்று இராமேசுவரத்துக் கிழக்குக் கோபுரம் இலங்கையில் தெரியும்படியாக உயர்ந்த கோபுரத்தைக் கட்டியவர்கள் தேவகோட்டை ஜமீந்தார் குடும்பத்தார்கள். அண்மையில் தேவகோட்டை

நகரச் சிவன்கோயிலில் புதிதாகக் கட்டப்பட்ட இராஜகோபுரங்கள்வரை நகரத்தார்கள் கட்டிய கோபுரங்கள் எத்துணையோ! இக்கோபுரங்களில் சமயத் தொடர்புடைய சுதைச்சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன.

பிரதிமங்களும், செப்புத் திருமேனிகளும் :

அடுத்ததாக நகரத்தார்கள் கட்டிய கோயில்களின் மண்டபத்தூண்களில் திருப்பணி செய்தவர்களின் உருவமோ அல்லது அவர்களது பெற்றோர் உருவங்களோ கற்சிற்பங்களாகச் செதுக்கப்பட்டிருப்பதைப் பல கோ யில்களில் காணலாம். இரு கைகளும் கூப்பிய நிலையில், நெற்றியிலும் உடலிலும் திருநீறு அணிந்த திருக்கோலத்துடன், கைகளில் உருத்திராக்க மாலை விளங்க, முகத்தில் மீசை இல்லாமல், மேலாடை இல்லாமல், தலைப்பாகையுடனும் தார்ப்பாய்ச்சு வேட்டியுடனும் கூடிய அமைதியான தோற்றம் நகரத்தார்களைப் படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது.

வன்னியஞ் சூரைக்குடிச் சிவன்கோயிலைத் திருப்பணி செய்த காரைக்குடி முரு.லெ.கிருஷ்ணன் செட்டியார், தந்தையின் சிலையை மண்டபத்தூணில் வடித்து, தாயின் சிலையை ஐம்பொன்னால் செய்து வைத்துள்ளார். அவ்வம்மையார் நகரத்தார்க்கே உரிய சிறப்பு அணிகலனான கழுத்து உரு (அல்லது கழுத்துத்திரு) அணிந்த கோலத்துடன் காட்சி அளிப்பது வேறு எங்கும் காணாத காட்சியாகும். வடநாட்டில் அயோத்தியில் உள்ள நகரச் சத்திரத்தில் உள்ள இராமர், சீதை, இலக்குமணன், பரதன், சத்ருகனன் ஆகியோரின் ஆளுயரச் செப்புப் படிமங்களும் நகரத்தார் செப்புப் படிமக் கலைக்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டு. கோயில்களுக்குக் கணக்கற்ற வாகனச் சிற்பங்களை மரத்திலும் வெள்ளியிலும் செய்து கொடுத்துள்ளனர்.

மானகிரியில் உள்ள சுப்பிரமணியர் கோயிலில் நகரத்தார்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு தேவியருடன் உள்ள நவக்கிரக நாயகர்களைப் பிரதிட்டைசெய்துள்ளனர்.இதுபோன்ற சக்தியுடன் கூடிய நவக்கிரகங்கள் தமிழகத்தில் மூன்று இடங்களில்தான் உள்ளன.அவற்றுள் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பைரவரை யோக பைரவராகவும் அவருக்குரிய நாய் வாகனத்துடனும் வடிப்பர். இரட்டை நாய்கள் பைரவருக்கு இருபுறமும் நிற்கும் சிற்பங்கள் பாண்டிநாட்டில் பரவலாகக் காணப்படுகின்றன. இந்த வழக்கத்தை நகரத்தார்களும் தொடர்ந்து கடைப்பிடித்து வந்துள்ளனர். அதுமட்டுமல்லாமல் சாத்திர நூல்கள் சொல்கிற இலக்கணப்படி, சுவர்ண ஆகர்ஷண பைரவருக்கு என்று தனிக்கோயிலைத் தமிழகத்தில் முதன்முதலாகத் தேவகோட்டையில் எடுத்துள்ளனர். சுவர்ண ஆகர்ஷண பைரவர் என்பது சக்தி அருகில் வீற்றிருக்கும் வண்ணம் உள்ள பைரவராகும். இம்மூர்த்தம் கருவறையில் செப்புத்திருமேனியாகக் காணப்படுகிறது.

செட்டிநாட்டு வீடுகள் :

இவ்வாறாக, தங்களுக்கென்று ஒரு சிற்பமரபை வகுத்துக்கொண்ட நகரத்தார்களின் வீடுகளும், சிற்ப நுணுக்கத்தோடு கட்டப்பட்டுள்ளன. வீடுகள் மிகப்பெரியவைகளாக, குடும்பத்தார் அனைவரும் கூடிவாழ்வதற்கு ஏற்றதாக, திருமணம் போன்ற விசேடங்களை வீட்டிலேயே நடத்துவதற்கு ஏற்ப முகப்பு, வளவு, பட்டகசாலை, வளவில் இரட்டை வீடுகள், கல்யாணக் கொட்டகை, பந்திக்கட்டு, ஹால்வீடு, இரண்டாங்கட்டு அறைகள், மேல்வீடு, மச்சு, அடுப்படி, குச்சுவீடு போன்ற பல அங்கங்களைக் கொண்டதாக, இரண்டு வீடுகளையும் இணைக்கும்படியாகக் கட்டினர்.



பர்மா தேக்குமரத்தால் வீட்டின் மேல்கோப்பையும், உத்தரங்களையும், நிலைகளையும், கதவுகளையும் அமைத்தனர். வீட்டின் முகப்பு நிலைகளும் கதவுகளும் கோயில் கதவுகளைப்போலப் பெரியவைகளாகவும் சிற்ப வேலைப்பாட்டுடன் காணப்படுகின்றன. முகப்பு நிலையின் மேற்புறத்தின் நடுவில் திருமகளின் சிற்பம் காணப்படும். இருபுறமும் யானைகள்,யாளிகள், குதிரைகள், கொடிக்கருக்குகள், பூவேலைப்பாடுகள் கொண்டவையாக இருக்கும்.

முகப்பு நிலைக்கதவு மட்டுமே, சிற்ப வேலைப்பாட்டுக்காக இன்று பல லட்சம் பெறுமானம் உள்ளதாகக் காணப்படுகிறது. முகப்பிலும் வளவிலும் காணப்படும் தூண்கள் மரம், கருங்கல்லால் ஆனவை. தூண்களின் கீழ்ப்பகுதி சதுரமாகவும் நாகபந்த அமைப்புடனும் விளங்குகின்றன. தூணின் நடுப்பகுதி எட்டுப்பட்டையாகவும் அதற்குமேல் குடம் குடம்போல் அமைப்பும், அதற்கும் மேற்பகுதியில் போதிகையும் காணப்படும். போதிகையின் முனை நகரத்தார் சிற்பமுறைப்படி நன்குவளர்ந்த நிலையில் வாழைப்பூ முனைபோலக் காணப்படும். நகர விடுதிகள், நகரச் சத்திரங்களிலும் இக்கட்டிடக்கலை அமைப்பைக் காணலாம்.

நகரத்தார் இல்லங்களில் காணப்படும் சுதைச்சிற்ப வேலைப்பாடுகளும் குறிப்பிடத்தக்கவை. வீட்டின் நுழைவாயில் பெரும்பாலும் தோரண வளைவாகக் காணப்படும். முகப்பின் மேற்பகுதியில் பல சுதைச்சிற்பங்கள் காணப்படும். கஜலட்சுமி, யோகநரசிம்மர் போன்ற தெய்வ வடிவங்களும், இருபுறமும் சிங்கங்கள், குதிரைகள், குதிரை வீரர்கள், ஐரோப்பிய உடையணிந்த ஆண்பெண் உருவங்களும் இன்னும் பலவிதமான சுதைச்சிற்பங்களும் வண்ணம் பூசப்பட்டுக் காணப்படும். ஒரு வீட்டின் முகப்பில் அடர்ந்த, சிலிர்த்த முடியுடனும், பிளந்த வாயுடனும் பாய்கின்ற நிலையில் இரண்டு சிங்கங்களின் சுதைச்சிற்பங்கள் காணபடுகின்றன. அதனால் இந்தவீட்டை ’சிங்கம் வைத்தவீடு’ என்றே அடையாளம் காட்டுகின்றனர். இதுபோல ‘யானை வைத்தவீடு’ என்று ஒரு வீட்டுக்குப் பெயர். இவ்வாறு சுதைச்சிற்பங்களால் பெயர்பெற்ற வீடுகள் பல.

வீட்டுச்சுவர்கள் சங்குவெள்ளைச் சுவர்களாக வழவழப்புடன் காணப்படும். இச்சுவர்கள் பனைவெல்லம், கடுக்காய், முட்டை ஆகியவற்றைச் சுண்ணாம்புடன் சேர்த்துவைத்துப் பூசப்பட்ட வெள்ளைப் பூச்சு தொழில் நுட்பம் கொண்டவை.

இவ்வாறாக நகரத்தார் வளர்த்த சிற்பக்கலையின் தனித்தன்மையைச் சொல்லிக்கொண்டே போகலாம். இன்றைக்கும் தமிழகத்துச் சிற்பிகள் அருமையான திராவிடச் சிற்பக்கலை மரபை மறக்காமல் காத்துவருகிறார்கள் என்றால், அதற்குக் காரணம் நகரத்தார்கள்தான் என்று உறுதியாகச் சொல்லலாம். நகரத்தார்களின் சிற்பக்கலைச் சிறப்பைக் கூறவந்த கவிஞர் கண்ணதாசன் அவர்கள்,

"காசிநகரத்துக் கடவுளரைப் பேசவைத்தால்
காவிரிப்பூம் பட்டினத்தார் கலையுணர்ச்சி தோன்றவரும்.
அண்டை நிலங்களில்நாம் ஆண்டவனை ஊன்றிவைத்தோம்.
காசி விசாலாட்சி கவின்மதுரை மீனாட்சி
கட்டியுள்ள ஆடைகளும் கழுத்திலுள்ள பொன்நகையும்
சுற்றியுள்ள மண்டபமும் தூக்கிவரும் வாகனமும்
முற்றும் அழியாத மொட்டைக் கோபுரத்தழகும்
அண்ணாமலையில் அமர்ந்திருக்கும் பேரழகும்
ஆக்கிக் கொடுத்தவர்கள் அருகிருந்து காத்தவர்கள்
நாட்டுக்கோட்டை வளர்த்த நகரத்தார் நாமல்லவோ"

என்று பெருமிதத்தோடு பாடுகிறார்.

11.தமிழக வரலாற்றில் நுண்கலைகளுக்கு நகரத்தார்களின் பங்கு

“என்னை நான் இழந்தேன் இன்ப
உலகத்தில் வாழலுற்றேன்
பொன்துகள் தென்றல் காற்று
புதுமணம் வண்டின் பாட்டு
பன்னறு செழுமாணிக்கப்
பறவைபோல் கூட்டப்பூக்கள்
இன்றெல்லாம் பார்த்திட்டாலும்
தெவிட்டாத எழிலின் கூத்தே”

என்று இயற்கை அழகில் ஈடுபட்டுப் பாடுவார் பாவேந்தர் பாரதிதாசன். இந்த அழகுணர்ச்சிதான் கலைகளுக்கு எல்லாம் அடிப்படை.

ஆயகலைகள் அறுபத்துநான்கு” என்று கூறப்பட்டாலும், அழகுக்கலைகள், நுண்கலைகள், கவின்கலைகள் என்று கூறப்படுபவை இசைக்கலை, நாட்டியக்கலை, கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இலக்கியக்கலை போன்றவையாகும்.

நீண்ட நெடிய தமிழக வரலாற்றை நோக்கும்போது, தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்களும், குறுநில மன்னர்களும், பிறகு விஜயநகர நாயக்க மன்னர்களும் நுண்கலைகளை வளர்க்கும் செவிலித்தாயர்களாக விளங்கியதைக் காணலாம். இவர்களுக்குப் பிறகு ஐரோப்பியர் ஆட்சியில் இந் நுண்கலைகள் பேணுவாரின்றிக் கிடந்தபோது இக்கலைகளை ஆதரித்தவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஆவர்.

கட்டிடச் சிற்பக் கலைகள்

மன்னர் பின்னோர்களான நகரத்தார்கள் மூவேந்தர்களுக்குப்

பிறகு கடந்த 200 ஆண்டுகளாக, பாடல்பெற்ற பழைய கோயில்களைப் புதுக்கியும், கல்திருப்பணிகளை மேற்கொண்டும், கோயில்களை விரிவுபடுத்தியும், இந்து சமயத்திற்குப் பெருந்தொண்டாற்றி, காஞ்சிப் பெரியவர்கள் கூறுவதுபோல, இந்துசமயம் என்னும் கோட்டைக்குக் காப்பு வீரர்களாக விளங்கினார்கள்.

இந்துசமயத்தின் அங்கங்களான ஆலயங்களில் நகரத்தார்கள் திருப்பணிகளை மேற்கொண்டபோது, அந்த ஆலயங்களில் ஏராளமான சிற்பங்களைச் செதுக்கினர்.

நகரத்தார்களுக்கென்று ஒரு சிற்பமரபு உண்டு. அவர்கள் எப்போதும் கோயில்பணிகளில் ஈடுபட்டிருந்ததால், சிற்பக்கலையில் வல்லுநர்களான ஸ்தபதிகள் செட்டிநாட்டுப் பகுதிகளில் எழுவங்கோட்டை போன்ற ஊர்களில் நிரந்தரமாகக் குடியேறினர். இன்றைக்கும் செட்டிநாட்டு ஸ்தபதிகளுக்கு உலகமெங்கும் நல்ல மதிப்பிருக்கிறது.

நகரத்தார்கள் காலச்சிற்பங்களை, கட்டிடச் சிற்பங்கள், கற்சிற்பங்கள், செப்புப் படிமங்கள், சுதைச்சிற்பங்கள், மரச்சிற்பங்கள், வாகனங்கள் எனப் பலவாறாகப் பகுத்துக் காணலாம்.

தமிழகத்தில் மட்டுமல்லாது காசிமுதலாகப் பல வடநாட்டுக் கோ யில்களும் இவர்களால் திருப்பணி செய்யப்பட்டன. காசி விசாலாட்சி கோயில், தென்னாட்டுச் சிற்பமரபை ஒட்டி நகரத்தார்களால் கட்டப்பட்டது ஆகும். தாங்கள் பொருளீட்டச் சென்ற பர்மா, மலேயா, இலங்கை போன்ற அயல்நாடுகளில், இங்கிருந்து ஸ்தபதிகள் முதலியோரை அழைத்துச் சென்று, தென்னாட்டு முறைப்படி ஏராளமான கோ யில்களை, சிறப்பாகத் தண்டாயுதபாணிக் கோயில்களைக் கட்டி, சைவ சமயத்தையும், திராவிட சிற்ப மரபையும் பரப்பினர்.

நகரத்தார் கோயில்களுள், நேமங்கோயில், பிள்ளையார் பட்டி, மாற்றூர், இலுப்பைக்குடி, வைரவன் கோயில், கோவிலூர் போன்ற கோயில்களிலுள்ள, தூண்களில் உள்ள இறையுருவச் சிற்பங்கள் நுணுக்கமான வேலைப்பாடுடையவை.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் சிற்ப வேலைப்பாடு உடைய கம்பத்தடி மண்டபம் நகரத்தார் திருப்பணியே. இங்கு தூண் ஒன்றிலுள்ள மீனாட்சி அம்மன் திருமணக் கோலச் சிற்பம் உலகப்புகழ் பெற்றது.

நகரத்தார்கள் கருங்கல் திருப்பணி செய்த கோயில்கள் அனைத்தும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். பாண்டிநாட்டுச் சிற்பிகள் தாங்கள் ஒரு வேலையைத் தொடங்கும் முன்பு ஆவுடையார் கோயில் கொடுங்கை நீங்கலாக மற்ற எந்தச் சிற்ப வேலையையும் தங்களால் செய்ய இயலும் என்பதாக எழுதிக் கொடுப்பார்களாம். ஆனால் நகரத்தார்களால் வளர்க்கப்பட்ட சிற்பிகள் வடித்த கோயில் கொடுங்கைகள் அனைத்துமே ஆவுடையார் கோயில் கொடுங்கைகளுக்கு இணையாகச் சிற்ப நுணுக்கத்துடன் காணப்படுகின்றன.

நகரத்தார்கள் கோயிற்கோபுரக் கலையிலும் சிறந்து விளங்கினர். மதுரை மீனாட்சி அம்மன் கோயில் வடக்குக் கோபுரத் திருப்பணி, அமராவதி புதூர் வயிநாகரம் குடும்பத்தாரின் பகுத்தறிவான திருப்பணியாகும். நாற்புறமும் கடல் சூழ்ந்துள்ள இராமேசுவரத் தீவிற்குக் கடல் வழியாகக் கற்களைக் கொண்டுசென்று, இராமேசுவரம் கோயிலின் கிழக்குக் கோபுரத்தைக் கட்டி முடித்தவர்கள் தேவகோட்டை ஜமீன்தார் குடும்பத்தார் ஆவர். கோயில்களுக்கு ஏராளமான வாகனச் சிற்பங்களை மரத்திலும் வெள்ளியிலும் தங்கத்திலும் நகரத்தார்கள் செய்து கொடுத்துள்ளார்கள்.

பேரையூர் கோயில் சுரங்கத்தில் கிடைத்த இரண்டு பெரிய கற்சங்கிலிக்கு ஏற்ற அளவில் ஓர் அழகிய பெரிய தேரைச் செய்து கோயிலுக்குக் கொடுத்தவர்கள் நற்சாந்துப்பட்டி பெ. ராம. குடும்பத்தினர் ஆவார்கள்.

தங்களுக்கென ஒரு சிற்பமரபை வகுத்துக்கொண்ட நகரத்தார்களின் வீடுகளும் சிற்ப நுணுக்கங்களோடு கட்டப்பட்டன. வீடுகளை மிகப்பெரியவைகளாக, குடும்பத்தார்கள் அனைவரும் கூடி வாழ்வதற்கு ஏற்ப, திருமணங்கள் போன்ற நிகழ்ச்சிகளை வீட்டிலேயே நடத்துவதற்கு ஏற்ப அவை கட்டப்பட்டன. பர்மா தேக்கு

மரங்களால் சிற்ப வேலைப்பாட்டுடன் கதவுகளையும் தூண்களையும் அமைத்தனர். முகப்பு நிலைக்கதவுகளின் மேற்பகுதியின் நடுவில் திருமகளின் சிற்பமும், இருபுறமும் யானைகள் மற்றும் யாளிகள், குதிரைகள், கொடிக்கருக்குகள், பூவேலைப்பாடுகள் கொண்டதாகவும் இருக்கும். முகப்புநிலைக் கதவுகள் மட்டும் இன்று அதன் சிற்ப வேலைப்பாடுகளுக்காகப் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ளதாகக் காணப்படுகின்றன. நகரத்தார்கள் காலத் தூண்களில், போதிகைகள் நன்கு வளர்ந்த நிலையில் வாழைப்பூ முனை மாதிரி காணப்படும். இவர்களுடைய நகரவிடுதி, நகரச் சத்திரங்களில் இக்கட்டிடக் கலையின் அமைப்பைக் காணலாம்.



நகரத்தார்கள் இல்லங்களின் வெளிப்புறங்களை சுதைச் சிற்பங்கள் அலங்கரிக்கும். வீட்டின் நுழைவாயில் தோரணவளைவாகக் காணப்படும்.

வீட்டின் சுவர்கள், பனைவெல்லம், கடுக்காய், முட்டை, சுண்ணாம்பு

ஆகிய கலவை சேர்த்து அரைத்துப் பூசப்பட்டு சங்கு வெள்ளைச் சுவர்களாக வழுவழுப்புடன் காணப்படும்.

தமிழகத்தில் தொன்றுதொட்டு வந்த கட்டிடக் கலையும் சிற்பக்கலையும் அழிந்து போகாமல் நகரத்தார்கள் காத்தனர் என்பது வரலாற்று அடிப்படையில் நினைக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஓவியக்கலை:

நகரத்தார்கள் தாங்கள் திருப்பணி செய்த கோயில் மண்டபங்களின் விதானங்களிலும் கோயில் திருச்சுற்றுச் சுவர்களிலும் பலவித வண்ண ஓவியங்களை நாயக்கர் பாணியில் வரைந்து உள்ளதைக் காணலாம். மகாபாரத இராமாயணக் காட்சிகளும், திருவிளையாடற்புராண நிகழ்ச்சிகளும் இன்னும் இறைவனின் பலவிதமான கோலங்களும் ஓவியமாகத் தீட்டப்பட்டன.







காரைக்குடியிலுள்ள ஒரு நகரத்தார் இல்லத்தில் காணப்படும் ஓவியங்கள்.

இலுப்பைக்குடிக் கோயில் போன்றவற்றில் நகரத்தார்களின் ஓவியப்பாணியை இன்றும் கண்டுகளிக்கலாம். நகரத்தார்கள் தங்கள் வீடுகளிலும் வளவு, முகப்பு, கதவு, சன்னல் ஆகியவற்றின் மேற்பகுதிகளில்(எழுதகங்கள்) வண்ண ஓவியங்களை வரைந்துள்ளனர். ஆத்தங்குடியில் ஓர் இல்லத்தில் கண்ணன் லீலைகள் அனைத்தும் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. பலவித வண்ணங்களில் தீட்டப்பட்ட அவ்வோவியங்கள் இன்றளவும் நிறம் மாறாமல் காணப்படுகின்றன.

இசைக்கலை :

நகரத்தார்கள் தமிழிசைக்குச் செய்த தொண்டு பெரியது. தமிழகத்தில் விஜயநகர நாயக்கர் ஆட்சி நிலவியபோது, தமிழகத்தின் இசைத்துறையில் தெலுங்கும் வடமொழியுமே ஆட்சிசெய்தன. “நமக்குத் தெரியாத மொழிகளில் இசையை அனுபவிப்பது, மனைவியிடம் வக்கீல் வைத்துப் பேசுவதற்குச் சமமாகும்” என்பார் கவியரசர் தாகூர். தமிழகத்தைப் பொறுத்தவரை இந்த நிலைதான் இருந்தது. தமிழிசைக்கு மதிப்பில்லாமல் இருந்தது. இந்நிலையை மாற்ற தமிழிசை இயக்கத்தை உருவாக்கினார் அண்ணாமலை அரசர். இதற்குப் பெருத்த எதிர்ப்புக் கிளம்பியது. எதிர்ப்புகளைத் திறமையாகச் சமாளித்தார் அரசர். தமிழிசைச் சங்கம், தமிழிசை விழாக்கள் நடத்தினார். தமிழிசையை வளர்ப்பதற்கு அண்ணாமலை நகரில் இசைக் கல்லூரியையும் நிறுவினார். அவர் தமிழிசைக்கு இட்ட வித்து இன்று நல்ல பயனைத் தந்து நிற்கிறது. அதுமட்டுமல்லாமல் நகரத்தார்கள் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் பாடசாலைகளை ஆங்காங்கு நிறுவி பன்னிரு திருமுறைகளை இசையோடு பாட மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தனர்.

இவ்வாறு கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக, கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை போன்ற நுண்கலைகளுக்கு அருந்தொண்டாற்றிய நகரத்தார் இந்த நூற்றாண்டில் அநேகப் பதிப்பகங்களை நிறுவி ஏராளமான இலக்கியங்களை அச்சிட்டு இலக்கியக் கலையையும் வளர்த்து வருகிறார்கள். இன்று தமிழ்நாட்டிலுள்ள பதிப்பகங்களில்

பெரும்பான்மையானவை நகரத்தார்கள் நிறுவியவையே.

நகரத்தார் மரபில் தோன்றிய கவியரசு கண்ணதாசன் அவர்கள்

"வண்ணக் கலைவளர்த்தோம்
வரலாறே நாம் சமைத்தோம்"


என்று கூறுவது முற்றிலும் உண்மை.

12. நகரத்தாரும் வைணவமும்

நகரத்தார்கள் சிவனை மறவாத சிந்தையர். ‘சிவமதத்திலேயே இருக்கிறது’ என்ற நகரவரன்முறை உடையவர்கள். நகரத்தார்களது கோத்திரம் சிவகோத்திரம்.

18,19 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கை, பர்மா (மியான்மர்), இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று, வணிகத்தில் பெரும் பொருள் ஈட்டிய நகரத்தார்கள் தங்கள் ஊதியத்தில் ஒரு பகுதியைத் தருமத்திற்கென எடுத்து வைத்து கோயில் திருப்பணிகளையும், காலத்திற்கேற்பப் பிற பணிகளையும் செய்தனர்.

அவ்வாறு திருப்பணிகள் செய்த போது எப்படி பாடல்பெற்ற சிவத்தலங்களைத் தேடித் தேடித் திருப்பணி செய்தார்களோ அதுபோல ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப் பெற்ற தலங்களிலும் திருப்பணிகளைச் செய்திருக்கிறார்கள். தங்கள் ஊர்களில் புதிதாகப் பிள்ளையார் கோயில்களையும் சிவன்கோயில்களையும், முருகன் கோயில்களையும் கட்டிய போது திருமாலுக்கும் கோயில் எடுத்திருக்கிறார்கள். இச்செயல் அவர்களுடைய சமயப் பொறையையும் சமயக் காழ்ப்பின்மையையும் காட்டுவதாக உள்ளது. நகரத்தார்கள். “சிவனாலயமும் திருமால் பணியும் சிறப்புறத்தான் நவமாப் புதுக்கியும் ஆக்கியும்“ வருகிறார்கள் என்று 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த வரகவி பாடுவார் முத்தப்பச் செட்டியாரவர்கள் தாம் பாடிய “பஞ்சாட்சர வர்க்கபூஷணம்” என்ற பாடலில் குறிப்பிடுகிறார். அரியக்குடி, பள்ளத்தூர். கண்டனூர், புதுவயல், கண்டரமாணிக்கம், அலவாக்கோட்டை, நாட்டரசன்கோட்டை போன்ற பல ஊர்களில் புதிதாகப் பெருமாள் கோயில்களைக் கட்டியுள்ளனர். அவர்கள் ‘பெருமாள் கோயில் வீட்டார்’ என்று மக்கள் வழக்கில் அழைக்கப்படுகிறார்கள்.



நாட்டரசன்கோட்டை பெருமாள்கோயில் கல்வெட்டு

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற காஞ்சி நிலாத்திங்கள் துண்டம், திருமெய்யம், திருக்கோட்டியூர், திருவில்லிபுத்தூர். தில்லை. திருக்கண்ணபுரம், அழகர்கோயில், மதுரைக் கூடலழகர் கோயில் ஆகிய திவ்யசேத்திரங்களில் திருப்பணிகள் செய்துள்ளனர். வைணவர்களால் 'கோயில்' என்று போற்றப்படுகின்ற ஸ்ரீரங்கத்தில் அரியக்குடியைச் சேர்ந்த சிதம்பரம் செட்டியார் அன்னதானச் சத்திரம் ஒன்றை 1860 இல் நிறுவியுள்ளார்.

தில்லையில் கோவிந்தராசப் பெருமாள் கோயில் சிதைந்து இடிந்துவிழும் நிலைமையில் இருந்த போதும் சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகப் பழுதுபார்க்கப் படாமல் இருந்தது. அப்போது அண்ணாமலை அரசர் அவ்விரு தரத்தாரையும் அமைதியான முறையில்உடன்படச் செய்து தானே முன்னின்று திருப்பணியைச் செய்து முடித்துள்ளார்.

நகரத்தார்கள் இராமகதையில் மிகுந்த ஈடுபாடுடையவர்கள்.





ஸ்ரீரங்கம் அரியக்குடி சித சத்திர கல்வெட்டு

அதன்விளைவு, செட்டிநாட்டில் நகரத்தார் இல்லங்கள் பலவற்றில் புரட்டாசி மாதந்தோறும் இராமாயணம் படிக்கப்பட்டு வருகிறது.

வணிகத்தின் பொருட்டு கி.பி.1800 ஆம் ஆண்டளவில் கல்கத்தா சென்ற நகரத்தார்கள், வடஇந்தியாவிலும் சிவத்தொண்டோடு திருமால் தொண்டும் செய்து வந்திருக்கிறார்கள்.

கயா,பீகாரிலுள்ள இந்துக்களின் புனிதத்தலம். பல்குனி ஆற்றங்கரையில் அமைந்த கோயிலில் விஷ்ணுபாதம் இருக்கிறது. இப்பாதத்தில் முன்னோர்களுக்காகப் பிண்டம் போடுவதை இந்துக்கள் புனிதமான செயலாகக் கருதுகிறார்கள். நகரத்தார்களும் காசிக்குப் போகத்தொடங்கியது முதல் கயைக்கும் போய் வந்திருக்கிறார்கள்.

அங்கு சத்திரமும் நந்தவனமும் உண்டாக்கிச் சத்திரத்தில் நடராசரைப் பிரதிஷ்டை செய்து வழிபாடுகள் நடத்தினர். விஷ்ணு பாதத்தில் ஏறத்தாழ 150 வருடங்களாக, நகரத்தார்கள், பால் அபிசேகம் செய்தும் நெய்தீபம் போட்டும் வருகிறார்கள். சாதுக்களுக்கு அன்னதானமும் செய்திருக்கிறார்கள். இச்செய்திகளையெல்லாம் கயா சத்திரத்திலுள்ள தமிழ்க்கல்வெட்டு கூறுகிறது. அங்குள்ள கல்வெட்டில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

உ
சிவமயம்
ஸ்ரீ கெயாவில் சாதாரண சித்திரை மாதம் 7ஆம் தேதி
மங்களவாரம்
சுபதினத்தில் நாட்டுக்கோட்டை செட்டி வைசிய
நகரத்தார்கள்
இந்தத் தருமச்சத்திரமும் பிரதிஸ்ட்டை செய்து
மேற்படி திகதி முதல் விஷ்ணு பாத பூசை
நடராசா பூசையும் வேதியர் சாதுக்களுக்குப்
போஜனமும் நடந்து வருகிறது
சுபமஸ்து
கலியுகாதி 5912 இங்கிலீஷ் 19.04.1910

இராமர் பிறந்த தலமான அயோத்தியிலும் நகரத்தார்கள், சத்திரம், நந்தவனம் முதலியன அமைத்துச் சத்திரத்தில் இராமர் கோயிலை ஏற்படுத்தி இருக்கிறார்கள் இச்சத்திரத்திலுள்ள இராமர், சீதை, இலக்குமணன், பரதன். சத்ருகன், அனுமன் ஆகியோருடைய ஐம்பொன் விக்கிரகங்கள் மிகவும் எழிலானவை. பொதுவாக இராமர், லெட்சுமணர், சீதை,அனுமார் ஆகியோருடைய சிலைகள் தான் கோயில்களில் காணப்படும். ஆனால் இங்கு, பரதனுக்கும் சத்ருகனுக்கும் சிலைகள் உள்ளது குறிப்பிடத்தக்கது. இங்கு நித்திய வழிபாடும் திருவிழாவும் நடைபெற நகரத்தார்கள் ஏற்பாடுகள் செய்துள்ளனர். அயோத்தி நகரச் சத்திரத்திலுள்ள பின் வரும் தமிழ்க் கல்வெட்டு அயோத்தியில் நகரத்தார் செய்த பணிகளை எடுத்துரைக்கிறது.

அயோத்தி நகரச்சத்திர முகப்பிலுள்ள கல்வெட்டு :

நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம்
அயோத்யா
Nattukkottai Nagara Satram
AYODUYA

நகரச்சத்திரம்	*நகரச்சத்திரம்*
NAGARASATRAM	***नगरा छथिराम***

கல்வெட்டு :

“ கலி (4984) சாலிவாகனம் (1805) சுபானு ,ஆவணி மாதம் 18ஆம் தேதி ஆதித்திய வாரம் பாண்டிய நாட்டைச் சேர்ந்த நாட்டுக்கோட்டைச் செட்டி வைசிய நகரத்தார் ஸ்ரீ அயோத்தியா புரியில் ஸ்ரீ ராமபிரான் பிரதிஷ்டையும் அன்னதானச் சத்திரஸ்தாபனமும் செய்யப் பெற்று நடந்து வருகிறது.

சுபம்



இங்கிலீஷ் இல் 1883 செப்டம்பர் மாதம் 2 ஆம் தேதி.''

அரியும் சிவனும் ஒன்று என்று உணர்ந்ததன் விளைவாகத்தான் நகரத்தார்கள் மேற்கூறியவாறெல்லாம் வைணவத் திருப்பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்

13. நகரத்தார்களின் நீர்நிலை அறங்கள்

"யிந்த ஊறணி கோ

வில்க் கட்டியது கா

ரைக்குடி பிள்ளையாற்

பட்டிக் கோ

வில் அருணாசலம்

செட்டி உலகப்பன்

செட்டியப்பன்......"

நெய்வாசல் உலகநாயகி அம்மன் கோவிலில் உள்ள இந்தக் கல்வெட்டு, சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பே காரைக்குடி பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த அருணாசலம் செட்டியார், உலகப்ப செட்டியார், செட்டியப்ப செட்டியார் ஆகியோர் அம்மன் கோயில் திருப்பணியையும், அதையொட்டி ஊருணி அமைத்ததையும் குறிப்பிடுகின்றது. கல்வெட்டில் குறிக்கப்பெறும் மூவரும் திருப்பணி செய்தவர்கள். அவர்களின் சதாசேவைச் சிற்பங்கள் உலகநாயகி அம்மன் கோவிலின் முன்மண்டபத்தில் உள்ளன. அருணாசல அய்யாவின் சதாசேவைச் சிற்பத்தின் அருகில் 'அரு' என்றும் உலகப்பய்யாவின் சதா சேவை சிற்பத்தின் மேலே 'உல' என்றும் செட்டியப்பய்யாவின் சதா சேவைச் சிற்பத்திற்கு மேல் 'செ' என்றும் கல்லில் அவர்களது பெயர்களின் முதலெழுத்து வெட்டப்பட்டுள்ளது.

கோவில் திருப்பணி செய்தவர்கள் அமைத்த ஊருணி வடகிழக்கில் பெரிய ஊருணியாக "நாச்சியார் ஊருணி" என்ற பெயருடன் விளங்குகிறது. சுற்றுவட்டாரத்திலுள்ள கிராமங்களுக்குக் குடிதண்ணீர் ஊருணியாக இன்றளவும் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்பது

குறிப்பிடத்தக்க, மன மகிழ்ச்சி தருகின்ற செய்தியாகும். இந்த ஊருணியையொட்டிய சிந்தனையே இக்கட்டுரை எழுதுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தது எனில் மிகையில்லை.

18,19ஆம் நூற்றாண்டுகளிலேயே பெருமளவில் கோவில் திருப்பணிகளைச் செய்த நகரத்தார்கள் நீரின் தேவையை உணர்ந்து தாங்கள் திருப்பணி செய்த கோயில்களையொட்டி ஊருணிகளையும், குளங்களையும் அமைத்துள்ளனர்.

நகரத்தார்கள் குடியேறிய பாண்டியநாட்டுப் பகுதியில் வளமான ஆறுகள் இல்லை.மழையும் குறைவு. அதனால் வானம்பார்த்த பூமியான அப்பகுதிகளில் எப்போதாவது பெய்யும் மழைநீரைத் தேக்கிவைத்துக் குடிக்கவும், குளிக்கவும், உழவுத் தொழிலுக்கும் பிறதேவைகளுக்கும் பயன்படும் வகையில் அவர்கள், பாண்டிய நாட்டில் பண்டுதொட்டு மன்னர்களும் மற்றவர்களும் செய்ததுபோல ஊருணிகள் தோண்டியும், குளங்கள், சேங்கைகள் வெட்டியும், கிணறுகள் தோண்டியும், தண்ணீர்ப்பந்தல்கள் அமைத்தும், மேல்நிலை நீர்த்தொட்டிகள் கட்டியும் தண்ணீர் கிடைக்க வழிவகை செய்தார்கள். அதுமட்டுமல்லாமல் முன்பே தோண்டப்பட்ட ஊருணிகள், குளங்கள் ஆகியவை மண்மேடிட்டுத் தூர்ந்து விடும்போது, தூர்வாரியும், ஆழப்படுத்தியும், குளக்கரையை உயர்த்தியும் வந்துள்ளார்கள்.

நகரத்தார் தங்களுடைய ஒன்பது நகரக் கோவில்களை அடுத்தும், புதிதாகக் கட்டிய கோவில்களை அடுத்தும், புதுப்பித்த தலங்களை அடுத்தும் கருங்கல் கட்டுமானங்களுடன் கூடிய அழகான ஊருணிகளையும், குளங்களையும் வெட்டியுள்ளனர்.

ஏற்கெனவே உள்ள ஊருணிகள், குளங்கள் ஆகியவற்றில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியிருந்தால் செய்தனர். உதாரணமாக அண்ணாமலை அரசர், திருவண்ணாமலைக் கோவிலுக்குள் உள்ள

பிரம்ம தீர்த்தக் குளத்தைப் பிரித்து அகலப்படுத்தியும், ஆழப்படுத்தியும், உள்ளிருந்த கருங்கல் பாறையை ஜம்பர் போட்டுத் தகர்த்தெறிந்தும், நான்கு பக்கமும் கருங்கல்லினால் படிகள் கட்டியும் குளத்தைப் புதுப்பித்துள்ளமையைக் கூறலாம்.

ஊருணிகள் :

செட்டிநாட்டிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள ஊருணிகளில் பெரும்பாலானவை நகரத்தார்கள் உண்டாக்கியதாகவோ அல்லது புதுப்பித்ததாகவோ இருப்பதைக் காணலாம். அவை குடிநீர் அளித்தன என்பதை ஊருணி என்ற சொல்லே (ஊர் + உண் + நீர்) காட்டும். 'திருவேட்பூருடையான் ஊருணி' (இரணியூர்) 'அளகப்பெருமாள் ஊருணி' (கோனாபட்டு), 'பட்டணசாமி ஊருணி ' (இளையாத்தங்குடி) ஆகியவை கல்வெட்டுக்கள் மூலமாக அறியப்படும் நகரத்தார்களால் உருவாக்கப்பட்ட பழமையான ஊருணிகளாகும்.

நீர்மட்டம் கணக்குப் பார்த்துக் கட்டப்பட்ட நகரத்தார் ஊருணிகள், நகரத்தார்களின் கட்டிடக் கலைக்கும், சிற்பக்கலைக்கும் சிறந்த எடுத்துக் காட்டுக்களாய்த் திகழ்கின்றன. திருமெய்யத்திலுள்ள 'சத்திய புஷ்கரணி ஊருணி', வலையபட்டியிலுள்ள ஊருணி ஆகியவை எண்கோண வடிவில் அமைந்தவை.

நகரத்தார்களில் தனிப்பட்ட ஒருவரோ அல்லது ஊரார் அனைவரும் சேர்ந்தோ ஊருணிகளை அமைத்திருக்கிறார்கள். சிலர் ஊருணிகளுக்குப் படித்துறை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆச்சிமார்களும் திருக்குளத் திருப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். காவிரிப்பூம் பட்டினம் பல்லவனீச்சுவரம் கோயில் எதிரிலுள்ள திருக்குளத்தையும், படித்துறை யிலுள்ள விநாயகர் கோயிலையும் கட்டியவர் பள்ளத்தூர் ப. முருகப்ப செட்டியாரின் மனைவி மீனாட்சி ஆச்சி என்பவராவார். இதைக்குறிக்கும் கல்வெட்டு அங்குள்ளது. கோட்டையூரிலிருந்து குன்றக்குடிக்குப் போகும்

வழியிலுள்ள 'செட்டிச்சி ஊருணி' நகரத்தார் பெண்மணி ஒருவரால் கட்டப்பட்டதாகும். மேலைச்சிவபுரியிலுள்ள அமிர்தகுளம் ஊருணியின் ஒரு படித்துறையை அவ்வூரைச் சேர்ந்த ஆரு.சுப. சுப்பிரமணியஞ் செட்டியார் என்பவரின் தமக்கை வள்ளியம்மை ஆச்சி என்பவர் கட்டிக் கொடுத்துள்ளார். அதைக் குறிக்கும் கல்வெட்டு அப்படித்துறையில் பொறிக்கப்பட்டுள்ளது.

அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தார் கண்டதேவி என்ற ஊரிலுள்ள கண்மாயின் கரையை செப்பனிட்டுள்ளார்கள். இளையாத்தங்குடியில் ஏழு பிரிவினருக்கென்று ஏழு ஊருணிகள் அடுத்தடுத்து அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கோவிலூர், அரிமளம், காளையார்கோவில் போன்ற ஊர்களில் தெப்பத்திருவிழா போன்றவை நடத்துவதற்கு ஏதுவாக மையமண்டபத்துடன் கூடிய குளங்களை நகரத்தார்கள் அமைத்திருக்கிறார்கள்.

பழனிக்குப் பாதயாத்திரையாச் செல்பவரின் நலன் கருதி அவர்களுக்குப் பயன்படும்படியாக காரைக்குடியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தார் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு பழனிக்கு 18 கி.மீட்டருக்கு முன்பாக சத்திரப்பட்டி அடையாள வேல் அருகில் 6 1/2 ஏக்கர் நிலம் வாங்கி பிள்ளையார் கோவிலும் ஊருணியும் (கலுங்கு) ஏற்படுத்தியிருக்கிறார்கள். அக்குடும்பத்தார் கலுங்கப்பய்யா குடும்பத்தார் என்றே இன்றும் அழைக்கப்படுகிறார்கள்.

நகரத்தார்கள் தங்கள் ஊர்களில் திருவிழாக் காலங்களில் வருடந்தோறும் சேங்கைவெட்டுத் திருவிழா என்ற விழாவைக் கொண்டாடி வருகிறார்கள். சேங்கை என்றால் குளம் என்று பொருள். நகரத்தார்கள் தங்கள் பொருளைக்கொண்டே ஊருணிகள் முதலிய நீர்நிலைகளை அமைத்தாலும் அதற்கு உடலுழைப்பு நல்கியவர்களைப் பாராட்டுமுகமாகவும் நன்றி கூறுமுகமாகவும் இத்திருவிழாவை நடத்தி

வருகிறார்கள்.

நீர்நிலைப்பாதுகாப்பு :

நகரத்தார்கள், ஊருணிகள் அமைத்தபோது ஊருணிக்கரைகளில் விநாயகருக்கு ஆலயம் எடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். கோவிலைச் சார்ந்து ஊருணியும், ஊருணியைச் சார்ந்து கோயிலுமாக இருந்ததால் ஊருணிகள் இறைத்தன்மையுடையதாகக் கருதப்பட்டு, மக்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்டன. நகரத்தார்கள் குடிநீர் ஊருணிகளைப்பாதுகாக்க காவலர்களையும் நியமித்திருந்திருக்கின்றனர்.



கொத்தமங்கலம் பாலம் கல்வெட்டு

ஊருணிகள் வெட்டியதோடு, ஊருணிக்கு நீர் வரத்துக்குரிய மடைவாய்களையும், பாலங்களையும் கட்டியிருக்கிறார்கள். 1858 இல்

கொத்தமங்கலத்தைச் சேர்ந்த மு. சின்னாஞ் செட்டியாகிய வடுகனாதன் செட்டியார் சித்தூரணிக் கால்வாய்க்கு பெரிய கண்மாய் கால்வாயிலிருந்து தண்ணீர் வருகிற பாலத்தை அமைத்துக் கொடுத்ததை அங்குள்ள கல்வெட்டால் அறிகிறோம். மடைகள் முதலியன அமைக்கும்போது, தூய்மை கருதி ஊருணிக்கு நீர்வரும் மடையை மூடுமடையாகவும் அமைத்துள்ளனர். சான்றாகக் கோனாபட்டிலுள்ள அழகப் பெருமாள் ஊருணிக்கு, அருகிலுள்ள மலைச்சாரலிலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை மூடுமடை அமைத்திருக்கிறார்கள். பள்ளத்தூரிலும் நகரத்தார்கள் மூடு மடையுடன் கூடிய குளத்தை அமைத்திருக்கிறார்கள்.

வடநாட்டில் ஹவுராவிற்கு அருகிலுள்ள தாரகேசுவரம் என்ற தலத்தில் நகரத்தார்கள் குளமொன்று வெட்டியிருக்கிறார்கள்.

குடிநீர்க்குழாய்கள் :



காரைக்குடி மெ.செ.மெ.மெ. அமைத்த நீர்க்குழாய் 1936

காலத்திற்கு ஏற்றவாறு மக்களுக்குப் பயன்படும் வண்ணம் குடிநீர்க்குழாய்களையும் நகரத்தார்கள் ஆங்காங்கு அமைத்துள்ளனர். கானாடுகாத்தான் சா.ராம.மு.ராம. இராமசாமி செட்டியார் சிதம்பரத்தில் 1908 முதல் 1916 வரை நகராண்மைக் கழகத் தலைவராக இருந்தபோது நகராண்மைக் கழகப் பொதுப்பொருளுடன் இலட்சக்கணக்கான தமது பொருளையும் செலவிட்டு சிதம்பரம் நகர்முழுவதும் குழாய்கள் பதித்து மக்களுக்குக் காவிரி நீர் கிடைக்கும்படி செய்தார்.

தேவகோட்டை பி.எஸ். சாத்தப்ப செட்டியார் கோவையில் பஞ்சாலைத் தொழில் நடத்தியபோது கோவைக்கு அருகிலுள்ள சென்னிமலையில் ஏற்பட்ட குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்காகப் பெரும்பொருள் செலவிட்டு அங்கு குடிநீர் வசதி செய்து கொடுத்தார்.

காரைக்குடியில் 1936 இல் மெ.செ.மெ.மெ. மெய்யப்ப செட்டியார் பொதுமக்கள் உபயோகத்திற்காகப் பல இடங்களில் குழாய்கள் அமைத்துக் கொடுத்துள்ளார். கடியாபட்டியைச் சேர்ந்த உ.அரு. அருணாசலம் செட்டியார் மலாக்காவில் சந்நாசிமலை ஆண்டவர் கோயிலில் பல திருப்பணிகள் செய்ததோடு தண்ணீர் வசதிக்காக ஒருகுளம் வெட்டி, அக்குளத்திலிருந்து நீரைப் பல இடங்களுக்குக் கொண்டு போகக் குழாய்கள் அமைத்துக் கொடுத்துள்ளார்.

தண்ணீர்பந்தல்கள் :

தண்ணீர்பந்தல் வைப்பது மிகச் சிறந்ததொரு அறமாகப் பழங்கால முதல் கருதப்பட்டு வருகிறது. ஒருவர் செய்த தருமத்திற்குத் தீங்கு நினைத்தால் ஏற்படும் பழிபாவங்களைப் பற்றிக் கூறவந்த ஒரு செப்பேடு, 'இந்த தருமத்திற்குத் தீங்கு நினைப்பவன் தண்ணீர்பந்தலும் சாலையும் உடைத்த தோஷத்திலே போவானாக' என்கிறது. இதிலிருந்து மக்களுக்குத் தேவையான தண்ணீர்பந்தல், சாலை முதலியன அமைத்தல் மிகச் சிறந்த அறங்களாகக் கருதப்பட்டன

என்பதை உணரமுடிகிறது.

கடுங்கோடையில் வழிநடந்து செல்வோர்க்கும் தாகத்தால் தவிப்போர்க்கும் குளிர்ந்த நீர், மோர் வழங்கி உதவுவதற்காகத் தண்ணீர்பந்தல்கள் அமைக்கும் பணியிலும் நகரத்தார்கள் சிறந்து விளங்கினர். வருடம் முழுவதும் தண்ணீர்பந்தல் வைத்து நடத்திய நகரத்தார் குடும்பங்கள் பல. அவர்கள் வீட்டை,“தண்ணீர்ப் பந்தலார் வீடு” என்று மக்கள் குறிப்பிடுவர். பலர் திருவிழாக்காலங்களிலும், கோடைக் காலத்திலும் தண்ணீர்ப் பந்தல் வைத்து இன்றளவும் நடத்தி வருகின்றனர். அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் பெயரால் தண்ணீர்பந்தல் அமைத்தது போல சைவசமயக் குரவர்களிடத்து ஆழ்ந்த ஈடுபாடுடைய நகரத்தார்கள் திருநாவுக்கரசர் பெயரால் தண்ணீர்ப்பந்தல்கள் அமைத்துள்ளனர். இராமச்சந்திரபுரம் தீ.நா. நாச்சியப்ப செட்டியார், புதுக்கோட்டையிலிருந்து திருமெய்யம் போகும் வழியிலுள்ள கீழத்தேமுத்துப்பட்டியில் தீர்த்தான் செட்டியார் சத்திரம் ஒன்று கட்டியும் திருநாவுக்கரசு சுவாமிகள் பெயரால் தண்ணீர் பந்தல் ஒன்றும் அமைத்திருந்தார்.(இராமச்சந்திரபுரம் தீ.நா.நாச்சியப்ப செட்டியார் ஆசிரியர் தி.மு.நாராயணசாமி பிள்ளை1925)

விலங்குகளுக்கு நீர் :

மக்களுக்காக மட்டுமல்லாமல் அஃறிணை உயிர்களிடத்தும் அன்புகொண்டு, வெயிலில் திரியும் ஆடு மாடுகள் நீர் அருந்திச் செல்வதற்கு வசதியாக, சில இடங்களில் குளங்களின் கரைகளை சரிவாக வெட்டி வைத்துள்ளனர். மேலும் விலங்குகள் உடல் தினவு தீரத் தேய்த்துக்கொள்ள வசதியாக ‘ஆவுறிஞ்சுதறி’ ‘ஆ தீண்டு குற்றி’ ஆகியவற்றை குளக்கரைகளில் அமைத்துள்ளனர்.

போக்குவரத்து வசதிகள் அதிகமில்லாத அக்காலத்தில் வண்டியோடு மக்களையும் இழுத்துக்கொண்டு நாள் முழுதும் ஓடும் வண்டிமாடுகளும்,

குதிரைகளும் நீர் அருந்தும் பொருட்டு மஞ்சக்குப்பம், புதுப்பாளையம், திருப்பாதிரிப் புலியூர், புதுக்கோட்டை முதலிய ஊர்களில் நீர்க்குழாயும் தொட்டியும் அமைத்தவர் கடியாபட்டி தீ.நாச்சியப்ப செட்டியாராவார்.

நிறைவாக :

'நீரின்றி அமையாது இவ்வுலகம்' என்பதை நன்குணர்ந்து மற்ற பணிகளோடு நீர்நிலைகள் தொடர்பான பணிகளையும் நகரத்தார்கள் செய்திருக்கிறார்கள். நகரத்தாரின் இயல்புகளை கவிஞர் நா. நாகப்பன் அவர்கள்,

"ஊரென்று ஒன்றிருந்தால் கோயில் ஒன்று
உருவாக்க அவன் என்றும் துணிந்ததுண்டு
ஊரென்று ஒன்றிருந்தால் தாகம் தீர்க்க
ஊருணியை அவன் தோண்டி வைத்ததுண்டு
ஊரென்று ஒன்றிருந்தால் பசியைப்போக்க
உயர்ந்தபல சத்திரங்கள் மைத்ததுண்டு
ஊரென்று ஒன்றிருந்தால் மடமை நீக்க
ஒளிர்கின்ற பள்ளிகளை அமைத்ததுண்டு"

என்று பாடுவது உண்மை தானே!.

14.அண்டிமெண்டு உண்டியல் ஆவணங்கள்

கிபி 1887,1894,1919 ஆகிய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட ஐந்து வங்கி ஆவணங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவை அண்டிமெண்டு(ளிஸீ பீமீனீணீஸீபீ) உண்டியல் என்று வழங்கப்பட்டவை. தனிநபர் வங்கிகளால் வழங்கப்பட்டவை. ஒன்று கோயில் தொடர்புடையது.

புதுக்கோட்டை,தேவகோட்டை,காரைக்குடி பகுதிகளில் வாழும் நாட்டுக்கோட்டைச் செட்டியார் எனப்படும் நகரத்தார் சென்ற நூற்றாண்டுகளில் பர்மா,மலேயா,இலங்கை போன்ற நாடுகளில் வணிகம் செய்து பொருள் ஈட்டினார்கள்.. இன்றைய தமிழக வங்கிகளின் தோற்றம் மற்றும் வளர்ச்சிக்கு இவர்களே காரணமானவர்கள்.

இவர்கள் கடல் கடந்த நாடுகளில் நாணயப் பரிமாற்றங்களுக்குச் சில நடைமுறைகளை பின்பற்றினார்கள். அந்நடைமுறைகள் இன்றைய வங்கிகளில் காசோலை(**Cheque)**, வரைவோலை(**Draft**), வைப்புத் தொகை (**Deposit**) ஆகியவற்றை ஒத்துள்ளன.நடப்பு வட்டி (நாள் வட்டி),தவணை வட்டி(மாதக் கூட்டுவட்டி) என்ற முறைகளில் வட்டியை கணக்கிட்டு உள்ளனர்.

பர்மாவில் ரெங்கோன், மோல்மேன் ஆகிய இடங்களுக்கும் இந்தியாவில் தமிழகம், வங்காளம் ஆகிய இடங்ளுக்குமிடையே வழங்கிய இங்கு குறிப்பிடப்படும் ஆவணங்கள் தமிழிலேயே அச்சிடப்பட்டுள்ளன. தேவைக்கு ஆங்கிலச் சொற்களும் இடம்பெற்றுள்ளன. ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருந்தாலும் அதில் தமிழிலேயே சொற்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தமிழர் தமிழிலும், வங்காளியர் வங்காளத்திலும், பர்மியர் அவரது மொழியிலும் கையொப்பமிட்டுள்ளனர். ஒன்றில் பாண்டியன் பிரஸ், மதுரை என்று அச்சகத்தின் பெயரும் உள்ளது.

(இவ்வாவணங்களில் பலவற்றில் தமிழில் கையால்எழுதும்போது மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியிடவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் அச்சில் புள்ளியிடப்பட்டுள்ளன.)

பணம் கொடுக்கும்போதும் தீரும்போதும் ஆங்கிலேய அரசின் (ஓர் அணா) முத்திரை ஒட்டியுள்ளனர். பணம் கொடுத்துத் தீர்வதைக் குறிப்பிட 'செல்' எழுதிக் கொடுத்தல் என்ற வாசகமும் காணப்படுகிறது. இரப்பர் முத்திரையால் 'பணம் கொடுத்தது' என்று குறுக்கே பதித்துள்ளனர். 'தீர்ந்தது' என்றும் எழுதியுள்ளனர். தமிழ் எண்களும் அரேபிய எண்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கருப்பு மையினாலேயே எழுதியுள்ளனர்.

உண்டியல் 1

உ சிவமயம்

Rs.150அ.க.அ.ள.A.K.A.L. No.54/ ருயசு

கூஅஅள சூலாகி மீ யச உ ரெங்கோனில் வ.குலாம் நசீப்பு வரவு அ.க.அ.ள. கடை பற்று ரூபாய் (ளருய) யிந்த ரூபா னூத்தி அன்ம்பதும் மருணரில் யிந்த உண்டியல் கொண்டு வருகிற பேற்கள் வசம் வங்காளத்தில் அ.க.அ. வீறப்ப செட்டியார் பணங்கொடுத்து இந்த உண்டியலில் செல்லெழுதி தறச்சொல்லி வாங்கி கட்டிக் கொள்ள வேண்டியது.

சற்வசித்து இப்படிக்கி
ஆடி மீ அ.க.அ.ள. கூட்டாளி
ரு உ அருணாசலம் செட்டி

(குறிப்பு: ரெங்கோன் அ.க.அ.ள. என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ள முட்டை வடிவ இரப்பர் முத்திரை குத்தப்பட்டுள்ளது. மருணர் என்பது **(Mariner)** கப்பலின் பெயராக இருக்கலாம். குறுக்கே தீர்ந்தது என எழுதப் பட்டுள்ளது. பின்புறம் ஆங்கிலேய இந்திய அரசின் ஒரு அணா முத்திரை ஒட்டப்பட்டுப் பெற்றவர் கையொப்பம் இட்டுள்ளார். மேலும் மூன்று கையொப்பங்களும் பின்புறமுள்ளன.)

உண்டியல் 2



மா.அ.பெ.ரி அ.க.அ.மெ
மாற்றூர் இரங்கூன்
No. 68 Rs.200

விஜய வருஷம் சித்திரை மீ ச உ காறக்குடி ராய. ராம. வரவு மாற்றூர் ஜன்னூற்றீஸ்வரர் பெரியநாயகியம்மன் பற்று ரூ உா இந்த ரூபாய் இருநூறுக்கும் நாளது மீ நாளது உ முதல் கொண்டு இரங்கூன் நடப்பு வட்டியுடனிவ் வுண்டியல் கொண்டு வருகிறவற்கள் வசமவ்வூரில் அ.க.அ.மெ. கூட்டாளி முருகப்ப செட்டி பணங்கொடுத்திதிற் செல்லுடன் பெற்றுக்கொண்டு மா.அ.பெ.ரி.கணக்கிற் பத்தெழுதிக் கொள்ளவும்.

இந்தப்படிஇராமநாதன் செட்டி

(குறிப்பு: தலைப்பில் வாகுமாலை அணிவிக்கப்பட்ட சிவலிங்கத்தின் படம் அச்சாகியுள்ளது. மாற்றூர் மா.அ.பெரி என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் இரப்பர் முத்திரை உள்ளது. ‘நாளது’ என்ற சொல் குறியீடுகளின் மூலம் காட்டப்பட்டுள்ளது. இராமநாதன் செட்டி என்ற கையொப்பம் 1 அணா முத்திரை ஸ்டாம்ப் மீது இடப்பட்டுள்ளது. மதுரை

பாண்டியன் பிரஸ் என்று பக்கவாட்டில் அச்சாகியுள்ளது. அ.க.அ.மெ. என்பது அ.க.ரா.அரு என்பதை அடித்து அதன்மேல் எழுதப்பட்டுள்ளது. கோயில் பணத்தை முதலில் ஒருவரும் பிறகு மற்றொருவரும் இரங்கூனில் நிர்வகித்துள்ளனர் என்பதை இது காட்டுகிறது.)

அண்டிமெண்டு 1

உ

சிவமயம்

Rangoon இரங்கோன்

Rs.700/அ.க.அ.மெ. A.K.A.M Calcutta

No.உயரு

சஷஅளசயச சுலாய் மீ உயரு உ அண்டிமெண்டு முனு சம்பிரநுபகுசு ஆடருக்கு கொண்டு வந்தார். கேட்கும்போது ரூபாய் (எள) யிந்த யெளனூரும் மட்டும் வங்காளத்தில் அ.க.அ. சிதம்பரம் செட்டியார் கொடுக்க வேண்டியது.

செய *அ.க.அ.மெ. ஏஜெண்டு*

ஆடி மீ *முருகப்ப செட்டி*

சு உ

(குறிப்பு: பின்புறம் 1 அணா முத்திரை ஸ்டாம்பு ஒட்டப்பட்டு அதன்மீது அ.க.அ.மெ. ரங்கூன் என்ற இரப்பர் முத்திரை இடப்பட்டுள்ளது. வங்காளம் அல்லது பர்மிய எழுத்தில் இரண்டு கையொப்பங்கள் உள்ளன, ‘செய ஆடி மீ யரு உ செக்கு உசநபி வசம் ரூ எள ம் கொடுத்தது என்றுள்ளது. ஆடி மாதம் 6 ஆம் தேதி வழங்கி 15 ஆம் தேதி (9 நாட்களில்) இந்த அண்டிமெண்டு தீர்ந்துள்ளது.)

அண்டிமெண்டு 2

உ

சிவமயம்

மோல்மேன் *Moulmein*

Rs. 350/ச.தே.மெ. S.T.M No 80

ON DEMAND 94 நவம்பர் மீ 12 உ அண்டிமெண்டு செய அப்பிய மீ உயச உ அ.சு.செ. கடை ஆடருக்கு அல்லது கொண்டு வந்தாற் வசம் கேட்கும்போது ரூபாய் ஥ளருய யிந்த ரூபாய் முன்னூத்தி அன்பது மட்டும் கொடுக்கிறது.

அ.க.அ.மெ. ச.தெ.மெ.லெக்ஷ்மணன் செட்டி

குளந்தையன் செட்டி

ரெங்கோன்

(குறிப்பு: பக்கவாட்டில் நடுவில் ‘ பணம் குடுத்தாச்சுது’ என்று எழுதப்பட்டுள்ளது. பின்புறம் 1 அணா ஆங்கிலேய அரசு முத்திரை ஸ்டாம்பு ஒட்டப்பட்டுள்ளது. அதன்கீழ் ‘**Pay to the Order of Kaseem Ibrahim Mahtar not other**’ என்று எழுதி வங்காள எழுத்தில் கையொப்பமுள்ளது. அதன்கீழ் ‘யிதில் கண்ட ரூபாய் பெத்துக்கொண்டோம் அ.சு.செ. ஆடற் ராமனாதன்’ என்று எழுதப்பட்டுள்ளது.)

காசோலை ஒத்த ஆவணம்

உ

சிவமயம்

No.75

மீனாக்ஷி சுந்தரேஸ்பராள் துணை

Rangoon *2810 1919*

வெ.வெ.கரு

V. V. KR. FIRM

No. 4 MOGUL STREET

Pay to ***தனக்கு*** *or Bearer Rupees* ***அய்நூரு மட்டும்*** *and debit same to my account*

Rs 500/ ***சா.சி.சு.ராமு***

(குறிப்பு: இடது பக்கத்தில் ‘**V.V.KR. FIRM Rangoon’** என்று அணிவேலைப்பாடுகளுடன் அச்சிடப்பட்டுள்ளது. அதனருகில் ‘ **A B M Press** 2251 24 3 19 50’ என்று அச்சிடப்பட்டுள்ளது. குறுக்கே ‘பணம் கொடுத்தது’ என்று முத்திரை உள்ளது. பின்புறம் முகம்மது சுல்த்தான் என்று கையொப்பமுள்ளது.)

15.அஞ்சல் உறைகள் தரும் வரலாறு

வரலாற்றை அறிய உதவுகின்ற சாதனங்களுள் அஞ்சல் உறைகளுக்கும் அஞ்சல் தலைகளுக்கும் சிறந்த இடமுண்டு. அவைகள் சுவையான செய்திகள் பலவற்றையும் தருகின்றன. இங்கு இரண்டு அஞ்சல் உறைகள் தரும் செய்திகளைப் பார்ப்போம்.

ஆங்கிலேயர் ஆட்சியில் 1848 முதல் 1856 வரை டல்லௌசி பிரபு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தார். இவர் காலத்தில் நாட்டில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இருப்புப் பாதைகள் போடப்பட்டன. தந்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. பெரிய சாலைகள் போடப்பட்டன. கடிதப் போக்குவரத்து எளிமையாக்கப்பட்டது. அரையணா அஞ்சல் உறைகள் வழக்கத்திற்கு வந்தன.

1908,1910, 1911இல் ஆங்கிலேய அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சில அஞ்சல் உறைகள் கள ஆய்வின்போது கிடைத்தன. 6.5 செ.மீ. அகலமும், 11.5 செ.மீ. நீளமும் உடைய அரையணா தபால் உறைகள் அவை. அதில் ஒன்று காரைக்குடியிலிருக்கும் முரு.லெ.கி.சொ. சொக்கலிங்கம் செட்டியார் என்பவருக்கு 1908 டிசம்பர் 28 ஆம் தேதி அனுப்பப்பட்ட கடிதம்.

இன்று நாம் கடிதம் விரைவாகச் சென்று சேரவேண்டுமென்றால் ஸ்ரீ.வி.ஷி. என்றும் **Speed Post** என்றும் அஞ்சல் உறையில் எழுதி விரைவுத் தபாலை அனுப்புகிறோம். அது போல விரைவுத்தபால் மேலே குறிப்பிட்டவருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவாக அனுப்பப்பட வேண்டும் என்பதைக் குறிக்க ‘ஜரூர் ஜரூர்’ என்று இரண்டு முறை எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இந்த அஞ்சல் உறையின் மேல் எழுதப்பட்டிருக்கும் விலாசத்தின் மூலம் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் தங்கள் பெயரை எழுதும் போது தங்கள் தந்தையார் பெயரின் முதலெழுத்தை மட்டுமின்றி தங்கள் முன்னோர்

பெயர்களின் முதல் எழுத்துக்களையும் சேர்த்து நீண்ட விலாசமாக எழுதும் வழக்கமுடையவர்கள் என்பதும் தெரியவருகிறது.



முருகப்பச் செட்டியார்

லெட்சுமணன் செட்டியார்

கிருஷ்ணன் செட்டியார்

சொக்கலிங்கம் செட்டியார்

என்று இக்கடிதத்தில் நான்கு தலைமுறையினரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதைப்பார்க்கும் போது புகளூர்க் கல்வெட்டில் இதே போல மூன்று

தலைமுறையினரின் பெயர்கள் (கோ ஆதன் செல்லிரும் பொறை மகன் பெருங்கடுங்கோன் மகன் இளங்கடுங்கோன்) குறிக்கப்

பட்டிருப்பது நினைவுக்கு வருகிறது. அது மட்டுமல்லாமல் நகரத்தார்கள் தங்கள் பெயரின் முதல் எழுத்தையே தங்கள் பெயருக்கு முன்னால் எழுதிக் கொள்ளும் வழக்கமுடையவர்கள் என்பதையும் இந்த அஞ்சல் உறை எடுத்துக்காட்டுகிறது.

1911ஐச் சேர்ந்த அஞ்சல் உறையில், 'தாசி.சூரியக்கண்ணு அம்மாள் திருப்பத்தூர்' என்று முகவரி எழுதப்பட்டுள்ளது. இதில் **Personal** என்ப தைக் குறிக்க உறையின் இடது மூலையில் 'தனது' என்ற சொல் காணப்படுகிறது.

கோயில்களில் கலைகளை வளர்ப்பதற்கும் மற்ற கோயிற் பணிகளுக்குமாக அரசர்கள் தேவரடியார்களை நியமித்திருந்ததை கல்வெட்டுகள் மூலம் நாம் அறிவோம். செட்டி நாட்டுப் பகுதிகளில் குன்றக்குடி, திருக்கோஷ்டியூர், திருப்பத்தூர், திருக்கோகர்ணம் போன்ற பழமையான கோயில்கள் உள்ள ஊர்களில் இத்தகைய தேவரடியார்கள் வாழ்ந்திருக்கிறார்கள். தமிழகக் கோயில்களில் 1950 வரை தேவரடியார்கள் என்ற தேவதாசி முறை வழக்கத்தில் இருந்திருக்கின்றது. தேவதாசி முறை ஒழிக்கப்படுவதற்கு முன்பு திருப்பத்தூரில் வசித்தவர்தான் இந்த 'தாசி சூரியக்கண்ணு அம்மாள்'.



மேலே சொன்ன இரண்டு கடிதங்களிலும் மெய்யெழுத்துக்கள் புள்ளியிடப்படாமல், இறுதியில் உள்ள மெய்யெழுத்து மட்டும் புள்ளி

பெற்று காணப்படுகிறது. இரண்டு கடிதங்களிலும் தெருப்பெயர்கள் குறிப்பிடப்படவில்லை.

மற்றொரு கடிதம் சிவகங்கையிலிருந்து பதிவு அஞ்சலில் காரைக்குடியில் வசிப்பவருக்கு வந்துள்ளது. உறையின் மேல் எழுதப்பட்ட பெயர் மட்டும் நான்கு வரிகள் கொண்ட நீண்ட வாசகமாக உள்ளது.


'வன்னியன் சூரக்குடிக் கோவில் குத்தகை

தாரர்களில் ஒருவரான காரைக்குடியிலி

ருக்கும் முரு. லெ.கி. சொக்கலிங்கம்


செட்டியாருக்குக் கொடுப்பது'

என்று எழுதப்பட்டுள்ளது.



கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பவர், சிவகங்கை அரசிடமிருந்து வன்னியஞ்சூரக்குடி என்ற ஊரிலுள்ள பழமையான சிவன் கோ

யிலைக் குத்தகைக்கு எடுத்துத், திருப்பணி செய்த குடும்பத்தாருள் ஒருவர். இச்செய்தியை முகவரியே விளக்குகிறது. இந்தக் கடிதம் அனுப்பப்பட்டபோது அவர் காரைக்குடியில் இல்லை பழனியில் இருந்திருக்கிறார். கடிதம் பழனிக்கு அனுப்பப்பட்டு அங்கு அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அஞ்சல் உறையின் பின்புறம் 'இந்த லெட்டற்தாற் பழனியில்' என்று எழுதப்பட்டுள்ளது. போக்குவரத்து வசதிகள் அவ்வளவாக இல்லாத அந்தக் காலத்தில் 1910 ஏப்ரல் 28 ஆம் தேதி காரைக்குடிக்கு வந்த கடிதம் ஏப்ரல் 30 ஆம் தேதியே பழனியில் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது மிக வியப்புக்குரியது.



இன்றைக்கு ஒரு நூற்றாண்டிற்கு முன்பு அஞ்சல் அலுவலகங்கள் எவ்வாறு செயல்பட்டன என்பதை இந்த அஞ்சல் உறைகள் தெரிவிப்பதோடு, அஞ்சல் உறையின் மேல் எழுதப்பட்டுள்ள முகவரிகள் அந்தந்தப் பகுதி மக்களைப் பற்றியும் தெரிந்துகொள்ள உதவுகின்றன.

16.மேலைச்சிவபுரி - சன்மார்க்க சபையின் மொழித்தொண்டு

'வெள்ளாறது வடக்காம் மேற்குப் பிரான்மலையாம்

தெள்ளார் புனல்வையை தெற்காகும் ஒள்ளியசீர்

எட்டிக்கடல் கிழக்காம் இஃதன்றோ நாட்டரண்சேர்

செட்டிநாட்டு எல்லையெனச் செப்பு'. என்று

நகரத்தார் மரபில் தோன்றிய 'பாடுவார் முத்தப்பர்' பாண்டிய நாட்டில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வாழ்ந்த பகுதிக்கு எல்லை சொல்லுவார்.தற்போது சிவகங்கை மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலுமாக நகரத்தார்கள் வசிக்கும் ஊர்கள் (74) உள்ளன. அவற்றுள் ஒன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள மேலைச்சிவபுரி, இங்கு நகரத்தார்களால் தோற்றுவிக்கப்பட்ட சன்மார்க்க சபை கடந்த ஒரு நூற்றாண்டு காலமாகத் தொடர்ந்து இடைவிடாது தமிழுக்குத் தொண்டாற்றிவருகிறது.

18,19 ஆம் நூற்றாண்டுகளில் கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்று பெரும்பொருள் ஈட்டிய நகரத்தார்கள் ஈட்டியதில் ஒருபகுதியை அறப்பணிகளுக்குச் செலவிட்டனர். முதலில் கோவில் திருப்பணிகளில் ஈடுபட்டவர்கள் பிறகு கால மாறுதல்களுக்கு ஏற்ப தங்கள் அறப்பணிகளின் போக்கை மாற்றிக் கொண்டனர். நகரத்தார்களின் பல்துறைப் பணிகளுள் மொழிப்பணியும் ஒன்று. நகரத்தார்களின் மொழிப்பணி என்னும்போது அவர்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழிக்குச் செய்த தொண்டே இங்கு பேசப் படுகின்றது.

தமிழையும் சைவத்தையும் இருகண்களாகக் கொண்ட நகரத்தார்கள் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பல்வகையிலும் துணைநின்றனர். தமிழ்வளர்ச்சி தொடர்பான அனைத்திலும் ஆர்வலராய் இருந்தனர்,

இருக்கின்றனர். நகரத்தார்கள் தமிழ்மொழிக்குச் செய்த பணிகளைப் பின்வருமாறு பகுத்துக் காணலாம்.

1.சங்கங்கள், கழகங்கள் கல்விச் சாலைகள் முதலிய நிறுவனங்கள் வாயிலாகச் செய்த தமிழ்ப்பணிகள்

2. தமிழ்ப்புலவர்களை ஆதரித்துப் போற்றியமை

3. சமயத்துறை வாயிலாகச் செய்த பணிகள்

4. இதழ்கள் மூலமாகச் செய்த பணிகள்

5. பதிப்பகங்கள் வாயிலாகச் செய்த பணிகள்

6. நகரத்தாரின் பல்துறைப் படைப்புக்களும் பணிகளும்

7. வெளிமாநிலங்களிலும் அயல் நாடுகளிலும்

செய்தபணிகள்

சன்மார்க்கசபையின் தோற்றம் :

நிறுவனங்கள் வாயிலாகச் செய்த பணிகளுள் முதன்மையானது மேலைச்சிவபுரி சன்மார்க்கசபை மூலமாகச் செய்த பணியாகும். இவ்வூரைச் சேர்ந்த வ.பழ.சா. பழநியப்பச் செட்டியார், பண்டிதமணி மு.கதிரேசனாருடன் நட்புக் கொண்டிருந்தார். பழநியப்பருடைய வள்ளல் தன்மையையும் தமிழ்ப் பற்றையும் கண்ட கதிரேசனார் இப்பண்புகள் நிலைத்தவடிவம் பெறவேண்டும் என்று விரும்பினார். 1901இல் பாண்டித்துரைத் தேவரின் முயற்சியால், மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் தோன்றியது. அதுபோன்ற ஓர் அமைப்பை, மேலைச்சிவபுரியிலும் தொடங்கவேண்டும் என்று பழநியப்பருக்கும் அவரது இளவல் அண்ணாமலையாருக்கும் ஆலோசனை வழங்கினார். அவர்கள் அதனை ஏற்கவே, 1909 ஆம் ஆண்டு சித்திரைத்திங்கள்(13051909) சதய நாளில் அப்பர் பெருமான் குருபூசையோடு “சன்மார்க்க சபை”

சோழவந்தான் அரசன் சண்முகனார் தலைமையில் தொடங்கப் பெற்றது. சபையின் முதல் தலைவராக வ.பழ.சா. பழநியப்பச் செட்டியார் அவர்கள் விளங்கினார்கள்.

சபையின் நோக்கங்கள்:

சபையின் நோக்கங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது. "ஒழுக்கம், கல்வி முதலிய பலவிஷயங்களைப்பற்றி உபந்நியாசங்கள் புரிவித்தலும், தக்க பண்டிதர் ஒருவரை இச்சபையில் உபாத்தியாயராக நியமனஞ் செய்து அங்குச் சேரும் சிறுவர்களுக்குக் கல்விப யிற்றுவித்தலும், சபையில் வந்து படிப்பார் பலருக்கும் உபயோகமாகும்படி தமிழ்சமஸ்கிருத பாஷைகளிலுள்ள முக்கியமான எல்லாப் புத்தகங்களையும் தொகுத்துவைத்தலும், கல்வி ஒழுக்கம் முதலிய விஷயங்களைப் பற்றித்துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு எல்லோருக்கும் இனாமாகக் கொடுத்தலும் இலௌகீக இலக்கண இலக்கிய சாஸ்திர சம்பந்தமான பத்திரிகைகளைத் தருவித்தலும் பிறவுமாம்".

தமிழறிஞரும் சபையும் :

இச்சபை தமிழைப்பரப்ப மேற்கொண்ட முதல்வழி, பல தமிழறிஞர்களைக் கொண்டு தமிழ்ச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி மக்களைக் கேட்கச் செய்ததுதான். சபை தொடங்கியதிலிருந்து ஆண்டு தோறும் மூன்றுநாட்கள் இலக்கியத் திருவிழாவாகச் சபையின் ஆண்டு விழாக் கொண்டாடப் பெற்றது. போக்குவரத்து வசதிகளும் விளம்பரக் கருவிகளும் மின்சாரவிளக்கு முதலிய அமைப்புகளும் பெருகாத அக்காலத்தில் ஒரு கிராமப் பகுதியில் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. பல்வேறு பகுதிகளிலிருந்தும் இலக்கிய விழாவைக் கண்டு, கேட்டு, ரசிக்க சுமார் 3000 மக்கள் வந்தனர். ஒழுங்கான சாலைகளோ பேருந்து வசதிகளோ இல்லாமையால்

ஆண்டு விழாவிற்கு வரும் மக்கள் பல கண்மாய்களைத் தாண்டி மாட்டு வண்டிகளில் வந்தனர். விழாவிற்கு வந்த அனைவருக்கும் வ.பழ.சா குடும்பத்தார் விழா நடந்த மூன்றுநாட்களுக்கும் விருந்து ஏற்பாடு செய்ததோடு அவர்களது வண்டி மாடுகளுக்கும் வைக்கோல் தண்ணீர் முதலியவை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்தனர். இவ்விழாவில் பங்கு கொள்ளாத, சொற்பொழிவாற்றாத தமிழறிஞரோ சைவசித்தாந்த வித்தகரோ இல்லை எனலாம். அவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் அரசஞ் சண்முகனார், டாக்டர் உ.வே.சா, மு.ரா.கந்தசாமிக்கவிராயர், மதுரைத் தமிழ்ச் சங்கத்து ஆசிரியர் நா.சுந்தரேச ஐயர், ம. கோபாலகிருஷ்ண ஐயர், நெடுவை இராமசாமி ஐயங்கார், இரா. இராகவய்யங்கார், மு. இராகவய்யங்கார், டி.சி. சீனிவான ஐயங்கார், கா.சு.பிள்ளை, ந.மு. வேங்கடசாமி நாட்டார், விபுலானந்த அடிகள், திரு.வி.க, ப.சுப்பிரமணிய முதலியார், சி.கே. எஸ், உமா மகேசுவரம் பிள்ளை, கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், ரா.பி. சேதுப்பிள்ளை, ஈசான சிவாச்சாரியார், தெ.பொ.மீ, ஔவை துரை சாமிப்பிள்ளை, இராய. சொ., டாக்டர் மு.வ., நெ.து.சுந்தர வடிவேலு, வ.சுப.மாணிக்கனார், தமிழண்ணல் ஆகியோராவர். ஈழ நாட்டுத் தமிழ்ப்புலவர்களின் தொடர்பும் சபைக்கு நிரம்ப உண்டு.

இச்சபை நிறுவிய பழநியப்பர் சிறிது காலம் பிணிவாய்ப்பட்டிருந்து 1912இல் தமது 39 ஆம் அகவையில் இறந்தார். இவருக்குப் பிணிவந்த சமயம்‘ கொழும்பிலிருந்த தம் தம்பி வருவதற்கு முன்பே எங்கே மரணம் சம்பவித்துவிடுமோ என்று கருதி தமது தம்பியாருக்கு ஒருகடிதம் எழுதிவைத்திருந்தார். அவர் இறந்தபிறகுதான் அக்கடிதம் பார்க்கப்பட்டது.

அதில் காணப்பட்ட முக்கியவரிகள் ‘சன் மார்க்க சபையைத் தளரவிடாது எப்பொழுதும் நீடித்து நடத்தி வருக’ என்பதாகும்.

பழநியப்பர் இறந்தபோது மதுரை ‘வித்யாபாநு ‘ என்ற ‘பத்திரிகையின் அதிபர் மு.ரா. கந்தசாமிக் கவிராயர் பாடிய இரங்கற் பாக்கள், தமிழ்ப்புலவர்கள் மீதும், சன்மார்க்க சபையின் மீதும், பழநியப்பச் செட்டியாருக்கு இருந்த பற்றைக் காட்டுவனவாக உள்ளன. அதில் ஒருபாடல்:

“அறந்தனையே புரிந்துவந்த பழநியப்ப வள்ளால்

நல்லவையைக் கூட்டிச்

சிறந்த பெரும் புலவர் பிரசங்க சிரவணமேவுஞ் செல்வமொன்றே

திறந்த நல்லுயிர்த் துணையென்றிருந்தனை சன்மார்க்கசபைச்

சிறப்பைக்கூட

மறந்தனையோ மறந்தனையோ மறந்தனையோ

வணிகர் வாழ்வே”.

புலவர்களை ஆதரித்தமை :

சபை, தமிழ்ப்புலவர்களைப் போற்றி ஆதரிப்பதையும் தம் கடமையாகக் கொண்டிருந்தது. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் குடும்பத்திற்குச் சபையின் முயற்சியால் நிதிதொகுத்து வழங்கப் பெற்றது. தமிழ்ப் புலமை மிக்கோருக்குப் பட்டங்கள் வழங்கிச் சிறப்பித்தது. இரா. இராகவய்யாங்காருக்கு “மகாவித்துவான்” பட்டமும் மு.கதிரேசன் செட்டியாருக்கு “பண்டிதமணி” பட்டமும் வழங்கிற்று. கதிரேசனாருக்கு “பண்டிதமணி” என்ற பெயரே இயற்பெயர் போல நிலைத்து விட்டது. பண்டித மணியின் வளர்ச்சிக்குச் சபை பெரிதும் காரணமாயிருந்தது. பண்டிதமணியினால் சபை வளர்ந்தது; சபை யினால் பண்டிதமணி வளர்ந்தார் என்பதே உண்மை.

நூல் வெளியீடு :

நல்லபல தமிழ்நூல்களை வெளியிடுவது மூலமாகவும் சபை தமிழ்த் தொண்டு புரிந்தது. வடமொழி, தமிழ் ஆகிய இருமொழிகளிலும் புலமை பெற்ற பண்டிதமணி, சுலோசனை உதயணசரிதம், மிருச்சகடிகம் (மண்ணியல் சிறுதேர்) சுக்கிரநீதி ஆகிய நூல்களை வடமொழி யிலிருந்து தமிழில் மொழிபெயர்த்தார். அவரது மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டு சன்மார்க்க சபை மொழிபெயர்ப்புத் தொண்டை ஆதரித்தது. பண்டிதமணியின் வேறு பல நூல்களையும் சபை வெளி யிட்டது.

சபை வெளியிட்ட நூல்கள் :

1.சுலோசனை 2.உதயண சரிதம் 3. சுக்கிரநீதி 4. மண்ணியல் சிறுதேர் 5. உரை நடைக் கோவை (சமயம்) 6. உரைநடைக்கோவை (இலக்கியம்) 7. பண்டிதமணியின் திருச்சதக உரை 8. நீத்தல் விண்ணப்பம் 9. திருவெம்பாவை (திருவாசகம் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம். திருவெம்பாவை பகுதிகட்டு பண்டிதமணி எழுதிய கதிர்மணி விளக்க உரைநூல்கள்) 10.சபைக்கட்டுரைகள் 11.நாட்டுக்கோட்டை நகரத்தார் சீர்திருத்தம் 12. பண்டிதமணியின் நடைநயம் 13. பண்டிதமணியின் நாடகத்திறன் 14. ஊன்றுகோல் 15. பண்டிதமணி பிள்ளைத்தமிழ் 16. நாட்டுக் கோட்டை நகரத்தார் வரலாறு 17. இலக்கிய நயம் 18. பொருள் நூல் 19.பதிற்றுப்பத்து அந்தாதி.

மேலும் சைவத்தை வளர்க்கும் முகமாக “ ஆடுகோழி அடைக்கல விண்ணப்பம்”, “சைவசமயிக்கும் பாதிரியாருக்கும் நடந்த உரையாடல்”, “சிவாலய வெளியீடுகள்” போன்ற துண்டு வெளியீடுகள் ஆயிரக்கணக்கில் விலையின்றி இச்சபைமூலம் வழங்கப்பட்டன.இச்சபைக்கு மலேயா, சிங்கப்பூர் நகரத்தார்கள் பொருள் கொடுத்து உதவியுள்ளனர். பண்டிதமணியின் நூற்றாண்டு

விழாவின் போது இச்சபை பண்டிதமணியின் நூல்களை நகரத்தார் பொருளுதவியுடன் மறுபதிப்பாக வெளியிட்டது.

தமிழ் கல்விப்பணி:

தமிழ் வளர்ச்சி பற்றி பேசுவதோடும் எழுதுவதோடும் அமையாது சபை செயல்முறையிலும் காட்டியது. சபை 1909 ல் தானே ஒரு பாடத்திட்டத்தை வகுத்து தமிழ்இலக்கணை இலக்கியங்களை மாணாக்கர்களுக்குப் பயிற்றுவித்து, மாணாக்கர்களுக்கு உதவித்தொகை வழங்கியும், தொலை தூர மாணாக்கர்கள் தங்கிப்பயில இடவசதி செய்து கொடுத்தும் மாணாக்கர்களுக்கு இலவசமாக தமிழ் கல்வி தரப்பட்டது.

1918 ஆம் ஆண்டுமுதல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தோடு தொடர்பு கொண்டு பிரவேச பால பண்டித தேர்வுகளுக்கு மாணாக்கர்களைப் பயிற்றுவித்து அனுப்பியது. 1938ல் சபையின் இதயமாக விளங்கிய கணேசர் செந்தமிழ்க் கலாசாலை, பண்டிதமணி, வ.சுப.மாணிக்கனார் போன்றோரின் முயற்சியால் சென்னைப் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்று கணேசர் செந்தமிழ்க் கல்லூரியாக விரிவடைந்தது. இங்கு ஆசிரியராகவும் மாணாக்கர்களாகவும் இருந்த பலர் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் பணிபுரிந்தனர். மு.அருணாச்சலம் பிள்ளை, மீ. முத்துசாமிப் பிள்ளை., அமிர்தலிங்கம் பிள்ளை தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்குக் குறிப்புரை எழுதிய சோழவந்தான் கந்தசாமியார், தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்குவிளக்க உரை எழுதிய ஆ.பூவராகம் பிள்ளை ஆகியோர் இச்சபையில் பணியாற்றியவர்களே. தமிழண்ணல், மெ.சுந்தரம், முடியரசனார் போன்றோர் இச்சபையின் மாணாக்கர்கள். இவ்வாறாகப் பல தமிழறிஞர்களை உருவாக்கியது இச்சபை.

கணேசர் செந்தமிழ்க் கல்லூரி படிப்படியாக வளர்ந்து. இப்போது



தமிழில் இளங்கலைப் பட்டம், முதுகலைப்பட்டம், ஆய்வுப்பட்டம் ஆகியவற்றைக்கொண்டு, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தோடு இணைந்து செயலாற்றிவருகிறது கல்லூரியின் முதல்வராக இருந்த முனைவர் பழ. முத்தப்பனார் கல்லூரியின் வளர்ச்சிக்கும் சபையின் வளர்ச்சிக்கும் அருந்தொண்டாற்றினார்.

மழலையர் பள்ளி:

சபை, இளமையிலேயே தமிழ்ப் பற்றை ஊட்டும் வகையிலும் குழந்தைகள் இடர்ப்படாமல் கருத்துக்களைப் புரிந்து கொள்ளும் வகையிலும் தாய் மொழியாகிய தமிழ் மொழிவாயிலாகக் கற்பிக்கும் மழலையர் பள்ளி ஒன்றையும் 1981 முதல் தொடங்கி நடத்தி வருகிறது. அரசு அங்கீகாரம் பெற்ற மழலையர் பள்ளி இது.

தொடக்கப்பள்ளியும் உயர்நிலைப் பள்ளியும்

தொடக்கப்பள்ளி ஒன்றையும் இச்சபை தொடங்கி தேவாரம், நீதிநூல்கள் முதலியவைகளையும் கற்பித்து வருகிறது. மேலைச்சிவபுரியில் அரசினர் உயர்நிலைப்பள்ளி ஒன்று அமைக்க ஆவனசெய்து அதற்குரிய நிலத்தையும் சபை நன்கொடையாக அளித்துள்ளது.

சபையின் தமிழ்வளர்ச்சிக்கான தீர்மானங்களும் செயல்பாடுகளும்:

1932 ல் சபையின் 23 ஆம் ஆண்டு விழாவின் போது, தமிழ் வளர்ச்சி கருதி பண்டிதமணியின் தலைமையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவைகள்:

1. தமிழ் நாட்டரசராக விளங்கும் புதுக்கோட்டை அரசரைத் தமது ஆட்சியில், சென்னை பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஒரு தனித்தமிழ்க் கல்லூரி ஏற்படுத்தி நடத்துமாறு இச்சபையார் வேண்டிக் கொள்கின்றனர்.

2. சென்னை இராசதானிக் கல்லூரி, கும்பகோணம் அரசினர் கல்லூரி இரண்டிலும் பி.ஏ வகுப்பில் 5ஆம் பகுதியில் தமிழ்ப்பாடம் சொல்லிக்கொடுக்கத் தகுந்த வசதிகளை ஏற்படுத்தும்படி அரசாங்கத்தாரை இச்சபையார் வேண்டிக் கொள்கின்றனர்.

3 சென்னைப் பல்கலைக்கழகத்தார் தமிழ்மொழி பயில்பவருக்கு பி.ஏ. ஆனர்ஸ் பட்டம் வழங்க வெகு விரைவில் ஏற்பாடு செய்யும்படி மேற்படி கழகத்தாரையும், அதற்குத் தகுந்த வகுப்புக்களை ஏற்படுத்த அரசாங்கத்தையும் இச்சபையார் வேண்டிக் கொள்கின்றனர்

4. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார்களை அவர்கள் ஏற்படுத்தியிருக்கும் வடமொழி; சிரோமணி வகுப்புக்களுக்கு ஒப்பத் தமிழிலும் இலக்கணம், இலக்கியம். சித்தாந்தம், வேதாந்தம் மருத்துவம் சோதிடம் முதலிய பிரிவுகளையும் ஏற்படுத்தி நடத்தும்படி

இச்சபையார் வேண்டிக் கொள்கின்றனர்.

5. இராமேசுவரம் தேவஸ்தானத்தார் நடத்திவரும். கல்லூரியில் தனித்தமிழ் வகுப்பும் ஏற்படுத்தும்படி இச்சபையார் வேண்டிக் கொள்கின்றனர்.

6. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாரை நடுத்தரக் கல்வியில் (**Secondary education)** ஆங்கிலம் தவிர்த்த ஏனைய பாடங்களைத் தாய் மொழியிலேயே கட்டாயமாகச் சொல்லிக் கொடுக்கும்படி இச்சபையார் வேண்டிக் கொள்கின்றனர்.

7. பள்ளியின் இறுதித் தேர்வுக்கு தமிழ் கட்டாய பாடமாக இல்லாமல் இருப்பதால் மாணவர்களில் சிலர் முதல் தரத்திலேயே **(First Form)** தமிழைவிடுத்துப் பிற மொழிகளைப் படிப்பதால் அவர்களது தமிழறிவு குறைந்து வருவது வருந்தத் தக்கதாயிருக்கிறது, என்பதையும் முன்போல் தமிழில் ஒரு பகுதியையாவது கட்டாயப் பாடமாக ஏற்படுத்த வேண்டும்மென்பதையும் இச்சபை தெரிவித்துக் கொள்கின்றது.

8. தமிழ் மொழியை வளர்ப்பதற்கு முயன்றுவரும். சங்கங்கள் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்கும்படியும் ஆண்டு தோறும் ஒவ்வோரூரில் தமிழ்மாநாடு கூடி இச்சங்கங்கள் உறுப்பினர்களை அனுப்பித் தமிழ் வளர்ச்சிக்குரிய பலமுடிவுகளை நடைமுறைக்குக் கொண்டு வரும் வழிகளில் முயலும்படி இச்சபையார் கேட்டுக் கொள்கின்றனர்.

மேற்கூறிய தீர்மானங்களில் பல நடைமுறைக்கு வந்துள்ளதை நாமறிவோம். சபையும் மேற்கூறிய முறையில் தமிழ் வளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

தொல்காப்பியர் நூலகம் :

சபையின் முக்கியமான நோக்கங்களுள் ஒன்று நூலகம்

அமைத்தல். 1910 ல் 'தொல்காப்பியனார் புத்தக சாலை தொடங்கப் பெற்றது. தொல்காப்பியர் பெயரால் அமைந்த முதல் அமைப்பு இதுவாகும். கிடைத்தற்கரிய பழைய நூல்களும், பழைய இதழ்களின் தொகுதிகளும், புதிய நூலகளும், இதழ்களும் மாணாக்கர்களுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் பயன்படும் வண்ணம் இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

சபை ஒரு வழிகாட்டி :

செட்டிநாட்டில் இன்று காணும் தமிழறிவுப் பெருக்கத்திற்கு இச்சபையே விளைநிலம் எனலாம். தென் தமிழ்நாட்டில் திருச்சி, மதுரை பழைய ராமநாதபுர மாவட்டம், திருநெல்வேலி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் தமிழ் வித்துவான் வகுப்பு நடத்த ஏற்பட்ட முதற் கல்லூரி சன்மார்க்க சபையின் அங்கமான கணேசர் செந்தமிழ்க் கல்லூரியே ஆகும்.

சபையைப் பின்பற்றி, தனித்தமிழ் ஆர்வலரான காரைக்குடி இராம.பெரி.பெரிய கருப்பன் செட்டியார் காரைக்குடியில் 1964இல் 'இந்திய பல்தமிழ்க்கழகம்' என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தித் தமிழை வளர்க்கப் பெரும் பொருள் செலவிட்டார். பிறகு அதன் வளர்ச்சியாக 1967ல் "இராமசாமி தமிழ்க் கல்லூரி"யை ஏற்படுத்தினார். இவ்விரண்டு கல்லூரிகளும் செட்டிநாட்டுப் பகுதியில் மொழிப்பணியைத் தொடர்த்து செம்மையாகச் செய்து வருகின்றன. இது தவிர பல சங்கங்களும் கழகங்களும் செட்டிநாடு முழுவதும் தோன்றி தமிழ்ப் பணி செய்து வருவதற்கு இச்சபையே வழிகாட்டியாகும்.

மேலைச்சிவபுரி வ.பழ.சா. குடும்பத்தாரால் நிர்வகிக்கப்பட்டு வருகிற சன்மார்க்க சபை, பண்டிதமணி, வ.சுப.மாணிக்கனார் தமிழண்ணல் ஆகிய தமிழ்ச் சான்றோர்களால் வளர்க்கப்பட்டு, வெள்ளி விழா, பொன்விழா, வைரவிழா, முத்துவிழா கண்டு, 1909

லிருந்து ஆரவாரமில்லாமல் தொடர்ந்து தமிழ்ப் பயிரை வளர்த்து வருகின்றது. நாட்டுக் கோட்டை நகரத்தார்களின் தமிழ் உணர்விற்கு இச்சபை ஓர் எடுத்துக்காட்டாகும்.

துணைநூற்பட்டியல்

1.சபைக் கட்டுரைகள் வ சுப மாணிக்கம்

2.சன்மார்க்க சபை முத்துவிழாமலர்

3.செட்டிநாடும் செந்தமிழும் சோமலெ

4.தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் மது.ச. விமலானந்தம்

5.நகரத்தார் கலைக்களஞ்சியம் பதிப்பாசிரியர் ச.மெய்யப்பன்

6. பண்டிதமணி சோமலெ.

7.மேலைச்சிவப்பட்டி கன்மார்க்க சபையின் நிரந்தர அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் வ.பழ.சா பழனியப்பா செட்டியாரவர்கள் சிவபதமடைந்தமை பற்றி அனுதாபக் கூட்டத் தீர்மானமும் பல வித்துவான்கள் இயற்றிய இரங்கற்பாக்களும் சன்மார்க்க சபை வெளியீடு.

17. நகரத்தாரின் அன்னதான மடங்களும் சத்திரங்களும்

18,19 ஆம் நூற்றாண்டுகளில், திரைகடல் ஓடித் திரவியம் தேடிய நகரத்தார்கள் தேடியதில் ஒருபகுதியைத் தருமப்பணிகளுக்காக “மகமைப்பணம்“என எடுத்துவைத்தனர். நகரத்தார்களின் ஐந்தொகைப் பேரேட்டில் (வரவு செலவு கணக்கு) தருமக் கணக்கு என்றே ஒருபகுதி இருக்கும். சிறுதுளிப் பெரு வெள்ளமாக வளர்ந்த அப்பணத்தைக் கொண்டு பலவகையான தருமங்களைச் செய்தனர்.

குறிப்பாக, சமுதாய மையங்களாக விளங்கும் கோயில் திருப்பணிகளில் அதிகஅளவில் ஈடுபட்டனர். திருப்பணிகள் செய்த கோயில்களை ஒட்டிக் குளங்கள், ஊருணிகள், நந்தவனங்கள், பசுமடங்கள் முதல் பல்வகை மடங்கள், விடுதிகள், சத்திரங்கள், வேதபாடசாலைகள் தேவாரப்பாடசாலைகள், ஆகம பாடசாலைகள் முதலியவற்றை ஏற்படுத்தினர்.

தானத்தில் சிறந்தது அன்னதானமே என்பதை நன்கு உணர்ந்திருந்த நகரத்தார்கள், போக்குவரத்து வசதிகள் அதிகமில்லாத அக்காலக்கட்டத்தில் யாத்திரிகர்களும், வழிப்போக்கர்களும் தங்கி இளைப்பாறி உணவருந்திச் செல்லும்பொருட்டு தாங்கள் திருப்பணிகள் செய்த கோவில்களையொட்டியும் மற்றும் பல தலங்களிலும் அன்னதானமடங்களையும் அன்னதான சத்திரங்களையும் கட்டினர். காசி முதல் இராமேசுவரம். வரை நகரத்தார்கள் ஏற்படுத்திய சத்திரங்கள் இன்றளவும் நல்ல நிலையில் இயங்கிவருகின்றன.

பழமையான மடங்கள்:

நகரத்தார்கள் ஏற்படுத்திய அன்னதான மடங்களுள் காலத்தால் முற்பட்டவை குன்றக்குடி அன்னதான மடம், பழனி அன்னதானமடம், திருவண்ணாமலை ஓயாமடம் ஆகியவையாகும்.

குன்றக்குடியில் கிரிவலம் வரும்பாதையைச் சுற்றிப் பல ஊர் நகரத்தார்கள் மடங்கள்கட்டி அன்னம் பாலித்து வருகின்றனர். சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னர் நெற்குப்பை குப்பாப்பிச்சஞ் செட்டி குமரப்பன் என்பவர் உப்பு வணிகம் செய்வதற்காக பழனிப் பட்டணத்திற்குச் சென்றார். கிடைத்த இலாபத்தில் பழனி முருகனுக்கும் ஒரு பங்கு வைத்து வணிகம் செய்தார். லாபத்தில் ஒரு பகுதியை மகமைப் பணமாக எடுத்துவைத்து பழனியில், ஆவணி மூல வீதியில் உள்ள தெய்வநாயக பண்டாரத்தின் இல்லத்தில் முதலில் மூன்று பரதேசிகளுக்குச் சோறுவடித்துப் போட்டு அன்னதானத்தை துவக்கினார். பின்னர் பண்டாரத்தின் இல்லத்திலேயே அன்னதான மடம் உண்டாயிற்று. நகரத்தார்கள் இன்றளவும் ஒவ்வோர் ஆண்டும் தைமாதம் புனர்பூசநட்சத்திரம் தொடங்கி ஐந்து நாட்கள் வரை, இலட்சக்கணக்கானோருக்கு அன்னதானம் அளித்து வருகின்றனர்.

திருவண்ணாமலைத் திருத்தலத்தில் நகரத்தார்கள் செய்த திருப்பணிகள் அளவிடற்கரியன. இங்கும் நகரத்தார்கள் அன்னதான மடங்களையும் சத்திரங்களையும் ஏற்படுத்தியுள்ளனர். அவற்றுள் பழமையானது திருஊடல் தெருவில் அமைந்துள்ள ஓயாமடம் ஆகும் ஓயாது பெய்யும் மழை போல் ஓயாமல் எப்போதும்‘ அன்னம் பாலித்ததால் இது ‘ஓயாமடம்‘ என்றும் ‘ஓயாமாரி மடம்‘ என்றும் அழைக்கப்பட்டது. 1872 இல் தோற்றுவிக்கப்பட்ட மெ.க அன்னதானச் சத்திரமும், 1889இல் ஆரம்பிக்கப்பட்ட சாதுக்கள் சத்திரமும் திருவண்ணாமலைத் திருத்தலத்தில் அன்னதானப் பணியையும் ஆன்மீகப் பணியையும் கல்விப்பணியையும் சிறப்பாகச் செய்து வருகின்றன.

தை மாதந்தோறும் பழனிக்குப் பாதயாத்திரையாக சென்று முருகனை வழிபடும் நகரத்தார்கள் சித்திரை மாதந்தோறும் சோழநாட்டுத் தலமான வைத்தீசுவரன் கோயிலுக்கு பாதயாத்திரையாகச்



செல்லும் வழக்கமுடையவர்கள், இத்தலத்திலும் நகரத்தார்கள் சத்திரங்களை ஏற்படுத்தியுள்ளனர்.கி.பி 1880. இல் தோற்றுவிக்கப்பட்ட தூ.க.அன்னதான சத்திரமும், கீழச்சிவல்பட்டி நகரத்தார் அன்னதான சத்திரமும் குறிப்பிடத்தக்கவை.

கடலூர் மாவட்டம் திருப்பாதிரிப்புலியூரில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் கோவில் திருப்பணி செய்தவர் கடியாப்பட்டி தீ.நாச்சியப்ப செட்டியார் ஆவார். இவர், தனக்கு எண்பது ஆண்டுகள் நிறைந்த போது, சதாபிடேகம் செய்து கொள்ள வசதியும் வாய்ப்பும் இருந்தபோதும்,சதாபிடேகம் செய்து கொள்ளாமல் அதற்காகும் பொருட் செலவில் தாம் திருப்பணிசெய்த திருப்பாதிரிப்புலியூரில் ஓர் அன்னதான சத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறார். நகரத்தார்கள் அரிதில் முயன்று ஈட்டிய பொருளை ஆடம்பரத்தின் பொருட்டு செலவிட

மனமில்லாதவர்கள், அதேசமயம் அறப்பணிகளுக்குச் செலவிடத் தயங்காதவர்கள் என்பதற்கு இச்சத்திரம் சிறந்ததோர் சான்றாகும்.

வைணவத்தலங்களிலும் நகரத்தார்கள் சத்திரம் ஏற்படுத்தி அன்னதானப் பணியை நடத்தி வருகின்றனர். ஸ்ரீரங்கத்தில் 1860 இல் அரியக்குடி நகரத்தாரால் தோற்றுவிக்கப்பபட சித.சத்திரம் குறிப்பிடத்தக்க சத்திரமாகும்.

சைவ, வைணவ ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக, விளங்கும் இராமேசுவரத்தில், வட இந்திய பக்தர்களின் வசதிக்காக, கண்டனூர் நகரத்தாரால் 1918இல் ஆரம்பிக்கப்பட்டது, ‘ இந்துஸ்தானி சதாவிருத்தி ’ சத்திரமாகும். இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் சத்திரம் இது. மிகத் தொலைவிலிருந்து வரும் வடநாட்டவர்களுக்கு இச்சத்திரத்தில் ‘சதாவிருத்தி ‘எனப்படும் இலவச உணவு வழங்கப்பட்டது. எவ்வளவுபேர் வந்தாலும் முன்பு மூன்று நாட்களுக்கும், தற்போது இரண்டு நாட்களுக்கும் வேண்டிய கோதுமைமாவு, பருப்பு, மிளகாய்வற்றல், உப்பு, விறகுக்கட்டு முதலியன கொடுக்கப்பட்டு வருகின்றன. வடநாட்டவர்களிடையே புகழ்பெற்ற சத்திரம் இது.

இவ்வாறு பலதலங்களிலும் நகரத்தார்கள் சத்திரங்களை ஏற்படுத்தியுள்ளனர். அச்சத்திரங்களிலுள்ள கல்வெட்டுக்கள், அதன் வரலாறுகளைக் கூறிக்கொண்டிக்கின்றன. தேவகோட்டையில் முதன்முதலாகச் சத்திரம் ஏற்படுத்திய காரணத்தால் அக்குடும்பத்தாருக்கு “சத்திரத்து வீட்டார்” என்ற பெயர் இன்றளவும் வழங்கி வருகின்றது.


187778ல் தமிழகத்தில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. அதை “ஈசுவர வருடத்துப் பஞ்சம்“ என்று குறிப்பிடுவர். அதுபோலவே “தாது வருடப் பஞ்சம்“ என்றும் சென்ற நூற்றாண்டில் பஞ்சம் ஏற்பபடது. அத்தகைய பஞ்ச காலங்களில் நகரத்தார்கள்

ஆங்காங்கே 'கஞ்சி மடங்கள்' அமைத்து ஏழை எளியோருக்குக் கஞ்சி வார்த்திருக்கிறார்கள்.

வட இந்திய நகரச் சத்திரங்கள் :

தென்னிந்தியாவில் மட்டுமல்லாமல் தாங்கள் வணிகத்தின் பொருட்டு வட இந்தியாவிற்குச் சென்ற போது அங்குள்ள முக்கிய தலங்களிலும் சத்திரங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

தூத்துக்குடி, நாகப்பட்டினம்,சென்னை, புதுச்சேரி ஆகிய கிழக்குக் கடற்கரையிலுள்ள துறைமுகங்களின் வாயிலாகக் கடற்கரையை ஒட்டி பாய்மரக்கப்பல்கள் மூலமாக கல்கத்தாவிற்குச் சென்ற நகரத்தார்கள் காசி விசுவநாதர் பால் ஈடுபாடு கொண்டு காசியில் ஓர் இல்லம் அமைத்துக் காசிவிசுவநாதருக்கு அபிடேகங்களுக்குரிய பொருட்களைக் கொடுத்தும் ஏழைகளுக்கு உணவளித்தும் வந்தனர். இவ்வாறு ஐம்பது ஆண்டுகள் சென்ற பிறகு 1863 ல் ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்தை உருவாக்கினர்.அச்சத்திரத்தை ஏற்படுத்திய போது 'அன்னதானமடம்' என்றே அழைத்தனர் என்பதை அங்குள்ள கல்வெட்டால் அறிகிறோம்.



இச்சத்திரத்திலிருந்து விசுவசாதர், விசாலாட்சி அன்னபூரணி முதலிய கடவுளர்க்கு வழிபாட்டுக்குரிய பொருட்கள் வருடம் முழுவதும்

குறித்த நேரத்தில் இன்றளவும் அனுப்பப்பட்டு வருகின்றன. பர்மா, நகரத்தார்களுக்குச் செழிப்பாக இருந்த போது இச்சத்திரத்தின் வருவாய் அதிகமாக இருந்த அக்காலத்தில் இங்கு சாதுக்கள், அந்தணர்கள். மாணவர்கள், ஏழைகள், நோயாளிகள், யாத்திரிகர்கள் முதலானார்களுக்கு தினசரி முந்நூறு பேர்களுக்குக் குறையாமல் உணவளிக்கப்பட்டு வந்ததாக அறிகிறோம். (காசிச் சத்திர நூற்றாண்டு விழா மலர்பதிப்பாசிரியர் சோமலெ)

வடநாட்டில் நாசிக் பஞ்சவடி, பிரயாகை அயோத்தி, தாரகேசுவரம், கயா, காலிகட்டம், கோதாவிரி முதலிய முக்கிய தலங்களில் நதிக் கரைகளையொட்டி நகரத்தார்கள் சத்திரங்களை ஏற்படுத்தியுள்ளனர். நதிக்கரைகளையொட்டி சத்திரங்களை கட்டியிருந்தாலும் நதியில் வெள்ளம் வரும்போது பாதிப்பு ஏற்படாவண்ணம், ஆற்றிற்கு மிக அருகில் இல்லாமலும், அதே சமயம் மிகத் தொலைவில் இல்லாமலும் தொலைநோக்குச் சிந்தனையோடு கட்டியிருக்கிறார்கள்.

நகரத்தார்கள் ஏற்படுத்திய வடநாட்டுச் சத்திரங்கள் யாவும் ‘காசிநகரச் சத்திரத்தின் மேற்பார்வையில், காலத்திற்கேற்றவாறு சத்திரப்பணியைச் செம்மையான முறையில் செய்து வருகின்றன.

“ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்”

என்ற குறளில் வள்ளுவர், பசி பொறுக்கும் தவ ஆற்றலைக் காட்டிலும், பசி போக்கும் ஈதலின் ஆற்றலே பெரிது என்கிறார். அதைத்தான் நகரத்தார்கள் மனிதநேய அடிப்படையில் அன்னதான சத்திரங்கள் மடங்கள் மூலமாகச் செய்து வருகின்றனர்.

18.செட்டிநாடும் திருமடங்களும்

முன்னுரை :

முடிமன்னர் ஆட்சிக்குப் பின்னர், ஐரோப்பியர் ஆட்சியில் தமிழகக் கோயில்கள் பேணுவாரின்றி இருந்தபோது நகரத்தார்கள் சைவத்திற்குத் தங்களால் ஆன தொண்டினைச் செய்தார்கள். இந்து சமயத்தின் தூண்களாக விளங்குகின்ற ஆலயங்களை, குறிப்பாக பாடல் பெற்ற தலங்களைத் திருப்பணி செய்தனர். தொழில்துறை காரணமாகச் சென்றநாடுகளிலும் ஆலயங்களை நிறுவி அங்கெல்லாம் சைவத்தையும், தமிழையும், திராவிடச் சிற்பக்கலை மரபையும் வளர்த்தனர்.

தாங்கள் திருப்பணிசெய்த கோயில்களை ஒட்டி கோயில் வழிபாடுகள் சிறப்புற நடைபெறுவதற்காகவும் கோயிலுக்கு வழிபட வரும் அடியார்களின் நலன்கருதியும் பலவித ஏற்பாடுகளைச் செய்தனர். கோயில்களையொட்டி நந்தவனங்கள், பசுமடங்கள், அன்னதான மடங்கள், சத்திரங்கள், விடுதிகள், ஊருணிகள், தேவார திருவாச திருப்புகழ் பாடசாலைகள் வேதபாடசாலைகள் ஆகமபாடசாலைகள், அறுபத்துமூவர் மடங்கள், நால்வர் குருபூசை மடங்கள் என்ற பல்வகை மடங்களை ஏற்படுத்தினர். மடங்களைப் பொறுத்தவரை யில்,பசுமடங்கள், அன்னதானமடங்கள், கஞ்சி மடங்கள், திருவாசக மடங்கள், திருமந்திரமடம், திருப்புகழ் மடம், அறுபத்துமூவர் மடம், நால்வர் குருபூசை மடம், ஏகாதசி மடம், துவாதசி மடம், கார்த்திகை மடம், சனி மடம், சாதுக்கள் மடம், ஞானியார் மடம், இராக்கால மடம், விபூதி மடம், குங்குலிய மடம், பன்னீர் மடம், நடன மடம், உப்புமடம், ஊறுகாய் மடம், சமயதீட்சைக்கான மடங்கள், வேதாந்த மடங்கள் போன்ற பல்வகை மடங்களை ஏற்படுத்தினர்.தாங்கள் திருப்பணி செய்த கோயில்களுக்கு வழிபாட்டுக்குரிய பொருட்களை கொடுத்து உதவுவதற்காகவும் வழிபாடு செய்யவரும் அடியவர்க்கு உதவும்

பொருட்டும், சமயக்கல்வி மற்றும் சமய தீட்சை தொடர்பாகவும் இம்மடங்கள் ஏற்படுத்தப்பட்டன.

பசுமடங்கள்

திருவெண்ணீற்றுக்கு மூலமான சாணம் மற்றும் கோமயம், பால், தயிர்,நெய் ஆகியவை இறைவழிபாட்டுக்குரிய பொருட்கள். இதைப் பஞ் சகவ்யம் என்பர். 'பாலினொடு தயிர் நறுநெய் ஆடினான்காண்' என்பது அப்பர் பெருமான் வாக்கு. ஆன்பால் அபிடேகத்தின் சிறப்பு குறித்துச் சமய இலக்கியங்கள் பலபடப் பேசுகின்றன. சிதம்பரம் கோயிலில் உள்ள பாடல் கல்வெட்டொன்று நரலோக வீரன் என்பான் தில்லைக் கூத்தனுக்கு அமிர்தத்துக்கு ஒப்பான பால் அபிடேகம் செய்வதற்காக, ஓராயிரம் சுரபிப் பசுக்களை அளித்தான் என்று கூறுகின்றது.

பால் முதலியவற்றால் அபிடேகம் செய்யும்போது ஏற்படும் விளைவுகளைக் குறித்துக் குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரியினர் விஞ்ஞான முறைப்படி ஆராய்ந்து பின்வருமாறு விளக்கியுள்ளனர். ஆலயத்திலுள்ள மூல விக்கிரகத்திற்கு தயிர், பால், தண்ணீர் முதலியவற்றால் அபிடேகங்கள்செய்யும்போது சிலையின் மின்கடத்தும் திறன் அதிகமாயுள்ளது. அதுமட்டுமல்லாமல் தண்ணீர், பால், தயிர் ஆகியவற்றைக் கொண்டு அபிடேகம் செய்யும்போது கருவறையில் ஈரப்பதமுள்ள காற்றுமண்டலம் ஏற்படுகின்றது. அந்த ஈரப்பதமுள்ள காற்றுமண்டலத்தில் எதிர்மின்னூட்டங்களும் பிராணவாயு அழுத்தமும் அதிகரிக்கின்றது. பிராணவாயு மூலக்கூறுகளை அதிக அளவில் பெறுவதால் உடலுக்கு நன்மைபயப்பதாக அக்காற்று மண்டலம் உள்ளது.

அபிடேகத்தின்போது எதிர் மின்னூட்டமும் ஈரப்பதம் உள்ள காற்றுமண்டலமும் அமைந்துள்ள கருவறைக்குள் ஓம் என்ற ஒலியுடன் அருச்சனை செய்யும்போது அவ்வொலி விக்கிரகத்திற்பட்டு

எதிரொலிக்கின்றது. அதனால் அக்காற்று மண்டலம் பெரும் அலைவும் ஒத்தெதிர்வும் பெறுகிறது. அக்காற்று மண்டலத்தின் அயனியாக்கப்பட்ட மூலக்கூறுகள் எதிரே உள்ள பக்தர்களை அடையும்போது அவர்களுக்கு உடல்நலத்தை அளிக்கின்றது.

பூசை வேளைகளில் தொடர்ச்சியாகக் கோயிலுக்குச் செல்கிறவர்கள் உள்ள ஆரோக்கியத்தோடு உடல் ஆரோக்கியத்தையும் பெறுகிறார்கள். அதனால் தான் ‘ஆலயம் தொழுவது சாலவும் நன்று’ என்று நம் முன்னோர்கள் சொல்லி வைத்துள்ளனர்.

அபிடேகத்திற்குரிய பால் தொடர்ந்து குறித்த நேரத்தில் கிடைக்க வேண்டும் என்பதற்காகக் கோயில்களையொட்டிப் பசுமடங்களை ஏற்படுத்தினர் நகரத்தார்கள். அம்மடங்களில் பசுக்களை வளர்க்கவும் பராமரிக்கவும் ஏற்பாடுகள் செய்து அதற்கு வேண்டிய மூலதனங்களையும் வைத்தனர். பசுமடம் ஏற்படுத்திய நகரத்தார்களை ‘பசுமடத்துவீட்டார்’ என்று பெயரிட்டு அழைத்தனர். ஆத்தங்குடியைச் சேர்ந்த சு.ராம.சு.இராமசாமிச் செட்டியார் திருப்பராய்த்துறையில் ஒரு பசுமடம் ஏற்படுத்தினார். அம்மடம் தெற்கு வெளி வீதியில் அமைந்துள்ளது. இராமசாமிச் செட்டியார் அபிடேகத்திற்குரிய பால் கறந்தவுடன் குறிப்பிட்ட நேரத்தில் கொண்டுபோய்க் கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காக கோயிலின் தெற்கு வெளி மதில் சுவரில் தன்செலவில் பசுமடத்திற்கு நேரே ஒரு வாயிற்கதவை அமைத்திருக்கிறார். இதுபோன்ற அமைப்பைத் திருவானைக்காவலிலும் காணலாம்.

நகரத்தார்கள் திருப்பணி செய்த தலங்கள்தோறும் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பசுமடங்கள் பல. சில பசு மடங்களில் பால்மட்டும் அல்லாமல் அபிடேகத்திற்குரிய மற்ற பொருட்களும் கொடுக்கப்பட்டன. சான்றாக திருவண்ணாமலையிலுள்ள கோட்டையூரார் பசுமடத் திலிருந்து தினந்தோறும் காலையிலும் மாலையிலும் பால்கொடுத்து

வந்ததோடு சந்தனம், பன்னீர், விபூதி, கற்பூரம் முதலியவைகளும் கொடுத்து வந்ததைக் கூறலாம். சில பசுமடங்கள் குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் வழங்கின.

அன்னதான மடங்கள்

கோயில்களையொட்டியும், முக்கிய நகரங்களுக்குச் செல்லும் பெருவழிகளிலும் அன்னதான மடங்களையும் சத்திரங்களையும் ஏற்படுத்தினர். அங்கு அடியார்களுக்கும் துறவிகளுக்கும் சாதிமத வேறுபாடு கருதாமல் உணவு வழங்கப்பட்டது. காசி முதல் இராமேசுவரம் வரை நகரத்தார்களால் அமைக்கப்பட்ட மடங்களும் சத்திரங்களும் பல உள. நகரத்தாரின் அன்னதான மடங்களுள் காலத்தால் முற்பட்டவை திருவண்ணாமலை ஓயாமடம், பழனி அன்னதானமடம், குன்றக்குடி அன்னதான மடம் ஆகிய மூன்றுமாகும்.

நகரத்தார்கள் சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன் பழனிக்கு உப்பு வணிகம் செய்யச்சென்று கிடைத்த இலாபத்தில் மகமைப்பணம் எடுத்து வைத்து மூன்று பரதேசிகளுக்குச் சோறு வடித்துப் போட்டு ஆரம்பித்த பழனி அன்னதானமடம் இன்று தைப்பூச விழாக்காலங்களில் ஆயிரக்கணக்கானோர்களுக்கு அன்னமளித்து வருகிறது.

'சோறுமணக்கும் மடங்களெல்லாம்' என்றபடி எப்போதும் சோறு மணந்து கொண்டிருக்கும் ஓயாமடம் சுமார் 300 வருடங்களுக்கு முன்பு திருவண்ணாமலையில் நகரத்தார்களால் தொடங்கப்பட்டது. ஓய்வில்லாமல் அன்னமளித்து வந்தமையால் ஓயாமடம் என்ற பெயரினைப் பெற்ற இம்மடத்தில் கார்த்திகைப் பெருவிழாவில் நாள் ஒன்றுக்கு சுமார் ஏழாயிரம் மக்களுக்கு அன்னமளிக்கப்படுகிறது.

குன்றக்குடியில் நகரத்தார் அனைவருக்கும் பொதுவான அன்னதான மடமொன்றும் ஒவ்வொரு ஊர் நகரத்தார்களுக்கென்று தனித்தனியே மடங்களும் உள்ளன.

கஞ்சிமடங்கள்

கி.பி. 187778 இல் தமிழகத்தில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. அதை ஈசுவர வருடத்துப் பஞ்சம் என்று குறிப்பிடுவர். அப்பஞ்ச காலத்தில் நகரத்தார்கள் ஆங்காங்கு கஞ்சி மடங்கள் அமைத்து ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்தார்கள்.

உப்பு மடமும் ஊறுகாய் மடமும் :

திருப்பெருந்துறைஉறை சிவபெருமானுக்கு நிவேதனமாக (வெண்) சோறுமட்டுமே படைக்கப்படும். அச்சோற்றைப் பெற்றுச் செல்லும் அடியவர்களுக்கு உதவியாக உப்புமடம், ஊறுகாய் மடம் என்ற இரண்டுமடங்கள் திருப்பெருந்துறையில் தேவகோட்டை வன்றொண்டர் செட்டியாரின் முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டன. இம்மடங்களைக் குறித்து உ.வே.சா. அவர்கள் ‘கண்டதும் கேட்டதும்‘ என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

அறுபத்துமூவர் மடங்களும் குருபூசை மடங்களும் :



சைவ சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடுடைய நகரத்தார்களுக்கு சைவம் தழைக்கப் பாடுபட்ட செயற்கரிய செயல்கள் செய்த சைவப் பெரியோர்களான அறுபத்து மூன்று நாயன்மார்கள் மீது மிகுந்த பக்தி இருந்தது. அவர்களைத் தங்கள் குருவாகக் கொண்டனர். அவர்களைப் போற்றி வழிபடு முகமாகவும் அவர்களால் பாடப்பட்ட திருமுறைகளை வளர்க்குமுகமாவும் அறுபத்துமூவர் மடங்களையும், குருபூசை மடங்களையும் ஆங்காங்கு நிறுவினர். அம்மடங்களில் நாயன்மார்கள் திருமேனிகளை எழுந்தருளிவித்தனர். நாயன்மார்கள் பிறந்த நட்சத்திரத்தன்று அவர்கள் திருமேனிகளுக்கு அபிடேக அலங்காரங்கள் செய்து நெய்வேத்தியம் தீபதூப ஆராதனை செய்வித்து வணங்கினர். மேலும் நாயன்மார் புராணம், சைவத்திருமுறைகள் ஆகியவற்றைப் படித்தும் படிப்பித்தும் வந்தனர்.

பின்பு, ‘பரமனடியாரானார்கள் எல்லாம் எய்தி உண்கவென இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்‘ சொல்லால் சாற்றிச் சோறிட்ட அப்பரடிகள் போல பொது நோக்காகச் சிவனடியார்கள் எல்லோருக்கும் அன்னமிட்டனர். சுமார் இருபது தலங்களில் குருபூசை மடங்களும் மதுரை, காரைக்குடி, ஆத்தங்குடி, காளையார்கோவில் ஆகிய ஊர்களில் அறுபத்துமூவர் மடங்களும் நகரத்தார்கள் நிறுவியுள்ளனர். காரைக்குடியிலுள்ள அறுபத்துமூவர் மடத்தில் சென்ற நூற்றாண்டில், சொக்கலிங்க ஐயா என்ற பெரும்புலவர் வைச சித்தாந்தப் பாடம் கற்பித்து வந்தார்.

திருவாசக மடங்கள் :

சைவத்திருமுறைகளில் ஒன்றான திருவாசகத்தின் பெயரால் நகரத்தார்கள் திருவாசக மடங்களை ஏற்படுத்தினர். மாணிக்கவாசகர் திருநாளன்று சிறப்பு வழிபாடுகள் நடத்தியும், திருவாசகம் படித்தும் படிப்பித்தும் அடியவர்களுக்கு அன்னமளித்தும் வந்தனர். நகரத்தார்கள்



மாணிக்கவாசகரோடு தொடர்புடைய திருப்பெருந்துறைத்தலத்தில் திருவாசக மடமொன்றை ஏற்படுத்தி, அதில் பல ஊர்களைச் சேர்ந்த ஏழை மாணவர்களைச் சேர்த்து தேவார திருவாசகத்தை இசையுடன் பயிற்றுவித்தனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய வெள்ளைவாரணம் அவர்கள் இம்மடத்தில் தங்கிப் பயின்றவர். காரைக்குடி, பலவான்குடி ஆகிய ஊர்களிலும் நகரத்தார்கள் திருவாசக மடங்களை அமைத்துள்ளனர். பலவான்குடியில் சிவநேசன் என்ற இதழை வெளியிட்டனர். அந்த இதழ்

சைவ சமயத் தொடர்பான செய்திகளைத் தாங்கி வந்தது. காரைக்குடி யிலுள்ள திருவாசக மடம் இன்றளவும் மாணிக்கவாசகர் குருபூஜை மற்றும் ஆன்மீகப் பணிகளைச் சிறப்பாகச் செய்து வருகிறது

திருமந்திர மடம் :



காரைக்குடி திருவாசக மடம்

நகரத்தார்கள் திருமந்திரத்தின் பெயரால் காளையார்கோவிலில் திருமந்திர மடமொன்றை ஏற்படுத்தி, திருமந்திரத்தைப் பாராயணம் செய்ய வழிவகை செய்தனர். திருமூலர் திருநாளன்று சிறப்பு வழிபாடுகள் நடத்தினர்.

குங்குலிய மடம் :

குங்குலியம் என்பது தூளாக்கி அனலிலிட்டுப் புகைத்தலால் நறுமணம் கமழும் ஒருவகை வாசனைப்பண்டம். இது மலைக்காடுகளில் விளையும் ஒருவகை மரப்பிசின். கோயில்களுக்குக் குங்குலியத்தூபம் இடும்பணியைச் செய்தவர் குங்குலியக் கலயநாயனார். இவர் பெயரால் காளையார்கோவிலில் ஒரு மடத்தை ஏற்படுத்திய நகரத்தார்கள் கடவுள் வழிபாட்டிற்குக் குங்குலியம் கொடுத்து வந்தனர். சிவனடியார்களைப்

போற்றி, திருமுறைத் தொண்டு புரிவதற்காகவே நகரத்தார்கள் இத்தகைய மடங்களை ஏற்படுத்தினர்.

சாதுக்கள் மடம் :

திருவண்ணாமலை,சாதுக்கள் பலர் தங்கி ஆத்ம விசாரம் செய்யும் தலம். இங்கு காரைக்குடியைச் சேர்ந்த கொரட்டியார் வீட்டார் ‘சாதுக்கள் மடம்‘ என்ற பெயரில் மடமொன்றை நிறுவி ஆன்மீக பணிகளோடு துறவியர்களுக்கும், ஏழைகட்கும், வந்தவர்களுக்கும் அன்னம் பரிமாறினர்.

சமய தீட்சைக்கான மடங்கள் :

நகரத்தார் இனத்து ஆண்களும் பெண்களும் திருவைந்தெழுந்து உபதேசம் பெற்றுக் கொள்வதற்காக மடங்களை ஏற்படுத்தினர். ஆண்கள் சமயதீட்சை பெற்றுக் கொள்வதற்காக களாமடம், கல்லாங்குடிமடம், பாதரக்குடி மடம் என்ற மூன்று மடங்களை ஏற்படுத்தினர். இப்போது பாதரக்குடி மடம் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த ஆண்களுக்கு உபதேசம் செய்து வருகிறது. இம்மடத்திற்கென ஒரு மடாதிபதி உள்ளார்.

நகரத்தார் பெண்கள் குன்றக்குடிக்கு அருகிலுள்ள துளாவூர் மடத்தில் உபதேசம் பெற்று வருகின்றனர். இம்மடம் சைவ ஆதீனங்கள் பதினெட்டில் ஒன்று. சேதுபுராணம் பாடிய நிரம்ப அழகிய தேசிகர் பரம்பரையினர்தான் இங்கு மடாதிபதிகளாக உள்ளனர். துளாவூர் மடாதிபதிகள் திருமணம் செய்து கொண்டு குடும்பத்தோடு இருக்கின்றனர்.



பாதரக்குடி மடம் ஆண்கள் குருபீடம்

வேதாந்த மடம் :

சாதிமத பேதமற்ற சங்கரரின் அத்வைத தத்துவத்தைப் பரப்புவதைக் கொள்கையாக உடைய வேதாந்த மடத்தை கோவிலூர் ஆண்டவர் தோற்றுவித்தார். கி.பி. 1818 இல் நகரத்தார் மரபைச் சேர்ந்த கோவிலூர் ஆண்டவர் என்று சொல்லப்படும் முத்துராமலிங்க தேசிகர் காரைக்குடிக்கு அருகில் கழனிவாசல் என்ற இடத்தில் (தற்போதைய கோவிலூர்) வேதாந்த மடமொன்றை முதலில் நிறுவினார்.சாதிமத இன வேறுபாடற்ற அடியார்குழாம், உணவு உடை இருக்கை முதலியவற்றுக்குக் கவலைப் படாமல் அமைதியாகத் தவம், தியானம் முதலிய ஆத்ம சாதனைகள் செய்துவரவும் இறைவழிபாட்டில் முழுமனதுடன் ஈடுபடவும் இம்மடம் வழிவகை செய்தது.

நகரத்தார் மரபைச் சேர்ந்தவர்களே இம்மடத்தில் மடாதிபதியாக வரமுடியும். நகரத்தார்கள் அனைவரும் கூடி ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்றால் கோவிலூர் மடத்தில் கூடுவது வழக்கம்.

இம்மடத்தில் வேதாந்த நூல்கள் தமிழ்ப்படுத்தப்பட்டு முறைப்படி பயிற்றுவிக்கப்பட்டன. வடமொழி தெரிந்தவர்கள் தாம் வேதம் படிக்க முடியும் என்ற நிலைமாறி தமிழ்மொழியில் வேதாந்தம் படிப்பதற்கு வகை செய்தமடம் என்றளவில் வேதாந்த தத்துவ வரலாற்றில் கோவிலூர் மடம் முக்கிய இடம் பெற்றுள்ளது. தமிழகத்திலும் பிற பகுதிகளிலும் பல வேதாந்த மடங்கள் உருவாவதற்குக் காரணமாகக் கோவிலூர் மடம் விளங்கியது. இதைச் சேர்ந்த மடங்களுள் குறிப்பிடத்தக்கவை திருக்களர், திருவண்ணாமலை, சிதம்பரம், திருப்பூவணம், காளையார்கோவில், மதுரை ஆகிய தலங்களில் உள்ள மடங்களாகும். தவிர, கோவிலூர் மடத்தில் பாடம் கேட்ட துறவிகள் பலர் கிளைமடங்கள் பலவற்றை ஏற்படுத்தியுள்ளனர்.

கோவிலூர் மடத்தின் பணிகள்

1.வடமொழியிலுள்ள பல வேதாந்த நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு கோவிலூர் மடத்தைச் சேர்ந்தவர்களால் அவற்றுக்குத் தமிழில் உரை எழுதப்பட்டன. கோவிலூர் மடம் தமிழுக்குச் செய்த தொண்டுகளுள் குறிப்பிடத்தக்கது உரைத்தொண்டு ஆகும்.

2.கோவிலூர் மடத்திலிருந்து பல ஏட்டுச் சுவடிகள் பதிப்பிக்கப்பட்டன.

3.தமிழ்ப் புலவர்கள் பலரையும் ஆதரித்தது இம்மடம். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுக்கு பல உதவிகள் செய்தது இம்மடம். பிள்ளையவர்கள் பல தலபுராணங்களைப் பாட உதவி செய்தவர்கள் நகரத்தார்கள்.

4.இம்மடத்தைச் சேர்ந்த பலரும் செய்யுள்பாடும் ஆற்றல் பெற்றவர்களாக விளங்கினர். கோவிலூர் ஆண்டவர் முதலாகப் பலர் பல செய்யுள் நூல்களை இயற்றியுள்ளனர்.

5.சைவசமய வினாவிடை போன்ற எளிமையான சைவ சமயநூல்கள் பலவற்றை எழுதிய யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரை அத்துறையில் ஈடுபடுத்தியவர் கோவிலூர் மடத்தின் இரண்டாவது பட்டமான துறவு ஆண்டவர் ஆவார்.

6.இம்மடத்தில், ‘சங்கர குருகுலம்’ என்ற பெயரில் ஒரு பள்ளியை ஏற்படுத்தி அத்வைதக் கருத்துக்களைப் பயிற்றுவித்தனர். அங்கு பயின்ற மாணவர்களுக்கு மடத்திலேயே இலவசமாகத் தங்க இடமும் உணவும் அளித்தனர். தற்போது இக்குருகுலத்தில் தங்கியுள்ள மாணவர்கள் பலர் இம்மடத்தின் உதவியால் சுற்றிலுமுள்ள பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயின்று வருகின்றனர்.

7.கோவிலூர் மடம் சிருங்கேரியிலுள்ள சாரதாம்பாள் கோயிலைத் திருப்பணி செய்தது.

8.நகரத்தார்கள் பல கோயில்களைக் கட்டுவதற்கும், பாடல்பெற்ற பல தலங்களைத் திருப்பணி செய்வதற்கும், கோவிலூர் மடாதிபதிகள் காரணமாக விளங்கினர்.

9.பன்னிரண்டாவது பட்டமான தவத்திரு நாச்சியப்ப சுவாமிகள் அவர்கள், கோவிலூரை மையமாகக் கொண்டு இந்து சனாதன உலகப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க பல கல்வி நிலையங்களையும் நாதஸ்வர, இசைக் கல்லூரி, வேதாகம கல்லூரி, தேவாரக் கல்லூரி ஆகியவற்றை ஏற்படுத்தினார்கள். தற்போது பதிமூன்றாவது பட்டமான சீர் வளர் சீர் மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள், நாச்சியப்ப சுவாமிகளின் கனவை நனவாக்கும் வண்ணம் செயல்பட்டு வருகிறார்கள். ரிஷிகேஷத்திலும் கோவிலூர் மடத்தின் கிளைமடம் தொடங்கப்பட்டுள்ளது.

பிறமடங்கள் :


மேற்சொன்ன மடங்கள் தவிர நகரத்தார்கள் திருப்பணி செய்த தலங்களையொட்டியும் தங்கள் ஊர்களிலும் கார்த்திகை, ஏகாதசி, துவாதசி ஆகிய நாட்களில் அடியார்களுக்கும் ஏழை எளியோருக்கும் அன்னமிடுவதற்காக கார்த்திகை மடங்கள், ஏகாதசி மடங்கள், துவாதசி மடங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தினர். மேலும், சனி மடம், ஞானியார் மடம், இராக்கால மடம், விபூதி மடம், பன்னீர் மடம், கற்பூர மடம், சாம்பிராணி மடம், நடனமடம் ஆகிய மடங்களையும் ஏற்படுத்தி இருக்கினர்.

முடிவுரை :

நகரத்தார் ஏற்படுத்திய பல்வகை மடங்களும் சைவ சமயத்திற்கும், தமிழ்மொழிக்கும், சமுதாயத்திற்கும் தங்களால் ஆன தொண்டினைச் செய்து கொண்டிருக்கின்றன.

19. தண்டாயுதபாணியும் நகரத்தாரும்





முருகக்கடவுள் வழிபாடு தமிழகத்தில் தொன்மையானது. மக்கள் முருகனை ஆறுமுகனாகவும், வள்ளி மணாளனாகவும், தெய்வானை சமேதராகவும், பாலசுப்பிரமணியனாகவும், தண்டாயுதபாணியாகவும் பல வடிவங்களில் வழிபட்டனர். முருகனுடைய 22 வடிவங்கள் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன. "சிவ மதத்திலேயே இருக்கிறது, அன்னிய மதத்தில்

சேரக்கூடாது"[1] என்று உறுதிபூண்ட நாட்டுக்கோட்டை நகரத்தார்கள். சிவனும் சக்தியும் இணைந்த வடிவமான முருகக்கடவுளை ஆண்டிக் கோலத்திலுள்ள தண்டாயுதபாணியாக விரும்பி வழிபட்டனர்.

'தண்டம்' என்ற சொல்லுக்குக் 'கோல்' என்று பொருள். பாணி என்றால் கை. – தண்டத்தைக் கையிலே ஆயுதமாகத் தாங்கி இருப்பவன் தண்டாயுதபாணி - கடவுளர்களின் திருமேனிகள் தங்கள் திருக்கரங்களில் தாங்கியிருக்கும் ஆயுதங்களைப் பற்றிக் கூறுகையில் வை.கணபதி ஸ்தபதி அவர்கள் ' தண்டம் - இது தடியாகும். இதன் நீளம் 16 விரல் நீளம். கனம் 2 விரல்' - என விளக்குவார்.[2]

தண்டாயுதபாணி என்பது முருகனையும், திருமாலையும், எமனையும் குறிக்கும் சொல்லாகும்.[3] மூவருக்கும் தண்டம் ஆயுதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எமனுக்குத் தண்டம் உண்டு என்பதை 'தண்டாயுதமும் திரிசூலமும் விழத் தாக்குவேன்' என்று அருணகிரியார் கந்தன் அருள்பெற்ற களிப்பில் எமனுக்கே சவால் விடுவதிலிருந்து அறியலாம்.[4] திருமாலுக்கும் தண்டப்படை உண்டு என்பது ' சங்கு மலி தண்டு முதலி சக்கரமுன் ஏந்தும்' என்ற பெரிய திருமொழி வாக்கால் தெரிகிறது.[5] திருமாலும் எமனும் தண்டம் தாங்கியவர்களாக இருந்தாலும் தண்டாயுதபாணி என்ற சொல் சிறப்பாக முருகனையே குறிக்கும். தண்டபாணி என்பது சுப்பிரமணிய சுவாமிகளின் ஆச்சாரியத் திருக்கோலத்துள் ஒன்று என்று அபிதான சிந்தாமணி கூறும்.[6]

தண்டாயுதபாணி வழிபாடு கொங்கு நாட்டுப் பகுதிகளில்தான் அதிகமாகக் காணப்படுகிறது.

"குஞ்சிகம் நிலைத்த சீரடியிரண்டும் கோவண ஆடையும்

மேகலையும்

விஞ்சுநூல் மார்பும் வேத்திரம் உக்கம் விளங்கும் கைத்தலங்களும்

குழைதாழ

செஞ்செவித்துளையும் துணைமலர்க்கண்ணும்

திகழ்தனிவதனமும் பின்தாழ் அஞ்சலில் சிகையும்”

என்று தண்டபாணியின் திருக்கோலத்தை ‘சென்னிமலைத் தலபுராணம்’ சொல்லோவியமாக வடித்துக் காட்டுகிறது.7 பழனிமலை, மருதமலை, சென்னிமலை போன்ற தலங்களில் எல்லாம் தண்டாயுதபாணியே மூலவராக உள்ளார்.

தண்டாயுதபாணியும் நகரத்தாரும் :

நகரத்தாருக்குத் தண்டாயுதபாணியிடத்தில் தனி ஈடுபாடு உண்டு என்று கண்டோம். அதற்கான காரணத்தை ‘நகரத்தார் பழனி அறப்பட்டயங்கள்’ என்ற நூல் விளக்குகிறது. இந்நூலில் எட்டுப் பட்டயங்களில் சுமார் 350 ஆண்டுகளாக நகரத்தார்களுக்கும் பழனித்தலத்திற்கும் உள்ள தொடர்பைச் சுட்டுகின்றன.

நேமங்கோயில் இளநல வகுப்பு குப்பாஞ்செட்டியின் மகன் குமரப்பன் பழனித்தலம் சென்று உப்பு வணிகம் செய்தது, பழனிக்கோயில் தெய்வநாயகப் பண்டாரத்தின் உதவியைப் பெற்றது, வியாபாரம் நன்கு செழித்து இலாபத்தில் வேலாயுதசாமிக்கு மகமைப்பணம் சேர்த்தது, அன்னதான மடம் ஏற்படுத்தியது, பிற கோயில் நகரத்தார்களும் உப்பு வணிகத்தில் சேர்ந்து கொண்டது, பழனிக்குக் காவடி எடுத்தது, காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து நகரத்தார் வந்த வரலாறு முதலான செய்திகள் அப்பட்டயங்களில் சொல்லப்பட்டுள்ளன.

குப்பாஞ்செட்டியின் மகன் குமரப்ப செட்டி காலத்திலிருந்து நகரத்தாருக்குத் தண்டாயுதபாணியிடத்துத் தனி ஈடுபாடு ஏற்பட்டது.

அயல்நாடுகளில் தண்டாயுதபாணி

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து நகரத்தார்கள் கொழும்பு, பர்மா, மலேயா, சிங்கப்பூர், இந்தோசீனா போன்ற கடல்கடந்த நாடுகளுக்குச் சென்று கொண்டு விற்றும், லேவாதேவித் தொழில் செய்தும் பெரும்பொருள் ஈட்டினர். ‘ஆங்கில ஏகாதிபத்தியத்தின்கீழ் பலநாடுகள் இருந்தன. ஆங்கில ஆட்சியில் கடல் பாதுகாப்பு இருந்தது. ஒரே செலாவணி இருந்தது. கப்பல், ரயிலில் லக்கேஜ் முறை வரவில்லை. எனவே பலநாடுகளுக்குச் சென்று பெரும்பொருள் ஈட்டினர்.8 அயல்நாடுகளில் பெரும்பொருள் ஈட்டிய நகரத்தார்கள் கிடைத்த இலாபத்தில் ஒரு பங்கைத் தர்மத்திற்கு ஒதுக்கினர். தாங்கள் கொண்டு விற்கப் போன நாடுகளிலெல்லாம் தண்டாயுதபாணிக்குக் கோயில் எடுத்து வழிபட்டனர். விழாக்கள் எடுத்துச் சிறப்பித்தனர். நகரத்தார்கள் தாங்கள் சென்ற அயல்நாடுகளில் எல்லாம் முருகனை தண்டாயுதபாணியாகவே வழிபட்டதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

1.முதன்முதலில் நேமங்கோயில் குப்பாஞ்செட்டியின் மகன் குமரப்ப செட்டியார் பழனித்தலத்திற்குச் சென்று தண்டாயுதபாணியை வழிபட்டு வியாபாரம் செய்ததிலிருந்துதான் பாண்டிநாட்டில் நகரத்தார்கள் தனியாக இனங்கண்டுகொள்ளப்பட்டு சமூகத்தில் மேன்மை அடைந்தனர்.

2. சிவன் கோயில்களில் பூசை முதலியவை நடத்த சிவாச்சாரியார்கள் வேண்டும். அக்காலத்தில் சிவாச்சாரியார்கள் கடல் கடப்பத்தில்லை என்ற கொள்கையுடையவர்கள். ஆகவே வெளிநாடுகளில் சிவன் கோவில்கள் காட்டினால் பூசை முதலியன செய்ய சிவாச்சாரியார்கள் கிடைக்கமாட்டார்கள் என்ற காரணத்தாலும், பழனித்தலத்தில் தண்டாயுதபாணிக்குப் பண்டாரங்கள் பூசை செய்வதைக் கண்டதாலும் நகரத்தார்கள் வெளிநாடுகளில் தண்டாயுதபாணிக்கு கோவில் கட்டி பண்டாரங்கள் மூலம் பூசை நடத்தி வழிபட்டனர். முதலில் வேலை

வைத்துத் தான் வேலாயுதனாக வழிபட்டனர்.

3. நகரத்தார்கள் வைசியர்கள். 'வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை' என்றபடி வணிக வாழ்க்கையை மேற்கொண்ட அவர்கள் கடல் கடந்து அயல்நாடுகளுக்குச் சென்று வணிகம் செய்தபோது 'முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை' என்ற தொல்காப்பிய விதியைப் போற்றி, தங்கள் பெண்டு பிள்ளைகளை உடனழைத்துச் செல்லவில்லை. தனியேதான் சென்றார்கள். அங்கு அவர்கள் குடும்பமில்லாத துறவு வாழ்க்கை வாழ்ந்ததால், மனம் சலனம் அடியாமல் இருக்க முருகனையும் துறவுக்கோலத்தில் உள்ள தண்டாயுதபாணியாக வழிபட்டனர். தாங்கள் எழுதுகிற கடிதங்கலிள் கையெழுத்துக்குப் பதிலாக 'ஸ்ரீ தண்டாயுதபாணி துணை' என்றே கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள்.

தண்டாயுதபாணியா? தெண்டாயுதபாணியா?

முருகனின் இளமைத் துறவுக்கோலம் 'தண்டாயுதபாணி' எனப்படும். இச்சொல் தெண்டாயுதபாணி என்றும் கூறப்படும். இரண்டும் ஒரேபொருள் தந்தாலும் எது சரியான வடிவம்?, எது பழமையான வடிவம்? என்று பார்க்கிறபோது "தண்டாயுதபாணி' என்பதுதான் சரியான முந்தைய வடிவம் என்றும், அதுதான் மக்களின் பேச்சுவழக்கிலும், எழுத்திலும் சில இடங்களில் 'தெண்டாயுதபாணி' என்று வழங்கப்படுகிறது என்றும் அறியலாம்.

'தண்டம்' என்ற சொல்லில் தகரத்திலுள்ள அகரம் (த்+அ) எகரமாக (த்+எ) அதாவது 'தெ' என்று ஒலிக்கப்படுகிறது. 'மொழிநூற் கொள்கையும் தமிழ் மொழி அமைப்பும்' என்ற நூலில் கா.சு.பிள்ளை அவர்கள், 'கொச்சை உலக வழக்கில் அ எ ஆதலும் ஆ ஏ ஆதலும் உண்டு' என்பர். இதே போலத் "தமிழ்மொழி வரலாறும் ஒப்பிலக்கணமும்" என்ற நூலிலும் அதன் ஆசிரியர் இரா.அரங்கசாமி அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்.

"உயிர் ஒலிகளில் அகரம் நாப்படிந்த நிலையில் பிறப்பதால் அந்நிலையிலேயே அதனை ஒலித்தல் மிகவும் அருமையாகும். இவ்வருமை காரணமாக அது பல இடங்களில் மாற்றம் பெறுகிறது. ண, ன, ர, ல, ழ ஆகிய ஒற்றுகள் உள்ள சொற்களில் இவற்றின் முன்னுள்ள அகரம் சில இடங்களில் எகரமாகத் திரிகின்றது."

இந்த விதிப்படி தண்டம் என்ற சொல்லிலுள்ள ணகர ஒற்றுக்கு முன்னுள்ள அகரம் எகரமாகத் திரிந்து தெண்டம், தெண்டாயுதபாணி என்று வழங்கப்படுகிறது. தக்காணப் பீடபூமி என்பதை தெக்காணப் பீடபூமி என்றும் தட்சிணாமூர்த்தியைத் தெட்சிணாமூர்த்தி என்றும் பேசவும் எழுதவும் காண்கிறோம்.

பல செப்பேடுகளிலும் கல்வெட்டுகளிலும் இறுதியாகக் காணப்படும் காப்பு வாசகங்களில் 'இந்த தர்மத்துக்குத் தீங்கு நினைப்பவன் கெங்கைக் (கங்கை) கரையிலே காராம்பசுவைக் கொன்ற தோஷத்திலே போவானாகவும்' என்று எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

இவையெல்லாம் அகரம் சில இடங்களில் எகரமாகத் திரிவது உண்டு என்பதைக் காட்டுகிறது. ஆகவே தண்டபாணி என்ற சொல்லே தெண்டபாணி ஆயிற்று என உணரலாம்.

இலக்கியங்களில் தண்டாயுதபாணி:

அயல்நாடுகளிலும், வட இந்தியாவிலும் நகரத்தார்கள் எழுந்தருளுவித்த தண்டாயுதபாணிக் கடவுள் மீது பலர் பாடல்கள் பாடியிருக்கிறார்கள். அவைகளில் இரண்டுவிதச் சொல்லாட்சியும் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றின் பெயர்களாவன:

1.பர்மா நாட்டில் டாங்கோ நகரில் வசிக்கும் சந்திரகுல தனவைசிய பூமான்களாகிய நகரத்தார் மேல்வீட்டில் எழுந்தருளிய ஸ்ரீ தண்டபாணிக் கடவுள் தோத்திரம் (கி.பி.1904)

2.இரங்கோன் வணிகர் மாளிகையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தண்டபாணி ஸ்வாமியின் திருச்சதகம். (பிரமாதி வருஷம்)

3.தண்ணீர்மலைத் தண்டாயுதபாணி பிள்ளைத்தமிழ் (1917)

4.பினாங்கு தண்ணீர்மாமலை ஸ்ரீதெண்டாயுதபாணி அருட்பாடற்றிரட்டு (1946)

5. கிள்ளான் தெண்டாயுதபாணி மகோற்சவச் சிறப்பு (1915)

6.வங்காளம் தெண்டாயுதபாணி பேரில் ஆசிரிய விருத்தங்கள் (1917)

7."மலேயாவின் தோற்றம்" என்ற நூலில் இரண்டுவிதச் சொல்லாட்சியும் காணப்படுகிறது.9

இதுகாறும் கூறியவற்றிலிருந்து, நகரத்தார்கள் தண்டாயுதபாணி யிடம் தனி ஈடுபாடு உடையவர்கள் என்றும், அயல்நாடுகளில் பெரும்பான்மையாகத் தண்டபாணி கோயில்களையே கட்டி வழிபட்டனர் என்றும். தண்டபாணி அல்லது தண்டாயுதபாணி என்ற சொல்வடிவே சரியானது என்றும், அதுவே தெண்டாயுதபாணி என்றும் வழக்கில் வழங்கப்படுகிறது என்றும் அறியலாம்.

அடிக்குறிப்புகளும், இக்கட்டுரை எழுதப் பயன்பட்ட நூல்களும்

1.நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம் ஸ்ரீ வீர்.லெ.சிந்நயச் செட்டியார் - 1904

2.சிற்பச் செந்நூல் - வை.கணபதி ஸ்தபதி

3.**Tamil Lexican - vol. III, - Part I**

4.கந்தர் அலங்காரம் - அருணகிரி நாதர்

5.பெரிய திருமொழி - நம்மாழ்வார்

6.அபிதான சிந்தாமணி - ஆ. சிங்காரவேலு முதலியார்

7.தமிழகத்தில் முருகனது திருவுருவம் - தினமணிக் கட்டுரை - 16.11.88 - தி.இராசமாணிக்கம்

8.அரு.சோமசுந்தரம் கட்டுரை - **Bombay Nagarathar Social & Cultural Association - Souvanir -** 1985.

9.மலேயாவின் தோற்றம் - பெ.நா.மு. முத்துப் பழனியப்பச் செட்டியார், சுங்குரும்பை.

20.திருவேட்பூருடையார்கள்

நகரத்தார் பெண்கள் குருபீடமாகிய துலாவூரில் பல ஓலைச் சுவடிகள் உள்ளன.அவற்றுள் ஒன்று நகரவரன்முறை என்று தலைப்பிட்ட ஓலைச்சுவடி அதில் நகரத்தார் வரலாறும் அவர்களது சாதி முறை நியாயங்களும் எழுதப்பட்டுள்ளன.

இந்த ஓலைச்சுவடி சுமார் 300 வருடங்களுக்கு முற்பட்டது. நகரத்தார்கள் தங்களுக்குள் கூடி பல சாதிமுறை நியாயங்களை வகுத்திருக்கிறார்கள். அதில்,"இரணியூர்க் கோவிலாரும் பிள்ளையார்பட்டி கோவிலாரும் சகோதரர்களின் வமிசத்தாராதலால் தம்முள் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது. மற்றைய கோவில்களில் செய்து கொள்ளலாம்" என்ற வரிகள் காணப்படுகின்றன.இந்த வழக்கம் இன்றளவும் நடைமுறையில் இருந்து வருகின்றது.

இவர்கள் இருவரும் சகோதரர்கள் என்றும் இவர்கள் எப்போது?, எதிலிருந்து இரு கோவிலாராகப் பிரிந்தார்கள் என்று பார்ப்போம்.

நகரத்தார்கள் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து பாண்டிநாட்டுக்கு வந்த போது இளையாற்றங்குடி என்ற ஒரே பிரிவினராகத்தான் ஆரம்பத்தில் இருந்திருக்கிறார்கள். பிறகு 7(ஏழு) பிரிவினராகக் கோயில் அடிப்படையில் பிரிந்திருக்கிறார்கள். (இவ்வாறு பிரிந்தது கி.பி.12நுற்றாண்டிற்குப் பிறகு எனலாம்) நகரத்தார்களின் அந்த ஏழு பிரிவுகளாவன :

இளையாத்தங்குடி

மாத்தூர்

நேமம்

இலுப்பைக்குடி

வேலங்குடி

சூரைக்குடி

வயிரவன் கோவில்


இன்று இளையாத்தங்குடியில் 7 உட்பிரிவுகளும், மாத்தூர் வகுப்பில் 7 உட்பிரிவுகளும் வயிரவன் கோவில் வகுப்பில் 3 உட்பிரிவுகளும் உள்ளன.

நகரத்தார் வரலாறு பற்றி அறிய உதவுகின்ற "கண்ணுடையம்மன் பள்ளு", "ஏழு நகரத்தார் பேரில் பள்ளு நாடகம்", "ஏழு நகரத்தார் பேரில் குளுவ நாடகம்", "பாடுவார் முத்தப்பர் பாடல்கள்", "நகரத்தார் அறப்பட்டயங்கள்", "இரணியூரில் தற்போது கிடைத்துள்ள செப்பேடுகள்" (தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையில் அதிகாரியாகப் பணியாற்றிய மா.சந்திரமூர்த்தி அவர்கள் கண்டுபிடித்தது) ஆகிய அனைத்தும் " ஏழு நகரத்தார்" என்றே குறிக்கின்றன. இந்த 7 கோவில் பிரிவினரோடு இரணியூர்க்கோவில், பிள்ளையார்பட்டி கோவில் என்ற இரண்டு பிரிவு இணைந்து ஒன்பது பிரிவுகள் தற்போது உள்ளன. இரணியூர் கோவிலாரும் பிள்ளையார்பட்டி கோவிலாரும் எதிலிருந்து பிரிந்தார்கள் என்பதை அறிய இரணியூரிலுள்ள ஒரு கல்வெட்டு உதவுகின்றது.

இரணியூர் ஆட்கொண்டநாதசுவாமி கோவிலில் சுமார் 10 கல்வெட்டுக்கள் இந்திய தொல்பொருள் ஆய்வு துறையினரால் படி எடுக்கப்பட்டுள்ளன. தற்போது அவைகளைக் காண முடியாது. நகரத்தார் திருப்பணிகளின் போது அவை அகற்றப்பட்டுள்ளன. ஆட்கொண்டநாதசுவாமி கோவிலின் வடபுறச் சுவரில் ஒரு கல்வெட்டு இருந்திருக்கிறது. (கிஸிணி03/1926) இளையாத்தங்குடியைச் சேர்ந்த திருவேட்பூருடையார்கள், இரணியூரில் ஒரு குடிதண்ணீர் ஊருணியைத் தங்கள் பிரிவின் பெயரால் அதாவது திருவேட்பூருடையான் என்ற பெயரால் வெட்டிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் அதுமட்டுமல்லாமல் இரணியூரில் வடபால் உகந்த பத்ரகாளியம்மன் கோவிலில் திருப்பணி செய்திருக்கிறார்கள் என்பதையும் அக்கல்வெட்டு தெரிவிக்கின்றது. தற்போது இரணியூருக்கு வடக்கே உள்ள இரணிக்காளி கோவிலும் அதற்கு எதிரே உள்ள "அம்மன் சேங்கை" என்ற ஊருணியுமே கல்வெட்டு குறிப்பிடுகின்ற வடபாலுகந்த பத்ரகாளியம்மன் கோவிலிலும் திருவேட்பூருடையன் ஊருணியும் ஆகும்.

“ஸ்வஸ்தி ஸ்ரீ சகாத்தம் 1423 மேல் செல்லா நின்ற இரவுத்ரி வருஷம் தை மீ 2 தி கல்வாயில் நாட்டு இளையாத்தங்குடியான குலசேகரபுரத்து திருவேட்பூர் உடையார்களுக்கு இன்னாட்டு இரணி ஊராக அமைந்த ஊரவரோம் எங்களூர் வடக்கு வாசலில் நல்ல தண்ணீர் ஊருணி திருவேட்பூருடையானும் இதன் தெற்கு வடபாலுகந்த பத்திரகாளி அம்மை கோயிலும் முல் வேதகமும் முன்னாள் திருவேட்பூருடையார்கள் தன்மமாகையால்..........”. என்று திருவேட்பூருடையார்கள் செய்த தருமத்தை பற்றித் தெரிவிக்கின்றது கல்வெட்டு.

திருமெய்யம் தாலுகா, இராங்கியத்தில் பூமிசுவரர் கோவிலில் சுவாமி கோவிலின் தென்புறம் சுவரிலுள்ள சாசனம் கி.பி. 1520ஐச் சேர்ந்தது. இக்கல்வெட்டில் கல்வாசல் நாட்டு இளையாத்தங்குடியான குலசேகரபுரத்து காளையகாலப் பெருந்தெருவில் திருவேட்பூருடையான் இன்பவனப் பெருமாள் என்பவன் குறிக்கப்படுகின்றான்.


854. திருமெய்யம் தாலுகா, இராங்கியம், பூமீஸ்வரர்கோவிலில் ஸ்வாமிகோவிலின் தென்புறம் சுவரிலுள்ள சாஸநம்,—

1 சுபத்தி ஸ்ரீ [|| *] சகாத்தம் ௧சா௨௰௨ இதன்மெல் செல்லாநின்ற [ஈசுர வருஷம்] . . . .

2 கல்வா[1]சல்நாட்டு இளையாத்தக்குடியான குலசெகரபுரத்து காளையகாலப்பெருந்தெருவில்

3 திருவெட்பூ[ரு*]டையான் இன்பவனப்பெருமாள் ஆன தன்மபரிபாலரும் மெற்படி உலகுடையாரும் இலங்கமங்க[ல][2]ம் ஊரவரும்

4 இன்னாயினுர் பூமிசுரமுடையாற்கு கல்வெட்டி குடுத்தபடி [|*] முன்னுள் எங்கள் ஒ[ற்றி]யான விறை[யா]நிச்சன் வயலில்

5 பின்னான் வயக்கல் முற்றும் குளச்செய் முற்றும் ஒற்றி ஓலை[யு]ம் கிழித்து எங்கள் தன்மமாக . . . . .

6 காலசந்தி பூசிப்பர் ஆகவும் [|| *] இது சந்திராதித்தவரை செல்ல நடந்து பொதக்கடவதாகவும் [|| *] இப்படிக்கு . . . .

7 தன்மபரிபாலருள்ளிட்டார் தன்மமாகக்கல்வெட்டிக்குடுத்தொம் . . . .[3] ஊரவரொம் [|| *]

8 இப்படிக்கு தன்மப[ரி] . . . . குடையார் தெய்வத்தார் [|| *]

Pudukkottai State Inscription

திருமெய்யம் தாலுகா, கோனாபட்டில் கற்பகவிநாயகர் கோயிலில் நடப்பட்டிருக்கும் ஒரு கல்லிலுள்ள சாசனம் “இளையாத்தக்குடியான

குலசேகர புரத்துத் திருவேட்பூருடையான் சேவகப் பெருமாள் புத்திரன் அழகப்பச் செட்டியார் என்பவர் தன்னுடைய பெயரால் "அழகப்பெருமாள் ஊருணி" என்ற பெயரிட்டு ஒரு ஊருணியை உண்டாக்கி திருக்கோவிலும் கட்டுவித்து, கற்பகவிநாயகரை மண்டபத்தில் எழுந்தருளிவித்த செய்தியைக் கூறுகிறது. இக்கல்வெட்டின் காலம் சுமார் கி.பி.1600.

திருமெய்யம் தாலுகா, மறவா மதுரையில் அகளங்கீசுவரர் கோவிலில் உள்ள கி.பி. 1524ஐச் சேர்ந்த கல்வெட்டு இளையாத்தங்குடியான குலசேகரபுரத்து திருவேட்பூருடையான் நல்ல பெருமாள் என்பவரைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

பழனித் தலத்தில் நகரத்தார் செய்த தருமங்களை விரித்துக் கூறுகின்ற நகரத்தார் அறப்பட்டயங்களும், இருபத்திரண்டு கோத்திரமாகிய ஏழு நகரத்தார் என்று குறிப்பிட்டு இருபத்திரண்டு கோத்திரப் பிரிவுகளுள் திருவேட்பூருடையார் என்ற பிரிவையும் சுட்டுகிறது.

நாம் மேலே பார்த்த கல்வெட்டுக்கள் அனைத்தும் இளையாத்தங்குடியில் திருவேட்பூருடையார் என்ற ஒருபிரி வினர் 16ஆம்நூற்றாண்டு வரை இருந்திருக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

ஆயின் தற்போது இளையாத்தங்குடியில்,

1. ஒக்கூருடையார்
2. அரும்பாற்கிளையாரான பட்டணசாமியார்
3. பெருமருதூருடையார்
4. கழனிவாசல்குடியார்
5. கிங்கிணிக்கூருடையார்

6. பேரசெந்தூருடையார்

7. சிறுசேத்தூருடையார்

என்ற ஏழு பிரிவினரே உள்ளனர்.திருவேட்பூருடையார் என்ற பிரிவினர் இல்லை.அவர்கள் என்ன ஆனார்கள்? தற்போது 7 கோவிலாருடன் இரணிக் கோயில், பிள்ளையார்பட்டி என்ற இரண்டு பிரிவினர் சேர்ந்து 9 பிரிவினர் உள்ளனரே. இவர்கள் யார்?

இந்த வினாக்களுக்கு, நாம் திருமணத்தின்போது எழுதுகின்ற இசைகுடிமானம் விடையளிக்கிறது.

இசைகுடிமானத்தில் இளையாத்தங்குடியினர், தங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் ‘கல்வாசல் நாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில்’ என்று தொடங்குவார்கள்.

இரணிக் கோயிலார், ‘கல்வாசல் நாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான இராசநாராயண புரத்தில் இரணியூர் திருவேட்பூருடையார்’ என்று குறிப்பிடுவார்கள்.

பிள்ளையார்பட்டிக் கோவில் நகரத்தார், ‘கல்வாசல் நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான ராசநாராயண புரத்தில் பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையார்’ என்று குறிப்பிடுவர்.

இளையாற்றங்குடியை இரணியூரார், பிள்ளையார்பட்டியார் இருவருமே குறிப்பிடுகிறார்கள். மேலும் இருவரும் திருவேட்பூருடையார் என்றே குறிக்கப்படுகின்றனர். இரண்டு வாசகங்களிலும் மருதங்குடியான இராசநாராயணபுரம் என்பது பிள்ளையார்ப்பட்டியைக் குறிக்கும் பிள்ளையார்பட்டியில் உள்ள மூன்று கல்வெட்டுக்கள் மூலம் கானநாட்டு காரிகுடி ஐந்நூற்றுவப் பெருந்தெருவில் உள்ள நகரத்தார்கள் கி.பி 12ஆம் நூற்றாண்டில் பிள்ளையார்பட்டியைச் சுற்றியுள்ள மருதங்குடி

வயல்களை மருதங்குடி ஊராரிடம் விலைக்கு வாங்கி அங்கு "இராசநாராயணபுரம்" என்ற பெயருடன் ஒரு நகரம் அமைத்து அதில் குடியேறி வாழ்ந்து வர அப்போது பாண்டி மண்டலத்தை ஆண்ட அரசனிடம் முழு உரிமையும் பெற்றிருக்கிறார்கள் என்று அறிகிறோம்.

இரணியூரார் மருதங்குடியான இராசநாராயணபுரம் என்று பிள்ளையார்பட்டியையும், பிள்ளையார்பட்டிக் கோவிலார் இரணியூரையும் குறிப்பிட்டு இறுதியில் இருவரும் திருவேட்பூரார் என்றே முடிக்கின்றனர்.

"திருவளர் இரணி திருவேட்பூரார்"

"கற்பகவிநாயகரைப் பணி தேசிகர் இளசைத் திருவேட்பூரார்"

என்று ஏழு நகரத்தார் பேரில் பாடப்பட்ட குளுவ நாடகம் இருவரையும் திருவேட்பூரார் என்றே குறிப்பிடும். மேலே சொன்ன செய்திகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும்போது, இளையாத்தங்குடியில் திருவேட்பூருடையார் என்ற ஒரு பிரிவினர் இருந்திருக்கின்றனர் என்றும், பின்னர் இவர்களே இரணிக்கோவில் நகரத்தாராகவும், பிள்ளையார்பட்டிக் கோவில் நகரத்தாராகவும் பிரிந்தனர் என்றும், தாங்கள் இருவரும் சகோதரர்கள் என்பதை இசைகுடிமானத்தில் எழுதுகிற திருவேட்பூரார் என்ற வழக்கின் மூலம் தெரிவித்துக் கொள்ளுகின்றனர் என்றும் அறிகிறோம்.

இளையாற்றங்குடி திருவேட்பூருடையாரைக் குறிப்பிடுகின்ற இராங்கியம், மறவா மதுரை, இரணியூர் போன்ற இடங்களில் உள்ள கல்வெட்டுக்கள் அனைத்தும் 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவை. எனவே அதுவரை இரணிக் கோவிலாரும், பிள்ளையார் பட்டியாரும் தனித்தனிக் கோவிலாராகப் பிரிந்திருக்க முடியாது. 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நகரத்தார் அறப்பட்டயங்கள் இரணிக் கோவிலாரையும் பிள்ளையார் கோவிலாரையும் (இந்த வழக்கே நூலில் காணப்படுகிறது) குறிப்பிடுகின்றன. ஆகையால் இளையாத்தங்குடி

திருவேட்பூருடையார் இரணிக் கோவிலாராகவும், பிள்ளையார்பட்டிக் கோவிலாராகவும் பிரிந்தது 16 ஆம் நூற்றாண்டிலிருந்து தான் எனக் கொள்ளலாம்.

பின்குறிப்பு

இளையாத்தங்குடிப் பிரிவைச் சேர்ந்த திருவேட்பூருடையார்கள், பிள்ளையார்பட்டிக் கோவிலாராகவும், இரணியூர்க் கோவிலாராகவும் பிரிந்தது ஏறத்தாழ 400 வருடங்கள் ஆகிவிட்டதாலும், பல தலைமுறைகள் கடந்துவிட்டதாலும் தற்போது நகரத்தார்கள் அனைவரும்கூடி இரண்டு கோவிலார்களும் தங்களுக்குள் திருமணம் செய்து கொள்ளலாம் என்று முடிவெடுத்திருக்கிறார்கள்.

21.வள்ளுவப் பை



மங்கலம் என்பது மனைமாட்சி. மனைமாட்சி சிறப்புற, இல்லறம் நல்லறமாக விளங்க வாழ்க்கைக்குப் பொருள் வேண்டும். நம் முன்னோர்கள் குடும்ப அமைப்பை இல்லறம் என்ற சொல்லால் சொல்லி யிருப்பது ஆழ்ந்த பொருளுடையது. ஆண் பெண் கூடி இன்புறுவது மட்டுமே குடும்பம் அல்ல. தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஐம்புலத்தாரை ஓம்புதல் இல்லறத்தானின் கடமையாகிறது. பெருமையும் உரனும் உடைய ஆண்மகன் "வினையே ஆடவற்கு உயிர்"என்பதை உணர்ந்து பொருளீட்ட முற்படுகின்றான்.

மக்களின் அகவாழ்க்கையையும் புறவாழ்க்கையையும் பாடு பொருளாகக் கொண்டவை சங்க இலக்கியங்கள். அகப்பொருள் மரபில் 'வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்' என்று ஒரு துறை உண்டு. 'வரைதல்' என்றால் திருமணம் செய்து கொள்ளுதல் என்பது பொருள். திருமணம் உறுதியானவுடன் மணப்பெண்ணுக்குப் பரிசுப் பொருளாகக் கொடுக்கவும் இல்லறம் நடத்துவதற்கு வேண்டிய

பொருள் ஈட்டவும் மணமகன் பிரிந்து செல்வான். தஞ்சைவாணன் கோவையில் 'வரைவிடை வைத்துப் பொருள் வயின் பிரிதல்' துறைக்கு விளக்கம் கூற வந்த உரையாசிரியர்,

"தலைவன் வரைதற்குப் பொருள் காரணமாகப் பிரிந்து சென்றான் எனின் பொருளிலன் ஆயிற்று. ஆகவே பொருவிறந்தான் என்பதோடு மாறுகொள்ளுமெனின் மாறு கொள்ளாது.பழங்கிடையாய் கிடக்கும் செம்பொருள் பல உளவேனும் அதனை எடுத்து நுகர்வோன் சிறியனாதலானும் ஆள்வினை உடையன் அல்லன் எனப் படுதலானும் இவன் தன் ஊக்கத்தால் ஈட்டிய பொருள் பலவற்றானும் நுகர்தல், உத்தம இலக்கணம் என்று கருதிப் பொருள் வயின் பிரிந்தான் என்று உணர்க" என்கிறார்1.

பெண்ணுக்கு, பெண்வீட்டார்க்கு மணமகன் கொடுக்கும் பரிசுப் பொருள் 'முலைவிலை எனப்படும். 'முலைவிலை' அல்லது 'முலைப்பாற்கூலி' என்ற சொல்லுக்கு விளக்கம் கூற வந்த தமிழ்க்கலைக் களஞ்சியம் 'பெண்ணின் தாய்க்குப் பெண்ணை வளர்த்ததன் பொருட்டு மணமகன் கொடுக்கும் பரிசப்பணம்' என்று கூறுகிறது. 2

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய குளத்தூர்க் கோவையில் வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதலைப் பற்றிய பின்வரும் பாடல் அமைந்துள்ளது தலைவியின் தோழியிடம் தான் பொருளீட்டி வந்து வரைந்து கொள்வதாகச் சொல்கிறான் தலைவன்.

"வேறாய தெவ்வரை வெல் வேதநாயகவேள் குளத்தூர்ச்
சேறாய கண்ணி முலைவிலையா அத்திகழ் முலைக்கு
மாறாய யானை வெரிந்மேற் சுமந்து வரக் கொணர்வல்
பாறாய கான்சென்று அருநிதி போய்ச்சொல்
பணிமொழிக்கே"

தலைவியின் பொருட்டுப் பொருளீட்டி யானை பொருளைச் சுமந்து வரத் திரும்பி வந்து வரைந்து கொள்வதாகச் சொல்லிச் செல்கிறான்

தலைவன். 3

இந்த வழக்கத்தின் எச்சம் நாட்டுக்கோட்டை நகரத்தாரிடையே இன்று வரை காணப்படுகிறது என்பதை விளக்குகிறது இக்கட்டுரை.. நகரத்தார்கள் வணிகர்கள். ஐநூற்றவர் மரபினர்.4 மன்னர் பின்னோரான இவர்களுக்கு மன்னர்களைப் போலவே மெய்க்கீர்த்தி உண்டு என்பதைப் பிரான்மலையிலுள்ள ஒரு கல்வெட்டால் அறிகிறோம்.5 இச்சாசனம் “திரிபுவனாச்ரய பஞ்சசத வீர சாசனம்” எனப்படுகிறது. இம்மெய்க்கீர்த்தி இவர்களை “ராஜ்ய பரிபாலகர்” என்கிறது. அதனால் இவர்களுக்கு அரசியல் செல்வாக்கு இருந்தது என்பது புலனாகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் பிள்ளையார்பட்டியில் உள்ள 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு கல்வெட்டுக்கள்6 கானநாட்டுக் காரிக்குடி ஐநூற்றவர் பெருந்தெருவில் உள்ள நகரத்தார்கள் மருதங்குடியையும் (தற்போதைய பிள்ளையார்பட்டியும் அதனைச் சுற்றிலும் உள்ள பகுதிகள்) அதைச் சுற்றிலும் உள்ள பகுதிகளையும் விலைக்கு வாங்கிக் குடியேறவும், அவர்கள் அப்பகுதியில் சில வரிகளை வசூலித்துக் கொள்ளும் உரிமையையும் பாண்டிய மன்னன் கொடுத்துள்ளதைக் கூறுகின்றன.

பிரான்மலை கல்வெட்டும், “வாட்டமின்றி கூட்டம் பெருக அறம் வளரக் கலி மெலிய புகழ் பெருக பகை தணிய திசை அனைத்தும் செவிடுபட செங்கோலே முன்னாகவும் செம்பொற் பசும்பையே தெய்வமாகவும் க்ஷமையினோடு கருணை எய்த சமய தன்மம் இனிது நடத்துபவர்கள்” எனக் குறிப்பிடுகிறது. 7

அண்மையில் ஐநூற்றவர் பற்றிய கல்வெட்டுக்கள் பல தொல்லியல் அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அக்கல்வெட்டுக்கள் சிலவற்றில் பசும்பையின் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது. தொல்லியல் அறிஞர் டாக்டர்.இரா. நாகசாமி அவர்கள், “பொன்னிறைந்த பையே,

பசும்பையே தெய்வமாகக் கூறப்பட்டுள்ளது. பசும்பை, வியாபாரிகள் பொருளீட்டும் சின்னமாகக் கருதப்பட்டதற்கு இது எடுத்துக்காட்டு" என்று பசும்பைக்கு விளக்கம் அளிக்கிறார்.8

இவையனைத்தையும் கருத்திற் கொண்டு இப்போது நகரத்தார் திருமணத்திற்கு வருவோம். நகரத்தார் திருமணத்தில் மணமகள் இல்லத்தில்தான் திருமணம் நடைபெறும். மணமகன் திருப்பூட்ட மணமகள் வீட்டுக்குக் குதிரையில் ஏறிச் செல்லுவான். (இவ்வழக்கம் அவ்வளவாக இன்று இல்லை.) அவ்வாறு செல்லும் போது வெல்வெட்டினால் ஆன ஒரு துணிப் பையைத் தோளில் சுமந்து செல்லுவான். இக்காலத்தில் மாப்பிள்ளை தோழன் அல்லது ஒரு சிறுவன் அப்பையைச் சுமந்து வருகின்ற வழக்கம் உள்ளது. அந்தப் பைக்கு 'வள்ளுவப்பை' அல்லது 'வல்லுவப் பை' என்று பெயர். அதனுள் பாக்குச் சுருள் எனப்படும் வெள்ளி அல்லது பித்தளையிலான சிறு பெட்டியும் அதற்குள் சிறிது பணமும், கணக்கு வழக்குகளைக் குறித்து வைக்கும் அடையாளமாக ஏடும் எழுத்தாணியும், வெற்றிலைபாக்கும், மஞ்சளும், குலம் வாழும் பிள்ளை என்று சொல்லப்படும் தவழும் பிள்ளையின் வெள்ளியிலான உருவமும் சிறிய உப்பு மூட்டையும் இருக்கும்.

தமிழ்க் கலைக் களஞ்சியம், வல்லுவப் பை என்பதற்கு 'அரையில் கட்டும் பணப்பை' என்றும் வள்ளுவப்பை என்பதற்கு 'நாட்டுக்கோட்டைச் செட்டிகளுள் மணமகன் தோள் மேல் இட்டுச் செல்லும் பட்டுப்பை' என்றும் பொருள் கூறுகிறது.9

ஐநூற்றவர் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்ற பசும் பைதான் அதாவது பணப்பைதான் நாட்டுக்கோட்டை மணமகன் சுமந்து வருகின்ற வள்ளுவப்பை. நகரத்தார்கள் உப்புவணிகமும் செய்துள்ளார்கள்.10 தூத்துக்குடி பகுதிகளில் அண்மைக்காலம் வரை நகரத்தார்களுக்குச் சொந்தமான உப்பளங்கள் இருந்திருக்கின்றன. உப்பு வணிகத்தின்

அடையாளமாகத்தான் சிறிய உப்பு முடிச்சை வள்ளுவப் பைக்குள் இட்டு வைக்கும் வழக்கம் காணப்படுகிறது.

வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிந்து சென்ற தலைவன், பொருளீட்டி வந்து, தலைவியை மணந்து கொள்கிறான் என்ற சங்ககால வழக்கத்தின் தொடர்ச்சியே நகரத்தார் இனத்தில் மணமகன் குதிரையில் ஏறி வள்ளுவப் பையாகிய பசும் பையைச் சுமந்து மணமகள் இல்லத்திற்குத் திருப்பூட்டச் செல்லும் வழக்கமாக உள்ளது.

தான் தன் இல்லறத்தை நடத்த பெண் வீட்டாரிடம் பொன்னையும் பொருளையும் எதிர்பார்க்காது தானே பொருளீட்டி வந்து திருமணம் செய்து கொள்ளுதல் வேண்டும் என்பதற்கு அடையாளமாக இன்று வரை நகரத்தார் சடங்குமுறைகளில் காணப்படுகின்ற இப்பழக்கம் வெறும் சடங்காக மட்டுமல்லாமல் எந்த நோக்கம் கருதி அச்சடங்கு ஏற்பட்டதோ அதை நிறைவேற்றுவதாகவும் இருத்தல் வேண்டும்.

1. தஞ்சை வாணன் கோவை, குன்றத்தூர் அஷ்டாவதானி சொக்கப்ப நாவலர் செய்த உரை. சிஸிழி - சன்ஸ் 1943.

2. **Tamil Lexicon Vol. VI** பக்.

3. குளத்தூர் கோவை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

4. நகரத்தாரின் கடல் வாணிகம் கட்டுரை. நா. வள்ளி (தமிழ்ப் பல்கலைக்கழக கடல் அகழ்வாய்வு மையம் நடத்திய கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை)

5. யாவரும் கேளிர் டாக்டர் இரா. நாகசாமி, வாசகர் வட்டம், பக். 188

6. பிள்ளையார்பட்டி தலவரலாறு சா. கணேசன்

7. யாவரும் கேளிர் டாக்டர் இரா. நாகசாமி வாசகர் வட்டம், பக் 190.

8. யாவரும் கேளிர் டாக்டர் இரா.நாகசாமி வாசகர் வட்டம், பக் 186.

9. **Tamil Lexicon Vol VI. - University of Madras -** 1982.

10. நகரத்தார் அறப்பட்டயங்கள் டாக்டர் வ.சுப. மாணிக்கம் (பதிப்பாசிரியர்)

22.நகரத்தார் பண்பாட்டில் விளக்குச்சட்டி



“நாட்டுக்கோட்டை நகரத்தாருக்கிடையே தொன்றுதொட்டு இருந்து வரும் பழைய கலாச்சார பண்பாடுகள், பழைய தமிழ்ப் பண்பாடுகளாக இருப்பதால், அப்பண்பாடுகளையெல்லாம் ஆராய்ந்து எழுதி ஆவணப்படுத்திப் பாதுகாக்க வேண்டும் என்பதே எனது தாழ்மையான வேண்டுகோள்” என்று சிறந்த வரலாற்றறிஞரான மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள், நகரத்தார்களுக்கிடையே காணப்படும் பழக்க வழக்கங்களை பற்றி வியந்து கூறியுள்ளார்.

ஆமாம் ! மயிலையார் சொல்வதைப்போல தமிழர்களின் பழமையான பழக்கவழக்கங்கள், பண்பாட்டுக் கூறுகள் இன்றும் நம்மிடையே காணப்படுகின்றன. அதைப் பற்றிய புரிதல் இன்றைய தலைமுறைக்கு அவசியம் என்ற எண்ணத்தின் விளைவே இக்கட்டுரை.

நகரத்தார்கள், திருமணம், தீர்த்தம் குடித்தல் போன்ற விசேடங்களில் முன்னோர்களின் நினைவைப் போற்றி அவர்களுக்குப்

படைத்து, வழிபட்டு அவர்களின் ஆசியோடுதான் நிகழ்வுகளைத் தொடங்குவார்கள். மேலும், ஆடி,தை, மாசி, ஆகிய மாதங்களில் பங்காளிகள் உறவினர்கள் கூடிப் பொதுப்படைப்பு என்று படைத்து மூதாதையர்களை வழிபட்டு வருவதையும் அனைவரும் அறிவோம்.

அதுபோல உத்தராயண காலம் தொடங்குகின்ற தைத்திங்கள் முதல் நாளான மகர சங்கராந்தி தினத்தில் பொங்கல் பண்டிகையன்று முக்கிய வழிபாடாக முன்னோர்களை வழிபடுகின்றனர் என்ற செய்தி பலருக்கும் வியப்பாக இருக்கலாம்.

விளக்குச்சட்டி :

முன்னோர்களை வழிபட்டு அவர்கள் ஆசியை வேண்டுகின்ற சடங்குதான் பொங்கலன்று விளக்குச் சட்டி விளக்கை ஏற்றுகின்ற நிகழ்வு. நகரத்தார் சமூகத்தில் மட்டுமே இதுபோன்றதொரு மரபு காணப்படுகிறது.

நகரத்தார் பெண்களுக்கு வைக்கும் சீர்வரிசையில் விளக்குச்சட்டி கட்டாயம் இடம் பெற்றிருக்கும். சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்பு மண்சட்டியைத் தான் விளக்குச் சட்டியாகப் பயன்படுத்தியிருக்கின்றனர். பின்னர் காலப்போக்கில் வெள்ளி, வெண்கலம், பித்தளை எவர்சில்வரால் ஆன விளக்குச் சட்டியை பெண்ணுக்குச் சீராக வைத்தனர். வசதியான சில குடும்பங்களில் தங்கத்திலான விளக்குச் சட்டியைச் சீர்வரிசையாகக் கொடுப்பதுண்டு.

விளக்குச் சட்டியின் அடிப்பாகம் சமமாக இல்லாமல் சற்று வளைவாக இருக்கும். அதனால் விளக்குச் சட்டியை தரையில் அப்படியே வைக்காமல் ஒரு கலவடையின் மீது தான் வைப்பார்கள். விளக்குச் சட்டியின் அடிப்பாகத்தை வளைவாக இல்லாமல் தட்டையாகச் செய்யலாமே என்றால் அப்படிச் செய்கின்ற மரபு இல்லை. சீர்வரிசையில் விளக்குச் சட்டியுடன் கலவடையும் மூடியும் கட்டாயம் இடம்பெற்றிருக்கும், விளக்குச் சட்டியுள் ஏற்ற ஒரு சிறிய விளக்கையும் கொடுப்பார்கள். அதற்கு விளக்குச் சட்டி விளக்கு என்று பெயர்.

தை மாதம் முதல் நாள் பொங்கலன்று, சாமி வீட்டில் நடுவீட்டுக் கோலம் போடுவர், விளக்குச் சட்டி வைக்கும் இடத்திலும், பொங்கலிடும் இடத்திலும், பொங்கல் பானைகளை இறக்கி வைக்கும் இடத்திலும் கோலம் போடுவர். பொங்கலிடும் பானைகள், விளக்குச்சட்டி ஆகிவற்றில் மாக்கோலமிட்டு மஞ்சள் கொத்தும் கட்டுவர்.



கோலமிட்டு, மஞ்சள் கொத்துகட்டிய விளக்குச் சட்டியினுள், பொங்கல் தினத்தன்று பயன்படுத்தும் காய்கறிகளான கருணைக்கிழங்கு, கத்தரிக்காய், அவரைக்காய், சர்க்கரை வள்ளிக்கிழங்கு ஆகியவற்றில் (சமைக்காதவை) ஒவ்வொன்றையும் கண்ணுப்பிள்ளை நெற்கதிர் ஆவாரம்பூ முதலிய பூக்களையும் வெற்றிலை பாக்கு, பனங்கிழங்கு இரண்டு கணுக்கள் உள்ள கரும்புத்துண்டு ஆகியவற்றையும் வைப்பார். சிறியதொரு பிள்ளையார் திருவுருவும் இருக்கும். பொங்கல்பானை பொங்கியவுடன் தேங்காய் உடைத்து அதில் ஒன்றை கண்னுள்ள மூடியை விளக்குச்சட்டிக்குள் வைத்து விளக்கேற்றி வைப்பதற்காகச் சிறிது இடமும் விட்டிருப்பர்.

பெங்கல் வைத்தபின் மூன்று, ஐந்து என்ற எண்ணிக்கையில் இலைபோட்டு வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல், சமைத்த காய்கறிகள், நெய், பருப்பு, அப்பளம், ஆகியவற்றையும் படைத்துச் சாமி கும்பிடுவார்கள். விளக்குச் சட்டிக்கு என்று ஓர் இலை வைத்திருப்பார்கள். பிறகு ஒரு சுளகைக் கவிழ்த்து வைத்து (அதிலும் கோலம் போட்டிருப்பார்கள், கவிழ்த்த சுளகின் (முறம்) மேல் படைத்த இலையை வைப்பார்கள். இலையின் நுனியில் இரண்டு மாட விளக்குகளை எதிர் எதிராக இருக்கும்படி ஏற்றி வைத்து, கணவனும், மனைவியுமாக அந்தச் சுளகை மெதுவாக எடுத்துச் சென்று, சாமிவீட்டிற்குள் வைத்து வணங்குவார்கள். ஒரு விளக்கை வெளியில் வைத்து விட்டு மற்றொரு நெய் விளக்கை, விளக்குச் சட்டிக்குள் விளக்கை வைக்கும் போதும் மறுநாள் எடுக்கும்போதும் மங்கலச் சின்னமான சங்கை ஊதுவார்கள். பனங்கிழங்கும் கரும்பு முளியும் சற்றே வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். விளக்குச் சட்டியை மூடி கொண்டு மூடுவார்கள். உள்ளே உள்ள விளக்கில் நெய் இருக்கும் வரை அந்த விளக்கு எரிந்த கொண்டிருக்கும். விளக்குச் சட்டி விளக்கை ஏற்றி வழிபட்ட பிறகே பொங்கலை உண்டு மகிழ்வர்.

முதுமக்கள் தாழி :



இவற்றையெல்லாம் மனதில் கொண்டு, இப்போது 2000 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்று, அக்காலத்தில் தமிழர்களிடையே நிலவிய ஒரு மரபைப் பார்ப்போம். உலகிலேயே தொன்மையான வழிபாடு இயற்கை வழிபாடும் பித்ருக்கள் (முன்னோர்கள்) வழிபாடும் தான். ஒருவருடைய உடலுக்குத்தான் அழிவே தவிர, அவரது ஆத்மாவுக்கு அழி வில்லை. அவர்களது ஆசி

தலைமுறை தலைமுறையாக தம்மை வாழ வைக்கும் என்ற ஆழமான நம்பிக்கையுடன் ஒருவர் இறந்துவிட்டால் அவரது நினைவாக அவரது உடமைகளையும், சிறு சிறு மண் குடுவைகளில் தானியங்கள் மற்றும் அகல் விளக்கையும் ஏற்றி வைத்து மூடி மண்ணில் புதைத்து, புதைத்த இடத்தில் அடையாளம் வைத்து வழிப்பட்டிருக்கிறார்கள். தமிழகத்தில் இவ்வாறு கிடைத்துள்ள முதுமக்கள் தாழிகள் ஏராளம்.

முதுமக்கள் தாழியும் விளக்குச்சட்டியும்:

இந்தத் தாழியின் தோற்றம் நகரத்தார்கள் பொங்கலன்று விளக்கேற்றி வழிபடும் விளக்குச் சட்டியை ஒத்திருக்கும். பெரிய மண்ணாலாகிய கலவடை, அதன்மேல் வைக்கப்பட்டுள்ள கூம்பான அடிப்பாகமுடைய தாழி, உள்ளே உள்ள அகல் விளக்குகள் மற்றும் மேலே உள்ள மூடி ஆகியவை அப்படியே நம்முடைய விளக்குச் சட்டியை நினைவுப்படுத்துக்கின்றன. புறநானூறு போன்ற சங்க இலக்கியங்களிலும் இந்த முதுமக்கள் தாழிகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. முன்னோர்களுக்காக எடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள் போல, விளக்குச் சட்டியும், அதனுள் ஏற்றப்படுகின்ற விளக்கும் முன்னோர்களைப் போற்றி வழிபடும் நிகழ்வுதான் என்பதில் ஐயமில்லை.

திருக்குறளும், முன்னோர் வழிபாடும்:

நகரத்தார் ஆண்மகன் ஒருவன் திருமணமானவுடன்தான், தன் மனைவியோடு சேர்ந்து இந்த விளக்குச் சட்டி விளக்கை ஏற்றும் தகுதியுடையவனாகிறான். திருமணமாகி அவன் புள்ளியாவதற்கு முன்பு, தன் பெற்றோர் மற்றும் சகோதரர்கள் விளக்குச் சட்டி விளக்கை ஏற்றுகின்ற நிகழ்வில் கலந்து கொள்வான். விளக்குச்சட்டி, முதுமக்கள் தாழி ஆகிய இரண்டோடு, இப்போது நாம் ஒரு திருக்குறளையும் இணைத்துப் பார்த்தல் வேண்டும். வள்ளுவர், இல்லறவியலில் ஓர் இல்லறத்தானுக்கு உரிய கடமைகளாக ஐந்தைக் குறிப்பிடுகிறார்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு

ஐம்புலத்தாறு ஓம்பல் தலை."

இக்குறளில் வள்ளுவர் இல்லறத்தானுக்குரிய கடமைகளில் முதற்கடமை தென்புலத்தாரை ஓம்புதல் என்கிறார். தெய்வம் கூட அடுத்த நிலைதான். தென்புலத்தார் என்பது இல்லறத்தானுடைய பித்ருக்களான மூதாதையர்களைக் குறிப்பதாகும். தங்கள் முன்னோர்களின் அருளையும் ஆசியையும் வேண்டி, அவர்களை வழிபட்டு அவர்கள் நினைவைப் போற்றுதல் இல்லறத்தானுடைய தலையாய கடமை என்கிறார் வள்ளுவர்.

நகரத்தார் சமூகத்திலும், திருமணமானவுடன் முன்னோரை, விளக்குச் சட்டி விளக்கை ஏற்றி வழிபடும் தகுதியுடையவனாகிறான்.

தும்பு பிடித்தல் :

மேலும் இந்த வழிபாட்டிற்கு முன்பு, சாமி வீட்டுச் சுவரில் கணவனும் மனைவியுமாக இணைந்து ஏடுகளில் கட்டியிருக்கும் தும்பை (தும்பு கயிறு) அரிசி மாக் கோலத்தில் நனைத்து எடுத்து, கோயில் போன்ற ஒரு கோலத்தை வரைவார்கள். இதற்கு, தும்பு பிடித்தல் என்று பெயர். முன்னோர்களைத் தங்கள் இல்லத்தில் எழுந்தருளச் செய்யும் சடங்கு இது. தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற இலக்கண நூல்கள் 'பெரும்படை வாழ்த்தல்', 'இல்கொண்டு புகுதல்' என்று கூறும் முன்னோர் வழிபாட்டையும் இங்கு நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஆக, முன்னோர்களை வழிபடுகின்ற சடங்கே விளக்குச் சட்டி. விளக்கை ஏற்றுகின்ற நிகழ்வு என்றும் திருமணமானவுடன்தான் கணவனும் மனைவியுமாக விளக்குச் சட்டி. விளக்கை ஏற்றுகின்ற தகுதியைப் பெறுகிறார்கள் என்பதையும் அறிகிறோம்.

தமிழர்களின் பண்பாடுகளுக்கு தொடர்ச்சியூட்டிக் கொண்டிருக்கும் சமூகமாக, திருக்குறளின் வழிநின்று வாழ்வாங்கு வாழுகின்ற சமூகமாக நகரத்தார் இனம் விளங்குவதை எண்ணி பெருமைப்படலாம்.

பெருமைப்படுவதோடு நிற்காமல் சடங்குகளின் பொருள் உணர்ந்து அவற்றைப் பின்பற்றுவோமாக!

"வள்ளுவரின் குறள்வழியே வாழுகின்ற மக்கள்

பண்டைத்தமிழ் பழக்க வழக்கம் குறைந்திடாமல்

வாழ்ந்து வரும் மக்கள்" என்றுகவிஞர் கொத்தமங்கலம் சுப்பு நகரத்தார்களைப் பாராட்டுகிறார்.

23.வேலை வணங்குவதே வேலை



'பூசும் நீறுபோல் உள்ளமும் புனிதர்களாகிய நகரத்தார்கள் தீவிரமான முருகன் அடிமைகள். சுமார் 400 ஆண்டுகளுக்கு முன், நகரத்தார்கள் பழனிக்கு உப்பு வியாபாரம் செய்யச்சென்று, கிடைத்த இலாபத்தில் பழனியாண்டவனுக்கு மகமைப் பணம் எடுத்து வைத்து, வேலாயுதனை வணங்கி அன்னதானம் செய்யத் தொடங்கியதிலிருந்து அவர்கள் பாண்டிய நாட்டில் நல்ல முன்னேற்றமடைந்து, பிறகு வட இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் சென்று பொருளீட்டிச் சிறந்தனர். அதுமுதற்கொண்டு நகரத்தார்களுக்கு முருகனை தண்டாயுதபாணிக்

கோலத்தில் வணங்குவதில் ஒரு தனி ஈடுபாடு ஏற்பட்டது.

நகரத்தார்கள், சைவ சமயக் குரவர்களால் பாடப்பெற்ற தேவாரத் தலங்களைத் திருப்பணி செய்தும், பல புதிய சிவாலயங்களை அமைத்ததும் போலவே முருகன் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளிலும் திருப்பணி செய்து புதிதுற பல முருகன் கோவில்களை உள்நாட்டிலும், வட நாட்டிலும், அயல்நாடுகளிலும் எழுப்பினர். பம்பாய் நாசிக் பஞ் சவடியிலுள்ள கார்த்திக் சுவாமி மந்திரும், வங்காளத்தில் உள்ள தண்டபாணிக் கோயிலும் நகரத்தார் கட்டியதே. பர்மா, இலங்கை, மலேயா, சிங்கப்பூர், செய்கோன் போன்ற நாடுகளுக்குக் கொண்டு விற்கச் சென்ற நகரத்தார்கள் அங்கும், அநேக தண்டாயுதபாணிக் கோவில்களைக் கட்டி வழிபட்டுள்ளனர், வழிபட்டு வருகிறார்கள்.

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு போக்குவரத்து வசதிகள் அதிகம் இல்லாத காலத்தில் நகரத்தார்கள், இலங்கை, மலேயா, செய்கோன் போன்ற அயல்நாடுகளுக்குப் பாய்மரக் கப்பல்களில் சென்று பெரும் பொருள் ஈட்டிவந்தனர். இதைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

‘காற்றினிலே பாய்போட்டு

கடவுளையே துணை வைத்து

கலங்கள் எல்லாம் சென்றபோதே

கடலோடி மலைநாடும்

பிறநாடும் சென்றார்கள்

கப்பல் வாராத போதே”

என்று பாடுவார் நம் கவியரசர் கண்ணதாசன். உற்றார் உறவினர், பெண்டு பிள்ளைகள் அனைவரையும் பிரிந்து வாய்க்கரிசி வாங்கிக் கொண்டு பாய்மரக் கப்பல்களில் சென்றவர்களுக்கு தெய்வம்தான் துணை நின்றது என்று நம்பினார்கள். அந்த நம்பிக்கைதான் அவர்களைச் சென்ற இடம் எல்லாம் கோயில்களைக் கட்ட வைத்தது. ‘கொண்டு விற்கப் போன நாட்டில் கோயில் கட்டும் தூயர்’ என்று

நகரத்தார்களைப் பாராட்டுவார் கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு அவர்கள்.

அயல்நாடுகளில் சிவன், விநாயகர், மாரியம்மன் ஆகியோருக்கு ஓரிரு இடங்களில் கோயில்கள் கட்டினாலும், தண்டாயுதபாணிக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். நகரத்தார்கள் தாங்கள் சென்ற அயல்நாடுகளில் முருகனைத் தண்டாயுதபாணியாக வழிபடுவதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றில் பின்வரும் இரண்டு காரணங்கள் ஏற்புடையதாக இருக்கின்றன.

1. சிவன் கோயில்களில் பூஜைகள் முதலியவற்றை ஆகம முறைப்படி செய்ய சிவாச்சாரியார்கள் வேண்டும். வெளிநாடுகளில் சிவாச்சாரியார்கள் கிடைப்பது அரிது. தண்டாயுதபாணி கோயில்களாக இருந்தால் பண்டாரங்களும் பூஜைகள் செய்யலாம். (சான்றுநகரத்தார் அறப்பட்டயங்கள்). அதனால் அயல்நாடுகளில், பெரும்பான்மையாக, தண் டாயுதபாணிக்குக் கோயில்கள் அமைத்து பண்டாரங்களின் துணைகொண்டு வழிபாடுகள் நடத்தினர்.

2. அக்காலத்தில் வெளிநாடுகளுக்குக் கொண்டு விற்கச் சென்றவர்கள், பெண்டு பிள்ளைகளைப் பிரிந்து, கிட்டங்கிகளில் தனித்து துறவு வாழ்க்கை வாழ்ந்தனர். அந்நிலையில் மனம் பேதலித்துச் சலனமடையாமல் இருக்க துறவுக் கோல முருகனை வழிபட்டார்கள்.

சிங்கப்பூரில், சிங்கப்பூர் நகரத்தார்கள் கி.பி. 1859இல் தண்டாயுதபாணிக்குக் கோயில் நிறுவினர். மலேசியாவில் பத்துபகாட், மூவார், சிகாமட், மலாக்கா, கோலாலம்பூர். ஈப்போ, தெலுக் இந்தான், தைப்பிங், சுங்குரும்பை, கூலிம், அலோர்ஸ்டார், பினாங்கு ஆகிய இடங்களிலும் தண்டாயுதபாணிக்குக் கோயில்கள் கட்டியுள்ளனர். வைகாசி விசாகம், ஆடிக் கிருத்திகை, தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற நாட்களில் திருவிழாக்கள் நடத்தி, அன்னதானம் செய்தனர். செய்து வருகின்றனர்.

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு நேமங்கோயில் குப்பாப் பிச்சஞ் செட்டி மகன் குமரப்பன் காலம் தொடங்கி இன்றுவரை, ஆண்டாண்டு தோறும் தைப்பூசத்திற்குப் பழனித் தலத்துக்கும், ஒவ்வொரு சித்திரை

மாதமும் வைதீசுவரன் கோவிலுக்கும் ஏராளமான நகரத்தார்கள் நடந்து செல்கின்றனர். ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, பல 'மைல்'கள் நடந்தே சென்று, காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்க, கந்தனை வழிபடும் காட்சியைக் காணக் கண்கோடி வேண்டும். அது போலவே, சிங்கப்பூர், மலேயா நாடுகளிலும், தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற திருவிழாக் காலங்களில், நகரத்தார்கள் தாங்கள் வசிக்கும் பகுதிகளிலிருந்து நடந்தே சென்று தண்ணீர்மலை ஆண்டவனையும், மற்ற இடங்களில் உள்ள தண்டபாணிக் கடவுளையும் வணங்கி வருகின்றனர்.

முதலில் வெளிநாடுகளில் நகரத்தார்கள் தண்டாயுதபாணியின் அடையாளமாக, வேலை வைத்துத் தான் வணங்கினார்கள். பிறகுதான் சூழ்நிலைக்கு ஏற்றவாறு கோயில்களைக் கட்டி, தண்டாயுதபாணியைப் பிரதிட்டை செய்தனர்.

இன்று தமிழகத்திலும், வெளிநாடுகளிலும் உள்ள நகரத்தார்கள், எண்ணற்ற முருகன் பாடல்களைப் பாடியும் பாடச் செய்தும், சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றி வருவதைப் போலவே, சுமார் 100, 150 ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாடுகளுக்குச் சென்ற நகரத்தார்கள், "அருச்சனை பாட்டேயாகும்" என்ற பெரியபுராண வாக்குப்படி தண்டபாணியைத் தமிழாலும் வணங்கியிருக்கிறார்கள், அத்தமிழ்ப் பாக்கள் நூல் வடிவில் வர ஏராளமான பொருளுதவியும் செய்திருக்கிறார்கள். அவற்றில் மலேயா, சிங்கப்பூர் தொடர்புடைய நூல்களைப் பற்றித் தெரிந்து கொள்வது அந்நாடுகளில் வசிக்கும் நகரத்தார்களுக்கு சுவையானதாக இருக்கும் என்பதால், சில நூல்களின் பெயர்களை மட்டும் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

1. "சிங்கை வடிவேலர் ஸ்தோத்திரம்"

இதில் சில சித்திரக் கவிகளும் அடங்கி இருக்கின்றன. இது க.தெ.அரு. இராமசாமி செட்டியார் அவர்கள் கூட்டாளி பெத்த பெருமாள் செட்டியார் அவர்கள் கேட்டுக் கொண்டபடி மதுரை ஜில்லா எழுநகரத்தைச் சேர்ந்த நேமநகரம் ரெ.இராமநாதன் செட்டியார்

அவர்கள் புத்திரர் நெல்லையப்பச் செட்டியாரால் இயற்றப்பட்டது. (யாழ்ப்பாண பண்டிதர் சி.ந.சதாசிவப்பிள்ளையவர்களால் பார்வை யிடப்பட்டது). சிங்கப்பூர் மாரியம்மன் கோயிலுக்கு அருகிலிருந்த தீனோதயவேந்திரசாலையில் 1880ல் அச்சிடப்பட்டது.

2.'பினாங்கு தண்ணீர்மலை வடிவேலர் பேரில் துதி கவி.'

மதுரை ஜில்லா, கூத்தலூர் ராம. வேங்கடாசலம் செட்டியார் அவர்கள் குமாரரும்,வன்றொண்டச் செட்டியாரவர்கள் மாணாக்கருள் ஒருவருமாகிய இராமநாதச் செட்டியாரவர்கள் இயற்றியது. இஃது பினாங்கில் வசிக்கின்ற நாட்டுக்கோட்டை நகரத்தாரால், பினாங்கு, பினாங் அண்ட் ஸ்டெரெயிட்ஸ் பிரஸ் அச்சு இயந்திர சாலையில்1894இல் பதிப்பிக்கப் பெற்றது.

3.“பினாங்கு தண்ணீர்மலை சுப்பிரமணிய சுவாமி ஆசிரிய விருத்தம்“

ஆசிரியர் அண்ணாமலைச் செட்டியார் 1898இல் காரைக்கால் கா. மஸ்தான் இராவுத்தர் முயற்சியால் மனோரஞ்சித விலாச அச்சு இயந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

4.”சிங்கப்பூர் பிரபந்தத் திரட்டு’’

இது வன்றொடவர்கள் மாணாக்கருள் ஒருவராகிய காரைக்குடி ராம. கு.மெ. மெய்யப்பச் செட்டியாரால் இயற்றப்பட்டு, நாச்சியாபுரம் பெரிய கருப்பச் செட்டியார் குமாரர் முத்தையா செட்டியார் கேட்டுக் கொண்டபடி சென்னை மதராசு ரிப்பன் அச்சு இயந்திர சாலையில் 1899ல் அச்சிடப்பெற்றது.

5.“பினாங்கு தண்ணீர்மலை வடிவேலர் பதிற்றுப்பத்தந்தாதியும் முத்துமாரியம்மன் பேரில் ஆசிரிய விருத்தமும்’’

இஃது ஸ்ரீலஸ்ரீ வன்றொண்டவர்கள் மாணாக்கருள் ஒருவரும் மதுரை ஜில்லா நாச்சியாபுரம் ராம.வேங்கடாசலச் செட்டியாரவர்கள் குமாரருமாகிய இராமநாதஞ்செட்டியாரால் இயற்றப்பட்டு பினாங்கில் வசிக்கின்ற நாட்டுக்கோட்டை நகரத்தினரால் பினாங்கு, பினாங்

அண்ட் ஸ்டேரயிட்ஸ் பிரஸ் அச்சியந்திர சாலையில் 1900ம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது.

6. “ தண்டாயுதபாணி பத்து தோத்திர மஞ்சரி’

இயற்றியவர் குடந்தைக்கவி, சந்தான கிருஷ்ணநாயுடு அவர்கள். காரைக்குடி வெ.ராம.சு.சுப்பிரமணியன் செட்டியாரவர்களால் 1912இல் சிங்கப்பூர் பி.சி. துரையன் கம்பெனியில் பதிப்பிக்கப்பெற்றது.

7. “சிங்கை சிவ சுப்பிரமணியன் தோத்திர மஞ்சரி”

இஃது நாகை கோபால சுவாமிகளால் இயற்றப்பட்டு சிங்கை விஜயகேதனன் அச்சு இயந்திர சாலையில் 1914இல் பதிப்பிக்கப்பட்டது.

8. “கிள்ளான் தண்டாயுதபாணி கோயில் மகோற்சவ சிறப்பு’

வித்தியா பாஸ்கரன் பத்திராதிபார் கா.கந்தையா பிள்ளையவர்களால் 1915ல் பிரசுரிக்கப்பட்டது.

9. ‘தண்ணீர்மலை தண்டாயுதபாணி பிள்ளைத்தமிழ்”.

இது ஜோசியம் மா. சண்முகவேலு முதலியாரவர்களால் இயற்றப்பட்டு, பினாங்கு நகரத்தவர்களால் பினாங்கு விக்டோரியா பிரஸில் 1917ல் பதிப்பிக்கப்பட்டது. (இதில் தண்ணீர்மலைச் சிலேடை வெண்பாவும் அடங்கியிருக்கின்றது.).

10. “தண்ணீர்மலை வேல் முருகக் கடவுள் பேரில் அரும்பாமாலை” 1930

11.”பினாங்கு மாநகர் தண்ணீர்மலையில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் முருகவேள் பஞ்சரத்தினப் பாமாலை” 1930

12. “கோலமாநகர் குமாரக் கடவுள் போற்றிப்பதிகமும், பத்துமலை வடிவேலர் பதிற்றந்தாதியும்“,

ஆசிரியர் சுவாமி அருணகிரிநாதர். இதனை வெளியிட்டவர் காரைக்குடி திருவாளர் சுப. ராம.இராமசாமி செட்டியார், கோலாலம்பூர்

ஆர்ட் பிரிண்டிங் ஒர்க்ஸ் 1931இல் பதிப்பிக்கப் பெற்றது.

13. "பினாங்கு தண்ணீர்மலை முருகன் ஆடு மயில் பாடல்"

இதனை ஆக்கியோன் சென்னை அகத்தியன் மரபு சாது நாராயண தேசிகர் மடாலயாதிபதி ஞா.நா. நந்த மணவாள தேசிகரின் பிரதம சீடர் உயர்திரு சுவாமி அருணகிரிநாதன். வெளியிட்டவர் தெற்குப்பை பழ. பழனியப்பச் செட்டியார் 22.7.1931.

14. "பினாங்கு தண்ணீர்மலை ஸ்ரீ தண்டாயுதபாணி அருட்பாடற்றிரட்டு"

அன்பர்கள் வேண்டுகோளின்படி 6.5.1946 அன்று இதனை பதிப்பித்து வெளியிட்டோர் பினாங்கு இந்து சபை தலைவரும் நா.கு. கடை அதிபருமாகிய திருவாளர் காரைக்குடி வி.வெ.குப. குப்பாஞ் செட்டியாரவர்கள்.

15. 'ஸ்ரீ மரத்தாண்டவர் வருகைப் பதிகமும் காவடிச் சிந்தும்''

தேவகோட்டை பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் பாடியது. வெளியிட்டோர் ஸ்ரீமரத்தாண்டவர் கோயில் டிரஸ்டி. குவாந்தான், பகாங் (மலேயா) 1961

16. "ஸ்ரீ தண்ணீர்மலை வடிவேலர் பதிகமும் ஸ்ரீவாலைப்பூர் முத்துமாரியம்மன் பதிகமும்'

அச்சிடுவித்தவர் வாலைப்பூர் ஸ்ரீமான் தெ.பழ.வயி. கரு சுதிரேசன் செட்டியாரவர்கள். பினாங்கு கணேச அச்சு இயந்திர சாலையில் பதிப்பிக்கப்பெற்றது.

17. "பினாங்கு தண்ணீர்மலை வடிவேலர் காவடிச்சிந்து"

இஃது யாழ்ப்பாணம் சைவப்பிரகாசர் த. குமார சுவாமிப்பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்று நெற்குப்பை ஸ்ரீமான் பழ.பழனியப்ப செட்டியார் அவர்களால் கணேச அச்சு இயந்திர சாலையில் பதிப்பிக்கப்பெற்றது.

24.எந்நாளும் காக்கும் வேல்வழிபாடு



இந்தியாவின் தென்பகுதியான செட்டிநாட்டுப் பகுதியில் இருந்து வணிகத்தின் பொருட்டு வடநாடு சென்ற நகரத்தார்கள் முதலில் கல்கத்தாவில் நகரவிடுதி அமைத்து அதில் ‘வேல்’ ஸ்தாபித்து முருகனை வழிபட்டிருக்கின்றனர். அதைக்குறிக்கும் பின்வரும் தமிழ்க்கல்வெட்டு கல்கத்தா நகரவிடுதியில் உள்ளது. நகரத்தார் வரலாற்றில் முக்கிய இடம்பெறும் கல்வெட்டு அது.

கல்கத்தாவிற்கு வந்த செட்டிப் பிள்ளைகள்,ஆழ்ந்து அகன்று நுண்ணியதான, ஞானத்தின் வடிவமான வேலை ஸ்தாபித்துத்தான் தொழில் தொடங்கி இருக்கிறார்கள். 1921இல் எழுதப்பட்ட கல்வெட்டு,

கல்கத்தாவிற்கு நகரத்தார்கள் வந்து 120 வருடங்கள் ஆகிறது என்று கூறுகிறது. அதாவது 1800 ஆம் ஆண்டளவில் நகரத்தார்கள் கல்கத்தாவிற்குச் சென்றிருக்கிறார்கள்.

ஒன்பது சிவன்கோயில்களை அடிப்படையாகக் கொண்டு, வாழ்கின்ற நகரத்தார்கள் தாங்கள் தொழில் தொடர்பாகச் சென்ற இடங்களிலெல்லாம், சிவன் மகனான முருகனுக்கே முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். முருக வழிபாட்டின் அடையாளமாக வேல் ஸ்தாபித்தும் தண்டாயுதபாணிக் கோலத்திலும் முருகனை வணங்கி இருக்கிறார்கள். ஏன்?

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு பழனித்தலத்திற்கு உப்பு வணிகம் செய்யச்சென்ற நகரத்தார்கள் பழனி மலைமேல் உள்ள வேலாயுத சாமியாகிய தண்டாயுத பாணியை வணங்கி மேன்மை அடந்திருக்கிறார்கள்.அதனால் வணிகத்தின் பொருட்டுத் தாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் தண்டாயுதபணிக் கோலத்தில்தான் முருகனை வணங்கி இருக்கிறார்கள்.பெரும்பாலான இடங்களில் வேலைத்தான் முதலில் ஸ்தாபித்திருக்கிறார்கள்.

இன்றைக்கும் பழனி பாதயாத்திரையில் வேல்தானே நம்மை முன்னின்று வழிநடத்திச் செல்கிறது!

இன்னொரு காரணம்: சிவன் கோவில்களில் பூஜை முதலியவைகள் நடத்த சிவாச்சாரியார்கள் வேண்டும். அக்காலத்தில் சிவாச்சாரியார்கள் கடல் கடப்பதில்லை.ஆகவே வெளிநாடுகளில் சிவன் கோவில்கள் கட்டினால் சிவாச்சாரியார்கள் கிடைப்பது அரிது என்ற காரணத்தாலும், பழனித்தலத்தில் பண்டாரங்கள் தண்டாயுதபாணிக்குப் பூஜை செய்வதைப் பார்த்ததாலும், நகரத்தார்கள் வெளிநாடுகளில், பண்டாரங்கள் மூலம் பூஜை நடத்தி முருகனை வழிபட்டனர்.

இன்றும் செட்டிநாட்டில் ஆடி மற்றும் கார்த்திகை மாதங்களில் வேல் பூஜை நடத்திப் பண்டாரங்கள் பூஜை செய்ய, வழிபாடு நடப்பதைப் பார்க்கிறோமே.

நகரத்தார்கள் கல்கத்தாவிற்குச் செல்லும்போது தரைமார்க்கமாகச் செல்லவில்லை. தூத்துக்குடி, நாகப்பட்டினம், புதிச்சேரி, சென்னை ஆகிய துறைமுகப் பட்டினங்களிலிருந்து கல்கத்தாவிற்கும் பர்மா, இலங்கை, மலேயா, வியட்நாம், இந்தோனேஷியா சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் கிழக்குக் கடற்கரை ஓரமாகவே பாய்கட்டிக் கப்பல்களில் சென்றிருக்கிறார்கள்.

உயிரைப் பணயம் வைத்துப் பாய்மரக் கப்பல்களில் சடங்குகளைச் செய்துகொண்டு உயிரைப் பணயம் வைத்துப் பாய்மரக் கப்பல்களில் துணிவோடு பயணம் செய்து திரைகடலோடித் திரவியம் தேடினர். ‘செட்டிக் கப்பலுக்குச் செந்தூரான் துணை’ என்ற துணிவோடு பயணம் செய்துனர்.

அயல்நாட்டில் தம்மையும், உள்நாட்டில் தம் குடும்பத்தையும் தெய்வம் தான் காப்பாற்றும்; துணைநிற்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். வெளிநாடுகளிலிருந்து தங்கள் உறவினர்களுக்குக் கடிதங்கள் எழுதுகிறபோதுகூட, “இப்படிக்கு வேணும் ஸ்ரீ கற்பகமூர்த்தி துணை” “இப்படிக்கு வேணும் ஸ்ரீ தண்டாயுதபாணி துணை” என்றே கையெழுத்திட்டிருக்கின்றனர்.

கிழக்காசிய நாடுகளில் அரிசி, துணி வகைகள், நவதானியங்கள், மிளகு போன்றவற்றை முதலில் கொண்டுவிற்றவர்கள், பிறகு வட்டித்தொழில் எனப்படும் கொடுக்கல் வாங்கல் தொழிலிலும் ஈடுபட்டனர்.

“வட்டியிலே சோற்றை உண்டு வந்த மிச்சமெல்லாம்
கட்டிவைத்துக் கோவிலாகக் கட்டிவைத்தோர்”

என்று இவர்களை மனதாரப் பாராட்டுவார் கொத்தமங்கலம் சுப்பு.

கல்கத்தா சென்ற நகரத்தார்கள் அங்கிருந்து கடல் மார்க்கமாக பர்மா சென்றிருக்கின்றனர். பர்மாவில் சுமார் 62 ஊர்களில் முருகன் கோவில்கள் கட்டியிருக்கின்றனர்..பர்மாவில் நகரத்தார் கட்டிய முருகன் கோவில்களுள் குறிப்பிடத்தக்கவை, இரங்கூன் மொகல் வீதியிலுள்ள

ஆறறை தண்டாயுதபாணிக் கோவிலும், பசுமந்தான் தண்டாயுதபாணிக் கோவிலும் மற்றும் கம்பையிலுள்ள முருகன் கோவிலுமாகும்.

இரண்டாம் உலகப்போரால் ஏற்பட்ட பாதிப்பின்போது, பர்மாவிலிருந்து நகரத்தார்கள் நடந்தே தாயகம் திரும்பினர். அந்நிலையில் 1942இல் பசுமந்தான் தண்டாயுதபாணிக் கோவில் ஜப்பானியரின் குணுவீச்சால் சேதமானது. நகரத்தார்கள் உடனே அதைச் செம்மை செய்துவிட்டுத்தான் தாயகம் திரும்பியிருக்கின்றனர். இதைக்குறித்து மேலை நாட்டு அறிஞரும், நகரத்தார் ஆய்வாளருமான 'பிலிப் சீகல்மேன்' என்பவர், "பர்மிய நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிற இச்சமூகத்தவர் இவ்வாறு இடிந்துபோன கோவிலை மீண்டும் கட்டப் பெரும்பணம் செலவிடுவது வியப்புக்கும் பாராட்டுக்கும் உரியது" என்று வியந்து பாராட்டுகிறார்.

பர்மாவைப் போலவே இலங்கை, மலேயா, செய்கோன், சிங்கப்பூர், இந்தோனேஷியா போன்ற நாடுகளிலும் முருகனுக்குக் கோவில்கள் கட்டியுள்ளனர்.

தாயகத்தில் சிவத்தலங்களைத் திருப்பணி செய்ததுபோல, அறுபடை வீடுகளிலும், குன்றக்குடி, சிக்கல், புள்ளிருக்கு வேளூர் போன்ற தலங்களிலும் திருப்பணிகள் செய்துள்ளனர்.

தற்காலத்தில் குன்றத்தூர், சிறுவாபுரி, வள்ளிமலை, ஞானமலை, நடுப்பழனி, எண்கண், எட்டுக்குடி, குருந்தமலை, கரட்டுமலை போன்ற முருகன் தலங்களில் ஈடுபாடு கொண்டு பாதயாத்திரையாகச் சென்று பால்குடங்கள் காவடிகள் எடுத்து வழிபாடு செய்து வருகிறார்கள்.

எங்கும் எப்போதும் தங்களைக் காக்கும் வேலை வணங்குவதே வேலை என்கிற கொள்கையோடு வாழுகின்ற நகரத்தார்கள், பங்குனி உத்தர நன்னாளில் கல்கத்தா சிங்கார முருகனுக்கு விழா எடுத்து, பழமையை மீண்டும் புதுப்பிக்கிறார்கள்.

நெஞ்சம் நிறைகிறது!

மகிழ்வைத் தருகிறது!

25.சேந்தினி பழனியப்பய்யா பாடிய செவ்வேள்

நகரத்தார்கள் வசிக்கும் ஊர்களில் ஒன்றாகிய காரைக்குடியில் நகரத்தார் மரபில் பிள்ளையார்பட்டிக் கோவில் பிரிவில் கிபி 1791 இல் தோன்றியவர்' "கோவிலூர் ஆண்டவர்" என்று அழைக்கப்படும் முத்துராமலிங்க ஞான தேசிகர் ஆவார். அவர் கருவிலேயே திருவுடையவராகத் திகழ்ந்தார். அக்காலத்தில் காரைக்குடியில் சிவன் கோயில் இல்லை. அதனால் காரைக்குடிக்கு அருகில் உள்ள கழனிவாசலுக்குச் சென்று அங்கு கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருநெல்லையம்மன் உடனாய கொற்றவாளீசுவரரை வணங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் முத்துராமலிங்கர். பொருள் வைத்த சேரி உகந்தலிங்க தேசிகரிடம் மாணாக்கராய் இருந்த போது குருபத்தினி விரும்பியபடி மயில் குஞ்சுகள் சேகரிக்கவும் கொற்றவாளீசுவரரை வணங்கவும் கழனிவாசலுக்கு வந்தபோது அக்கோயில் பழுதுபட்டு இருப்பதைக் கண்டார். அக்கோயிலை திருப்பணி செய்ய வேண்டும் என்ற திருவுளம் கொண்டு 1808இல் திருப்பணியைத் தொடங்கி நகரத்தார் பொருள் உதவியுடன் திருப்பணிகளைச் செய்தார். முத்துராமலிங்கர் செய்த திருப்பணிகளுக்குப் பிறகு கோயிலைச் சுற்றி ஊர் அமைந்து அப்பகுதி. கழனி வாசலில் இருந்து பிரிந்து "கோவிலூர்" என்று அழைக்கப்பட்டது.

கிபி 1818 இல் கோவிலூர் ஆண்டவர் என்று அழைக்கப்படும் முத்துராமலிங்க ஞான தேசிகர், கோவிலூரில் வேதாந்தமடம் ஒன்றை நிறுவி அதன் முதல் தலைவராகவும் திகழ்ந்தார். அவர் காலம் முதற்கொண்டு இன்றுவரை இம்மடம் மிகச் செம்மையாக செயல்பட்டு வருகிறது. சாதி இன வேறுபாடு அற்ற அடியார்குழாம், உணவு உடை இருக்கை முதலியவற்றிற்கு கவலைப்படாமல் அமைதியாகத் தியானம் தவம் முதலிய ஆத்ம விசாரம் செய்து வரவும் இறை வழிபாட்டில் முழு மனதுடன் ஈடுபடவும் இம்மடம் வழிவகை செய்கிறது. இம்மடத்தில் வடமொழியில் உள்ள வேதாந்த நூல்கள் தமிழ்ப்படுத்தப்பட்டு முறைப்படி பயிற்றுவிக்கப்பட்டன. வடமொழி தெரிந்தவர்கள் தான்

வேதாந்தம் படிக்க முடியும் என்ற நிலைமாறி, தமிழ்மொழியில் வேதாந்தம் படிப்பதற்கு வகை செய்த மடம் என்ற அளவில் வேதாந்த தத்துவ வரலாற்றில் கோவிலூர் மடம் முக்கிய இடம் பெற்றுள்ளது.

நகரத்தார் மரபைச் சார்ந்த துறவிகளே இம்மடத்தின் மடாதிபதியாக வர முடியும். நகரத்தார்களில் துறவு மேற்கொள்ளும் வழக்கம் கோவிலூர் ஆதீனம் ஏற்பட்ட பின்னரே பெரிதும் பரவியது. 96 ஊர் நகரத்தார்கள் ஒன்று கூடி ஒரு முடிவு எடுக்கவேண்டும் என்றால் கோவிலூர் மடத்தில் கூடுவது வழக்கம். நகரத்தார்கள் கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்று பெரும் பொருள் ஈட்டிய காலகட்டத்தில் வாழ்ந்த முத்துராமலிங்க தேசிகரும். அவரைத் தொடர்ந்து வந்த மடாதிபதிகளாகிய துறவு ஆண்டவர், கருணாநிதி சுவாமிகள், திருக்களர் வீரப்ப சுவாமிகள் போன்றோரும் தாங்கள் கோயில் திருப்பணி செய்ததுமின்றி நகரத்தார்களையும் தத்தம் ஊர்களிலும் பாடல் பெற்ற தலங்களிலும் ஏனைய தலங்களிலும் திருக்கோயில் திருப்பணிகளோடு வேத பாடசாலைகள், தேவாரப் பாடசாலைகள், பசுமடங்கள், குருபூசைமடங்கள், நந்தவனங்கள், அன்னசத்திரங்கள் முதலான அறப்பணிகள் செய்யவும் தூண்டினர். நகரத்தார்களும் அவ்வாறே செய்தனர். இவ்வாறு ''கோவிலூர் ஆண்டவர்'' காலம் முதல் திருப்பணிகள் செம்மையாக நடந்து வருவதை,

"மடமுண்டோ சிவாலயங்கள் மிகுதி உண்டோ
வாசிட்டம் படிப்பதுண்டோ மனத்துள் ஞானத்
திடமுண்டோ நால்வர்தமிழ் படிப்பாருண்டோ
திவ்வியமாம் உதாரமுதல் குணங்களுண்டோ
விடமுண்டோன் அடியார்குழாம் மிகுதியுண்டோ
மெய்யறம் சாத்திரம் விரைப்பூங்காவுமுண்டோ
வடகைலைக்கு இறைவனெனும் முத்துராம
வள்ளல் திருக்கழனிநகர் வாராமுன்னே''.

என்ற பாடல் மூலம் அறியலாம். உலகறிந்த நகரத்தாரர்களின் கோயில் திருப்பணிகளுக்கும் மற்ற அறப்பணிகளுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்த கோவிலூர் ஆண்டவரின் சீடர்களில் ஒருவரான சேந்தினி பழனியப்பய்யா என்பவர் தான் மேற்சொன்ன பாடலைப் பாடியவர். இவர் கோவிலூர் ஆண்டவர் காலத்திலும் அவருக்கு அடுத்த பட்டங்களான துறவு ஆண்டவர் மற்றும் கருணாநிதி சுவாமிகள் காலத்திலும் வாழ்ந்திருக்கிறார். கோவிலூர் ஆண்டவர் முதற் கொண்டு கோவிலூர் மடத்தைச் சேர்ந்த பலரும் கவி பாடும் ஆற்றல் கைவரப் பெற்றவர்களாக இருந்திருக்கிறார்கள். பல பாடல்களை இயற்றியுள்ளார்கள். அந்த வகையில் சேந்தினி பழனியப்பய்யாவும் பல பாடல்களை இயற்றியுள்ளார். ''சொர்ணநாதபுரம் பழனியப்பய்யா'' என்றும் இவர் அழைக்கப்பட்டிருக்கிறார்.

கோவிலூர் ஆண்டவரிடமும் துறவாண்டவரிடமும் வேதாந்தம் கற்ற பழனியப்பய்யா பின்வரும் நூல்களை இயற்றியுள்ளார்.

1. வெயிலுகந்த விநாயகர் பதிகம்
2. பழனிமலைச் செட்டியார் மாலை.
3. கல்லுளி மாலை
4. பொன்மாரி அந்தாதி
5. சீரலைவாய்ப் பதிகம்
6. பழனிப் பதிகம்
7. விடுதிக்கவிகள்
8. தோத்திரப் பாமாலை
9. தனிப்பாடல்கள்
10. ஆண்டவர் முத்துராமலிங்க ஞான தேசிகர் சரித்திரம்.

இவைகளில் முதல் ஏழு நூல்களும் அடங்கிய தொகுப்பு நூல் ஒன்று 1898 ஆம் வருடம் வெளிவந்துள்ளது. ''பாண்டி நாட்டில் உள்ள கோவிலூர் மடாலயத்தின் சிஷ்யராகிய சொர்ணநாதபுரம் பழனியப்பய்யா அவர்கள் இயற்றிய திருப்பாடற்றிரட்டு என்ற தலைப்பிடப்பட்டுள்ள அந்நூல் கோவிலூர் மடாலய சிஷ்யராகிய ஒய்யக்கொண்டான் சிறுவயல் முரு.அள. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களால் தஞ் சாவூர் சதாவதானம் சுப்பிரமணிய ஐயர் அவர்கள் முன்னிலையில் பரிசோதிக்கப்பட்டு. சென்னை மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. செட்டியார் மாலை, பழனிப்பதிகம், சீரலைவாய்ப்பதிகம் ஆகியவை முருகன் மீது பாடப்பெற்றவை. முருகன் மீது குறிப்பாக பழனி ஆண்டவன் மீது ஐயாவிற்கு உள்ள ஈடுபாட்டை இந்நூல்கள் மூலம் காண முடிகிறது.

செட்டியாகிய முருகனுக்கு அப்பன் என்ற பொருளில் சிவபெருமானை ''செட்டியப்பன்'' என்று குறிப்பிடுவார் அப்பர் சுவாமிகள். நம் பழனியப்பையாவும் மிக உரிமையோடு முருகனை செட்டியார் என்றும் செட்டி என்றும் ''செட்டியார் மாலை'' ''கல்லுளி மாலை'' ஆகிய நூல்களில் குறிப்பிடுகிறார். பல வரலாற்றுச் செய்திகள், இலக்கிய புராணச்செய்திகள் ஆகியவற்றை உள்ளடக்கியனவாய் இலக்கியச்சுவை மிகுந்து காணப்படுகிற நூல்கள் இவை. ''செட்டியாரே'' என்றும் ''செட்டி'' என்றும் முருகனை அழைத்து ''எனக்குப் பொன்னும் பொருளும் தா'' என்று உரிமையோடு கேட்கிறார் பழனியப்பையா. ''பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை'' என்பது உண்மைதான். ஆனால் துறவியாகிய தான், பொன்னும் பொருளும் கேட்பதற்கான காரணத்தையும் அவரே கூறுகிறார். நகரத்தார்கள் கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று தொழில் செய்து பொருள் ஈட்டிச் சிக்கனமாக வாழ்ந்து. அதேசமயம் கோயில் திருப்பணிகளுக்கு அள்ளிஅள்ளிக் கொடுத்த காலகட்டத்தில் வாழ்ந்தவர் அவர் என்பதை நாம் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

'வரவின்றி செலவழித்தல் செட்டியாரே தன
வணிகர் முறையன்று செட்டியாரே
பட்டினத்தார் முதலானோர் செட்டியாரே பணம்
பழுதென விடுத்தாரல்லோ செட்டியாரே
சிட்டர் நெறியதுதான் செட்டியாரே அறஞ்
செய்ய நிதி வேண்டினேன் காண் செட்டியாரே'

என்று அறம் செய்வதற்காகத்தான், தான் பொருள் கேட்பதாகக் கூறுகிறார். வள்ளலான அவனிடம் தான் பொருள் வாங்காமல் விடமாட்டேன் என்கிறார்.

ஏழைச் செட்டியைப் பாடினும் செட்டியாரே சிறிதும்
இல்லை எனச்சொல்லுவாரோ செட்டியாரே.
மாழைச் செட்டியான உம்மைச் செட்டியாரே பாடி
வாங்காமல் நான் போகலாமோ செட்டியாரே"

இப்பாடலில் வறுமை நிலையிருந்தாலும் வருகிறவர்களுக்கு இல்லை என சொல்லாதவர்கள் நகரத்தார்கள் என நகரத்தார்கள் பண்பைப் பதிவு செய்கிறார் பழனியப்பையா. துறவிக்கு ஆசை வரலாமா? வருகிறதே; முருகன் அருளால் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு என்னவெல்லாம் செய்ய தனக்கு ஆசை எனப்பட்டியலிடுகிறார். "பொன் இரந்தேன் என்று என்னை இகழா தீர், கழனிப் புண்ணியர்க்குத் (கோவிலூர் ஆண்டவர்) தொண்டன் நான். அறம் செய்வதற்காகத்தான் கேட்கிறேன்" என்று முருகனிடம் கூறிவிட்டுத்தான் தன் ஆசையை வெளிப்படுத்துகிறார்.

"அன்னசத்திரமொன்று செட்டியாரே மேலாம்
அந்தணர்கள் தினம்புசிக்கச் செட்டியாரே
பொன்னித் தீர்த்தக்கரையில் செட்டியாரே திருப்
புத்தூரில் செய்ய வேண்டும் செட்டியாரே

நந்தவனங்கள் பல செட்டியாரே உமக்கு

நறுமலர்த் தொடையல் சாத்தச் செட்டியாரே

சொந்தத்தில் செய்யச் செட்டியாரே எற்குச்

சுவர்ணமிகத் தாருமையா செட்டியாரே

தீதில் வேதாந்த நூலைச் செட்டியாரே நிதஞ்

சிரவணாதிகள் செய்ய செட்டியாரே

ஓதுமுனைப் பூசை செய்யச் செட்டியாரே கூபம்

ஊறுமிடந்தனிலே செட்டியாரே

நீதிமடம் கட்டநிதி செட்டியாரே நல்கு

நிருத்தனருளும் பழனிச் செட்டியாரே.”

”செட்டியார் மாலை”யில் பழனி முருகனிடம் இவ்வாறெல்லாம் அறம் செய்வதற்குப் பொருள் வேண்டுமெனக் கேட்டவர் ”கல்லுளி மாலையில்” ‘செட்டித் தெய்வமே பழனிச்செட்டி’ என முருகனை அழைத்து,

“மன்னன் குமணனுக்கும் பழனிச்செட்டி நன்றாய்

வழங்கும் கர்ணனுக்கும் பழனிச்செட்டி

பன்னு சீதக்காதிக்கும் பழனிச்செட்டி பணம்

பாலித்ததல்லோ கீர்த்தி பழனிச்செட்டி.

அன்னவர்க்கு ஈந்ததற்காகப் பழனிச்செட்டி உனக்கு

அனேக வந்தனம் செய்தேன் பழனிச்செட்டி.

பொன்னெனக்கு ஒல்லைதா பழனிச்செட்டி அறம்

புரிந்திட நடநீ பழனிச்செட்டி” என்கிறார்.

இன்று நகரத்தார் இனத்தில் பெண் மக்கள் குறைவு என்கிறது புள்ளி

விவரம். இது போன்றதொரு நிலை சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பும் இருந்திருக்கிறது. பெண்கள் கிடைக்காமல் நகரத்தார் இளைஞர்களது திருமணங்கள் கேள்விக்குறியாக இருந்திருக்கின்றன. பர்மாவில் 1924 இல் நடந்த தன வைசிய இளைஞர் மாநாட்டில் “பிச்சப்பா சுப்பிரமணியம்” போன்றோர் இதுகுறித்துக் காரசாரமாக விவாதித்து இருக்கிறார்கள். பெண் வீட்டாரருக்கு, பிள்ளை வீட்டார் பொன்னும் பொருளும் கொடுத்து திருமணம் செய்து கொண்டிருக்கிறார்கள். கொடுக்க இயலாதவர்கள் திருமணம் செய்து கொள்ள இயலவில்லை. இதையும் தம் பாடல்களில் பதிவு செய்திருக்கிற அய்யா, இளைஞர்களுக்குத் திருமணம் நடக்கப் பொருள் வேண்டும் அதையும் விரைவில் தா, என்று முருகனுக்குக் கட்டளையிட்டுத் தம் காலத்தில் நிலவிய சமூகப் பிரச்சினையையும் சுட்டிக்காட்டுகிறார்.

கண்ணப்பனுக்குப் பழனிச்செட்டி எங்கள்

கடைக்குட்டி தங்கச்சியைப் பழனிச்செட்டி.

பண்ணுகிறோம் என்பார் பழனிச்செட்டி முன்னைப்

பசுமை குறைந்திட்டால் பழனிசெட்டி.

பெண்ணை வேறிடத்திலே பழனிச்செட்டி நாங்கள்

பேசினோம் என்பார் பழனிச்செட்டி.

புண்ணியவானே பழனிச்செட்டி ஒல்லைப்

பொருள்தா நட நீ பழனிச்செட்டி.

இவ்வாறு நகரத்து இளைஞர் சார்பாகவும் பாடும் ஐயா அவர்கள்,

”தப்பாகக் கேட்கவில்லை பழனிச்செட்டி நான்

சத்தியவானல்லோ பழனிசெட்டி

அப்பச்சிக்கு தெரியுமே பழனிச்செட்டி நமது

ஆத்தாவுக்கும் தெரியுமே பழனிச்செட்டி

என்று சிவனை ''அப்பச்சி'' என்றும் உமையவளைக் குறிப்பிடுகையில் ''நமது ஆத்தாள்'' என்று முருகனையும் உளப்படுத்திக் கூறுவதை காண்கிறோம்.

இவ்வாறாக, முருகனைச் செட்டி மகனாக கண்டுகளிக்கின்ற பழனியப்பய்யாவின் பாடல்கள் நகரத்தார்களின் அக்கால நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிற வரலாற்றுப் பெட்டகங்களாகத் திகழ்வதோடு, கோவிலூர் மடாலயத்தின் தமிழ்ப்பணிகளுக்கும் சான்றாகத் திகழ்கின்றன.

26. திருமயத்தில் நாட்டுக்கோட்டைச் செட்டியார் கல்வெட்டுக்கள்



இடம் : புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் சிவனுக்கும் திருமாலுக்கும் எடுக்கப்பட்ட பழமையான இரண்டு குடைவரைக் கோயில்களை அடுத்துள்ள குளத்தில் நான்கு கல்வெட்டுக்கள் உள்ளன. இவை முறையே வடக்குப் படித்துறை, தெற்குப் படித்துறை,ஆளோடிப் பாதை, பதினாறுகால் மண்டபத் தூண் ஆகியவற்றில்உள்ளன.

காலம்: 19ஆம் நூற்றாண்டு

செய்தி : மேற்கூறிய இரண்டு குடவரைக் கோயில்களுக்கும் இடையில் பிணக்குகள் இருந்ததால் 13ஆம் நூற்றாண்டில் இரண்டும் தனித்தனியாக சிவனுக்கும், திருமாலுக்கும் என பிரிக்கப்பட்டபோது கோயில் குளங்களும் தனித்தனியாக முறையே சத்தியகிரீசுவரர் குளம், சத்தியமூர்த்திப் பெருமாள் குளம் எனப்பிரிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. இவற்றில் சத்தியமூர்த்திப் பெருமாள் குளம் 19ஆம் நூற்றாண்டில் காரைக்குடி நாட்டுக் கோட்டைச் செட்டியார் மரபினரால் திருப்பணி செய்யப்பட்ட செய்தியை அங்குள்ள கல்வெட்டுகள்

கூறுகின்றன. நான்காம் கல்வெட்டின் கீழ் திருப்பணி செய்தவரின் உருவச்சிலை உள்ளது. காரைக்குடி பிள்ளையார்ப்பட்டி கோயிலைச் சேர்ந்த முருகப்ப செட்டியாரின் மகன் இராமநாதன் செட்டியார் திருமயம் பெருமாள் கோயிலை ஒட்டி எண்கோண வடிவத்தில் “சத்திய புஷ்கரணி” என்ற குளத்தையும், குளத்தின் அருகில் 16 கால் மண்டபத்தையும் கட்டியுள்ளார். அந்த மண்டபம் வைகாசி பௌர்ணமி போன்ற விசேஷ காலங்களில் பெருமாள் தீர்த்தமாடுகின்ற மண்டபமாக விளங்கியது. அந்த மண்டபத்தின் ஒரு தூணில் திருப்பணி செய்த இராமநாதன் செட்டியாரின் சதாசேவைச் சிற்பம் காணப்படுகிறது.

கல்வெட்டு 1

1 காலயுத்தி வருஷம் தை மீ 12 தேதி காறக்குடியிலிருக்கும்

கல்வா

2 ச நாட்டில் இளையாத்தக்குடியான குலசேகரதபுரத்தில்

யிரணியூர்

3 மருதங்குடியான றாசநாராயணபுரத்தில் பிள்ளையார்

பட்டியான

4 திருவேள்பூருடையான் மெ. முருகப்ப செட்டியார்

குமாரன்

5 ராமநாதன் செட்டியார் சத்திய புஷ்கரிணித் தருமமும்

வய்யா

6 சி மீ விசாக பூர்ணமை முதலான விசேஷங்களில்

பெருமாள்

7 தீர்த்தம் பிரசாதிக்க 16 காலில் தீற்த்த மண்டப தர்மமு

முடித்தார்.

கல்வெட்டு 2

1 காலயுத்தி தை மீ 12 தேதி மதுரை ஜில்லா சிவகெங்கைச் சீமை சாக்கைத் தாலுகா

2 காறக்குடியிலிருக்கும் நாட்டுக்கோட்டையாரில் கல் வாசல் நாட்டில் இளையாத்த

3 க் குடியான குலசேகரபுரத்தில் யிரணியூர் மருதங்குடியான ராச நாராயண

4 புரத்தில்ப் பிள்ளையார்பட்டி திருவேள்பூருடையான் மெ. முருகப்ப செட்டியார்

5 குமாரன் ராமனாதன் செட்டியார் சத்திய புஷ்கறணித்

தருமமும் வடக்குப்

6 படித்துறைக்கி நேர்த் தீற்த்த மண்டப தற்மமுஞ் செய்து முடித்தார்.

கல்வெட்டு 3



எண்பட்டை வடிவிலான இக்குளத்தின் கரைகளில் ஒவ்வொரு

திருப்பத்திலும் உள்ள சிற்பங்களின் கீழ் உள்ள கல்வெட்டுகள்.

1. ஆஞ்சநேய மூர்த்தி
2. ஆதிசேஷ பகவான்
3. சந்திர பகவான்
4. ஸத்திய மகரிஷி
5. புரூரவ சக்கிறவற்த்தி
6. கமல நயந ராசா
7. இந்திரத்துயமந பாண்டியன்
8. கருட பகவான்.

கல்வெட்டு 4

16 கால் மண்டபத் தூணில் உள்ள உருவச்சிலையின் கீழுள்ள கல்வெட்டு

காறக்குடி மெ.முருகப்ப செட்டியாற் குமாரன் ராமநாதன் செட்டியாற்.

சைவ சமயத்திற்கும் மட்டுமல்லாமல் வைணவத்திற்கும் நகரத்தார்கள் திருப்பணி செய்ததை இக்கல்வெட்டுகள் காட்டிநிற்கின்றன.

27.கீழைச்சிவல்பட்டி (ஊரும் பேரும்)

ஒரு நாட்டின் வரலாற்றை ஆராய்வதற்குக் கல்வெட்டுக்கள், காசுகள், இலக்கியங்கள் ஆகியவை எவ்வளவு துணை செய்கின்றனவோ, அதேபோல ஊர்ப்பெயர்களும் துணை செய்கின்றன. ஊர்ப் பெயர்கள் பழமையின் எச்சங்கள் என்பர் வரலாற்றறிஞர்.

நாடோடியாகச் சுற்றித் திரிந்த மனிதன் சேர்ந்து வாழத் தொடங்கியபோது ஓரிடத்தில் நிலையாக வாழ ஆரம்பித்தான். இயற்கையமைப்பையும், சூழ்நிலையையும் ஒட்டித் தான் வசித்த பகுதிக்குப் பெயர் சூட்டினான். இவ்வாறு தோன்றியவையே ஊர்ப் பெயர்கள்.

தமிழக இயற்கையமைப்பில் காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லைநிலம் எனப்படும். முல்லை நிலத்தைச் சார்ந்த ஊர்களுக்குப் பட்டி என்ற பெயரும் உண்டு. தமிழ் ஊர்ப்பெயர்கள் பற்றிய ஆராய்ச்சிக்கு வழிகாட்டியான ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள், ‘தமிழ்நாடு முழுதும் பட்டிகள் காணப்படினும் பாண்டிநாட்டிலேயே அவை மிகுதியாக உள்ளன’ என்கிறார்.

செட்டிநாட்டு ஊர்களுள்ளும் பல, ‘பட்டி’ என்ற பெயருடையவாய்க் காணப்படுகின்றன. ஆவணிப்பட்டி, உலகம்பட்டி கடியாபட்டி கண்டவராயன்பட்டி, கல்லுப்பட்டி, கீழச்சிவல்பட்டி. குருவிக்கொண்டான்பட்டி கொப்பனாபட்டி, சிறுகூடல்பட்டி தேனிபட்டி நச்சாந்துபட்டி நேமத்தான்பட்டி, பனையபட்டி, பொன்புதுப்பட்டி, மகிபாலன்பட்டி மிதிலைப்பட்டி, வலையபட்டி வேகுபட்டி வேந்தன்பட்டி என்று செட்டிநாட்டு ஊர்ப்பெயர்களுள் பத்தொன்பது ஊர்ப் பெயர்கள் ‘பட்டி’ என்று முடிகின்றன.

நகரத்தார்களின் ஆதிக் கோயிலான இளையாற்றங்குடிக்கு அருகிலுள்ள ஊர் கீழைச்சிவல்பட்டி. இவ்வூர், செவ்வற்பட்டு, செவற்பட்டு, சிவற்பட்டு, சிவற்பட்டி கீழைச்சேவரப்பட்டு, கீழச் சேவற்பட்டு, கீளச் செவற்பட்டு, கீழைச் சிவல்பட்டி, கீழச்சிவப்பட்டி என்று பலவாறாக அழைக்கப்பட்டு வந்திருக்கின்றது. வருகின்றது. இவ்வூரின் பழமையான

வடிவம் எதுவாக இருக்கும் என்ற எண்ணத்தின் விழைவே இக்கட்டுரை. உண்மையில் செட்டிநாட்டு ஊர்களுள் வேறு எந்த ஊரும் இவ்விதம் பலவாறாக வழங்கப்படவில்லை எனலாம்.



இவ்வூருக்குப் பெருமை சேர்க்கும் கவிஞர்களுள் தலைமையும், முதன்மையுமானவர் பாடுவார் முத்தப்பச் செட்டியாராவார். 1880 முதல் 1940 வரையிலான காலக்கட்டத்தில் இவருடைய நூல்களைப் பலரும் பதிப்பித்திருக்கிறார்கள். அந்நூல்களின் முகப்பில் பாடுவார் முத்தப்பரின் ஊர்ப்பெயர் பின்வருமாறு பலவிதமாகக் காணப்படுகிறது.

1. 1882இல் பதிப்பிக்கப்பட்டு, 1993இல் புதுப்பிக்கப்பட்ட ‘திருமுக



ஜெயங்கொண்டார்
சதகம்.

விலாசம்‘, மெர்க்கண்டைல் பிரஸ் நெம்பர் கஅ மார்க்கெட் ஸ்திரிட், ஈப்போ எப்.எம்.எஸ்இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அதில் ‘செவ்வற்பட்டு’ என்று காணப்படுகிறது.

2. 1893இல் ரெங்கோன் பிரிட்டிஸ் பர்மா அச்சேந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்ட ‘செயங்கொண்டார் சதகம்’ மதுரைச் சீர்மை சிவகங்கை சமஸ்தானம் ‘கீளச் செவற்பட்டு என்று கூறுகிறது.

3. சென்னை தியாலாஜிகல் அச்சுக் கூடத்தில் 1896இல் பதிப்பிக்கப்பட்ட ‘ஜெயங்கொண்டார் சதகமும் திருமுக விலாசமும்’ என்ற நூலில் மதுரைச் சீர்மை சிவகங்கைச் சமஸ்தானம் ‘கீழைச்சேவற்பட்டு’ இளையாத்தங்குடி ஏழு நகரமென்று சொல்லப்பட்ட நேமநகரத்திலுதித்த அழகப்பச் செட்டியார் குமாரர் முத்தப்பச் செட்டியாரவர்கள் இயற்றியது என்று காணப்படுகிறது.

4. ‘தனவைசிய வைதிக சைவாநுஷ்டான விளக்கம்‘ என்ற நூல் பாடுவார் முத்தப்பச் செட்டியார் பாடிய திருமுக விலாசத்தைக் குறிப்பிடும்போது ‘சிவற்பட்டி’ முத்தப்பச் செட்டியார் திருமுகவிலாசம் என்று குறிப்பிடுகிறது.

5.கீழைச்சிவல்பட்டி பிஅழகாபுரி நாஷனல் பிரஸ்ஸில் 1937இல் பதிப்பிக்கப் பெற்றது, ‘உச்சினி மாகாளியம்மன் பேரில் கும்மி’ என்ற நூல். இந்நூலில் கீழைச்சேவரப்பட்டு என்று காணப்படுகிறது.

6. ஜய ஆண்டு ஐப்பசித் திங்கள் 23ஆம் நாள் பாடுவார் முத்தப்பச் செட்டியார் பௌத்திரர் ராம.மு.க.மு. நாரயணஞ் செட்டியார் வெளி யிட்ட முத்தப்பர் நூலில் ‘கீழச்சிவல்பட்டி’ என்று உள்ளது.

7. ‘சிவமயம்‘ என்று தொடங்குவது போல ‘ஓம் தமிழுக்கு வெற்றி’ என்ற துதியுடன் தொடங்கும் மன்னவன் வெளியீடு என்ற பதிப்பகம் ‘ஜெயங்கொண்டார் சதகமும் தேவி தோத்திரமும்‘ என்ற நூலை வெளி யிட்டது. அதில் ‘கீழச்சிவப்பட்டி’ என்று எழுதப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் நோக்கும்போது இவ்வூர் ஆரம்ப காலத்தில் ‘கீழை’ என்ற அடைமொழி இல்லாமல் செவ்வற்பட்டு அல்லது

செவற்பட்டு என்று வழங்கப்பட்டு வந்திருப்பதை அறியலாம். பட்டி என்ற சொல் 'பட்டு' என்று திரிந்திருக்க வேண்டும். பட்டி என்பதற்கான பெயர்க் காரணத்தை மேலே கண்டோம். முன்பு இப்பகுதி அடர்த்தியான காடுகளை உடைய பகுதியாக இருந்திருக்க வேண்டும். மருதுபாண்டியர்கள் இப்பகுதியைச் சுற்றியுள்ள காடுகளில் வேட்டையாடுவதற்காக வருவார்கள் என்றும் அறிகிறோம். முல்லை நிலத்து மக்களான யாதவர்கள் இப்பகுதியில் பரவலாக வசிப்பதும் குறிப்பிடத்தக்கது.

'செவ்வல்' என்பதற்கு 'செம்மண் நிலம்' என்று தமிழகராதி பொருள் கூறுகிறது. செவ்வல் என்ற சொல் இடையிலுள்ள வகர ஒற்று கெட்டு செவல் என்றும் வழங்கப்பட்டிருக்கிறது. செவ்வல்+பட்டி = செவ்வற்பட்டி (இலக்கண விதிப்படி லகரம் வருமொழி முதலில் வல்லெழுத்து ற கரமாகத் திரிந்தது). இப்பகுதி செம்மண் நிறைந்த பூமியாக இருப்பதனால் இயற்கையமைப்பையொட்டி நகரத்தார்கள் தாங்கள் குடியேறிய இப்பகுதிக்கு செவ்வற்பட்டி என்று பெயரிட்டிருக்கிறார்கள். எனவே செவ்வற்பட்டி என்பதுதான் பழமையான வடிவமாக இருக்க வேண்டும்.

சிவல்பட்டி என்றும் இவ்வூர் அழைக்கப்படுகிறது. சிவல் என்பது செவ்வல் அல்லது செவல் என்பதன் திரிபாகும். இகரம் ஒலிக்கும் இடத்தில் எகரம் ஒலித்தலும் எகரம் ஒலிக்குமிடத்தில் இகரம் ஒலித்தலும் மொழியியலில் இயற்கை. உதாரணமாக 'இலை' என்ற சொல்' பேச்சு வழக்கில் 'எலை' என்றும், தமிழில் வழங்கும் 'எலி' என்ற சொல் கன்னடத்தில் 'இலி' என்றும் வழங்கப்படுவதைக் காணலாம். அந்த அமைப்பில் செ(வ்)வல்பட்டி ஞ சிவல்பட்டி என்று வழங்கப்பட்டிருக்கிறது.

இவ்வூருக்குக் 'கீழை' என்ற அடைமொழி ஏற்பட்டது பிற்பாடுதான். நகரத்தார்கள் குன்றக்குடியை மையமாகக் கொண்டு கீழவட்டகை, மேலவட்டகை, தெற்கு வட்டகை என்று பல வட்டகைகளாக வகைப்படுத்தி வாழ்கிறவர்கள். மேல வட்டகையில் நகரத்தார்கள் வசிக்கும் ஊர்களுள்

ஒன்று சிவபுரி அல்லது சிவப்பட்டி என்பதாகும். அதனால் அவ்வூர் மேல வட்டகையைச் சேர்ந்த சிவபுரி என்ற பொருள்பட மேலச்சிவபுரி என்று அழைக்கப்பட்டது.

செ(வ்)வல்பட்டியை சிவல்பட்டி என்று வழங்கியவர்கள் நாளடைவில் 'சிவல்' என்ற சொல்லின் இறுதியிலுள்ள லகரத்தை உச்சரிக்காமல் சிவப்பட்டி என்று அழைக்க ஆரம்பித்தார்கள். இந்நிலையில்தான், சிவத்தோடு தொடர்புடைய இரண்டு ஊர்கள் மேல வட்டகையில் இருப்பதால் மேலச் சிவபுரியிலிருந்து இவ்வூரை வேறுபடுத்தி அறிய, 'கீழை' என்ற அடைமொழி கொடுத்து கீழைச்சிவப்பட்டி என்றும் கீழைச்சிவல்பட்டி என்றும் அழைத்திருக்க வேண்டும். இவ்வூருக்குக் 'கீழை' என்ற அடைமொழி வந்தது இவ்வாறாகத்தான் இருக்க வேண்டும்.

இவ்வூரின் பெயர்க்காரணத்தைப் பற்றி மேலே சொல்லப்பட்டவைகளெல்லாம் சில கருத்துக்களே தவிர இவையே முடிந்த முடிவல்ல. ஊர்ப் பெயருக்கான காரணத்தைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் இருப்பினும் பாடுவார் முத்தப்பர் பிறந்த பெருமைக்குரிய இவ்வூர் சிவம் பெருக்கும் சீலர்களையும், தமிழ் வளர்க்கும் சான்றோர்களையும் பெற்ற பெருமைக்குரியது என்பதில் கருத்து வேறுபாடில்லை. அதனால்தானே திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும் குன்றெறிந்த குமரவேளும் இருந்து ஆராய்ந்து தமிழ்வளர்த்த மதுரையின் பெயரையும் தாங்கிச் 'சிறு மதுரை' என்றும் அழைக்கப்படுகிறது.

28.காவல் தெய்வம் கருப்பண்ணர்

நகரத்தார்கள் பாண்டிய நாட்டிற்கு வந்து வெள்ளாற்றுக்குத் தெற்கே குடியேறியபோது இப்பகுதியில் வாழ்ந்த பூர்வ குடிகளான கள்ளர், மறவர், அகம்படியர், வல்லம்பர், சேர்வைக்காரர் முதலியவர்களோடு அனுசரித்து வாழ்ந்தனர். அவர்கள் கிழக்காசிய நாடுகளுக்கு வணிகத்தின் பொருட்டுச் சென்றபோது இங்குள்ள பூர்வீக மக்கள் நகரத்தார் குடும்பங்களுக்கு ஆதரவாக இருந்தனர். அதே போல நகரத்தார்களும் பூர்வீகக் குடிகளது இன்பதுன்பங்களில் பங்குகொண்டு அவர்களுக்கு உறுதுணையாக இருந்தனர்.

ஒன்பது நகரச் சிவன் கோயில்களை அடிப்படையாகக் கொண்டு, சைவ சமயத்தில் ஆழ்ந்த பிடிப்போடு வாழ்ந்துவருகின்ற நகரத்தார்கள், நாட்டார்கள் வணங்கிவந்த கிராம தேவதைகளான ஐயனார், காளி, கருப்பர், சன்னாசி போன்ற தெய்வங்களைத் தாங்களும் வணங்கி வருகின்றனர்.

“யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி

மாதொரு பாகனார் தாம் வருவார்”

என்ற சிவஞான சித்தியாரின் கூற்றுப்படி கிராமத் தெய்வங்களைத் தங்கள் குலதெய்வங்களாகக் கொண்டாடி போற்றி வழிபட்டு வருகின்றனர். தங்கள் பங்காளிகளுடன் சேர்ந்து வருடத்துக்கு ஒருமுறையாவது கட்டாயமாகக் குல தெய்வக் கோயிலுக்குச் சென்று வருகின்றனர். தங்கள் குழந்தைகளுக்கு முடியிறக்குதல், பெயர் வைத்தல் போன்ற நிகழ்வுகளைக் குலதெய்வக்கோயிலில் மேற்கொள்கின்றனர்.

திருமணம் மற்றும் வீட்டுப் படைப்பு, பொதுப்படைப்புக்களுக்கு முன்பு, குலதெய்வக் கோயிலுக்குச் சென்று, வழிபடுவதும், தீர்த்தம் எடுத்துவந்து படைப்பதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

அதுமட்டுமல்ல, நாட்டார்களோடு இணைந்து குலதெய்வக் கோயில்களில் திருப்பணிகள், திருவிழாக்கள், கும்பாபிஷேகங்கள்

முதலியவற்றை நடத்தி வருகின்றனர்.

திருப்புத்தூர்

அந்த வகையில் நகரத்தார்களின் குலதெய்வக் கோயில்களுள் ஒன்றான திருப்புத்தூர்க் கோட்டைக் கருப்பர் கோயிலைப் பற்றித்தான் நாம் காண இருக்கிறோம். பாண்டிய நாட்டுப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று திருப்புத்தூர். இங்குறைந்து அருள்பாலிக்கும் திருத்தளிநாதரை திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் வழிபட்டுப் பதிகங்கள் பாடியிருக்கிறார்கள். அருணகிரிநாதர் இங்குள்ள முருகக்கடவுள் மீது திருப்புகழ்பாடி வணங்கியுள்ளார். இக்கோயிலுள்ள யோக பைரவரை இப்பகுதிமக்கள் பயபக்தியோடு வணங்குகிறார்கள். இக்கோயிலைப் “பைரவர் கோயில்” என்று சொல்லுகின்ற வழக்காறும் உண்டு.

கோட்டை

திருப்புத்தூர் பல வரலாற்று முக்கியத்துவங்களைத் தாங்கி நிற்கிற ஊராகும். திருப்புத்தூரில் சேதுபதிகள் காலத்தில் திருமயம், திருப்புத்தூர் போன்ற ஊர்களில் கோட்டைகள் கட்டப்பட்டு, பாதுகாப்பு அரண்களாக விளங்கின. திருப்புத்தூர் கோட்டை சிறந்து விளங்கியதை “சிவகங்கைச் சரித்திர கும்மியும் அம்மானையும்” என்ற நூல் பல இடங்களில் குறிப்பிடுகிறது.

“தேரும் திருக்குளமும் சிவாலயமும்
சிறந்த திருப்புத்தூர்க் கோட்டை”

என்றும் கோட்டைக்குள் படைவீடு, கொத்தளங்கள் இருந்ததை ‘திருப்புத்தூர்க் கோட்டை தென்மூலைக் கொத்தளங்கள்’ என்றும் சிவகங்கைச் சரித்திரக்கும்மி பேசுகிறது. சிவகங்கைச் சீமையின் பிரதானிகளாயிருந்த மருது சகோதரர்கள் காலத்தில் திருப்புத்தூர்க் கோட்டை முழுமையாக இருந்திருக்கிறது. முக்கியத்துவம் பெற்றும் திகழ்ந்திருக்கிறது. ஆங்கிலேயருக்கும் சிவகங்கைச் சீமைக்குமிடையே, மருது சகோதரர் காலத்தில் நடந்த போரின் போது கோட்டை இடிபாடுகளுக்கு உள்ளானது. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கு,

எதிராக உரிமைக்குரல் கொடுத்த மருதுசகோதரர்களுக்கும் திருப்புத்தூருக்கும் நிறைய வரலாற்றுத் தொடர்புகள் உண்டு. ஏற்கெனவே முகமதியர் படையெடுப்புக்கு உள்ளான திருப்புத்தூர், கி.பி 1783 மற்றும் 1789ஆம் ஆண்டுகளில் மருதுபாண்டியர்களுக்கும் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கும் நடந்த போர்களினால் மிகவும் பாதிக்கப்பட்டது. கி.பி. 1801ஆம் ஆண்டில் நடந்த போர், சிவகங்கைச் சீமையின் வரலாற்றையே புரட்டி போட்டுவிட்டது. இப்படையெடுப்புக்கு முக்கிய காரணம் மருதிருவர், பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்ததே ஆகும். இப்போரும் திருப்புத்தூரில் நடந்திருக்கிறது, இப்போர் 28.5.1801 இல் தொடங்கி 27.10.1801இல் மருதுபாண்டியர் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்ட நிலையில்தான் முடிந்தது. மருது பாண்டியர்களோடு அவரது உறவினர்களும், போர் வீரர்களுமாகச் சுமார் 500 பேர் கொல்லப்பட்டனர். ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு முன்னரே நடந்த படுகொலை இது.

திருப்புத்தூர் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுப் பிறகு திருப்புத்தூர் கோட்டை தென்மூலைக் கொத்தளத்தில் உள்ள கோயிலுக்கு வடபக்கத்திலிருந்த புளிய மரத்தில் மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டனர். இந்த நிகழ்வுகளை எல்லாம் சிவகங்கைச் சரித்திரக் கும்மியும் அம்மானையும் விரிவாக எடுத்துரைக்கிறது.

தற்போது எஞ்சியுள்ள கோட்டையின் இடிபாடுகளைக் கொண்டு, கோட்டை வட்ட வடிவமாக இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது. கோட்டைச் சுவரே திருத்தளிநாதர் கோயிலின் வடமதில் சுவராக இன்றும் உள்ளது. கோட்டையைச் சுற்றி முன்பு அகழி இருந்திருக்க வேண்டும் என்பதற்குச் சான்றாகக் கோட்டைக்கு வெளியே உள்ள அகில் (அகழி) என்னும் குட்டை குளங்களையும், அகில் மனைத் தெருவையும் இன்றும் காண்கிறோம். கோட்டையின் நாற்புரமும்,காவல் தெய்வங்களின் கோயில்கள் உள்ளன. கோட்டை மதிலைத் தெய்வமாகவே இவ்வூர் மக்கள் மதிக்கிறார்கள்.

கோட்டைக் கருப்பர்

திருப்புத்தூரின் கிழக்குக் கோட்டை வாசலில் காவல் தெய்வமாக கருப்பர் கோயில் உள்ளது. கோட்டையின் மதிற்சுவரையொட்டியே இக்கோயில் உட்புறமாக உள்ளது. அதனால் இக்கோயிலைக் ‘கோட்டைக் கருப்பர்’ கோயில் என்றும், கருப்பரைக் ‘கோட்டைக் கருப்பர்’ என்றும் அழைக்கிறார்கள். இக்கோயிலையொட்டி மதிற்சுவர் வளைந்து செல்கிறது.

கோயிலுக்குள் நுழைந்தவுடன், எதிரெதிரே சுடுமண்ணால் ஆன மிக உயரமான இரு சேமங்குதிரைகள், முன் கால்களைத் தூக்கியவண்ணம் நம்மை வரவேற்கின்றன. தற்போது நடந்த குடமுழுக்கினை ஒட்டி, அழகாக வண்ணம் தீட்டப்பட்டுக் காட்சியளிக்கின்றன. தேவகோட்டை நகரத்தார்களால் கட்டப்பட்ட இச்சேமங்குதிரைகளின் கீழ், செய்து வைத்தவர்களின் விவரங்கள் அடங்கிய கல்வெட்டுக்கள் உள்ளன.



உ

சிவமயம்

சினவ.மு.மீ. குடும்பத்தினரால்

புதுப்பிக்கப் பெற்றது.

கண் திறப்பு நாள் 28.05.1990

குடமுழுக்கு நாள்07.06.1990

உ

சிவமயம்

தேவகோட்டை சினவ.மு.மீ.

குடும்பத்தினரால் கட்டப்பெற்று

பராமரிக்கப்பட்டு வருகிறது

கண்திறப்பு நாள் 18.01.2007

குடமுழுக்கு நாள் 24.01.2007

உ

சிவமயம்

தேவகோட்டை சின்ன வடுகன் செட்டியார் வகை

பெரி. கரு. குடும்பத்தினரால் நிறுவப்பெற்று மேற்படி

பங்காளிகளால் புதுப்பிக்கப் பெற்றது.

கண்திறப்பு நாள் 18.01.2007

குடமுழுக்கு நாள் 24.01.2007

தற்போது 21.02.2024 அன்று நடந்த குடமுழுக்கிற்கு முன்பு 1990 மற்றும் 2007இல் இரண்டு குடமுழுக்கு விழாக்கள் நடந்திருக்கின்றன என்று தெரிகிறது.

இரண்டு சேமங்குதிரைகளைக் கடந்து உள்ளே நுழையும் போது இடப்புறம் கோயிலின் தென் கிழக்கில் பழமையான பெரிய புளியமரம் ஒன்று நிற்கிறது.இம்மரத்தை உறங்காப்புளி மரம் என்றும் குறிப்பிடுவர். அதனால் இங்கு எழுந்தருளி அருள்பாலிக்கும் கருப்பரை உறங்காப்புளிக் கருப்பர் என்றும் அழைப்பர். தற்காலத்தில் உறங்காப்புளி மரத்தின் கீழ் சூலத்தை நட்டு முனீசுவரர் என்று ஊர் மக்கள் வழிபடுகிறார்கள். கோட்டைச் சுவருக்குள்தான் கருப்பண்ணசுவாமிகோயில் உள்ளது.கோயிலுக்குள் சென்றதும் மகா

மண்டபம்; மண்டபத்திற்குமுன் பலிபீடம். மண்டபத்தை அடுத்து அர்த்த மண்டபமும் கருவறையும் காணப்படுகிறது. கருவறையில் மூலவர் உயரமான பீடத்தில், நின்ற கோலத்தில் பக்தர்களின் குரலுக்கு உடனே ஓடிவந்து அருள் செய்கின்ற கோலத்தில், கம்பீரமாகக் காணப்படுகிறார்.

மூலவரின் வலப்புறம் முத்துக்கருப்பரும், இடப்புறம் சின்னக்கருப்பரும் அருள்பாலிக்கின்றனர். அவர்களை வணங்கிவிட்டு



மண்டபத்தின் உட் பிரகாரத்தை வலமாகச் சுற்றி வரும்போது தென்மேற்கு மூலையில் விநாயகர் சந்நிதியும் வடமேற்கு மூலையில் முருகன் சந்நிதியும் உள்ளன. இருபெரும் கடவுளரையும் வணங்கி விட்டு வலமாக வரும்போது மண்டபத்தின் முன்புறம் உள்ள தூண் ஒன்றில், தங்கள் குலதெய்வமான கருப்பண்ணரை வழிபட்ட கோலத்தில், இக்கோயிலைத் திருப்பணி செய்த தேவகோட்டை 'சின்னவடுகன் செட்டி' வகையைச் சேர்ந்த பெரியகருப்பன் செட்டியாரின் சிற்பம் உள்ளது.

கல் திருப்பணி செய்த அந்த மகானையும் மனதார வணங்கிவிட்டு, மகாமண்டபத்திலிருந்து இறங்கி பிரகாரமாக வந்தால் தென்கிழக்கு மூலையில் முன்னோடியான சங்கிலிக் கருப்பர் சந்நிதி உள்ளது.

அடுத்து தென்சுவரில் குறுகிய வாயிலுடைய சந்நிதியில் காளியம்மன், ராக்காச்சி அம்மன், பேச்சியம்மன் மூவரும் காட்சியளிக்கிறார்கள்.

"எடுத்தகாரியம் யாவினும் வெற்றி
எங்கு நோக்கினும் வெற்றி
விடுத்த வாய்மொழிக்கு எங்ஙனும் வெற்றி
வேண்டினேனுக்கு அருளினள் காளி
தடுத்து நிற்பது தெய்வதமேனும்
சாரும் மானுடமாயினும் அதைப்
படுத்து மாய்ப்பள் அருட்பெருங்காளி
பாரில் வெற்றி எனக்குறுமாறே"

என்ற பாரதியின் பாடலைப் பாடியபடியே, சங்கிலிக்கருப்பர், காளி முதலிய தெய்வங்களையும் வணங்கி வலம் வரும்போது அடுத்து இக்கோயில் பூசாரிகளின் மூதாதையர்களான வடுகநாதர், ராக்கப்பர் ஆகியோர் சிலைகள் உள்ளன.

வயித்திலிங்கத் தொண்டமான்

அடுத்து நாம் காண்பது வயித்திலிங்கத் தொண்டமானின் சிலையாகும். சுமார் 270 ஆண்டுகளுக்கு முன்னர், கள்ளர் நாடான வல்லநாட்டு வயித்திலிங்க தொண்டமானின் சிலையை, திருப்புத்தூர் கோட்டைக் கருப்பர் கோயிலுக்குள் நிறுவியவர் படமாத்தூர் மன்னர் கவுரிவல்லப தேவராவார். இதேபோல பட்டமங்கலம் ஐயனார் கோயிலிலும் வயித்திலிங்கத் தொண்டமானுக்குச் சிலை உள்ளது.

பட்டமங்கல நாட்டார் கி.பி 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புதுக்கோட்டைப் பகுதி வல்லநாட்டிலிருந்து பட்டமங்கலத்தில் குடியேறி வாழத் தொடங்கினர். அங்கு பிறந்து வளர்ந்த சூரியத் தொண்டமானின் மகன்தான் சிவகங்கைச் சீமை வரலாற்றில் புகழ்பெற்ற வயித்திலிங்கத் தொண்டமான். பட்டமங்கலத் தொண்டமான்களின் வரிசையில் வந்த வயித்திலிங்கத் தொண்டமான் சிவகங்கை சமஸ்தானத்துக்கு உட்பட்ட பாளையக்காரராக இருந்தார். இவர் சிவகங்கை மன்னருக்கு படை உதவி செய்துவந்தார். மன்னருக்கு நெருக்கமானவராகவும் இருந்தார். சிவகங்கை மன்னர் முத்துவடுகநாத தேவரின் மறைவிற்குப் பின் நடந்த வாரிசு உரிமைப் போட்டியில் படமாத்தூர் கவுரிவல்லபர் பக்கம் நின்றவர் இத்தொண்டமான். சின்னமருது இவரோடு முரண்பட்டு தொண்டமானைப் பிடிக்க ஆட்களை அனுப்பியபோது, அவர்களுக்கு அகப்படாமல் குறுவாளால் தன்னைத்தானே குத்திக்கொண்டு தற்கொலைசெய்து கொண்டார்.

இந்நிகழ்வு திருப்புத்தூர் கோட்டைக்கருப்பர் கோயிலுக்கு அருகே நடந்தது. பின்பு பட்டமேற்ற கவுரிவல்லப தேவர், வயித்திலிங்க தொண்டைமானின் தியாகத்தையும் உதவியையும் பாராட்டி, கோட்டைக் கருப்பர் கோயிலுக்குள் ஒரு சிலை வைத்தார்.

இலங்கை அமைச்சராக இருந்த சௌமியமூர்த்தி தொண்டமான், வயித்திலிங்கத் தொண்டமானின் வம்சத்தைச் சேர்ந்தவர். வயித்திலிங்கத் தொண்டமானின் வம்சாவளியினர் பட்டமங்கலத்திலும் இலங்கையிலும் வாழ்கின்றனர். அவர்களால் இச்சிலை வணங்கப்பட்டும் தொடர்ந்து

பராமரிக்கப்பட்டும் வருகிறது. அவர் தொடர்பான கல்வெட்டு, சிலைக்கு அருகில் கீழ்வருமாறு காணப்படுகிறது.

“பிரமோதூத ஆண்டு மாசித் திங்கள் 13ஆம்
நாளுக்கு 25.2.1991 பட்டமங்கலம் திருமிகு
வயித்திலிங்கத் தொண்டமான்
அவர்களின் திரு உருவச்சிலை
அண்ணாரின் வழித்தோன்றல்களால்
சுமார் 225 ஆண்டுகளுக்கு முன்
திருப்புத்தூர் கோட்டைக் கருப்பர் கோயிலில்
வைக்கப்பட்டு இருந்ததில் சிலை பழுது
அடைந்ததால் பட்டமங்கலம் வி. புதூர் பங்காளிகளால்
புதுச்சிலை அமைக்கப்பட்டு இலங்கை அமைச்சரும்
நம் பங்காளியுமான மாண்புமிகு
சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களால்
இலங்கை கிராமியத் தொழில்துறை அமைச்சர்
தலைமையிலும்
உயர்திரு சுப. காசித்தொண்டமான் அவர்கள்
உயர்திரு. செ.கரும்புநாத தொண்டமான் அவர்கள்
உயர்திரு செ. சூரியன் அம்பலம் அவர்கள
மற்றும் பங்காளிகள் முன்னிலையிலும் மாண்புமிகு
அமைச்சர்
திரு ஷி. தொண்டமான் அவர்களால் திறந்து

வைக்கப்பட்டது.

இவண் சிலை அமைப்புக்குழு

மு.த. கருப்பையா அம்பலம் சுப. புலவர் வேதகிரி நாதத் தொண்டமான் ஙிகி.ஙிலி.காத்தப்ப தொண்டமான் சு.கருப்பையா அம்பலம்

(கடைசிவரி சரியாகத் தெரியவில்லை.)”

வெங்கலப்ப நாயக்கர்

தெற்குப்பிரகாரத்தில் சிறுகூடல் பட்டியைச் சேர்ந்த குமாரப்பேட்டையில் ஜமீன்தாராக விளங்கிய வெங்கலப்ப நாயக்கர் சிலை உள்ளது. குன்றக்குடி மலையடிவாரத்திலுள்ள குடைவரைக் கோயில்களின் முன்பு உள்ள மண்டபத்தைத் கட்டியவர் இவர். சுமார் 350 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட இம்மண்டபத்திலும் வெங்கலப்பநாயக்கர் உருவச்சிலை உள்ளது. இவர் குன்றக்குடியில் பல திருப்பணிகளைச் செய்தது போலவே திருப்புத்தூர்க் கோட்டைக் கருப்பர் கோயிலிலும் செய்திருக்க வேண்டும். வெங்கலப்ப நாயக்கர் புலவர்களைப் போற்றும் புரவலராக இருந்திருக்கிறார். ‘வெங்கலப்ப நாயக்கன் குறவஞ்சி’ என்ற நூலை இயற்றிய ஆதி சிற்றம்பலக் கவிராயருக்கு கி.பி 164748 ஆம் ஆண்டளவில் மிதிலைப்பட்டிக் கிராமத்தைத் தானமாக வழங்கியுள்ளார். இந்த வெங்கலப்ப நாயக்கர் மற்றும் அவரது பரம்பரையினரின் தர்மச் சிந்தனைகளைப் பற்றி டாக்டர் உ.வே.சா அவர்கள் ‘கண்டதும் கேட்டதும்’ என்ற நூலில் ‘பரம்பரைக்குணம்‘ என்றகட்டுரையில் எழுதியுள்ளார்.

வயித்திலிங்கத் தொண்டமான், வெங்கலப்ப நாயக்கர் இருவரது சிலைகளையும் பார்த்துக் கொண்டே வரும்போது வடக்குப் பிரகாரத்தில் சித்தர்கள், நாகநாதர், ராக்காச்சியின் பணிப்பெண் ஆகியோரது சிலைகளும் தனித்தனிச் சந்நிதியில் உள்ளன.

கருப்பர் குலதெய்வம்

கோட்டைக் கருப்பரைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள், தேவகோட்டை (மாத்தூர் கண்ணூர்ப்பிரிவு), கீழச்சிவல்பட்டி, குருவிக் கொண்டான்பட்டி மிதிலைப்பட்டி குழிபிறை, விராமதி, சொக்கநாதபுரம், சிறுகூடல்பட்டி, நாட்டரசன் கோட்டை ஆகிய ஊர்களைச் சேர்ந்த நகரத்தார்களாவர்

அதுமட்டுமல்ல, தென்மாப்பட்டு, திருப்புத்தூர், வெளியாரி, நெற்குப்பை வடுகபட்டி, கானாடுகாத்தான், ரி.வயிரவன்பட்டி (கீழநிலை), பனையப்பட்டி, பைக்குடிப்பட்டி, திருக்கோஷ்டியூர், ஜி.வைரவன்பட்டி, கொளுஞ்சிப்பட்டி, தேவரம்பூர், மாங்குடி, ஷி.க்ஷி. மங்கலம், பாண்டாங்குடி, கம்பனூர், திருக்குவளக்குடி, பட்டமங்கலம், வி.சூரக்குடி, வி.புதூர், தம்பிபட்டி, வெளியாத்தூர், திருக்கோகர்ணம், அதிகரம், வடக்குப்பட்டம் (வலங்கைமான்), வ.சூரக்குடி, திருக்களாப்பட்டி, கொட்டாம்பட்டி, தட்டட்டி, கொரட்டி, பிராமணம் பட்டி, ஒழுகமங்கலப்பட்டி ஆகிய ஊர்களிலுள்ள நாட்டார்களும் மற்றும் திருப்புத்தூர் பொதுமக்களும், சிவஸ்ரீ ராக்கப்ப வடுகநாத தேசிகர் பரம்பரைப் பூசகர்களும் கோட்டைக் கருப்பண்ண சுவாமியை குலதெய்வமாகக் கொண்டாடி வருகிறார்கள்

கோட்டைக் கருப்பரைக் குலதெய்வமாகக் கொண்ட தேவகோட்டை நகரத்தார்களில் ஒரு பிரிவினர் ஆடிமாதம் ஒரு வெள்ளிக்கிழமையன்று சேர்ந்து வந்து வழிபடுகிறார்கள். கருப்பருக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து அங்கி சாத்தி வழிபட்டு அன்றே திருத்தளிநாதர் கோயிலுக்குச் சென்று யோக பைரவரை வணங்கி சகஸ்ரநாம அர்ச்சனைகள் செய்து மாவிளக்கு வைத்து வழிபட்டு பிறகு கோட்டைக் கருப்பருக்கு மாவிளக்கு ஏற்றிவைத்து வழிபடுகிறார்கள்.

இக்கோயிலின் தெற்கில் கோட்டைச் சுவரை ஒட்டி தேவகோட்டை நகரத்தார்களுக்குரிய விடுதி ஒன்று உள்ளது. விடுதியைப் பற்றியச் செய்தி ஒன்று அங்கு எழுதப்பட்டுள்ளது. அந்தச் செய்தியாவது:

ஸ்ரீ கோட்டைக் கருப்பர் துணை

தேவகோட்டை

சின்னவடுகன் செட்டியார் வகை

பங்காளிகளுக்குச் சொந்தமான விடுதி

புதுப்பித்துக் கட்டிய தேதி 17.7.2005

இக்கோயிலுக்குப் பாத்தியப்பட்டவர்கள் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்கு, இக்கோயிலில் இருந்து பண்டாரங்கள் திருமண நாளன்று கோயில் மாலை, திருநீறு கொடுத்து வரும் வழக்கம் தொடர்ந்து நடந்துவருகிறது.

இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் “திருப்புத்தூர்” என்றும், மக்கள் வழக்கில் “திருப்பத்தூர்” என்றழைக்கப்படும் இவ்வூர் ஆன்மீகம் மற்றும் வரலாற்றுச் சிறப்புக்களை உடையதாகத் திகழ்கிறது.

திருப்புத்தூரின் கிழக்கே உள்ள கோட்டைக் கருப்பர் கோயிலில் எழுந்து அருள்பாலிக்கும் கருப்பண்ணசுவாமி அனைவருக்கும் காவல்தெய்வமாக விளங்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

பார்வை நூல்கள்

1. திருப்புத்தூர் வள்ளி சொக்கலிங்கம்,
2. நகரத்தாரின் குலதெய்வங்கள் எஸ்ஸாரம்
3. கண்டதும் கேட்டதும் டாக்டர் உ.வே.சா
4. குன்றக்குடித் தலவரலாறு மரு. பரமகுரு

29.கண்டன இலக்கியங்கள்

ஒரு நாணயத்துக்கு மறு பக்கம் எப்படியோ அப்படியே ஒரு கருத்துக்கு மாற்றுக்கருத்து என்பதும்.. காலம் காலமாக நாம் காணுகிற உண்மை இது. தத்தம் கருத்தை வலியுறுத்தவும், மற்றவர் கருத்தை மறுதலிக்கவும் ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள் பட்டிமண்டபத்து பாங்கறிந்து ஏறிய செய்திகளை மணிமேகலை காலம் முதல் நாமறிவோம். திருஞானசம்பந்தர் காலத்தில் அது அனல்வாதம் புனல்வாதமாக வளர்ந்தது. மாணிக்கவாசர் காலத்திலும் அது தொடர்ந்தது.

இவ்வாறு சொற்போர்களாக வளர்ந்த வாதங்களும் மறுப்புகளும், உரைநடை இலக்கியம் வளர்ந்த 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இதழ்களில் கட்டுரைகளாகவும் தனி நூல்களாகவும் வெளிவந்தன. குறிப்பாக, சமயத் தொடர்பான கண்டன இலக்கியங்கள் பல, இலங்கையில் தோன்றின. பெரும்பாலும் கிறித்தவர்களும் சைவர்களும் முரண்பாடுகொண்டு கண்டன நூல்கள் இயற்றினர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செப்பறைச் சிதம்பர சுவாமிகள் என்பவர் சைவ சித்தாந்த விற்பன்னர். இவர் மறுப்புநூல் எழுதுவதில் ஊக்கமுடையவர். ‘தொல்காப்பிய சண்முக விருத்தி மறுப்பு’ முதலியன இவர்தம் எதிர்நூல்கள். யாழ்ப்பாண சங்கர பண்டிதர் ‘சிவதூடண கண்டனம்’ ’கிறித்துமத கண்டனம்’ என்ற மறுப்பு நூல்கள் எழுதியுள்ளார். பெரும்புலவரும் சைவசித்தாந்த விற்பன்னருமாகிய யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் வெளியிட்ட கண்டன நூல்கள் கணக்கற்றன. அவற்றுள், வடலூர் இராமலிங்க சுவாமிகள் இயற்றிய அருட்பாவுக்கு எதிரான ‘போலி அருட்பா மறுப்பு’ என்றநூல் குறிப்பிடத்தக்கது. ஆறுமுக நாவலரும் கதிரைவேல் பிள்ளையும் வள்ளலாரின் திருவருட்பா ‘மருட்பா’ என்று வாதிட்டபோது, அஃது அருட்பாவே என்று வாதிட்டவர் கோட்டாற்றுச் செய்குதம்பிப் பாவலராவார்.

பாம்பன் குமரகுருதாச அடிகள் சைவ சமயத்தை நிலைநாட்டுவதற்காக நுட்பமான ஆராய்ச்சியோடு புறச்சமய மறுப்பு

இயற்றுவதில் வல்லவராக விளங்கினார். குணங்குடி மஸ்தான் சாயிபு 'கிறித்துவ மத கண்டன வச்சிர தண்டம்' என்னும் ஒருநூல் இயற்றி உள்ளார். இத்தகைய கண்டன இலக்கியங்கள் பற்றிக் கூறவந்த டாக்டர் மு.வரதராசனார், 'சிவனும் தேவனா?' என்று ஒருவர் கண்டன நூல் எழுத அந்தக் கண்டனத்திற்கு மறுப்பாக 'சிவனும் தேவனா என்னும் தீயநாவிற்கு ஆப்பு' என்று மற்றொருவர் கடுமையான நூல் எழுதினார். 'ஞானக்கும்மி' என்று ஒரு நூல் வந்தது. 'அஞ்ஞானக்கும்மி' என்று அதற்கு மறுப்பு நூல் ஒன்று வந்தது. 'அஞ்ஞானக்கும்மி மறுப்பு' என்று அதற்குக் கண்டனமாக இன்னொரு நூல் இயற்றப்பட்டது. இத்தைய கண்டன நூல்கள் பலவும் இன்று மறைந்துவிட்ட போதிலும் அவற்றால் தமிழ் உரைநடை விறுவிறுப்புப் பெற்று வளர்ந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது' என்று தாம் எழுதிய 'தமிழ் இலக்கிய வரலாறு' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

கண்டன இலக்கிய வரிசையில் நகரத்தார் தொடர்பான கண்டன இலக்கியங்களும் காணப்படுகின்றன. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில், அயல்நாடுகளுக்கு, குறிப்பாக கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று தொழில்செய்து பெரும்பொருள் ஈட்டிய நகரத்தார்கள், ஈட்டியதில் ஒருபகுதியை மகமைப் பணமென எடுத்துவைத்து, அந்தத்தொகையில் தனியாகவோ கூட்டாகவோ பெரியபெரிய அறப்பணிகளைச் செய்துள்ளனர். இந்து சமயத்தின் தூண்களாக விளங்கும் ஆலயங்கள் அந்நியர் ஆட்சியில் பேணுவாரின்றி இருந்தபோது பாடல்பெற்ற தலங்களையும், பழைய தலங்களையும் தேடித்தேடித் திருப்பணி செய்தனர். தாங்கள் தொழிலின் பொருட்டுச் சென்ற அயல்நாடுகளிலும் கோயில் திருப்பணிகளில் ஈடுபட்டு சைவத்தையும் தமிழையும் திராவிடச் சிற்பக்கலையையும் வளர்த்தனர்.

நகரத்தார்களின் கோயில் திருப்பணிகளைப் பலரும் பாராட்டிய அதே சமயத்தில், சிலர் அதைக்குறித்து கருத்து வேறுபாடுகளையும் தெரிவித்திருக்கிறார்கள். 1910 ஆம் ஆண்டு ஞானசாகரம் இதழில் மறைமலை அடிகள், நகரத்தார் அதிகப் பொருட்செலவில் கோயில் திருப்பணிகள் செய்வதைக் குறித்து சற்று கடுமையாக விமர்சனம்

செய்திருக்கிறார். அவர்கள் செய்கின்ற தருமங்கள் மாறவேண்டும் என்றும் கூறியிருக்கிறார். அதுதொடர்பாக 'ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள் பெருமையும் அவர்கள்மீது பொறாமையுற்றோர் சிலர் சிறுமையும், நாட்டுக்கோட்டைச் செட்டி பிரபுக்கள் தரும முறையும்' என்று ஒரு நூல் 1914 ஆம் ஆண்டு வெளிவந்தது. தமிழ் நாவலாசிரியர் சி.கோபாலகிருஷ்ண பிள்ளை என்பவரால் எழுதப்பெற்று சென்னை யிலுள்ள வைஜெயந்தி அச்சகத்தில் அச்சிடப்பெற்றுள்ளது அந்நூல். அந்நூலுக்கு மறுப்பாக நகரத்தாரால் ஒருநூல் எழுதப்பட்டுள்ளது. தேவகோட்டை அரு.பழ.லெ.சின்னலெட்சுமணன் செட்டியார் அவர்கள் குமாரன் பழனியப்பச் செட்டியாரால் எழுதப்பெற்று, மதுரை அஷ்டலட்சுமி விலாசம் அச்சகத்தில் 1915 ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பெற்ற அந்த நூலின் பெயர் 'சுவாமி வேதாசலம் பிள்ளையவர்களின் கொள்கையும் வேறுசில பிள்ளைகள் செய்கையும்' என்பதாகும். அந்தநூலில் சுவாமி வேதாசலம் பிள்ளையவர்களைப் பற்றியும், நகரத்தாரைக் குறித்து அவர்கூறிய கருத்துகளைப்பற்றியும் காரசாரமாக எழுதப்பெற்றுள்ளது.அந்நூலின் தொடக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது, "செந்தமிழ்நாட்டுச் சிவநேயச் செல்வர்களே! சிலகாலமாக சுவாமி என்னும் பட்டத்தை வகித்துக்கொண்டு கஷாய உடையுடுத்தி மனைவி மக்களுடன் பல்லாவரத்தில் குடியிருக்கும் ஸ்ரீமத் வேதாசலம் பிள்ளையவர்களைத் தமிழ்மக்கள் நன்கறிவர். அவர் நம் நாட்டுக்கோட்டை வணிகமணிகட்கு நல்வழி காட்டுவார் போன்று, நம்மவர் குலதனமாகக் கொண்டு பரிபாலித்துவரும் சிவாலயத் திருப்பணி தருமம் பயனற்றதென்றும், தாம் கூறும் வேறுசில தருமங்களே பயனுடையனவென்றும் தம்மனம் போனவாறு ஏதேதோ விஷயங்களை எழுதி, இன்றைக்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர் தாம் நடத்திவந்த ஞானசாகரப் பத்திரிகையில் வெளியிட்டனர். அந்த ஞானசாகரம் தமிழ்நாட்டில் பெரிதும் பரவப் பெற்றதன்றாதலின் அதன்கண் அவ்விடயம் வந்தமையைப் பலரறியார். அறிந்த சிலரும் அவ்விடயம் இன்னவரால் எழுதப்பட்டது என்று தெரியக்கூடாமையால் அதனையொரு பொருட்படுத்திலர். ஏனெனில் ஞானசாகரத்தில் 'நாட்டுக்கோட்டையார் தருமம் பயன்படுமா?' என வெளிவந்த

விஷயத்தின் இறுதியில் கையெழுத்திடவில்லை.

இங்ஙனம் பல வருடங்கள் சென்ற பின்னர் 1914 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளிவந்த வைசிய மித்திரனில் 'நாட்டுக்கோட்டையார் தருமம் பயன்படுமா?' என்ற அவ்விஷயமே சிற்சில மொழிமாறுதல்களுடன் ஈற்றில் 'சுவாமி வேதாசலம்' என்ற கையொப்பமிட்டு வெளிவந்தது. அதனைக்கண்ட நம்மவர் பலரும் மனப்புழுக்கம் கொண்டனர். தக்க பண்டிதர்கள் பலரும் வருத்தமுற்றனர். மதுரை வித்யாபாநு பத்திராதிபர் ஸ்ரீ மு.ரா.கந்தசாமிக் கவிராயரவர்கள் 'சுவாமி வேதாசலம்' என்ற கைச்சாத்துடன் வைசிய மித்திரனில் வெளிவந்த அவ்விஷயத்தின் மறுப்பாக "நாட்டுக்கோட்டையார் தருமமும் சுவாமி வேதாசலமும்" என்ற தலைப்பெயரிட்டு வித்யாபாநுவில் தக்க நூலாதாரங்களை எடுத்துக்காட்டி வெளியிட்டார்கள்.

வைசிய மித்திரன் வாயிலாகவும் எம்மவரில் சிலரும் ஸ்ரீ கவிராயர் எழுதியவற்றைத் தழுவியும், ஸ்ரீ வேதாசலம் பிள்ளையவர்கள் எழுதியதைக் கண்டித்தும் பலபட வரைந்தனர். இந்நிலையில் ஸ்ரீ வேதாசலம் பிள்ளை வாளா இருப்பவும் அவர் சார்பாக ஸ்ரீ ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் 'கந்தசாமிக் கவிராயரின் அபவாத உரை அகற்றல்' எனத் தலைப்பெயரிட்டு ஸ்ரீ வேதாசலம் பிள்ளையவர்கள் கூற்றைத் தழுவி வைசிய மித்திரனில் வெளியிட்டனர். அதனைக்கண்ட ஸ்ரீ சங்கரம்பிள்ளையவர்கள் 'இரட்டைப் பிள்ளைகள் மருட்சிக்கு மருந்து' எனத் தலைப்பெயரிட்டு ஸ்ரீ வேதாசலம் பிள்ளையவர்கள் சிவகுருநாத பிள்ளையவர்கள் ஆகிய இருவர் கூற்றையும் கண்டித்து வித்யாபாநுவில் வெளியிட்டார்.

அந்தச் சூழ்நிலையில்தான் மேற்கூறிய 'ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள் பெருமையும் அவர்கள்மீது பொறாமையுற்றோர் சிலர் சிறுமையும், நாட்டுக்கோட்டைச் செட்டி பிரபுக்கள் தரும முறையும்' என்ற நூல் வெளிவந்தது. அதற்கு மறுப்பாக எழுதப்பட்ட நூல்தான் தேவகோட்டை பழனியப்பச் செட்டியாரால் எழுதப்பட்ட நூல். அந்நூலில் அதன் ஆசிரியர், 'மறுப்புக்கூறுகையில் முதலாவது ஸ்ரீ மு.ரா.கந்தசாமிக்



ஸ்ரீ மு.ரா.கந்தசாமிக் கவிராயரவர்கள்

கவிராயரவர்கள் நாட்டுக் கோட்டையார் தருமம் பயன்படுமா?' என்று தலைப்பிட்டதே தவறு. தருமம் யாரால் செய்யப்படினும் பயன்படும் என்பதே யாவர்க்கும் ஒப்ப முடிந்தது. அங்ஙனமாகவும் நாட்டுக்கோட்டையார் தருமம் பயன்படுமா? என்று கூறுவது அறிஞர் ஒப்பத்தக்கதன்றாம்' என்று கண்டிக்கத் தொடங்கிப் பின்னர் ஆலயத்திருப்பணித் தருமம்

பயனற்றதென்று கூறியதுமிகப்பெருந்தவறாகும் என்றும், "ஒருவர் புதிய சில தருமங்களைச் செய்யுமாறு கூற வந்தால் முன்னைத் தருமங்களைப் பற்றிக் குறைகூறாது தாம் கருதும் காரியத்தின் நலத்தை மட்டும் விளக்கிக் காட்டலே மேதக்க செயலாம். இங்ஙனமின்றி முன்னுள்ள தருமங்களை இழித்தும் தாம் கூறுவதொன்றை உயர்த்தியும் பேசுவதானது, தாய்தந்தையரைப் பழித்து மனைவியை மட்டும் புகழ்ந்து கூறுவதையே ஒக்கும்" என்று பதிலடி கொடுத்துள்ளார். மேலும் தாங்கள் பழுதடைந்த கோயில்களைத்தான் திருப்பணி செய்ததாகவும் சுவாமி வேதாசலம் அவர்கள் சொல்வதுபோல நல்ல நிலையிலுள்ள கோயில்களை இடித்து மண்ணிலும் செங்கல்லிலும் காசை வீணாக்கவில்லை என்றும் அந்நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரத்தார் தொடர்பான மற்றொரு கண்டனநூல் நகரத்தாரைப்பற்றி நகரத்தாராலேயே எழுதப்பட்டுள்ளது. நகரத்தார்கள் பழைய கோயில்களைத் திருப்பணி செய்ததோடு புதிய கோயில்களையும் கட்டினார்கள் என்று பார்த்தோம். நகரத்தார்கள் புதிதாக அமைத்த ஆலயங்கள் எல்லாம் ஆகம விதிப்படியே கட்டப்பட்டன. ஆகம விதிக்கு மாறாக நகரத்தார்களுள் சிலர் ஆலயங்களைக் கட்ட முயன்றபோது, அது தவறு என்றும், ஆகம விதிப்படிதான் ஆலயங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் நகரத்தார்களே வலியுறுத்தி இருக்கிறார்கள்.

"தேவகோட்டை தி.வகைப் பிள்ளையார் கோயிலின்கண் உள்ள விசாலாட்சியம்பா ஸமேத விசுவநாதர் கோயில் திருப்பணி முறையீடு" என்றதொரு நூல் தேவகோட்டை இளையாற்றங்குடிக் கோயில் பெருமருதூர் வகுப்பைச் சேர்ந்த மஹா ஸ்ரீ மஹா கனம் பொருந்திய தி. வகையார்களது சமூகத்துக்கு அவர்களுள் ஒருவராகிய வெ.ஆ.தி.மா. சிதம்பரம் செட்டியார் என்பவரால் எழுதப்பட்டது. 1930 ஆம் ஆண்டு வெளிவந்த அந்தநூல் சென்னை ஆனந்த அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

அந்நூலில் "நகரத்தார்களாகிய நாம் வீடுகள் கட்டும்போது பாதுகாப்புக் கருதியும், வசதிக்காவும், வளவுகளில் வீடுகள் (அறைகள்)

கட்டும்போது, உள்வீடு வெளிவீடு என்று இரட்டைவீடு வைத்துக் கட்டிக் கொள்கிறோம். ஆனால் கடவுளருக்கு மட்டும் கருவறை மட்டும் கட்டி அர்த்தமண்டபம் கட்டாமல் இருக்கலாமா? என்ற கேள்வியை எழுப்பி, தேவகோட்டை தி.வகைப் பிள்ளையார் கோயிலில் உள்ள விசாலாட்சி, விசுவநாதர் கருவறைகளை அடுத்து அர்த்த மண்டபம் கட்டப்படல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்நூலுக்கு மறுப்பாக, தேவகோட்டை தி.ராம.தி.சுப. திண்ணப்பச் செட்டியார் "விசுவநாதர் கோயில் திருப்பணி முறையீட்டின் கண்டனம்" என்ற நூலை 1932 ஆம் ஆண்டு எழுதியுள்ளார். அதில் அவர், தாங்கள் ஆகம விதிகளைப் பின்பற்றித்தான் கட்டியுள்ளோம் என்பதைத் தக்க காரணம் காட்டி விளக்கியுள்ளார்.

இவ்வாறாக ஒரு காலக்கட்டத்தில் (19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும்) தோன்றிய கண்டன இலக்கியங்கள் பரபரப்பும் விறுவிறுப்பும் உடையனவாய் அமைந்து தமிழ் இலக்கிய வரலாற்றில் தமக்கென ஓரிடத்தைப் பெற்றுள்ளன.

30.கண்டவராயன்பட்டிக் கல்வெட்டுகள்

3நகரத்தார்கள் 18,19 ஆம் நூற்றாண்டுகளில், கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்று பெரும் பொருளீட்டி, ஈட்டியதில் பெரும் பகுதியை அறப்பணிகளுக்கு, குறிப்பாகக் கோயில் திருப்பணிகளுக்குச் செலவிட்டனர்.

அக்காலக் கட்டத்தில், இந்து சமயத்தின் தூண்களாக விளங்கும் ஆலயங்கள்ஆங்கிலேயர் ஆட்சியில் பேணுவாரின்றிக் கிடந்தன. மேலும், வணிகம் செய்ய வந்த ஐரோப்பியர், மக்களை மதம் மாற்ற முயன்றனர். அத்தகைய சூழலில், இந்து மதத்தையும், கோயில்களையும் பாதுகாக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதை உணர்ந்த நகரத்தார்கள் இயற்கையிலேயே ஆன்மீக நாட்டம் உடையவர்களாக இருந்த காரணத்தினாலும், பொருள் வசதி இருந்த காரணத்தினாலும், கோயில் திருப்பணிகளை மனமுவந்து ஏற்றுக் கொண்டனர்.1912 இல் வெளிவந்த “சிங்கப்பூர் தெண்டபாணிப்பத்து தோத்திரமஞ்சரி” என்ற நூல்,

வேறு மதத்தில் விழாதபடி நம்மை
வேலியைப் போல்நின்று கோலிடுவார்
நீறிட்டமேனியர் செல்வக் குபேரர்கள்

நீதி வணிகரைப் பாருங்கடி “ என்று இந்து சமயப் பாதுகாவலர்களாக நகரத்தார் விளங்கியதைக் கூறுகிறது. காஞ்சிப் பெரியவர் சந்திரசேகர சுவாமிகளும் “ஒரு நாட்டுக்குக் கோட்டைக் காப்பு வீரர்கள் இருப்பது போல, இந்து மதம் என்னும் கோட்டைக்குத் தனவணிக நாட்டுக் கோட்டை நகரத்தார்கள். கோட்டைக் காப்பு வீரர்களாக இருந்து வருகின்றனர்” என்று பாராட்டியுள்ளார்.

ஆழ்ந்த இறை நம்பிக்கையின் காரணமாகச் சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்டிருந்த நகரத்தார்கள், கோயில் திருப்பணிகளில் ஈடுபட்டனர். தாயகத்தில் சிவனுக்கு முக்கியத்துவம்

கொடுத்த நகரத்தார்கள் தாங்கள் சென்ற நாடுகளில் சிவனின் மகனான முருகனைத் தண்டாயுத பாணிக் கோலத்தில் வழிபடுவதில் ஈடுபாடு கொண்டனர்.

சுமார் 400 ஆண்டுகளாகப் பழநிக்குப் பாதயாத்திரையாகத் தைப்பூச வழிபாட்டிற்குச் செல்லும் நகரத்தார்கள், குன்றக்குடியை அடுத்துக் கண்டவராயன் பட்டியில் தங்கிச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். திருப்பத்தூர் அருகே உள்ள கண்டவராயன்பட்டி நகரத்தார் வசிக்கும் ஊர்களுள் ஒன்று. அவ்வூரைச் சேர்ந்த தெ.சி.நா குடும்பத்தார் பழநித் தலத்தைப் போலவே கண்டவராயன் பட்டியிலும் தண்டாயுதபாணிக்குக் கோயிலொன்றை எழுப்பியுள்ளார்கள். முதல் குடமுழுக்கு விழா 1932 இல் நடைபெற்றது. திருப்பத்தூர் பொன்னமவராவதி நெடுஞ்சாலையில் அக்கோயில் அமைந்துள்ளது.

அக்கோயிலில் பல வரலாற்று நிகழ்வுகள் நடந்துள்ளன. 1946இல் கம்பன் அடிப்பொடி திருசா.கணேசன் தலைமையில் விடுதலை முழக்கமும் கொடியேற்று விழாவும் நிகழ்ந்தன. 1947இல் கோவில் ஊருணிக் கரையில் பூங்குன்ற நாட்டு விவசாயிகள் மாநாடு நடைபெற்றது; 1948இல் முதலமைச்சர் றி.ஷி. குமாரசாமி ராஜா அவர்கள் தலைமையில் அரிசன ஆலயப் பிரவேசம் நடந்தது; பூமிதான இயக்கத் தலைவர் வினோபாஜி அவர்கள் இக்கோயிலுக்கு வந்திருக்கிறார்.

தெ.சி.நா.குடும்பத்தைச் சேர்ந்த நாச்சியப்ப சுவாமிகள் கோவிலூரில் சன்னியாசம் பெற்றவர்கள். 1932 இல் நாச்சியப்ப சுவாமிகள் முருக வழிபாட்டிற்கெனக் தண்டாயுதபாணிக் கோவிலை ஏற்படுத்தி மக்களுக்கு ஆன்மீகப் பணியாற்றியதோடு, ஊருணி அமைத்து தண்ணீர்ப் பந்தல் வைத்து, கோவிலில் தங்கி மக்களுக்கு மருத்துவ சேவை செய்து, ஆசி வழங்கி “மக்கள் பணியே மகேசன் பணி” என்று வாழ்ந்து வந்துள்ளார்கள்.

இக்குடும்பத்தைச் சேர்ந்த நகரத்தார்களும், இவ்வூரைச் சேர்ந்த நகரத்தார்களும் இன்று பெரிதும் பேசப்படும் தன்னிறைவுத் திட்டத்தைச் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பே செயல்படுத்தியிருக்கிறார்கள்

என்பதை, இவ்வூரிலுள்ள கல்வெட்டுக்கள் மூலம் அறிகிறோம். ஊருக்குத் தேவையான ஊருணி, குளம், பாலம் சாலை ஆகியவற்றை நாட்டார் உதவியோடு இவ்வூர் நகரத்தார்கள் அமைத்திருக்கிறார்கள்.

கண்டவராயன்பட்டியிலிருந்து திருப்பத்தூர் செல்லச் சாலை யில்லாமல் மக்கள் சிரமப்பட்டனர். இதனை உணர்ந்த தெ.சி.நாச்சியப்ப செட்டியாரின் இளைய மகன் சொக்கலிங்கம் செட்டியார் தமது சொந்தச் செலவில் கண்டவராயன்பட்டியிலிருந்து திருப்பத்தூர் செல்ல 5 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சாலை அமைத்துள்ளார்கள். சாலையின் இருமருங்கிலும் நிழல் தரும் 600 புளிய மரங்களை நட்டு வளர்த்துள்ளார்கள். இச் சாலையை 1922 இல் அவர்களின் பெற்றோர் மணி விழாவின் போது பொது மக்கள் உபயோகத்திற்கு திறந்து வைத்தார்கள். அசோக மன்னன், ராணி மங்கம்மாள் போன்றோரின் பணிகளை நினைவூட்டுவதாக இச்செயல்கள் அமைந்துள்ளன.

32 வகையான அறங்களுள் சாலை அமைத்தல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல், மரங்கள் நடுதல் ஆகியவை சொல்லப்பட்டுள்ளன. கொங்கு நாட்டிலுள்ள ஒரு கல்வெட்டில் தர்மத்தைக் காப்பாற்றாவிட்டாலோ, அல்லது தர்மத்திற்குத் தீங்கு நினைத்தாலோ அத்துவானக் காட்டிற்குள் தண்ணீர்ப் பந்தலும் சாலையும் உடைத்த தோஷத்திலே போவார்களாக என்று குறிப்பிடப் படுகிறது. அதன் மூலம் தண்ணீர்ப் பந்தலும் சாலையும் அமைத்தல் மிகச் சிறந்த அறப்பணி என்பதும் அதற்குத் தீங்கு நினைத்தல் பாவம் என்பதும் அறியப்படுகிறது. அத்தகைய அறச்செயலை இக்குடும்பத்தார் செய்திருக்கிறார்கள்.

திருப்பத்தூரிலிருந்து கண்டவராயன் பட்டிக்குப் போகும் வழியில் கண்டவராயன் பட்டி விலக்கில் வலது புறம் உள்ள பலகைக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு மூலம், இக்குடும்பத்தார் கண்டவராயன் பட்டியிலிருந்து திருமயத்திற்குச் செல்லச் சாலை அமைத்ததை அறிகிறோம். அக்கல்வெட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



உ

சிவமயம்

திருமயம்

கண்டவராயன்பட்டி

தெ.சி.நா

சொக்கலிங்கம்

செட்டியாரவர்களால் போடப்

பட்ட ரோட்டு

தர்மம்

நா. சொ.

1922

இக்கல்வெட்டிற்கு இடது புறமுள்ள மற்றொரு பலகைக் கல்வெட்டு,

கல்வெட்டு உள்ள பகுதியிலிருந்து மற்ற ஊர்கள் எவ்வளவு மைல் தொலைவில் இருக்கின்றன என்பதையும், கைகாட்டி அமைத்தவர் யார் என்பதையும் தெரிவிக்கின்றது.



உ

சிவமயம்

திருப்பத்தூர்

1 கண்டவராயன்பட்டி

2 தெக்களூர்

7 நெய்குப்பை

10 பொன்னமராபதி

14 தெ.சி.நா.சொ.தர்மம்

1922

கண்டவராயன்பட்டியிலிருந்து மகிபாலன் பட்டிக்குச் செல்லும் சாலையின் முகப்பில் 1924 இல் பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டு காணப்படுகின்றது. தேவகோட்டையைச் சேர்ந்த அ.கண.வீரப்ப செட்டியார் மகிபாலன் பட்டியிலிருந்து தேவகோட்டைக்குச் சுவீகாரம் சென்றவர். அவர், தான் பிறந்த மண்ணுக்கு ஏதேனும் நன்மை செய்யக் கருதி பல்லாண்டு வரையிலும் மாட்டு வண்டிகள் கூடப்போய் வருவதற்குரிய பாதை வசதி கூட இன்றி அவ்வூர் மக்கள் சிரமப்பட்டதை அறிந்து மகிபாலன் பட்டிக்கும் கண்டவராயன் பட்டிக்கும் இடையில் சாலை அமைத்துள்ளார். அதைக் குறிக்கும் கல்வெட்டு இதோ

உ

சிவமயம்

வயிரவமூர்த்தி துணை

மகிபாலன்பட்டி வழி (ஸிஷீணீபீ)

இது தேவகோட்டை

திருவாளர் அ.கண

வீரப்ப செட்டியாரவர்கள்

தருமமாக இயற்றியது

ருதிரோற்காரி வருஷம்

தை மாதம் 28 தேதி

10.2.1924

தேவகோட்டை

திருவாளர் பள.செ

இலக்குமணச் செட்டியார்

அவர்களால்

திறக்கப் பெற்றது

அறம் வாழ்க

1934 இல் கண்டவராயன் பட்டியில் உள்ள வல்லநாட்டுக் கருப்பர் கோயிலுக்குச் செல்வதற்கு வசதியாக ஒரு பாலத்தைத் தம் சொந்தச் செலவில் அமைத்துக் கொடுத்திருக்கிறார் அவ்வூரைச் சேர்ந்த 'மீனாட்சி' என்கிற நகரத்தார் பெண்மணி. அதைக் குறிக்கின்ற இரு பாடல் கல்வெட்டுக்கள் பாலத்தின் இருபுறமும் அமைந்துள்ளன. ஒரு கல்வெட்டு, பாலம் அமைத்த செய்தியைக் குறிக்க, மற்றோர் கல்வெட்டு அன்னாரைப் பாராட்டுவதாக உள்ளது.

பாடல் கல்வெட்டு – 1

" வானார் சீர் கண்டவராய நகர் வாழுஞ்
சீனாப் பெரியணனுஞ் சீர்த்தியற
மானான் றன் சீல மனைவி செழுமை
மீனாட்சி அம்பால மமைத்தார் அன்பால்
ஸ்ரீமுக வருஷம் சித்திரை மாதம்."

பாடல் கல்வெட்டு 2

உ

சிவமயம்

வல்ல நாட்டுக் கருப்பர் கோயில் வழியதனில்
நல்லடியை யேத்தியருள நாடுமினென்று
எல்லோர்க்கும் சாலஉரை மத்தளம் போல்
பாலமமைத்த அன்னார் ஞாலமதில் வாழ்க பன்னாள்
ஸ்ரீமுக வருஷம் சித்திரை மாதம் 1 தேதி சி.ந.பெரி

வல்லநாட்டுக் கருப்பர் கோயில் ஊருணியில் உள்ள கல்வெட்டு ஊருணி தர்மத்தைக் குறிப்பிடுகிறது.

உ

சிவமயம்

நள வருஷம் வைய்காசி மாதம் 5 தேதி

ஆத.சு.பழ.பெரி.பெரிய கருப்பன் செட்டி

செய்து வைத்த தருமம்

வல்லனாட்டு கருப்பையா துணை

இவ்வாறாக கண்டவராயன்பட்டி கல்வெட்டுக்கள் இங்குள்ள மக்களின் அறச் சிந்தனைகளைக் காட்டுவனவாய் அமைந்துள்ளன.

31.ஆச்சிமார்களும் அறப்பணிகளும்

"பரட்டைப் புளியமரம் பந்தடிக்கும் நந்தவனம்
நந்தவனம் கண்திறந்து நாலுவகைப் பூவெடுத்துப்
பூவெடுத்துப் பூசைபண்ணும் புண்ணியவார் பேரனோ/
பேத்தியோ
மலரெடுத்துப் பூசை பண்ணும் மகராசன் பேரனோ/ பேத்தியோ
அரும்பெடுத்துப் பூசை பண்ணும் அர்ச்சுனவா பேரனோ/
பேத்தியோ
வித்தகசாலை கட்டும் வீமருட பேரனோ/ பேத்தியோ
பாடகசாலை கட்டும் பாண்டியனார் பேரனோ/ பேத்தியோ
குளிக்கக் குளமும் வெட்டிக்கும்பிடவும் கோயில் கட்டி
அசராமல் அன்னமிடும் அர்ச்சுனவா பேரனோ/ பேத்தியோ"

நகரத்தார் ஆச்சிமார்களும் இளம்பெண்களும் (ஆமாம் இன்றைய இளம் நகரத்தார் தாய்மார்களும்) இன்றளவும் பாடிவரும் தாலாட்டுப் பாடல்தான் இவை. செட்டிநாட்டுப் பெண்களின் தாலாட்டுப்பாடல்கள் புகழ் பெற்றவை. அப்பாடல்களில் பல நகரத்தார்கள் செய்த அறப்பணிகளை மேற்கூறியவாறு எடுத்துரைக்கின்றன. வீர சிவாஜியின் தாய் சிவாஜிக்கு வீரக்கதைகள் சொல்லி இளமையிலேயே வீர உணர்வை ஊட்டியதுபோலத் தங்கள் குடும்பத்தாரும் மற்றவர்களும் செய்த அறப்பணிகளைச் சொல்லி அற உணர்வை பிள்ளைகளுக்கு ஊட்டி வளர்த்தனர் நகரத்தார் பெண்கள். அவர்களது தமிழ் உணர்வையும் அறப்பணி இயல்பையும் கண்ட கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு,

"கோயிலிலே அலகிடுவார் கோடீசுவரர் மனைவிவண்ணக்
கோலமிடும் கைகளிலே குலுங்கும் வைர வளைவி

வாய் மணக்கும். தாலாட்டிலே வருகும் தமிழருவி

வாழ்க்கையெல்லாம் உழைப்பதிலே வானம்பாடிக் குருவி"

என்று மனம்நிறையப் பாராட்டியுள்ளார்.

ஆச்சிமார்கள் தங்கள் குடும்பதார்கள் செய்த அறப்பணிகளுக்குப் பக்கபலமாய், பின்புலமாய் இருந்ததோடு / இருப்பதோடு தாங்களே நேரடியாக அறப்பணிகள் ஆற்றியிருக்கிறார்கள். செட்டியார் என்னென்ன அறப்பணிகளைச் செய்தார்களோ, அவற்றையெல்லாம் ஆச்சிமார்களும் செய்திருக்கிறார்கள்.

நகரத்தார் பெண்கள் இயல்பாகவே சமயப்பற்று மிக்கவர்கள். தலங்கள் தோறும் சென்று இறைவனை வழிபடுவதையும் ஐப்பசி கடைமுழுக்கு, முதல்முழுக்கு ஆடி அமாவசை, தை அமாவாசை ஆகிய நாட்களில் புண்ணியநதிகளில் நீராடுவதையும், கும்பாபிடேகம் திருவிழாக்கள் காணச்செல்வதையும் சிறந்த வழக்கமாகக் கொண்டுள்ளனர். அவர்கள் கட்டிய, புதுப்பித்த, கோயில்களும், கோயில்களில் ஏற்படுத்திய கட்டளைகளும் பல.திருஞானசம்பந்தரின் பாடல் பெற்ற தலம் திருக்கொள்ளம்புதூர் ஆகும்.அத்தலத்தைத் திருப்பணி செய்தவர்கள் நச்சாந்துபட்டியைச் சேர்ந்த பெ.ராம குடும்பத்தாராவார்.. அக்கோ யிலில் அம்மனுக்கு தனி ஆலயம் எடுத்தவர்கள் அக்குடும்பத்தைச் சேர்ந்த பெண்களே. ஆ.தெக்கூரில் உள்ள வாழ்நாள் பிள்ளையார் கோயில் சா.கல்யாணி ஆச்சியால் திருப்பணி செய்யப்பெற்றது. காஞ் சிபுரத்தில் உள்ள சுரகரீசுவரர் கோயில் கண்டனூர் சி.ராம சு.இராமன் செட்டியார் மனைவி சிவகாமி ஆச்சியால் திருப்பணி செய்யப்பெற்று 1916. ல் கும்பாபிடேகம் நடைபெற்றது. க.லெ.சிகப்பி ஆச்சி, சொக்கலிங்கம்புதூரில் முனியையா கோயிலைக் கட்டியவராவார்.

கோயில் திருப்பணிகளேடு மடங்கள், நந்தவனங்கள், ஊருணிகள் ஆசிய திருப்பணிகளிலும் ஆச்சிமார்கள் ஈடுபட்டுள்ளனர். திருக்கழுக்குன்றத்தில் குருபூசை மடத்தை ஏற்படுத்தியவர் தேவகோட்டை அழ.மு.கரு வினைதீர்த்தாள் ஆச்சியாவார். காஞ் சிபுரம் நாராயண சேவாசிரமத்தில் ஆச்சிமார்கள் பல இல்லங்களைக்

கட்டிக் கொடுத்துள்ளனர். காவிரிப்பூம்பட்டினம் மேலையூரில் இருக்கும் ‘சிவராஜயோக மடம்‘,ஆச்சி ஒருவரால் வசூலித்துக் கொடுக்கப்பட்ட நிதியிலிருக்கு கட்டப்பட்டதாகும். காவிரிப்பூம்பட்டினம் நகரவிடுதி கட்டுவதற்கு கோனாபட்டு விசாலாட்சி ஆச்சியின் பங்கு மிகப் பெரியது. நகரத்தார் பெண்கள் குருபீடமாகிய துளாவூர் மடத்தை நகரத்தார் பெண்கள் ஒன்று சேர்த்து செப்பனிட்டு கொடுத்துள்ளார்கள்.

நகரத்தார் இனத்தைச் சேர்ந்த பெண்துறவி ஒருவர் வடலூரில் மடமொன்று நிறுவி அடியார்களுக்கும். ஏழைகளுக்கும் தொண்டுசெய்வதையே தன் குறிக்கோளாகக் கொண்டு வாழ்த்துள்ளார்.


வடலூரில் தெய்வானை ஆச்சியடிகள் மடம் என்றொருமடம் உண்டு அந்தமடத்தைத் தோற்றுவித்த அரிமளத்தைச் சேர்ந்த தெய்வானை ஆச்சி 1870 இல் பிறந்தவர். இளவயதிலேயே கணவரை இழந்து அரிமளத்தில் உள்ள கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள் மடத்திற்குச் சென்று பாடம் கேட்டும், சாதுக்களுக்குத் தொண்டு செய்தும் தம் இல்லத்தில் அடியாரை உண்பித்தும் சமயத் தொண்டு புரிந்து வந்தார்.

1921இல் வடலூர் சென்று அங்கு ஒரு மடத்தைத் தோற்றுவித்து அதன்வாயிலாகச் சமயப் பணியும் சமுதாயப்பணியும் ஆற்றிவந்தார். அங்குள்ள கோயிலுக்கு வெள்ளிவாகனங்கள் செய்து கொடுத்து திருவிழாக்களைச் சிறப்பாக நடத்தியும் மடத்தில் நந்தவனம் வைத்து சிவவழிபாட்டிற்கு வேண்டிய மலர்கள் கொடுத்தும் சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் உணவு,உடை முதலியன அளித்தும்,தலயாத்திரை மேற்கொள்ள விரும்பும் வசதி இல்லாதோருக்குப் பொருளுதவி செய்தும் தொண்டு செய்து வந்தார். தெய்வானை ஆச்சி அடிகள், மேலும் அங்குள்ள சாத்தப்ப சுவாமி மடாலயத்தை திருப்பணி செய்துள்ளார். மக்கள் தொண்டையும் மகேசன் தொண்டையும் மேற்கொண்டு தன் வாழ்நாளை வடலூரில் கழித்தவர் தெய்வானை ஆச்சியடிகள்.

செட்டிநாட்டிற்கு நடுநாயமாக விளங்கும் குன்றக்குடி திருப்புகழ் பாடல் பெற்ற பழமையான தலமாகும்.இத்தலத்தை மையமாக

வைத்துதான் நகரத்தார் வசிக்கும் ஊர்களை கீழவட்டகை, மேலவட்டகை, வடக்குவட்டகை, தெற்குவட்டகை என்பர். இத்தலத்தில் பல ஊர் நகரத்தார்களுக்கு மலையடிவாரத்தைச் சுற்றித் தனித்தனியே மடம் உண்டு. இங்கு கார்த்திகை, சோமவாரம் போன்ற நாட்களில் மகேசுவர பூசையும் அன்னதானமும் நடைபெறும்.

இத்தலத்தில் காரைக்குடி அண.சா.அண சாமிநாதன் செட்டியாரின் தயார் வெள்ளச்சி ஆச்சி நகரத்தார் பொருளுதவியுடன் சண்முகநதி என்ற ஊருணியை வெட்டுவித்தார் இவரே நகரத்தார் பொருளுதவியுடன் சண்முகநாதப் பெருமானுக்கு தங்கக்கேடகம் செய்து வைத்துள்ளார். கோட்டையூரிலிருந்து குன்றக்குடிக்குப் போகும் வழியிலுள்ள செட்டிச்சி ஊருணி, ஆச்சி ஒருவரால் கட்டப்பட்டதாகும் மேலைச் சிவபுரியிலுள்ள ‘அமிர்தகுளம்‘ ஊருணியின் ஒரு படித்துறையை ஆரு. சுப. சுப்பிரமணியஞ் செட்டியார் தமக்கை வள்ளியம்மை. ஆச்சி என்பவர் கட்டிக் கொடுத்துள்ளார். அதைக் குறிக்கும் கல்வெட்டு அப் படித்துறையில் பொறிக்கப்பட்டுள்ளது.



தேவகோட்டையைச் சேர்ந்த யாழ்ப்பாணம் இராமன் செட்டியாரின் மனைவி திருவையாற்றில் தேவாரப்பாடசாலையொன்று நிறுவியுள்ளார். பாகனேரியில் தெய்வானை ஆச்சி என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட தெய்வானை ஆச்சி உயர்நிலைப்பள்ளி ‘செம்மையான முறையில் இயங்கி வருகிறது. அவரே பாகனேரியில் அன்னசத்திரமொன்றையும் நிறுவியுள்ளார்.

வலையபட்டியில் அ•ராம அ அண்ணாமலை செட்டியார் மனைவி அ.கல்யாணி ஆச்சி என்பவர் திருமணமண்டம் ஒன்று கட்டிக்கொடுத்துள்ளார்.

ஆத்தங்குடியில் ராம. கா. அரு மீனாட்சி ஆச்சி என்பவரும் கீழச்சிவல்பட்டியில் வள்ளியம்மை ஆச்சி என்பவரும் மருத்துவமனைகள் ஏற்படுத்தியுள்ளனர். காரைக்குடி வயிரவன் கோயில் தேனப்பய்யா குடும்பத்தைச் சேர்ந்த பழ•தெ. சிகப்பி ஆச்சி நகரத்தார் சமூகத்தைக் சேர்ந்த மற்றுமொரு பெண்துறவியாவார், குழந்தை மருத்துவத்தில் தேர்ச்சிபெற்ற அவர், தம் பகுதி பிள்ளைகளுக்கு இலவசமாக மருத்துவ உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கியவர்.

நகரத்தார் இனத்துப் பெண்கள் பலதுறைப் பணிகளையும் மேற்கொண்டு நாட்டிற்குப் பணியாற்றியுள்ளனர்.

சுப.தி.த. திருநெல்லையாச்சி காரைக்குடி சிறப்பு நீதிபதியாகவும்' குப.சிவ.பழ. அழகம்மை ஆச்சி, ராம வள்ளியம்மை ஆச்சி, நா.பார்வதி ஆட்சி போன்றோர் நகரசபை உறுப்பினராகவும், சித. உண்ணாமலை ஆச்சி காரைக்குடி நகர சபை' தலைவராகவும் பணிபுரிந்து தங்கள் பகுதி மக்களுக்கு இயன்ற நன்மைகள் செய்துள்ளார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பே, ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் தாலுகாவில் டிஸ்ரிக்ட் போர்டு சேர்மனாக காரைக்குடி ஆரு •ராம, அருணாசலம் செட்டியார் இருந்த போது அவரது மனைவி அரு.சிகப்பி ஆச்சி வைஸ் சேர்மனாகவும் ஒரே சமயத்தில் பணிபுரிந்திருக்கிறார்கள்.

சமூக சேவையில் தம் கணவர் காரைக்குடி மெ.சுப.தி. தண்ணீர்மலையான் செட்டியாருடன் இணைந்து செயல்பட்ட திருநெல்லை ஆச்சி, கணவருடன் ஊர் ஊராகச் சென்று மேடைகளில் தமிழிசைக்குக் குரல் கொடுத்துள்ளார்.

காதல் ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவிலும் கைகொடுத்து வாழ்ந்த ஆச்சிமார்களுள் குறிப்பிடத்தக்கவர் காரைக்குடி செக்காலை காந்தி மெய்யப்ப செட்டியாரின் மனைவி நாச்சம்மை ஆச்சி

ஆவார். காந்தியடிகளுக்கு கஸ்தூரிபாய் வாய்த்ததுபோல காந்தியின் மீதும் காந்தியத்தின் மீதும் பற்றுக்கொண்ட மெய்யப்பருக்கு நாச்சம்மை ஆச்சி விளங்கினார். பொதுத் தொண்டில் ஈடுபட்டு வீடு முதல் நாடுவரை நல்லன எல்லாவற்றிற்கும் மெய்யப்பருக்குத் தோள் கொடுத்தார். 1927 இல் தங்கள் இல்லத்தில் “ஆதி திராவிடப் பள்ளியைத் தம் கணவர் தொடங்கிய போது அதற்கு ஆதரவாக உறுதுணையாக இருந்ததோடு. காந்தியடிகள் தம் இல்லத்திற்கு வந்திருந்தபோது கதரியக்கத்திற்காகவும் ஆதிதிராவிடர் நலனுக்காகவும் நன்கொடை கொடுத்துள்ளார். முரட்டுக் கதர்ச்சேலையையே கடைசிவரை அணிந்துவந்தவர் அவர்.

சமய உணர்வும், சமுதாய உணர்வும், மொழி உணர்வும் நகரத்தார்களுக்கு இயல்பாகவே உள்ள காரணத்தினால் ஆச்சிமார்களும் காலத்திற்கேற்ப அனைத்து வகையான அறப்பணிகளையும் தங்களால் இயன்ற வகையில் செய்து வருகின்றார்கள்.

பொருளடக்கம்

32.பாரதியும் நகரத்தாரும்

ஒல்லும் வகையான் அறவினை ஓவாது செய்துவரும் நகரத்தார்கள் 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் தமிழுக்குச் செய்த தொண்டுகள் வரலாற்றில் நிலையான இடம் பெறுபவை. தமிழறிஞர்களின் தாய்வீடாக செட்டிநாடு விளங்கியது. தமிழ்மொழியை வளர்க்கும் முகமாகத் தமிழ்ப்புலவர்களை ஆதரிப்பதை நகரத்தார்கள் தம் கடமையாகக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஆதரித்த பல புலவர்களுள் மகாகவியும் ஒருவர். பாரதிக்கும் நகரத்தார்களுக்கும் உள்ள தொடர்பை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

‘பாரதி யுகம்’ என்று இன்று பெருமையோடு பேசிக்கொள்கிறோம். ஆனால் பாரதி வாழ்ந்த காலத்தில் வெள்ளையர் கொடுமைக்குப் பயந்து அவரை ஆதரிக்கப் பலரும் முன்வரவில்லை. ஆனால், பாரதி வாழ்ந்த காலத்திலேயே ஆங்கில அரசுக்கு அஞ்சாமல், அவரை ஆதரித்தவர் கானாடுகாத்தான் வை.சு.சண்முகம் செட்டியார் ஆவார். பாரதியாருக்கு அவ்வப்போது தேவையறிந்து பொருளுதவி செய்த வை.சு.சண்முகனார் பாரதியின் கவிதைகலில் ஈடுபாடு உடையவர். ’வை.சு.சண்முகம் செட்டியார் ஒரு பாரதி பித்தர்’ என்று திரு.வி.க. குறிப்பிடுகிறார். கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகியவை சண்முகம் செட்டியாரின் முயற்சியாலே அச்சிடப்பட்டன.

வை.சு.ச.வின் அன்பில் நெகிழ்ந்த பாரதியார், தான் மனிதரைப் பாடுவதில்லை என்று கொண்டிருந்த கொள்கையை மாற்றிக்கொண்டு ‘செட்டி மக்கள் குலத்திற்குச் சுடர்விளக்கே’ என்று அவரைப் போற்றிப் பல பாடல்கள் பாடியுள்ளார். அவற்றுள்

இரண்டு பாடல்களாவன :

”மன்னர்மிசைச் செல்வர்மிசைத் தமிழ்பாடி எய்ப்புற்று

மனங்கசந்து

பொன்னனைய கவிதையினி வானவர்க்கே யன்றிமக்கட்

புறத்தார்க்கீயோம்

என்ன நமதுளத்து எண்ணியிருந்தோம் மற்றுன்னிடத்தே

இமையோர்க்குள்ள

வன்னமெல்லாம் கண்டுநினைத் தமிழ்பாடிப் புகழ்தற்கு

மனங்கொண்டோமே.”

“மீனாடு கொடியுயர்த்த மதவேளை நிகர்த்தஉரு மேவிநின்றாய்

யாம்நாடுபொருளையெமக் கீந்து எமது வறுமையினை யின்றே

கொல்வாய்

வானாடும் மண்ணாடும் களியோங்கத் திருமாது வந்து புல்கக்

கானாடுகாத்த நகர் அவதரித்தாய் சண்முகனாம்

கருணைக்கோவே”

கடியாபட்டியைச் சேர்ந்த மரக்கடையார் வீட்டுச் சுப்பையா செட்டியார், பாரதியின் கவிதைகளை அச்சிட்டு வெளியிட்டார். நகரத்தார்கள் நடத்திய ‘குமரன்’ ‘ஊழியன்’ ‘தனவைசியன்’ ஆகிய இதழ்களில் பாரதியாரின் கட்டுரைகள் வெளிவந்தன. வை.கோவிந்தனின் வெளியீடான ‘சக்தி’ இதழில் பாரதியாரின் வாழ்க்கை வரலாறு பாரதியாரின் மனைவி செல்லம்மாள் பாரதியால் எழுதப்பட்டது.

வை.சு.ச.வின் அழைப்பிற்கு இணங்க இருமுறை செட்டிநாட்டுக்குப் பாரதியார் வந்திருக்கிறார். அப்போது 6.11.1919 அன்று காரைக்குடியில் நகரத்தார் இளைஞர்கள் நிறுவிய இந்து மதாபிமான சங்கத்திற்கு வருகைதந்து அச்சங்கத்தின் செயல்களைக் கண்டு வியந்து,

”பலநூல்கள் பதிப்பித்தும் பலபெரியோர்

பிரசங்கம் பண்ணுவித்தும்

நலமுடைய கலாசாலை புத்தகசாலை

பலவும் நாட்டியும்தம்

குலமுயர நகருயர நாடுயர

உழைக்கின்றார் கோடிமேன்மை

நிலவுற இச்சங்கத்தார் பல்லூழி

வாழ்ந்தொளிர்க நிலத்தின்மீதே"

என்று பாராட்டியுள்ளார். பாரதியாரின் பாடல்பெற்ற சங்கம் தமிழகத்தில் இது ஒன்றுதான். இச்சங்கத்து உறுப்பினர்களான நகரத்தாரோடு இவர் எடுத்துக்கொண்ட புகைப்படத்தின் வாயிலாகத்தான் பாரதியாரின் நிழற்படம் உலகுக்குக் கிடைத்தது.

எட்டயபுரத்தில் அமைக்கப்பெற்ற பாரதி மண்டபத்திற்கு நகரத்தார்கள் ஏராளமாகப் பொருளுதவி செய்திருக்கிறார்கள்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பே திரையுலக மேதை ஏவி.மெய்யப்பச் செட்டியார் தாம் எடுத்த திரைப்படங்களில் பாரதியார் பாடல்களை இடம்பெறச்செய்து, அதன்மூலம் பாமர மக்களிடையே பாரதியின் பாடல்களைப் பரப்பினார். இவர் பாரதியின் பாடல்களை வெளியிட்டு ஒலிபரப்பும் உரிமையை விலைக்கு வாங்கி வைத்திருந்தார். பிறகு பாரதியின் பாடல்கள் பொதுவுடைமை ஆக்கப்படவேண்டும் என்று தமிழக அரசு விரும்பியபோது, தொழில்முறையில் விலைகொடுத்து வாங்கிய உரிமையை, எவ்விதப் பொருளும் பெறாமல் 'யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற நோக்கத்தோடு விட்டுக்கொடுத்தார்.

இவ்வாறு, பாரதி இருந்த போதும்சரி, பிறகும்சரி அவரைப் போற்றிப் பெருமைப் படுத்தியவர்கள் நகரத்தார்கள்.

33.வெளிமுத்தி கல்வெட்டுகள்

தேவகோட்டைக்குத் தென்கிழக்கில் சுமார் 6 கி.மீ. தூரத்தில் வெளிமுத்தி என்ற ஊரில் இராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த சிவன் கோயிலொன்று உள்ளது. இங்குள்ள நான்கு கல்வெட்டுகள் தேவகோட்டை நகரத்தார்கள் இக்கோயிலைத் திருப்பணி செய்த விவரங்களையும் மற்றும் இராஜகோபுரம் கட்டிய செய்தியையும் குறிப்பிடுகின்றன. தேவகோட்டை 'தேவர்கோட்டை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ராஜகோபுரத்தின் நுழைவாயிலில் உள்ள கல்வெட்டில் வெளிமுத்தி தலபுராண வரலாறு, சுருக்கமாகச் சுவைபடச் சொல்லப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் இத்தலத்தின் வரலாறு திருப்புனவாசல் புராணத்திலும் (திருப்புனல்வாசல் வெளிமுத்திக்குச் சற்று தொலைவில் வையையாற்றின் கரையில் அமைந்துள்ள பாடல்பெற்ற தலம்) கூறப்பட்டிருப்பதாகவும், இங்குள்ள பழைய கல்வெட்டுகளில் இச்செய்திகள் எழுதப்பட்டிருந்தன என்றும் கல்வெட்டு கூறுகிறது. கல்வெட்டுகளில் மெய்யெழுத்துக்குப் புள்ளி காணப்படவில்லை. இரட்டைக்கொம்பும் காணப்படவில்லை.

கல்வெட்டு 1

இடம் : இராஜகோபுரம் நுழைவாயிலில் உள்ள கல்வெட்டு,

காலம் : கி.பி.19ஆம் நூற்றாண்டு.

1. இந்த தலம் ஆதிகாலதிலிதற்கு மேற்றி

2.சையில் நகருடையவராய் மகா சிவபத்தரா

3.யிருந்த பாண்டிய ராஜா ஒருவரிதற்குக் கீட்டிசை

4.யிலுள்ள திருப்புனவாயிலென்னுந் திருத்தலத்து

5.ச்சிவ பெருமானைத் தினந்தோறு மிதுமார்க்

6.கமாகப் போய்த் தரிசித்து வந்து போசனஞ்

7. செய்வது நியமமாகக் கொண்டு போய்வரு

8.கையிலொரு தினமிந்த விடத்தில் காலத்தா

9.லிராஜா சோபித்து விழுந்து கிடக்கச் சுவா

10.மி யெழுந்தருளித் தெளிவித்து இவடத்தி

11. லே யுனக்காக நாமெழுந்தருளியிருக்கு

12.ரோ மின்று முதலிவடத்திலே தரிசனஞ் செ

13. ய்து கொள்ளென்று கட்டளையிட்டு யெழுந்

14.தருளிய காரணத்தினா லுண்டானது

15.இது திருப்புனல்வாயில்த் தலபுராணத்தில்

16.சொல்லியிருக்கின்றது அநேகம் பாண்

17. டியர்கள் முதலிய ராசாக்களாலும் சிவப

18.த்தர்களாலும் பணிசெய்ததாக முந்தின கல்

19.வெட்டுகளிலெழுதியிருந்தது

20.தலம் வெளிமுத்தி

21.சுவாமி பழம்பதிநாதர்

22.அம்மை பெரிய நாயகி

கல்வெட்டு 2

இடம்: இராஜகோபுரத்தில் நுழைந்தவுடன் இடப்புற நிலையில் இராஜகோபுரம் செய்வித்தவரின் உருவம் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டு அருகில் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது.

காலம் : கி.பி. 1873.

உ கலியுகாதி 4974

ஆங்கிரச வருடம் தை 2 கல்வாசல் நாட்டில்

இளையாத்தக்கு

டியான குலசேகரபுரத்தில் கழனிவா

சல்க்குடியான தேவர் கோட்டையிலிரு

க்கும் வணிகர்குலம், ந.மு.அருணாசலச்

செட்டியாராகிய யிவர் யிந்த ராசகோ

புரஞ் செய்வித்தவர்

ஆலையத்துக்குள்

பணிக்கி விரோதமாய் மர

ம் செடி முதலானதை ஒருவ

ரும் வைத்துப் பயிர் செய்ய

வேண்டாம்

ஸ்தலம் வ்ருத்3த4 புரி

ஸ்வாமி வ்ருத்3த4 புரீச்வரர்

அம்மை ப்3ருஹந்நாயகி

கல்வெட்டு 3

இடம் : கருவறைக்கு வெளியே இடதுபுறம், துவாரபாலர் சிலைக்கு அருகிலுள்ளது.

காலம் : கி.பி.1896.

1.கலியுகாதி

2.4997

3.கல்வாச நாட்டில் இளையாத்தக்குடியான

4.குலசேகரபுரத்தில் கிண்கி

5.ணிக் கூறுடையான் தேவர்

6.கோட்டையிலிருக்கும் வணிகர்குலம் தெ.பழ

7. னியப்பச் செட்டி யிந்தப்

8. பழம்பதிநாத சுவாமி

9.கோவில்த் திருப்பணி செய்வித்தவர்

கல்வெட்டு 4

இடம்: அம்மன் சந்நிதி வலதுபுறம் துவாரபாலகி சிலைக்கு அருகிலுள்ளது.

காலம்: கி.பி.1866.

1.கலியுகாதி

2.4967

3.குரோதன வருஷம் தை

4.கேரள சிங்க வளநா

5.டாகிய ஏழகப் பெரு

6.ந்திருவான வீரபா

7.ண்டிய புரத்தில் சிறு

8.குளத்தூருடையான்

9.ஆவி. கறுப்பன் செட்டி

10.யிந்தப் பெரிய

11.நாயகியம்மை கோ

12.வில் சோபானங்

13.கூடச் செய்வித்

14. தவர்



முனைவர் நா.வள்ளி.

M.A., B.Ed.,P.G Dip in Epigraphy & Archaeology

கானாடுகாத்தானில் பிறந்து, காரைக்குடி பிள்ளையார்பட்டி கோவில் திரு.கி.சொக்கலிங்கம் அவர்களின் வாழ்க்கைத் துணைவி ஆனவர்.

காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரியில் 32 ஆண்டுகள் பேராசிரியர் மற்றும் முதல்வராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்

- கோயிற்கலை, சிற்பக்கலை, கல்வெட்டியல், இலக்கியம் மற்றும் நகரத்தாரியல் தொடர்பாக 70 க்கும் மேற்பட்ட ஆய்வு கட்டுரைகளை எழுதியுள்ளார்.
- தமிழக அரசு தொல்லியல் துறையில் முதுநிலை தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் பயின்ற போது எழுதிய "திருப்பத்தூர்" என்னும் ஆய்வேட்டை, தமிழகத் தொல்லியல் துறை நூலாக வெளியிட்டுள்ளது.
- நகரத்தாரின் அறப்பணிகள் குறித்து ஆய்வு செய்து மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். அந்த ஆய்வேடு நூலாக வெளிவந்துள்ளது.
- தமிழகப் பல்கலைக்கழகத்திற்கு சிற்பக்கலையின் சிறப்பும் சிற்பக்கலைக்கு முகவையின் பங்கும் என்ற ஆய்வேட்டை எழுதியுள்ளார்.
- சிவகங்கை மாவட்ட பகுதிகளில் பல கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், முதுமக்கள் தாழிகள் ஆகியவற்றைக் கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளார்.
- பழனி பாதயாத்திரை தொடர்பான ஓலைச்சுவடிகளை கோவிலூர் மடாலயத்திற்காக வாசித்தளித்துள்ளார்.
- சில குடமுழுக்கு மலர்களின் பதிப்பாசிரியர்.